புதிய பதிப்பு
2022

# பெங்குயின்

புதிய வடிவில் சிறந்த வழிகாட்டி

# தமிழ் அமுது

# 9



**நூலின் கட்டமைப்பு:**

மனவரைபடம், கற்றல் நோக்கங்கள்,
பாடலின் பொருள், நூல் மற்றும் ஆசிரியர் குறிப்புகள்,
பொருள் கூறுக, இலக்கணக் குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம்,
பலவுள் தெரிக, செய்யுள் - வினா விடை குறுவினா,சிறுவினா,
நெடுவினா, விடைக்கேற்ற வினாக்கள், சந்திப்பிழையை நீக்கி எழுதுக
ஒருமை பன்மை பிழையை நீக்கி எழுதுக, கற்பவை கற்றபின்,
மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, "பா" நயம் பாராட்டல்,
கட்டுரைகள், கடிதங்கள், அலகிடுதல், அலகுத்தேர்வுகள்,
மனப்பாடப் பாடல்கள்

இலக்கு

100/100

பெங்குயின் பப்ளிகேஷன்

www.nammakalvi.com
FOR ORDERS CONTACT : 8925612359

# பெங்குயின்

# தமிழ் அமுது




**புதிய ஆண்டுக்கான பாடத்திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டுள்ளது**

**எச்சரிக்கை**
வெளியீட்டாளர் அனுமதியின்றி இந்த புத்தகத்தின் எந்த பகுதியும் மீண்டும் உருவாக்கப்படக்கூடாது மற்றும் நகல் எடுக்கக்கூடாது மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**பெங்குயின் பப்ளிகேஷன்ஸ்**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

விலை ரூ.299

www.nammakalvi.com
FOR ORDERS CONTACT : 8925612359

# முன்னுரை

கடவுளின் ஆசிர்வாதம் இருந்தால் எல்லாம் சாத்தியமே

Dr.A.P.J. அப்துல் கலாம்.

மதிப்பிற்குரிய தாளாளர், தலைமையாசிரியர், தலைமையாசிரியை, முதல்வர் மற்றும் அன்பிற்கினிய தமிழிசிரியப் பெருமக்களே!

நாங்கள் 9 ஆம் வகுப்பிற்கான (பெங்குயின்) தமிழ் அமுது, புதிய பாடத்திட்டத்தின்படி புதிய பதிப்பாக வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறோம்.

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமன்று. எதிர்கால வாழ்விற்கும் அடித்தளம். உங்கள் கைகளில் தவழும் பெங்குயின் தமிழ் அமுது உங்கள் மனதிற்கு இதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த தமிழ் அமுதில், பாடநூலில் உள்ள வினா மட்டுமில்லாமல் கூடுதலாக சில வினாக்களும் அரசுத்தேர்வில் எதிர்பார்க்கப்படும் வினாக்களும் அனுபவமிக்க ஆசிரியர்களால் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்துவதால் தேர்விற்கு மட்டுமின்றி வாழ்விலும் போட்டித் தேர்விற்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

எளிய இனிய மொழிநடை, கருத்துகளின் கோர்வையான அழகு, தமிழறிவை வளர்க்கும் சிந்தனைத் துளிகள். கற்பவை கற்றபின் மனதில் அணிவகுக்கும். இவையெல்லாம் உள்ளடக்கிய எளிய தெளிவான பெங்குயின் தமிழ் அமுதை நன்கு வாசியுங்கள்..... நினைவில் நிலை நிறுத்துங்கள். அரசுப்பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்களை அள்ளிக்குவியுங்கள்.

எங்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பதிப்பகத்தார்.

www.nammakalvi.com

FOR ORDERS CONTACT : 8925612359

t y

r yor y

t y r or U8925612359 - 8643007972

t y

Books can be obtained through VPP

o y y t

t yr t y

| | |
|---|---|
| cGh | P m o u e uhc u |
| cC B | PGFNEKDDKDNDDEFO |
| e | P c u ck m hc u m ec |
| un h | P e DDDDGFN |
| e e | P u u u B |

| | |
|---|---|
| cC | P m o u e uhc u |
| cC B | PGOFEFLIOOFG |
| e | P c mec nu kuc |
| un h | P eu DDDDOFE |
| e e | P u u u B |

a est l opi l mot

MOBILE PAYMENT APPS

STMPQLMNPT

o o

t y o t t o H y y

Please send Demand Draft / cheque in favour of **'PENGUIN PUBLICATIONS'** payable at **Srivilliputtur.**

www.nammakalvi.com
FOR ORDERS CONTACT : 8925612359

## பொருளடக்கம்


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| 1 | மொழி | திராவிட மொழிக்குடும்பம் | 6 |
| | அமுதென்று பேர் | தமிழோவியம் | 11 |
| | | தமிழ்விடு தூது * | 15 |
| | | வளரும் செல்வம் | 22 |
| | | தொடர் இலக்கணம் | 26 |
| | | அலகுத் தேர்வு | 45 |
| 2 | இயற்கை, சுற்றுச்சூழல் | நீரின்றி அமையாது உலகு | 49 |
| | உயிருக்கு வேர் | பட்டமரம் | 55 |
| | | பெரியபுராணம் * | 59 |
| | | புறநானூறு | 65 |
| | | தண்ணீர் | 70 |
| | | துணைவினைகள் | 74 |
| | | அலகுத் தேர்வு | 86 |
| 3 | பண்பாடு | ஏறுதழுவுதல் | 90 |
| | உள்ளத்தின் சீர் | மணிமேகலை | 97 |
| | | அகழாய்வுகள் | 108 |
| | | வல்லினம் மிகும் இடங்கள் | 113 |
| | | திருக்குறள் * | 123 |
| | | அலகுத் தேர்வு | 135 |
| 4 | அறிவியல், தொழில்நுட்பம் | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் | 139 |
| | எட்டுத்திக்கும் சென்றிடுவீர் | ஓ, என் சமகாலத் தோழர்களே! * | 145 |
| | | உயிர்வகை* | 150 |
| | | விண்ணையும் சாடுவோம் | 156 |
| | | வல்லினம் மிகா இடங்கள் | 160 |
| | | அலகுத் தேர்வு | 170 |
| 5 | கல்வி | கல்வியிற் சிறந்த பெண்கள் | 174 |
| | கசடற மொழிதல் | குடும்ப விளக்கு | 180 |
| | | சிறுபஞ்சமூலம் * | 186 |
| | | வீட்டிற்கோர் புத்தகசாலை | 190 |
| | | இடைச்சொல் - உரிச்சொல் | 193 |
| | | அலகுத் தேர்வு | 206 |

www.nammakalvi.com

FOR ORDERS CONTACT : 8925612359


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| 6 | கலை, அழகியல், புதுமைகள் | சிற்பக்கலை | 210 |
| | **கலை பல வளர்த்தல்** | இராவண காவியம் * | 216 |
| | | நாச்சியார் திருமொழி | 225 |
| | | செய்தி | 230 |
| | | புணர்ச்சி | 233 |
| | | திருக்குறள் * | 241 |
| | | அலகுத் தேர்வு | 246 |
| 7 | நாகரிகம், தொழில் வணிகம் நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | 250 |
| | **வாழிய நிலனே** | சீவக சிந்தாமணி * | 254 |
| | | முத்தொள்ளாயிரம் * | 261 |
| | | மதுரைக்காஞ்சி | 266 |
| | | சந்தை | 271 |
| | | ஆகுபெயர் | 275 |
| | | அலகுத் தேர்வு | 286 |
| 8 | அறம், தத்துவம், சிந்தனை | பெரியாரின் சிந்தனைகள் | 289 |
| | **என்தலைக் கடனே** | ஒளியின் அழைப்பு | 294 |
| | | தாவோ தே ஜிங் | 298 |
| | | யசோதர காவியம் * | 301 |
| | | மகனுக்கு எழுதிய கடிதம் | 305 |
| | | யாப்பிலக்கணம் | 308 |
| | | அலகுத் தேர்வு | 316 |
| 9 | மனிதம், ஆளுமை | விரிவாகும் ஆளுமை | 320 |
| | **அன்பென்னும் அறனே** | அக்கறை * | 326 |
| | | குறுந்தொகை | 329 |
| | | தாய்மைக்கு வறட்சி இல்லை | 334 |
| | | அணியிலக்கணம் | 337 |
| | | அலகுத் தேர்வு | 346 |

| பின் இணைப்பு | ப. எண் |
|---|---|
| மனப்பாடப் பாடல்கள் | 1 |
| அலகிடுதல் | 350 |
| கடிதம் | 352 |
| கட்டுரை | 365 |

www.nammakalvi.com

FOR ORDERS CONTACT : 8925612359



## மனப்பாடப் பாடல்கள்

### தமிழ்விடு தூது

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே ___ புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ ___ திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே.

### பெரியபுராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம். **-சேக்கிழார்**

### புறநானூறு

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர்,ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே! **-குடபுலவியனார்**

FOR ORDERS CONTACT : 8925612359



## திருக்குறள்

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

ஒஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர். - **திருவள்ளுவர்**

## ஓ, என் சமகாலத்துத் தோழர்களே!

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்

ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.-**கவிஞர் வைரமுத்து**

## உயிர் வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே -**தொல்காப்பியர்**

## சிறுபஞ்சமூலம்

பூவாது காய்க்கும் மரம் உள நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார் தாவா
விதையாமை நாறுவ வித்துஉள மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு. -**காரியாசான்**

FOR ORDERS CONTACT : 8925612359



## இராவணகாவியம்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும் **-புலவர் குழந்தை**

## திருக்குறள்

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

## சீவக சிந்தாமணி

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே. **-திருத்தக்கத் தேவர்**

## முத்தொள்ளாயிரம்

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

FOR ORDERS CONTACT : 8925612359



## யசோதர காவியம்

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.

## அக்கறை

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை.

- **கல்யாண்ஜி**


www.nammakalvi.com

FOR ORDERS CONTACT : 8925612359



# இயல் ஒன்று

# அமுதென்று பேர்



**கற்றல் நோக்கங்கள்**

- மொழியின் தேவை, தோற்றம், தொன்மை, தனித்தன்மைகள் ஆகியவற்றை அறிதல்
- வேறுபட்ட கவிதை வடிவங்களைப் படித்துப் பொருளுணர்தல்
- தமிழ்ச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் வேறுபடுத்தி அறிதல்
- தொடர்களின் அமைப்பினை அறிந்து பயன்படுத்துதல்
- கடிதம், கட்டுரை வாயிலாகக் கருத்துகளை வெளிப்படுத்துதல்

www.nammakalvi.com
FOR ORDERS CONTACT : 8925612359




## இயல் ஒன்று

உரைநடை உலகம்

# திராவிட மொழிக்குடும்பம்

### மனவரைபடம்




## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**

- நான் பேசும் மொழி தமிழ்.
- நான் பேசும் மொழி தமிழ் திராவிட மொழிகள் குடும்பத்தைச் சேர்ந்தது.

## சிறுவினா

**1. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?**

| சங்க இலக்கியத்தில் | கிரேக்கம் |
|---|---|
| 1. கலன் | கலயு கோய் |
| 2. நாவாய் | நாயு |
| 3. தோணி | தோணீஸ் |

www.nammakalvi.com
FOR ORDERS CONTACT : 8925612359



**2. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

**திராவிட மொழிகள் :**

திராவிட மொழிக் குடும்பம், நில அடிப்படையில் மூன்று வகைப்படும்.

- தென் திராவிட மொழிகள்
- வட திராவிட மொழிகள்
- நடு திராவிட மொழிகள்

இவற்றுள் எனக்குத் தெரிந்த மொழி தமிழ் ஆகும். அவற்றின் சிறப்பியல்புகளைக் காண்போம்.

**தமிழ் மொழி :**

- உலக நாடுகள் பலவற்றில் பேசப்படும் மொழியாகவும் சில நாடுகளில் ஆட்சி மொழியாகவும் தமிழ் திகழ்கிறது.
- திராவிட மொழிகளுள் பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழ்.

**3. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?**

- தமிழ் - மூன்று
- கன்னடம் - மூரு
- மலையாளம் - மூணு
- துளு - மூஜி
- தெலுங்கு - மூடு

**4. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுபித்துக் கொள்கிறது?**

- திராவிட மொழிக் குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாக திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.
- மூலத் திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது.
- தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்குகிறது.

---

## நெடுவினா

**1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாய் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விவரிக்க?**

**தமிழிலிருந்தே "திராவிடர்" - என்னும் சொல் :**

தமிழிலிருந்தே "திராவிடர்" என்னும் சொல் பிறந்தது என்று மொழியியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். "ஹீராஸ் பாதிரியார்" என்பவர் இக்கூற்றை தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என்று விளக்குகின்றார்.

**பிரான்சிஸ் எல்லிஸ் - கருத்து :**

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஆய்ந்து ஒப்புமைப்படுத்தி இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும் இவை "தென்னிந்திய மொழிகள்" என்றும் பெயரிட்டார்.

**ஹோக்கன் - மாக்ஸ் முல்லர் கருத்து :**

ஹோக்கன் என்பார் இம்மொழிகள் அனைத்தையும் இணைத்துத் "தமிழியன்" என்று பெயரிட்டார்.

மேலும், இவை ஆரிய மொழிகளினின்று மாறுபட்டவை என்று கருதினார். மாக்ஸ் முல்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார்.

www.nammakalvi.com



**திராவிட மொழிகளுக்கான ஒப்பீட்டு அளவுகோல் தமிழே! :**

திராவிட மொழிகளுக்கான அடிச் சொல்லை மாற்றமின்றித் தொடர்ந்து வழக்கில் கொண்டுள்ள மொழி தமிழ். எனவே, திராவிட மொழிகளை ஒன்றுக் கொன்று ஒப்பிட்டு ஆய்வு செய்யும்போது, தமிழே ஒப்பீட்டு அளவுகோலாகவும் கருவியாகவும் பயன்படுகிறது.

**சான்று :**

| அடிச் சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, குடகு |
| ஃகன் | குரூக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

இவற்றின் மூலம் திராவிட மொழிகள் பொதுவான வேர்ச் சொற்களைப் பெற்று விளங்குவதை அறிய முடிகிறது.

## சந்திப் பிழை நீக்கி எழுதுக

1. தமக்கு தோன்றிய கருத்துகளை பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழி.

   **விடை :** தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழி

2. இம்மொழிகளை ஒரே இனமாக கருதி தென்னிந்திய மொழிகள் என பெயரிட்டார்.

   **விடை :** இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனப் பெயரிட்டார்.

3. திராவிட மொழிகளுக்கென சில பொது பண்பு கூறுகள் உள்ளன.

   **விடை :** திராவிட மொழிகளுக்கென சில பொதுப் பண்புக் கூறுகள் உள்ளன.

4. திராவிட மொழிகளின் தாய்மொழியாக கருதப்படுகிறது தமிழ்.

   **விடை :** திராவிட மொழிகளின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது தமிழ்.

5. ஒரே பொருளை குறிக்க பலசொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்ப பெற்ற மொழி தமிழ்.

   **விடை :** ஒரே பொருளைக் குறிக்கப் பலசொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழ்.

6. காலந்தோறும் தன்னை புதுபித்து கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

   **விடை :** காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

## விடைக்கேற்ற வினா அமைக்க

1. திராவிட மொழிகளின் மூத்த மொழியாய் விளங்குவது தமிழ்.

   **விடை :** திராவிட மொழிகளின் மூத்த மொழியாய் விளங்குவது எம்மொழி?

2. தமிழ் என்ற சொல்லிருந்து தான் திராவிடா என்ற சொல் பிறந்தது.

   **விடை :** எச்சொல்லிருந்து திராவிடா என்ற சொல் பிறந்தது?

www.nammakalvi.com



3. ஹோக்கன் என்பார் திராவிட மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டார்.

**விடை :** திராவிட டொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் எனப் பெயரிட்டவர் யார்?

4. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை கால்டுவெல் எழுதியுள்ளார்.

**விடை :** திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் யார்?

5. தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடைய மொழி தமிழ்.

**விடை :** தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடைய மொழி எது?

6. தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென் திராவிட மொழிகள்.

**விடை :** தென் திராவிட மொழிகள் யாவை?

7. தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.

**விடை :** தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவி எது?

## ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக

1. தமிழ் என்ற சொல்லிருந்து தான் திராவிடா என்னும் சொல் பிறந்தன.

**விடை :** தமிழ் என்ற சொல்லிருந்து தான் திராவிடா என்னும் சொல் **பிறந்தது**.

2. திராவிட மொழிக்குடும்பம் என்ற பகுப்பு உருவாவதற்கு ஒரு வரலாறு இருக்கின்றன.

**விடை :** திராவிட மொழிக்குடும்பம் என்ற பகுப்பு உருவாவதற்கு ஒரு வரலாறு **இருக்கின்றது**.

3. திராவிட மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று ஹோக்கன் என்பார் பெயரிட்டனர்.

**விடை :** திராவிட மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று ஹோக்கன் என்பார் **பெயரிட்டார்**.

4. திராவிட மொழிகளுக்கெனச் சில பொதுப் பண்புக் கூறுகள் உள்ளது.

**விடை :** திராவிட மொழிகளுக்கெனச் சில பொதுப் பண்புக் கூறுகள் **உள்ளன**.

5. 1816 ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப்,ரஸ்க், கிரிம் முதலானோரால் மொழியியலில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

**விடை :** 1816 ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப், ரஸ்க், கிரிம் முதலானோரால் மொழியியலில் பல ஆய்வுகள் **மேற்கொள்ளப்பட்டன**.

6. மனித இனம் வாழ்ந்த இட அமைப்பும் இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முறைகளை உருவாக்கத் தூண்டியது.

**விடை :** மனித இனம் வாழ்ந்த இட அமைப்பும் இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முறைகளை உருவாக்கத் **தூண்டின**.

## நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக

1. திராவிட மொழிக்குடும்பத்திலுள்ள தமிழ் கன்னடம் மலையாளம் முதலானவை தென் திராவிட மொழிகள் ஆகும்

**விடை :** திராவிட மொழிக்குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென் திராவிட மொழிகள் ஆகும்.

2. முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள் சைகைகள் ஒலிகள் ஓவியங்கள் போன்றவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றார்

**விடை :** முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் போன்றவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றார்.

www.nammakalvi.com



## பொருத்துக

அ) 1. தோடா - அ) நடுத்திராவிட மொழி
2. தெலுங்கு - ஆ) வட திராவிட மொழி
3. பிராகுய் - இ) தென் திராவிட மொழி
4. தொல்காப்பியம் - ஈ) தொன்மைக் கல்வெட்டுகள் உள்ள மொழி
5. தமிழ் - உ) இலக்கணம் **[விடை : 1-இ, 2-அ, 3-ஆ, 4-உ, 5-ஈ]**

ஆ) 1. தெலுங்கு - அ) கவிராஜ மார்க்கம்
2. மலையாளம் - ஆ) சங்க இலக்கியம்
3. தமிழ் - இ) இராமசரிதம்
4. கன்னடம் - ஈ) பாரதம் **[விடை : 1-ஈ, 2-இ, 3-ஆ, 4-அ]**

இ) 1. மூன்று - அ) தெலுங்கு
2. மூணு - ஆ) கன்னடம்
3. மூடு - இ) தமிழ்
4. மூரு - ஈ) மலையாளம் **[விடை : 1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ]**

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையை எழுதுக

உலகின் குறிப்பிடத்தக்க, பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ - ஹரப்பா அகழாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர். தமிழ் என்னும் சொல்லிலிருந்துதான் திராவிடா என்னும் சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றன.

**1. 'திராவிடா' என்னும் சொல் எச்சொல்லிலிருந்து பிறந்தது?**

தமிழ்

**2. திராவிடர் பேசிய மொழி எவ்வாறு கூறப்பட்டது?**

திராவிடா மொழி.

**3. உலகில் குறிப்பிடத்தக்க பழைமையான நாகரிகங்களுள் ஒன்று எது?**

இந்திய நாகரிகம்.

**4. திராவிட நாகரிகம் என்பது எது?**

இந்திய நாகரிகம்.

**5. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் யார்?**

குமரிலபட்டர்.

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியும்? உங்கள் பெயரும் உங்கள் நணபர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளதா? கண்டறிக.**

➢ என் பெயர் இன்பத் தமிழன்

தமிழ்மொழியைப் பேசும் போதும் கேட்கும் போதும் நமக்கு இன்பமே கிட்டுவதைப் போல் நான் பேசுவது இன்பம் தரக்கூடியதாக இருந்தால் இன்பத்தமிழன் என்ற பெயர் சூட்டினர்.

➢ என் நண்பன் பெயர் வெற்றிவேல்.

அக்காலத்தில் வேல் கொண்டு போரிடுபவன் எப்பொழுதுமே வெற்றியே பெற்றுத் திரும்புவானாம். அதுபோல என் நண்பனும் தன்வாழ்வில் வெற்றியையே ஈட்டிவரக் கூடியவனாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்பெயர் சூட்டினர்.

**2. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் வேர்ச் சொற்கள், வடிவ மாற்றம் பெறுகின்றன என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

1. வா - வந்தான், வருகிறான், வருவான், வந்து, வந்த, வருவீர், வருகிறோம்.
2. படி - படித்தார், படிக்கிறார், படிப்பார், படித்து, படித்த, படிப்பீர், படிக்கிறோம்.

---


இயல் ஒன்று

கவிதைப் பேழை

# தமிழோவியம்

– ஈரோடு தமிழன்பன்

### மனவரைபடம்




**விளக்கவுரை :**

➢ காலம் பிறப்பதற்கு முன்பே பிறந்த தனிச் சிறப்புடையது தமிழ்.

➢ எக்காலக் காலங்களிலும் அழியாத தன்மை பெற்று நிலைத்து நிற்பதும் தமிழ்.

➢ அகப்பொருள், புறப்பொருள் இலக்கியங்களாய் தமிழை வளப்படுத்தியது தமிழ்.

➢ இவ்விலக்கியங்கள் நாவிலும் இலக்கணங்கள் இனிக்கும் தன்மையுடையவை.

➢ எதற்கும் ஒப்பிட்டுக் கூற இயலாத காப்பிய நூல்களால் பூக்கள் நிறைந்த சோலை வனங்களாய் நம் இதயங்களில் ஊர்வலங்களை இவை நடத்துகின்றன.

➢ ஏன்? எதற்கு? என்று வீறிட்டுக் கேட்டு வருகின்ற நீதி ஏந்திய தீபமாய்ப் பாடல்கள் அமைந்திருக்கும்.

www.nammakalvi.com



- மானுடத்தின் மகத்துவத்தை சாதித்துக் காட்ட திருக்குறள் நூல் ஒன்று போதுமே.
- எத்தனை எத்தனையோ எண்ணிலடங்காத சமயங்களை இப்பாரினில் ஏந்தி வளர்த்த பெருமை தமிழுக்கே உண்டு.
- சித்தர்கள் வழியிலே சமுதாயத்தின் தீமைகளை அறுக்கின்ற புத்தம் புதிய சிந்தனைகள் நித்தம் நம் இதயங்களில் பாய்ந்தன.
- விரலை மடக்கிக் கொண்டு வீணையில் இசை பொழிய முடியாததைப் போல், பிறர் குற்றம் குறைகளை வீணில் பேசுவதைத் தவிர்த்து விட்டு, புதிய வடிவம் பெற்று தமிழை நாம் வளர்ப்போமாக.

## நூற் குறிப்பு

- ஈரோடு தமிழன்பன் எழுதிய கவிதை நூல் எழிலோவியம்.
- இயற்கைக் காட்சிகளின் இனிமை மிகு தொகுப்பு.
- இந்நூலில் இடம் பெற்றுள்ள கவிதை எழிலோவியம்.
- ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள உதவும் அற்புதப் படைப்பு புதுக்கவிதை.
- தமிழின் சிறப்பை, இலக்கிய, இலக்கண வளங்களை அழகோவியமாய் இக்கவிதை அரங்கேற்றியுள்ளது.

## ஆசிரியர் குறிப்பு

**பெயர்** :தமிழன்பன்

**சிறப்புப் பெயர்** :ஈரோடு தமிழன்பன்

**சிறப்பு** :தமிழக அரசின் இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

- 2004 இல் "வணக்கம் வள்ளுவ" என்ற நூலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.
- ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்கள் எழுதியுள்ளார்.
- மரபுக்கவிஞர், புதுக்கவிதை, புதினம், நாடகம், வரலாறு, சிறுகதை ஆகிய இலக்கியப் படைப்புகளில் சிறப்புப் பெற்றவர்.

## பொருள் அறிக

1. காலம் பிறக்கும் முன் - காலங்கள் பிறப்பதற்கு முன்னரே.
2. அகமாய் - அக இலக்கியங்களாய்
3. புறமாய் - புற இலக்கிய நூல்களாய்
4. நெஞ்சம் நடத்தட்டும் - இதயங்களில் இனிமை பயக்கட்டும்.
5. விருட்டெனக் கேட்டுவரும் - விழிப்புணர்வை உருவாக்க வினா எழுப்பும்.
6. மானிட மேன்மையை - மானிடத்தின் உயர்வை வெற்றியாக்க
7. குறள் மட்டுமே போதுமே - ஒப்பிலா உயர்வாய் விளங்கும் திருக்குறள் மட்டும் போதுமே
8. எத்தனை எத்தனை சமயங்கள் - எண்ணிலடங்கா சமயங்கள்

www.nammakalvi.com



9. புதுச் சிந்தனைகள் - புத்தம் புதிய நற்சிந்தனைகள்
10. புதுக் கோலம் புனைந்து - புதிய அழகிய வடிவெடுத்து
11. தமிழ் வளர்ப்பாய் - தமிழ் மொழியை வளர்ப்பாயாக.

## பிரித்து எழுதுக

1. நிகரிலா - நிகர் + இலா
2. தீதறுக்கும் - தீது + அறுக்கும்
3. ஏனிவ்விருட்டு - ஏன் + இ + இருட்டு
4. இசையில்லை - இசை + இல்லை
5. தாயெனவே - தாய் + எனவே
6. விருட்டென - விருட்டு + என
7. பூவனங்கள் - பூ + வனங்கள்

## இலக்கணக் குறிப்பு

1. **எத்தனை எத்தனை, விட்டு விட்டு** - அடுக்குத்தொடர்
2. **ஏந்தி** - வினையெச்சம்
3. **காலமும்** - முற்றும்மை
4. **ஏந்திய** - பெயரெச்சம்
5. **வளர்ந்தது** - வினைமுற்று
6. **காப்பியப் பூவனம்** - உருவகம்
7. **நிகரில்லாக் காப்பியம்** -ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
8. **பூவனங்கள்** - உவமைத் தொகை
9. **தமிழே!** - விளித்தொடர்

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. வளர்ப்பாய் = வளர் + ப் + ப் + ஆய்.**

**வளர்** - பகுதி
**ப்** - சந்தி
**ப்** - எதிர்கால இடைநிலை
**ஆய்** - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**2. பாய்ந்தன = பாய் + த்(ந்) + த் + அன் + அ**

**பாய்** - பகுதி
**த்** - சந்தி
**'த்' - 'ந்'** - ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**அன்** - சாரியை
**அ** - பெயரெச்ச விகுதி

**3. வளர்த்தது = வளர் + த் + த் + அ + து**

**வளர்** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - சாரியை
**து** - ஒன்றன் பால் வினைமுற்று விகுதி

**4. புனைந்து = புனை + த்(ந்) + த் + உ**

**புனை** - பகுதி
**த்** - சந்தி

www.nammakalvi.com



| | | | |
|---|---|---|---|
| 'த்' - 'ந்' | - ஆனது விகாரம் | உ | - வினையெச்ச விகுதி |
| த் | - இறந்தகால இடைநிலை | | |

## பாடநூல் வினா - பலவுள் தெரிக

**1. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே!**
**காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!....**
**இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்**

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடர் ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) எதுகை, மோனை, இயைபு ஈ) மோனை, முரண் அந்தாதி**[விடை : எதுகை, மோனை, இயைபு]**

## குறுவினா

**1. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.**

"காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!

உலகம் தோன்றிய நாள் முதல் தோன்றிய தமிழ்மொழி இன்று வரை நிலைத்து நிற்பதோடு நில்லாமல் நாளும் வளரும் தமிழாய் உயர்ந்திருக்கின்றது. நம் தமிழ் மொழி என்பதே என்னை ஈர்த்த அடிகள்.

**2. அகலமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததை சொல்லும் இலக்கணங்கள் - இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?**

**சங்க இலக்கியங்கள் :**

அக இலக்கியம் - 15
புற இலக்கியம் - 9

என்ற பகுப்புகளையும் கொண்டது. காதலும் வீரமும் இவற்றின் பொருளாக அமைந்தன.

**இலக்கணம் :**

பழம்பெரும் இலக்கண நூல்களாக "அகத்தியம்", "தொல்காப்பியம்" அமைந்துள்ளன.

## சிறுவினா

**1. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

**தமிழ் வளர்க்க என் பங்கு :**

- கல்வி, தமிழ் வழியில் கற்பேன். பிறரையும் கற்கத் தூண்டுவேன்.
- பிறமொழிக் கலப்பின்றி தூயதமிழில் பேசுவேன். எழுதுவேன்.
- தமிழ் இலக்கியங்கள் இலக்கணங்கள் படித்து காலத்திற்கேற்ற புதுமைகளைப் புகுத்துவேன்.
- தமிழில் சிறந்த படைப்புகளை ஊக்குவிப்பேன். பிறபடைப்புகளை மொழிபெயர்ப்பேன்
- தமிழ் வளர தமிழர் வளர வேண்டும். அதற்கு உற்ற துணையாக இருப்பேன்

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

**1. பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக.**

ஆசிரியப் பெருந்தகைக்கும் அன்புசால் வகுப்புத் தோழர்களுக்கும் பணிவு கலந்த வணக்கம். உலகின் மூத்த மொழியாகச் சிறப்புப் பெற்றுத் திகழும் தமிழ்மொழி எனது தாய்மொழி என்பதில் பெருமையும் பேருவகையும் அடைகின்றேன். இலக்கிய இலக்கண வளத்தைப் பெற்ற ஈடில்லா மொழி எந்தன் இனிமைத் தமிழ். பண்பாட்டுச் சிறப்புகளைப் பறைசாற்றும் கவிதைகளைத் தன்னகத்தே பெற்று, உலகுக்கே வழிகாட்டும் ஒளி விளக்காய்த் திகழும் மொழி நம் தமிழ் மொழி.

**2. கவிதையைத் தொடர்க**

அன்னை சொன்ன மொழி
ஆதியில் பிறந்த மொழி
இணையத்தில் இயங்கும் மொழி
ஈடிலாத் தொன்மை மொழி
உலகம் போற்றும் மொழி
ஊர்கூடி வியக்கும் மொழி
எங்கும் நிறைந்த மொழி
ஏற்றம் தந்த மொழி
ஒற்றுமை வளர்க்கும் மொழி
ஓம் என்று ஒலிக்கும் மொழி


---

# இயல் ஒன்று

கவிதைப் பேழை

## தமிழ்விடு தூது

**மனவரைபடம்**




**விளக்கவுரை :**

தமிழ், தெளிந்த அமுதாய் அமிழ்தினும் மேலான வீடுபேற்றைத் தரும் கனியாக இருக்கின்றது. இயல், இசை, நாடகம் என முத்தமிழாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! உன்னிடம் மகிழ்ந்து கேட்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது. நீ அதை கேட்பாயாக.

தமிழே! உன்னிடமிருந்து பள்ளு, குறவஞ்சி எனும் நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்படைந்தனர். நீயும் அவற்றை எல்லாம் படிக்கக் கொடுப்பாய் அதனால், தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவினப் பாவினங்களிலும் உறவு உண்டோ?

www.nammakalvi.com



பாவின் திறம் பொருத்தி நின்று, என்றுமே சிந்தாமணியாய் இருக்கும் உன்னை "சிந்து" என்றழைப்பது உன் பெருமைக்குத் தகுமோ? ஒரு வேளை அவ்வாறு கூறிவிட்டால் "நா" இற்று விழும். வானத்தில் வசிக்கும் தேவர்கள் கூட சத்துவம், இராசசம், தாமசம் ஆகிய மூன்று குணங்களைப் பெற்றிருக்கிறார்கள். நீயோ குற்றங்கள் இல்லாதப் பத்துக் குணங்களைப் பெற்றுள்ளாய்.

மனிதன் கண்ட வண்ணங்கள் ஐந்திற்கு மேல் இல்லை. நீயோ, புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல்,தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டிருக்கிறாய்.

நாவில் தோன்றும் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை நீயோ, செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய். தமிழை அறியாதவர்க்கு அழகு ஒன்றே ஒன்று. நீயோ எண்வகை வனப்புகளைப் பெற்றுள்ளாய்.

## நூற் குறிப்பு

- தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் "தூது" என்பதும் ஒருவகை இலக்கியமாகும்.
- இது "வாயில் இலக்கியம், சந்து இலக்கியம்" என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.
- தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது.
- கலி வெண்பாவால் இப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளது.
- தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் 268 கண்ணிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

## ஆசிரியர் குறிப்பு

இந்நூலின் ஆசிரியர் யாரென அறிந்து கொள்ள இயலவில்லை.

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| 1. தித்திக்கும் | - இனிக்கும் | 8. உண்டு | - இருக்கிறது |
| 2. தெள் அமுதாய் | - தெளிந்த அமுதாய் | 9. மண்ணில் | - இந்த பூமியில் |
| 3. தெள்ளமுதின் மேலாய் | - அமிழ்தினும் மேலான | 10. கொள்வார் | - படைப்பார்கள் |
| 4. முத்திக்கனியே | - வீடுபேறு தரும் கனியே | 11. உறவு என்று | - உறவு என்பது |
| 5. என் முத்தமிழே | -இயல், இசை, நாடகம் என்ற என்தமிழே | 12. உண்டோ? | - இருக்கிறதோ? |
| | | 13. சிந்து | - இசைப்பாடல்களுள்ஒருவகைப் பா |
| 6. புத்திக்குள் | - அறிவுக்குள் | 14. நா | - நாக்கு |
| 7. உரைக்கும் | - சொல்லும் | 15. சிந்துமே | - இற்று விழுமே |

www.nammakalvi.com



16. நீ - நீ
17. பத்துகுணம் - பத்து வகையானகுணங்கள்
18. பெற்றாய் - பெற்றுள்ளாய்
19. உண்டோ - இருக்கிறதோ
20. உடையாய் - பெற்றாய்
21. செவிகள் - காதுகளுக்குவிருந்தளிக்கும்
22. நவரசம் - ஒன்பது சுவை
23. அழியா வனப்பு - அழியாத அழகு
24. எட்டு உடையாய் - எட்டினை உடையாய்

## பிரித்து எழுதுக

1. முத்திக்கனி = முத்தி + கனி
2. அந்திரமேல் = அந்திரம் + மேல்
3. மற்றொருவர் = மற்று + ஒருவர்
4. ஊனரசம் = ஊன் + ரசம்
5. முத்தமிழ் = மூன்று + தமிழ்
6. முக்குணம் = மூன்று + குணம்
7. நாக்குலவும் = நாக்கு + உலவும்

## இலக்கணக் குறிப்பு

**முத்திக்கனி** - உருவகம்
**தெள்ளமுது** - பண்புத்தொகை
**குற்றமிலா** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**நா** - ஓரெழுத்து ஒருமொழி
**செவிகள் உணவான** - நான்காம் வேற்றுமைத்தொகை.
**சிந்தாமணி**, **அழியா**, **ஒழியா** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
**முத்தமிழே!** - விளித்தொடர்

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. கொள்வார் = கொள் + வ் + ஆர்**
**கொள்** - பகுதி
**வ்** - எதிர்கால இடைநிலை
**ஆர்** - பலர்பால் வினைமுற்று விகுதி

**2. உணர்ந்த = உணர் + த்(ந்) + த் + அ**
**உணர்** - பகுதி
**த்** - சந்தி
**த் -ந்** - ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - பெயரெச்ச விகுதி

**3. கொடுப்பாய் = கொடு + ப் + ப் + ஆய்**
**கொடு** - பகுதி
**ப்** - சந்தி

www.nammakalvi.com



ப் - எதிர்கால இடைநிலை

ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று

4. பெற்றாய் = பெறு(பெற்று) + ஆய்

பெறு - பகுதி 'பெறு' எனும் பகுதி 'பெற்று' என ஒற்றுஇரட்டித்து இறந்தகாலம் காட்டியது.

ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

## விரித்து எழுதுக

| | |
|---|---|
| **முத்தமிழ்** | - இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் |
| **மூவினம்** | - துறை, தாழிசை, விருத்தம் |
| **முக்குணம்** | - சத்துவம், இராசசம், தாமசம் |
| **பத்துக் குணம்** | - செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், காந்தம், வலி, உய்த்தலில் பொருண்மை,சமாதி. |
| **ஐந்து வண்ணம்** | - வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை. |
| **அறுசுவை** | - இனிப்பு, கசப்பு, புளிப்பு, உறைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு. |
| **நவரசம்** | - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை. |
| **வனப்பு** | - அம்மை, அழகு, தொன்மை, தோல் விருந்து, இயைபு, புலன், இழைபு. |

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. தமிழ்விடு தூது _______ என்னும் இலக்கியத்தைச் சார்ந்தது.**

அ) தொடர் நிலைச் செய்யுள் ஆ) புதுக் கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

**[விடை : சிற்றிலக்கியம்]**

**2. விடுபட்ட இடத்திற்குப் பொருந்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.**

i) _____ இனம் ii) வண்ணம் ______ iii) ______ குணம் iv) வனப்பு ______

அ) மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ) எட்டு, மூன்று, பத்து, நூறு

இ) நூறு, பத்து, எட்டு, மூன்று **[விடை : மூன்று, நூறு, பத்து, எட்டு]**

**3. அழியா வனப்பு,ஒழியா வனப்பு சிந்தா மணி - அடிக் கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு**

அ) வேற்றுமைத் தொகை ஆ) வினைத்தொகை இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**[விடை :ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்]**

## பாடலைப் படித்து வினாவிற்கு விடை தருக

**அ)**

**தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான**
**முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்**
**உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்**

www.nammakalvi.com



**விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
   தமிழ்விடு தூது.
2. இப்பாடலை இயற்றியவர் யார்?
   அறியப்படவில்லை.
3. பிரித்து எழுதுக : முத்தமிழே, உவந்துரைக்கும்.
   முத்தமிழே = மூன்று + தமிழே
   உவந்துரைக்கும் = உவந்து + உரைக்கும்
4. விரித்து எழுதுக : முத்தமிழ்
   இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.
5. விளம்பக்கேள் - பொருள் கூறுக.
   சொல்வதைக் கேட்பாயாக.
6. உண்ணப்படும் தேன் எது?
   தமிழ்.
7. அடி எதுகையை எடுத்து எழுதுக.
   தித்திக்கும் | உண்ணப்படும்
   முத்திக் | விண்ணப்படும்
8. விளிச் சொற்களை எடுத்து எழுதுக.
   கனியே; முத்தமிழே; தேனே.
9. 'விண்ணப்பம்' என்பதன் பொருள் யாது?
   வேண்டுகோள்.
10. 'உவந்து' என்பதன் பொருள் யாது?
    மகிழ்ந்து.
11. சீர் மோனையை எடுத்து எழுதுக.
    முத்திக் - முத்தமிழே
    உண்ணப் - உன்னோடு - உவந்து
    - உரைக்கும்
    விண்ணப்பம் - விளம்பக்கோள்

ஆ)

**குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு**
**உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்**
**வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்**
**சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே**

1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
   தமிழ்விடு தூது.
2. இப்பாடலை இயற்றியவர் யார்?
   அறியப்படவில்லை.
3. குறம், பள்ளு என்று கூறப்படும் நூல்கள் யாவை?
   குறவஞ்சி, முக்கூடற்பள்ளு.
4. மூவினங்கள் யாவை?
   துறை, தாழிசை, விருத்தம்.
5. இலக்கணக் குறிப்பு தருக :கொள்வார், சிந்தாமணி.
   கொள்வார் - வினையாலணையும் பெயர்
   சிந்தாமணி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
6. அடி எதுகையை எடுத்து எழுதுக.
   குறம் | வந்து
   உறவு | சிந்து
7. சீர் மோனையை எடுத்து எழுதுக.
   உறவு - உண்டோ
8. சீர் எதுகையை எடுத்து எழுதுக.
   உறவு - திறம்
   வந்து - சிந்தா
9. இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.
   குறம் என்றும்.
   பள்ளு என்றும்.

www.nammakalvi.com



இ)

முற்றும்உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார்நீ
குற்றம்இலாப் பத்துக் குணம்பெற்றாய் - மற்றொருவர்
ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோநீ
நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய்

1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?

தமிழ்விடு தூது.

2. இப்பாடலை இயற்றியவர் யார்?

அறியப்படவில்லை.

3. முற்றும் உணர்ந்த தேவர்கள் பெற்ற முக்குணங்கள் யாவை?

சத்துவம், இராசசம், தாமசம்.

4. தமிழ் பெற்ற குணங்கள் எத்தனை?

பத்து.

5. மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணம் எத்தனை?

ஐந்து.

6. தமிழ் பெற்ற வண்ணங்கள் எத்தனை?

நூறு

7. 'நா' என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?

ஓர் எழுத்து ஒரு மொழி.

8. முக்குணம் - விரித்து எழுதுக.

சத்துவம், இராசசம், தாமசம்.

9. இலக்கணக் குறிப்பு தருக : முக்குணம், இலா, பெற்றாய், ஆக்கிய, நோக்கிய

முக்குணம் - பண்புத்தொகை
இலா -ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
ஆக்கிய, நோக்கிய - பெயரெச்சம்
பெற்றாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று.

10. அடி எதுகையை எடுத்து எழுதுக.

முற்றும் | ஆக்கிய
குற்றம் | நோக்கிய

11. சீர் மோனை எடுத்து எழுதுக.

முற்றும் - முக்குணமே
குற்றம் - குணம்.

ஈ)

ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள்உணவு
ஆன நவரசம்உண் டாயினாய் - ஏனோர்க்கு
அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ
ஒழியா வனப்புஎட்டு உடையாய்

1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?

தமிழ்விடு தூது.

2. இப்பாடலை இயற்றியவர் யார்?

அறியப்படவில்லை.

3. உணவின் சுவைகள் எத்தனை?

ஆறு.

4. தமிழ் செவிகளுக்கு விருந்தளிக்கும் சுவைகள் எத்தனை?

ஒன்பது.

5. வனப்புகள் எத்தனை?

எட்டு.

6. 'ஊனரசம்' என்பது எதைக் குறிக்கும்?

ஆறு சுவைகள்.

7. 'வனப்பு' என்பதன் பொருள் யாது?

அழகு.

8. அடி எதுகையை எடுத்து எழுதுக.

ஊனரசம் | அழியா
ஆன நவரசம் | ஒழியா

9. இலக்கணக் குறிப்பு தருக : அழியா, ஒழியா

அழியா, ஒழியா - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

10. சீர் மோனையை எடுத்து எழுதுக.

ஊனரசம் - உண்டோ - உணவு
அழியா - அலது - அதிகம்

www.nammakalvi.com



## பாடநூல் வினா - குறுவினா

**1. கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

- எதுகை, மோனை, ஓசை நயத்துடன் இடைப்பாடல் வடிவில் இரண்டிரண்டு அடிகளால் பாடப்படுவது கண்ணியாகும்.
- இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொகுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.

---

## நெடுவினா

**1. "தூது அனுப்பத் தமிழே சிறந்தது" - தமிழ்விடு தூது காட்டும் காரணங்கள் விளக்கி எழுதுக.**

**1. சொக்கநாதருக்குத் தூது சென்ற தமிழ் :**

மதுரையில் கோவில் கொண்டுள்ள சொக்கநாதப் பெருமான் மீது விருப்பம் கொண்ட பெண்ணொருத்தி, தன் அன்பை வெளிப்படுத்தி வருமாறு தூது அனுப்ப, அவன் தேர்தெடுத்தது தமிழ் மொழியைத்தான்.

**2. தூது செல்வோரின் தகுதி :**

தூது செல்பவர் பல்வேறு திறனுடையவராய் இருக்க வேண்டும். அவர் இனிமையாய், இலக்கியச் சுவையோடு, நலமும் அழகும் குறையாமல் செய்தியைத் தெரிவிப்பவராய் இருத்தல் வேண்டும். தாம் கூற வரும் செய்தியைக் குற்றம் குறைவின்றித் தெளிவாய் எடுத்துக்கூறும் திறன் படைத்தவராய் இருத்தல் வேண்டும். அப்போதுதான் தூது சென்றதற்கான பயன் கிடைக்கும். தமிழ்மொழி மேற்கூறிய சிறப்புகளை உடையது. அத்திறன்களோடு கூடவே, இனிய பாச்சிறப்பும் பெற்றிருப்பதால் தலைவன் சொக்கநாதப் பெருமானிடம், தூது செல்லும் அனைத்துத் தகுதிகளையும் பெற்றுத் திகழ்கிறது. தமிழ், இவற்றைக் கருதியே சொக்கநாதப் பெருமானிடம் தூதாகத் தமிழை அனுப்புகிறாள், தலைவி.

---

## கற்பவை கற்றபின்

**1. நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்று எழுதுக.**

**முன்னுரை :**

ஒருவர் எண்ணத்தை மற்றவர் தெரிந்து கொள்ளவும், தன்னுடைய சிந்தனையை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறவும் உதவுவது மொழியாகும்.

**முதன் மொழி :**

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழியாக விளங்குவது தமிழ்மொழி. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் போன்ற திராவிட மொழிகளுக்குத் தாயாகவும் விளங்குவதால் பல்வேறு வேர்ச் சொற்களைக் கொண்டுள்ளது. பல்வேறு மொழி பேசுபவர்களும் உன்னை எளிதில் புரிந்துகொள்ள இயலும்.

**தாய் மொழி :**

தமிழ் எனக்குத் தாய் மொழியாக அமைவதால் என்னுடைய சிந்தனை, எண்ணம், ஏக்கம் தேவைகளைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளத் தாய் மொழியாம் தமிழே முதலில் வரக் காண்கின்றேன்.

www.nammakalvi.com



பிறமொழிகளைக் கற்பதில் தவறில்லை என்றாலும் எல்லாவற்றையும் பிறமொழிகளில் என்னால் எடுத்துக் கூற முடிவதில்லை.

**2. படித்துத் திரட்டுக.**

**"காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்**
**மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்**
**போதொளிரும் திருவடியும் பொன்முடிசூளாமணியும் பொலியச் சூடி**
**நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க"- கவியோகி சுத்தானந்த பாரதியார்.**

**இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.**

- குண்டலகேசி
- வளையாபதி
- சீவகசிந்தாமணி
- மணிமேகலை
- சிலப்பதிகாரம்
- சூளாமணி
- திருக்குறள்

விரிவானம்

**இயல் ஒன்று**

## வளரும் செல்வம்

**மனவரைபடம்**

| | |
|---|---|
| சாப்ட்வேர் | மென்பொருள் |
| பிரௌசர் | உலவி |
| க்ராப் | செதுக்கி |
| கர்சர் | ஏவி, சுடி |
| சர்வர் | வையக விரிவு வலை வழங்கி |
| ஃபோல்டர் | உறை |
| சைபர்ஸ்பேஸ் | இணைய வெளி |
| லேப்டாப் | மடிக்கணினி |

வளரும் செல்வம்

www.nammakalvi.com



## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| குழு 1 | குழு 2 | குழு 3 | குழு 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| - | - | - | - |
| தோணி | மர | விருத்தம் | காரணவினை |

அ) வங்கம், மானு, தாழிசை, பிறவினை ஆ) தாழிசை, மானு, பிறவினை, வங்கம்

இ) பிறவினை, தாழிசை, மானு, வங்கம் **[விடை : வங்கம், மானு, தாழிசை, பிறவினை]**

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.**

- சாப்ட்வேர் - மென்பொருள்
- ஹார்டுவேர் - வன்பொருள்
- ப்ரௌசர் - உலவி
- க்ராப் - செதுக்கி
- சைபர்ஸ்பேஸ் - இணைய வெளி
- லேப்டாப் - மடிக்கணினி

## சிறுவினா

**1. வளரும் செல்வம் - உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அதற்கு இணையான சொற்களை பட்டியலிடுக.**

| தமிழ் | ஆங்கிலம் | |
|---|---|---|
| மடிக்கணினி | Laptop | லேப்டாப் |
| மென்பொருள் | Software | சாப்ட்வேர் |
| உலவி | Browser | ப்ரௌசர் |
| செதுக்கி | Crop | க்ராப் |
| ஏவி | Cursor | கர்சர் |
| இணையவெளி | Cyberspace | சைபர்ஸ்பேஸ் |
| சேவையகம் | Server | சர்வர் |
| உறை | Folder | ஃபோல்டர் |

| தமிழ் | கிரேக்கம் |
|---|---|
| ஏறிதிரை | ஏறுதிரான் |
| கலன் | கலயுகோய் |
| நீர் | நீரிய |
| நாவாய் | நாயு |
| தோணி | தோணீஸ் |
| பா | பாய்யியோனா |
| செப்பலோசை | செப்போ |
| இளிவரல் | இளகியோ |

www.nammakalvi.com



**1. 'வளரும் செல்வம்' உரையாடலைக் கட்டுரை வடிவில் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச் சட்டகம் :**

- முன்னுரை
- தமிழெண்கள்
- கலைச் சொற்கள்
- கடல் துறை
- கவிதைத் தமிழ்
- இன்றியமையாத பணி
- முடிவுரை.

**முன்னுரை :**

சொற்கள் வரலாற்றைப் பேசுபவை. ஒவ்வொரு சொல்லிலும் இனத்தின், மொழியின் வரலாறு இருக்கிறது. தமிழ்ச் சொற்கள் வழியாகத் தமிழர் நாகரிகத்தையும் வாழ்வையும் அறிய முடியும். அதுபோலத் தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் அவை சார்ந்த இனத்தின் மொழியின் வரலாற்றைக் காட்டுகின்றன. சொற்கள் புலப்படுத்தும் வரலாறு, பண்பாடு ஆகியவற்றைக் கூறுவதே இதன் நோக்கம்.

**தமிழெண்கள் :**

கணிதத்தில் ஒன்று, பத்து, ஆயிரம் ஆகிய எண்ணிக்கையிலான தமிழ்ச் சொற்கள் நமக்குத் தெரியும். ஆனால் 1/ 320, 1/ 160 ஆகிய எண்ணிக்கைகளுக்கான சொற்களைக் கால மாற்றத்தில் கைவிட்டோம். நாம் நினைத்தால் அவற்றை மீட்டெடுக்கலாம்.

**கலைச் சொற்கள் :**

தாய் மொழி சார்ந்த சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும். எனவேதான் நம் வாழ்க்கையில் இடம்பெறும் அறிவியல் கருத்துகளுக்கான கலைச் சொற்களை எல்லாம் நம் மொழியிலும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. அத்தகைய கலைச் சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்தோமொழிபெயர்ப்புச் செய்தோ உருவாக்கலாம்.

**கடல் துறை :**

உலகில் தொன்மை மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் திகழ்வது கிரேக்க மொழியாகும். இம்மொழியின் கடல் சார்ந்த சொற்களில் எறிதிரை (எறுதிரான்), கலன் (கலயுகோய்), நீர் (நீரியோஸ்),(நீரிய), நாவாய்.

(நாயு),தோணி (தோணீஸ்) போன்ற தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இது போலப் பல்வேறு துறை சார்ந்த தமிழ்ச் சொற்களும் வேற்று மொழிகளுக்குச் சென்றுள்ளன.

கவிதைத் தமிழ் :

கவிதை சார்ந்த சொற்களைத் தமிழிலும் கிரேக்க மொழியிலும் ஒப்பாகக் காண முடியும்.

**இன்றியமையாத பணி :**

வளர்ந்து கொண்டிருக்கும் அறிவியல் துறைக் கலைச் சொற்களை உடனுக்குடன் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தல் வேண்டும்.

தமிழில் உள்ள தத்துவம், அரசியல் ஆகிய துறைகளின் சிந்தனைகளை எல்லாம் பிறமொழிகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும். இதுவே நம் தமிழ்மொழி உயிர்த்திருக்க நாம் செய்ய வேண்டிய இன்றியமையாத பணியாகும்.

**முடிவுரை :**

வளர்ந்து கொண்டிருக்கும் அறிவியல் துறைக் கலைச் சொற்களை உடனுக்குடன் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து அத்துறைகளை மேலும் வளர்க்க வேண்டும். பிறமொழியிலுள்ள தத்துவம், அரசியல், மருத்துவம், பொறியியல், கணினி, விண்வெளி போன்ற பிற துறைகளின் பதிவுகள் எல்லாம் உடனுக்குடன் நம் மொழிக்குக் கொண்டு வரப்பட வேண்டும். நம் மொழியில் புதிய, புதிய சொல்வளம் பெருக வேண்டும்.

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

1. நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம் பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை அறிந்து எழுதுக.

| சொற்பட்டியல் | பிறமொழிச் சொற்கள் | நிகரான தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|
| வகுப்பு, புத்தகம், பிளாக் போர்டு | ப்ளாக் போர்டு (Black Board) | கரும்பலகை |
| பேனா, பென்சில் | பேனா (Pen)<br>பென்சில் (Pencil) | தூரிகை எழுதுகோல்<br>எழுதுகோல் |
| நோட், டஸ்டர் | நோட் (Note) டஸ்டர் (Duster) | ஏடு,அழிப்பான் |

2. உரையாடலை நிறைவு செய்க, அவற்றுள் இடம் பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக.

**அருண் :** வணக்கம்! நண்பா!

**நளன் :** வணக்கம், நாம் சந்தித்து பல வருடங்கள் ஆகிவிட்டதே!

**அருண் :** ஆமாம்! பத்து வருடம் ஆகிவிட்டது. இல்லையா?

**நளன் :** ஆமாம், நான் தற்போது பல்துறை நிறுவனம் ஒன்றில் திட்ட மேலாளராக இருக்கிறேன். நீ?

**அருண் :** நான்,மதுரை யாதவர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளாராகப் பணிபுரிகின்றேன்.

**நளன் :** அந்தக் கல்லூரியில் தான் என் தம்பி முதலாமாண்டு படிக்கின்றான்.

**அருண் :** சரி ! நேரமாகிவிட்டது. போய் வருகின்றேன்.

**நளன் :** போய்! வா.

| ஆங்கிலச் சொல் | தமிழ்ச சொற்கள் |
|---|---|
| வருஷம் | ஆண்டு |
| டென் இயர்ஸ் | பத்து ஆண்டுகள் |
| மல்ட்டி நேஷனல் கம்பெனி | பன்னாட்டு நிறுவனம் |
| பிராஜக்ட் மேனேஜர் | திட்ட மேலாளர் |
| கவெர்மெண்ட் காலேஜ் | அரசுக் கல்லூரி |
| ப்ரொபஸர் | பேராசிரியர் |
| பஸ்டு இயர் | முதலாமாண்டு |
| மீட்டிங் | கூட்டம் |
| பை | சென்று வருகிறேன். |

www.nammakalvi.com




இயல் ஒன்று

கற்கண்டு

# தொடர் இலக்கணம்

மனவரைபடம்




## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எழுதுக.**

- "படு" என்பதனைப் போல "உண்", "பெறு" முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன.

www.nammakalvi.com



- அவற்றைப் போலவே, எச்சங்களுடன் சேர்ந்து ஆயிற்று, போயிற்று, போனது முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளை உருவாக்குகின்றன.

**எ.கா :** தோசை வைக்கப்பட்டது.
சட்டி உடைந்து போயிற்று.

**2. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.**

- வீணையோடு வந்தாள் - வேற்றுமைத் தொடர். (ஒடு)
- கிளியே பேசு - விளித்தொடர்

---

## சிறுவினா

**1. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.**

**தன்வினை :**

எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும்.

**எ.கா :** பந்து உருண்டது.

**பிறவினை :**

எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை எனப்படும்.

**எ. கா :** உருட்ட வைத்தான்.

---

## பகுபத உறுப்பிலக்கணம்

- பதம் (சொல்) இரு வகைப்படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும்.
- பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும்.
- இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| **பகுதி (முதனிலை)** | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப்பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச்சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| **விகுதி (இறுதிநிலை)** | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும். |
| **இடைநிலை** | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| **சந்தி** | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| **சாரியை** | பகுதி, விகுதி இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| **விகாரம்** | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

www.nammakalvi.com



**பகுதி :**

| | | |
|---|---|---|
| ஊரன் - ஊர் | பார்த்தான் - பார் | மடித்தார் - மடி |
| நடிகன் - நடி | வரைந்தான் - வரை | மகிழ்ந்தான் - மகிழ் |

**விகுதி :**

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பாடுகிறாள் | ஆள் - பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் - பால்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து - ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ - பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் |
| செய்தாய் | ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர்,ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் - பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ - வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க - வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் - தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு... |

**இடைநிலை :**

| | | |
|---|---|---|
| வென்றார் | ற் - இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு - நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் - எதிர்கால இடைநிலை | ப், வ், க் |
| பறிக்காதீர் | ஆ - எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் - பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

**சந்தி :**

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் - சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் - உடம்படுமெய் சந்தி | ய், வ் |

**சாரியை :**

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் - சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

**எழுத்துப்பேறு :**

➢ பகுபத உறுப்பகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும்.

www.nammakalvi.com



- பெரும்பாலும் ‘த்’ மட்டுமே வரும்.
- சாரியை வரும் இடத்தில் ‘த்’ வந்தால் அது எழுத்துப்பேறு.

**எ.கா :**

**1. வந்தனன் = வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்**

| | |
|---|---|
| **வா** | - பகுதி (‘வ’ ஆனது விகாரம்) |
| **த் (ந்)** | - சந்தி (‘ந்’ ஆனது விகாரம்) |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **அன்** | - சாரியை |
| **அன்** | - ஆண்பால் வினைமுற்று விகுதி |

**2. செய்யாதே = செய் + ய் + ஆ + த் + ஏ**

| | |
|---|---|
| **செய்** | - பகுதி |
| **ய்** | - சந்தி |
| **ஆ** | - எதிர்மறை இடைநிலை |
| **த்** | - எழுத்துப்பேறு |
| **ஏ** | - முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி |

## இன்றியமையாத இலக்கணக் குறிப்புகள்

**1. பெயரெச்சம் :**

வினை முற்றுப் பொறாமல் எஞ்சி நிற்கும் எச்சம் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிவது பெயரெச்சம்.

**எ.கா :** படித்த மாணவன், படித்த ........ (அ) நடந்த (த் + அ) அ என்ற விகுதியுடன் முடியும்.

**2. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் :**

ஓர் எதிர்மறைப் பெயரெச்சத்தின் கடைசியில் ‘த’ கெட்டு விடுவது ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம். இது ஆ என்ற ஓசையுடன் முடியும்.

(அணையாத விளக்கு) (அணையா விளக்கு) அணையா ..... (ஆ) (யா = யா +ஆ)

**3. வினையெச்சம் :**

வினை முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் ஒரு எச்சம் வினைச் சொல்லக் கொண்டு முடிவது வினையெச்சம். இது “உ”, “இ” விகுதிகளுடன் முடியும்.

படித்து முடித்தான் படித்து .......... (உ) நடந்து ......... (த் + உ)

**4. வியங்கோள் வினைமுற்று :**

வாழ்த்துதல், வைதல், வேண்டல், விதித்தல் பொருளில் வருவது. காலம் காட்டாது. இது க, இய, இயர் என்ற விகுதிகளுடன் முடியும்.

**எ.கா :** செல்க, வாழ்க, வாழி, வாழிய, வாழியர்.

**5. வினையாலணையும் பெயர் :**

ஒரு வினைமுற்று வினையைக் குறிக்காமல் வினையைச் செய்த கருத்தாவைக் குறித்து பெயராய் வருவது வினையாலணையும் பெயர். எழுதினான் - எழுதியவன் என வரும். அது, அ, ஆன், அர், ஆர், ஓர், நர் ஆகிய ஓசைகளுடன் முடியும்.

**எ.கா :** இழந்தவன், சென்றனர், அனுப்புநர்.

www.nammakalvi.com



**6. சொல்லிசை அளபெடை :**

மூன்று மாத்திரை அளவில் வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை இது 'இ' என்ற எழுத்துடன் முடியும்.

**எ.கா :** ஒரீஇ, நம்பெழீஇ, உரைனசைஇ .

**7. இன்னிசை அளபெடை :**

மூன்று மாத்திரை அளவில் மூன்று அசைச் சொற்களில் அமைவது இன்னிசை அளபெடை .

**எ.கா :** உண்பதூம் (உண்/பதூ/உம்) உடுப்பதூஉம்.

**8. செய்யுளிசை அளபெடை :**

மூன்று மாத்திரை அளவில் இரண்டு அசைச் சொற்களில் அமைவது செய்யுளிசை அளபெடை .

**எ.கா :** ஆஅதும், கழுஉமணி, படாஅபறை, தொழா அர்.

**9. அடுக்குத் தொடர் :**

அர்த்தமுள்ள சொற்கள் பலமுறை அடுக்கி வருவது.

**எ.கா :**எண்ண எண்ண, பலப்பல, தீ தீ தீ

**10. இரட்டைக் கிளவி :**

அர்த்தமுள்ள சொற்கள் வினையைச் சிறப்பிக்க இரட்டையாக மட்டும் அமைவது.

**எ.கா :** மடமட, சலசல.

**11. ஒரு பொருட் பன்மொழி :**

ஒரே பொருள் தரும் இரண்டு சொற்களுடன் அமைவது ஒரு பொருட் பன்மொழி.

**எ.கா :** தீயழல், நடுமையம், ஒரு தனி .

**12. பண்புத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் மை மறைந்திருப்பது.

**எ.கா :** சிற்றில் = (சிறுமை + இல்), பைந்தமிழ் = (பழமை + தமிழ்), செங்கோல் = (செம்மை + கோல்).

**13. வினைத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் காலம் காட்டும் இடைநிலை கின்ற மறைந்திருப்பது.

**எ.கா :** தொடுகடல் (தொடுகின்ற கடல்)

**14. உவமைத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் 'போன்ற' அல்லது 'போல' உவமஉருபு மறைந்திருப்பது.

**எ.கா :** பவளவாய் (பவளம் போன்ற வாய்)

**15. வேற்றுமைத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் வேற்றுமை உருபுகளில் (ஐ, ஆல், இன், கு, அது, கண்) ஏதேனும் ஒன்று மறைந்திருப்பது.

**எ.கா :** கூலி வேலை (கூலிக்கு வேலை).

**16. உம்மைத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் "உம்" மறைந்திருப்பது.

**எ.கா :** செடி கொடிகள் (செடிகளும், கொடிகளும் என்பதில் உம் மறைந்தது).

www.nammakalvi.com



**17. எண்ணும்மை :**

உம்மைத் தொகையைப் போல் உம் மறையாமல் எண்ணிக்கை காண்பதற்காக வெளிப்படையாக இருப்பது எண்ணும்மை.

**எ.கா :** கற்பும் காதலும் (உம் - வெளிப்படை)

**18. அன்மொழித் தொகை :**

ஆகுபெயர் போல் ஒரு தொகைச் சொல் வேறு அல்லாத ஒன்றைக் குறிப்பது அன்மொழித் தொகை.

**எ.கா :** செந்தாமரை (பண்புத் தொகை) செந்தாமரை வந்தாள் (அன்மொழித் தொகை)

**19. உருவகம் :**

உம்மைத் தொகையை முன் பின்னாக மாற்றுவது உருவகம். இது, உவமையைப் பொருள் மேல் ஏற்று இடையில் ஆகிய என்ற சொல் மறைந்து வரும்.

**எ.கா :** மதிமுகம் (மதி போன்ற முகம் - உவமைத் தொகை) முகமதி (முகமாகிய மதி உருவகம்)

**20. தன்மை பன்மை வினைமுற்று :**

அம், ஓம் என்ற விகுதிகளுடன் முடிவது.

**எ.கா :** போற்றுதும்.

**21. செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று :**

செய்யும் என்ற சொல்லைப் போன்றே தொனிப்பது.

**எ.கா :** படும்.

**22. செயின் என்னும் வாய்ப்பாடு வினைமுற்று :**

செயின் என்ற சொல்லைப் போன்றே தொனிப்பது.

**எ.கா :** பெறின்.

**23. ஆகுபெயர் :**

ஒன்றின் இயற்பெயர் மற்றொன்றுக்கு ஆகி வருவது.

**எ.கா :** உலகு (உலக மக்களைக் குறிக்கும்) ஊர் சிரித்தது,

**24. தொழிற்பெயர் :**

ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர், காலம் காட்டாது. இது தல், அல், கை, மை, ஐ, சி, பு என்ற விகுதிகளுடன் அமையும்.

**எ.கா :** பாடுதல், பாடல், ஆட்டம், வீற்றிருக்கை, கொல்லாமை, எஞ்சாமை.

**25. முதல் நிலை திரிந்த தொழிற்பெயர் :**

ஒரு தொழிற்பெயரின் விகுதி கெட்டு, முதல் எழுத்தும் மாறி ஒலிப்பது.

**எ.கா :** கெடுதல்.

கெடுதல் → கெடு → கேடு

பெறுதல் → பெறு → பேறு

**26. இலக்கணப் போலி :**

ஓர் இலக்கண அமைப்புடைய சொல்லுக்கு போலியாக அமைவது

**எ.கா :** தசை (சதை).

www.nammakalvi.com



**27. எழுத்துப் போலி :**

ஒரு சொல்லில் எழுத்து மாறினாலும் பொருள் மாறாது. இது முதல், இடை, கடைசியில் அமையும். முற்றிலும் மாறுபட்டு அமையும்.

**எ.கா :** நலன் (நலம்) கடைப்போலி, அஞ்சு (ஐந்து) முற்றுப்போலி.

**28. உரிச் சொல் தொடர் :**

தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாத, சால, உறு, தவ, நனி, கூர், கழி, வான், மா, தட, வை, மழு, கடி போன்ற சொற்கள் வேறு ஒரு சொல்லுடன் உரிமை பெற்றுத் தொடர்ந்து வருவது இது அதன் பண்பை விளக்கும்.

**எ.கா :** மாநாடு, உறுபசி, சாலப் பேசினான்.

**29. மரூஉச் சொல் :**

காலப்போக்கில் மருவி மாறி வருபவை.

**எ.கா :** எந்தை (என் தந்தை) பேர் (பெயர்)

**30. இடைக்குறை விகாரம் :**

ஒரு சொல்லின் இடையில் ஓர் எழுத்து குறைந்து மாறுபட்டாலும் அதே பொருளைத் தருவது.

**எ.கா :** உளம் (உள்ளம்) கணீர் (கண்ணீர்).

**31. இரு பெயரொட்டுப் பண்புத் தொகை :**

இரு சொற்களில் முதல் சொல் சிறப்புப் பெயராகவும் அடுத்துள்ள சொல் பொதுப் பெயராகவும் இருப்பது.

**எ.கா :** தமிழ்மொழி, இமயமலை.

**32. தன்மை ஒருமை வினைமுற்று :**

என், ஏன் என்ற விகுதிகளுடன் முடிவது.

**எ.கா :** கொள்வேன்.

**33. முற்றெச்சம் :**

ஒரு வினைமுற்றுச் சொல் வினையெச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடியும்.

**எ.கா :** படித்தனன் தேறினான்.

## பொருத்துதல்

அ) தொடர் — பயனிலை வகை

1. நான் வந்தேன் - வினைப் பயனிலை
2. சாப்பிடு - தோன்றா எழுவாய்
3. சொன்னவன் கலா - பெயர்ப் பயனிலை
4. விளையாடுபவன் யார் - வினாப் பயனிலை.

ஆ)
1. நட - ஒரு சொல் தொடர்
2. மன்னன் வந்தான் - எழுவாய்த் தொடர்
3. நண்பா கேள் - விளித் தொடர்
4. பாடும் குயில் - தெரிநிலைப் பெயரெச்சத் தொடர்

www.nammakalvi.com



5. பாம்பு பாம்பு - அடுக்குத் தொடர்

## கற்பவை கற்றபின்

### தொடர்களை மாற்றுக

அ) பதவியை விட்டு நீக்கினான் - தன்வினைத் தொடராக மாற்றுக.

**விடை :** பதவியை விட்டு நீங்கினான்.

ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர் - தன்வினைத் தொடராக மாற்றுக.

**விடை :** மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்ந்தனர்.

இ) உண்ணப்படும் தமிழ்த் தேனே - இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.

**விடை :** உண்ணும் தமிழ்த் தேனே.

ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுத்துள்ளனர் - இத்தொடரை செய்பாட்டு வினைத் தொடராக மாற்றுக.

**விடை :** திராவிட மொழிகள் மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் - இத்தொடரைக் காரணவினைத் தொடராக மாற்றுக.

**விடை :** நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தார்.

### சொற்களைத் தொடர்களாக மாற்றுக

அ) மொழிபெயர் - தன்வினை, பிறவினைத் தொடர்களாக

கண்ணன் மொழி பெயர்த்தான் - தன்வினை

**விடை :** கண்ணன் மொழி பெயர்ப்பித்தான் - பிறவினை.

ஆ) பதிவு செய் - செய்வினை, செயப்பாட்டு வினைத் தொடர்களாக

முருகன் பதிவு செய்தான் - செய்வினை.

**விடை :** முருகனால் பதிவு செய்யப்பட்டது - செயப்பாட்டு வினை.

இ) பயன்படுத்து - பிற வினை, காரண வினைத் தொடர்களாக.

வளவன் பயன்படுத்து வித்தான் - பிற வினை.

**விடை :** வளவன் பயன்படுத்தினான் - காரணவினை.

ஈ) இயங்கு - செய்வினை, செயப்பாட்டு வினைத் தொடர்களாக.

முருகன் இயங்கினான் - செய்வினை.

**விடை :** முருகனால் இயக்கப்பட்டது - செயப்பாட்டு வினை.

www.nammakalvi.com



## பொருத்தமான செயப்பாட்டு பொருள் சொற்களை எழுதுக

[தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களை, நம்மை, வாழ்வியல் அறிவை]

அ) தமிழ் ______ கொண்டுள்ளது **[விடை : செவ்விலக்கியங்களை]**

ஆ) நாம் ______ வாங்க வேண்டும் **[விடை : தமிழலக்கிய நூல்களை]**

இ) புத்தகங்கள்______ கொடுக்கின்றன. **[விடை : வாழ்வியல் அறிவை]**

ஈ) நல்ல நூல்கள் ______ நல்வழிப்படுத்துகின்றன **[விடை : நம்மை]**

## பொருத்தமான பெயரடைகளை எழுதுக

[நல்ல, பெரிய, இனிய, கொடிய]

1. எல்லோருக்கும் ______ வணக்கம். **[விடை : இனிய]**
2. அவன் ______ நண்பனாக இருக்கிறான். **[விடை : நல்ல]**
3. ______ ஓவியமாக வரைந்து வா. **[விடை : பெரிய]**
4. ______ விலங்கிடம் பழகாதே. **[விடை : கொடிய]**

## பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க

[அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக]

1. ஊர்தி ______ சென்றது. **[விடை : மெதுவாக]**
2. காலம் ______ ஓடுகிறது. **[விடை : வேகமாக]**
3. சங்க இலக்கியம் வாழ்க்கையை ______ காட்டுகிறது. **[விடை : பொதுவாக]**
4. இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவரும் ______ காட்டுக. **[விடை : அழகாக]**

## அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக

அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர் - வினாத் தொடராக மாற்றுக.

**விடை :** நம் முன்னோர் எதனோடு இயைந்த வாழ்வு நடத்தினர்?

ஆ) பாடினான் - எழுவாய்த் தொடராக மாற்றுக.

**விடை :** அறிவழகன் பாடினான்.

இ) இசையின்றி அமையாது பாடல் - உடன்பாட்டுத் தொடராக மாற்றுக.

**விடை :** இசையோடு அமையும் பாடல்.

www.nammakalvi.com



ஈ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? - கட்டளைத் தொடராக மாற்றுக.

**விடை :** இதைச் செய்.

## வேர்ச் சொற்களை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக

**அ) தா.**

i) ஆறுமுகம் புத்தகத்தைத் தா தா என்றான்.

விடை : அடுக்குத் தொடர்

ii) ஆறுமுகம் புத்தகத்தைத் தந்தான்.

விடை : உடன்பாட்டு வினைத் தொடர்.

iii) ஆறுமுகம் புத்தகத்தைத் தருவித்தான்.

விடை : பிற வினைத் தொடர்.

**ஆ) கேள்.**

i) பாரி கேட்டான் - எழுவாய்த் தொடர்

ii) கேட்டான் பாரி - வினைமுற்றுத் தொடர்.

iii) கேட்டது பாரியா?- வினாத் தொடர்

**இ) கொடு.**

i) வள்ளி எழுதுகோலைக் கொடுத்தாள் - செயதித் தொடர்.

ii) வள்ளி எழுதுகோலைக் கொடு - கட்டளைத் தொடர்.

**ஈ) பார்.**

i) புகழேந்தி படம் பார்த்தான் - செய்வினை

ii) புகழேந்தியால் படம் பார்க்கப்பட்டது - செயப்பாட்டு வினை

iii) புகழேந்தி படம் பார்க்கச் செய்தார் - பிற வினை

## சிந்தனை வினா

**உ) கீழ்க்காணும் காட்சியை விவரிக்க.**

சுற்றுப்புறச் சூழலில் சிக்கித் தவிக்கின்றேன்.
காற்று கிடைக்காமல் மூச்சு முட்டுகின்றது.
ஒளி கிடைக்காமல் விழி பிதுங்குகின்றது.
வாகன ஓசையில் காது செவிடாகிறது.
இத்தனை துன்பங்களோடும் நான்
எத்தனை நாள் சுற்றிச் சுழல்வது?

www.nammakalvi.com



**ஊ) தமிழ் எண்களில் எழுதுக.**

i) பன்னிரண்டு - கஉ
ii) பதின்மூன்று - கங
iii) நாற்பத்து மூன்று - சங
iv) எழுபத்தெட்டு - எஅ
v) தொண்ணூறு -கூ0

## மொழியை ஆள்வோம்

### மொழிபெயர்க்க

1. Linguistics - மொழியியல்
2. Literature - இலக்கியம்
3. Philologist - மொழியியல் தத்துவயாளர்
4. Polyglots - பன்மொழி புலமையாளர்
5. Phonologist - ஒலியனியல் வல்லுநர்
6. Phonetics - ஒலிப்பியல்

### அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களில் பொருத்தமான வினை முற்றாக மாற்றி எழுதுக

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ______ (திகழ்) **[விடை : திகழ்கிறது]**
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ______ (கலந்துகொள்) **[விடை : கலந்து கொள்வாள்]**
3. உலகில் மூவாயிரம் மொழிகள் ______ (பேசு) **[விடை : பேசுகிறார்கள்]**
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ______ (செல்) **[விடை : சென்றனர்]**
5. தவறுகளைத் ______ (திருத்து) **[விடை : திருத்திக் கொள்]**

### பின்வரும் பத்தியைப் படித்து அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக

சேத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப் பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் சுரா முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் சேத்தூர் பள்ளி மாணவி யாழினி படைத்த "உள்ளங்கையில் உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் சுரா நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். சேத்தூர் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

www.nammakalvi.com



**விடை :**

**அறிவிப்பு**

**நூல் வெளியீட்டு விழா**

**இடம்** : சேத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி
**நாள்** : 21 ஜூன் திங்கள்.
**நேரம்** : பிற்பகல் 3.00 மணி
**நூல்** : மாணவி யாழினி எழுதிய "உள்ளங்கை உலகம்"
**நூல் வெளியீடு மற்றும் சிறப்புரை** : கவிஞர் சுரா (கின்னஸ் சாதனை படைத்த முன்னாள் மாணவர்)

அனைவரும் வருக.

## தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க

1. இளமையில் கல்வி **கல்மேல் எழுத்துப் போல்.**
2. சித்திரமும் கைப்பழக்கம் **செந்தமிழும் நாப் பழக்கம்.**
3. கல்லாடம் படித்தவரோடு **சொல்லாடல் செய்யாதே.**
4. கற்றோர்க்குச் **சென்ற இடமெல்லாம் சிறப்பு.**

## கடிதம் எழுதுக

**உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின், "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

திருவில்லிபுத்தூர்
23.11.20XX.

அன்பு நண்பா!

வணக்கம். நானும், வீட்டிலுள்ள அனைவரும் நலம். உன் நலமும் உன் பெற்றோர், மற்றோர் நலமும் அறிய வெகு ஆவல்.

நீ என் பிறந்த நாளுக்கு அனுப்பிய அருமையான. அழியாத பரிசை பெற்றுக் கொண்டேன். என்னே அருமையான பரிசு! "நூலறிவே ஆகுமாம் நுண்ணறிவு" என்று கூறுவதற்கேற்ப மிகச் சிறந்த கருத்துக் குவியல் நிறைந்த கதைப் புத்தகத்தை நீ அனுப்பியிருந்தாய்.

www.nammakalvi.com



கால் முளைத்த ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் நம் மனத்திற்கு விருந்து படைக்கிறது. பெண்மை, உண்மைக்காக போராடும் உயர்ந்த தன்மை, எளிமையின் மாண்பு, போராடும் குணமே வாழ்வின் வெற்றி என்ற உயர்ந்த கருத்துக்களை அப்புத்தகம் எனக்குத் தந்தது.

அட்டை முதல் அட்டை வரை அழகான எளிமையான இனிய சொற்றொடர்களால் அமைந்த புத்தகம்.

உனக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறி இக்கடிதத்தை முடிக்கின்றேன்.

இடம் : திருவில்லிபுத்தூர் இப்படிக்கு,

நாள் : 23.11.20XX தங்கள் இனிய நண்பன்,

மணிமாறன்.

உறைமேல் முகவரி :

இரா. கண்ணன்,
67/ 5, முதல் குறுக்குத் தெரு,
அண்ணா நகர்.
மதுரை - 2.

---

## நயம் பாராட்டுக

**விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்**
**விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்**
**பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்**
**புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்**
**தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்**
**தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,**
**அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்**
**அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!**

**- ம.இலெ. தங்கப்பா**

**திரண்ட கருத்து :**

**"தென்னைக்கு அழகு குருத்து**
**பாடலுக்கு அழகு கருத்து"**

காலைக் கதிரவன் தோன்றும் தொடுவானில் அழகும், அழகான கடற் மணல் பரப்பு, வானைத் தொடுகின்ற உயர்ந்த மலை, பள்ளத்தாக்குகளில் அழகாகப் பாய்ந்து வரும் அருவியின் அழகு, அழகான காடு, பச்சைப் பட்டெ‌ன எங்கும் பரவி கிடக்கும் புல்வெளி, தலையசைக்கும் வயல்வெளி, நடமாடும் விலங்குகளின் ஆர்ப்பரிப்பு காண்கின்ற பொருள்களின் அழகைவிட என் நெஞ்சத்தைத் தொட்டது. நுண்மையான பாட்டே இப்பாடல் தூய்மையான ஊற்று. அழகான பேரொழுங்கே, என் உடலே, என் மனதினுள் நீ குடியிருக்க வேண்டும் என்று வேண்டுகிறேன் என்று கருத்தாழ மிக்க பாடலைப் புலவர் தந்திருப்பது பாராட்டுதலுக்குரியது.

**மையக் கருத்து :**

புலவர் இப்பாடலில் இயற்கையின் அழகினைப் பற்றி மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

**தொடை நயம் :**

**"தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்"**

www.nammakalvi.com



என்னும் பழமொழிக்கேற்ப இப்பாடலில் மலர்களை மாலையாகத் தொடுப்பது போல மோனை எதுகை, இயைபு நயங்கள் இடம் பெற்றுள்ளன.

**அ) மோனை நயம் :**

**"குயவனுக்குத் தேவை பானை**
**புலவனுக்குத் தேவை மோனை"**

செய்யுளில் சீர் அல்லது அடிகளில் முதல் எழுத்துகள் ஒன்றி வரத் தொடுப்பது மோனை நயமாகும்.

**எ.கா :**

| | |
|---|---|
| விரிகின்ற | பொழிகின்ற - பொழில் |
| விண்ணோங்கு | புல்வெளியில் - புள்ளில் |
| தெரிகின்ற | |
| தெவிட்டாத | |

**ஆ) எதுகை நயம் :**

**"மதுரைக்கு அழகு வைகை**
**பாடலுக்கு அழகு எதுகை"**

செய்யுளில் அடி அல்லது சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை நயமாகும்.

**எ.கா :**

| | |
|---|---|
| விரிகின்ற | பொழிகின்ற - பொழில் |
| தெரிகின்ற | புல் வெளியில் - நல் வயலில் |

**இ) இயைபு நயம் :**

செய்யுளில் அடுத்த அடுத்த சொல்லோ, அடியின் கடைசிச் சீரோ, எழுத்தோ, அசையோ ஒன்றுபோல் இயைந்து வருவது இயைபு நயமாகும்.

**சான்று :**

| | |
|---|---|
| வானில் - பரப்பில் | பெருமலையில் - பள்ளத்தாக்கில் |
| பொழிலில் - காட்டடில் | புல் வெளியில் - நல் வயலில் |
| புள்ளில் | |
| நெஞ்சில் | |

**சொல் பொருள் நயம் :**

**"அர்ச்சுனனுக்கு வில்லு**
**பாடலுக்குச் சொல்லு"**

**"வாழ்க்கை சிறக்கத் தேவை பொருள்**
**பாடல் பிறக்கத் தேவை பொருள்"**

இச்செய்யுளில் சொல்லும் பொருளும் சிறப்பாக அமைந்துள்ளன.

**சான்று :** நெடுவான் - பெரிய வானம், பொழில் - அழகு, மெய் - உடல், அகம் - உள்ளம்.

**சந்த நயம் :**

**"சந்தமில்லா பாட்டு சொந்தமில்லாமல் போகும்"**

செய்யுளில் மோனை, எதுகை, இயைபு நயங்கள் சிறப்பாக அமைந்துள்ளதால் சந்த நயம் இடம் பெற்றுள்ளது.

**அணி நயம் :**

**"அணியற்ற பாடல் அழகற்றுப் போகும்"**

செய்யுளில் புலவர் இயல்பாக நடக்கின்ற செயலைச் சற்று உயர்வுபடுத்திக் கூறியுள்ளதால் உயர்வு நவிற்சி அணி அமைந்து வந்துள்ளது. பண்புத் தொகையும், வினைத் தொகையும் விரவிக் காணப்படுகின்றன.

**பாடலுக்கு ஏற்ற தலைப்பு :**

**"தலைப்பில்லாக் கவிதை தாயில்லாப் பிள்ளை போல"**

இச்செய்யுளுக்கு ஏற்ற தலைப்பு "இயற்கையின் எழில்".

www.nammakalvi.com



## நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க

**உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.**

**உலகத் தாய்மொழி நாள் விழா**

**நிகழ்ச்சி நிரல்**

1. தழிழ்தாய் வாழ்த்து
2. வரவேற்புரை
3. மாணவன் உரை - தலைப்பு தாய்மொழி.
4. தமிழ்ப் பாடல் - மாணவன்.
5. சிறப்புரை - புலவர் சாலமன் பாப்பையா அவர்கள்.
6. நன்றியுரை.
7. நாட்டுப்பண்.

**விழா ஏற்பாடு : இலக்கிய மன்றம்**

அனைவரும் வருக! தமிழ்த்தேன் பருக!

## மொழியோடு விளையாடு

## அந்தாதிச் சொற்களை உருவாக்குக

[அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக]

அ) அத்தி, திகைப்பு, புகழ்ச்சி, சிரிப்பு, புன்னகை, கைப்பேசி.

ஆ) குருவி, வித்து, துவர்ப்பு, புக்கு,தித்திப்பு, புகழ்

இ) விருது,துவர்ப்பு, புண்ணாக்கு,குந்தி, திலகம்

ஈ) இனிப்பு, புளிப்பு, புன்னகை, கைதி, திருடன்.


## அகராதியில் காண்க

1. நயவாமை - விரும்பாமை
2. கிளித்தல் - கூறுதல்
3. கேழ்பு - நன்மை
4. செம்மல் - தலைவன்
5. புரிசை - மதில்.

www.nammakalvi.com



## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



"தன் இருப்பிடத்ததைத் - தன்
கண்ணீரால் விட்டுச் செல்லும் மீன் - தனது
வருத்தங்களையும் தனது நண்பர்களையும் - விட்டுத்
தனது துள்ளலின் மீது - ஆர்வம்
கொண்டு தனது திறமையை
வெளிப்படுத்துகிறது - அதுபோல
நாமும் நம் வாழ்வில் - இந்த
மீனைப் போல வருத்தங்களை விட்டு - நம்
திறமையை வெளிக் கொண்டு வருவோம்"

1. கொடுக்கப்பட்ட வேர்ச் சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.

| வா | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | வந்தேன் | ........................ | ....................... |
| நாங்கள் | ....................... | ........................ | வருவோம் |
| நீ | ....................... | வருகிறாய் | ....................... |
| நீங்கள் | வந்தீர்கள் | ....................... | ..................... |
| அவன் | ......................... | வருகிறான் | ....................... |
| அவள் | .......................... | ........................ | ........................ |
| அது | ......................... | ....................... | வரும் |
| அவர் | வந்தார் | ....................... | ......................... |
| அவர்கள் | ......................... | ........................ | .......................... |
| அவை | .......................... | வருகின்றன | ......................... |

| வா | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | வந்தேன் | வருகிறேன் | வருவேன் |
| நாங்கள் | வந்தோம் | வருகிறோம் | வருவோம் |
| நீ | வந்தாய் | வருகிறாய் | வருவாய் |
| நீங்கள் | வந்தீர்கள் | வருகிறீர்கள் | வருவீர்கள் |

www.nammakalvi.com



| | | | |
|---|---|---|---|
| அவன் | வந்தான் | வருகிறான் | வருவான் |
| அவள் | வந்தாள் | வருகிறாள் | வருவாள் |
| அது | வந்தது | வருகிறது | வரும் |
| அவர் | வந்தார் | வருகிறார் | வருவார் |
| அவர்கள் | வந்தார்கள் | வருகிறார்கள் | வருவார்கள் |
| அவை | வந்தன | வருகின்றன | வரும் |

**2. தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச் சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.**

| தா | | | |
|---|---|---|---|
| | **இறந்த காலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| நான் | தந்தேன் | தருகிறேன் | தருவேன் |
| நாங்கள் | தந்தோம் | தருகிறோம் | தருவோம் |
| நீ | தந்தாய் | தருகிறாய் | தருவாய் |
| நீங்கள் | தந்தீர்கள் | தருகிறீர்கள் | தருவீர்கள் |
| அவன் | தந்தான் | தருகிறான் | தருவான் |
| அவள் | தந்தாள் | தருகிறாள் | தருவாள் |
| அது | தந்தது | தருகிறது | தரும் |
| அவர் | தந்தார் | தருகிறார் | தருவார் |
| அவர்கள் | தந்தார்கள் | தருகிறார்கள் | தருவார்கள் |
| அவை | தந்தன | தருகின்றன | தரும் |

| காண் | | | |
|---|---|---|---|
| | **இறந்த காலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| நான் | கண்டேன் | காண்கிறேன் | காண்பேன் |
| நாங்கள் | கண்டோம் | காண்கிறோம் | காண்போம் |
| நீ | கண்டாய் | காண்கிறாய் | காண்பாய் |
| நீங்கள் | கண்டீர்கள் | காண்கிறீர்கள் | காண்பீர்கள் |
| அவன் | கண்டான் | காண்கிறான் | காண்பான் |
| அவள் | கண்டாள் | காண்கிறாள் | காண்பாள் |
| அது | கண்டது | காண்கிறது | காணும் |
| அவர் | கண்டார் | காண்கிறார் | காண்பார் |
| அவர்கள் | கண்டார்கள் | காண்கிறார்கள் | காண்பார்கள் |

www.nammakalvi.com



| | | | |
|---|---|---|---|
| அவை | கண்டன | காண்கின்றன | காணும் |

| பெறு | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் |
| நாங்கள் | பெற்றோம் | பெறுகிறோம் | பெறுவோம் |
| நீ | பெற்றாய் | பெறுகிறாய் | பெறுவாய் |
| நீங்கள் | பெற்றீர்கள் | பெறுகிறீர்கள் | பெறுவீர்கள் |
| அவன் | பெற்றான் | பெறுகிறான் | பெறுவான் |
| அவள் | பெற்றாள் | பெறுகிறாள் | பெறுவாள் |
| அது | பெற்றது | பெறுகிறது | பெறும் |
| அவர் | பெற்றார் | பெறுகிறார் | பெறுவார் |
| அவர்கள் | பெற்றார்கள் | பெறுகிறார்கள் | பெறுவார்கள் |
| அவை | பெற்றன | பெறுகின்றன | பெறும் |

இவை போல நீந்து, பாடு, கொடு முதலான சொற்களுக்கும் உருவாக்கி அளிக்கலாம்.

**3. அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க.**

(திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மன்னை)

எ.கா : நான் திடலில் ஓடினேன் (தன் வினை)

நான் திடலில் மிதிவண்டியை ஓட்டினேன் (பிற வினை)

நான் நண்பர்களைத் திடலில் ஓடச் செய்தேன் (காரண வினை)

| எழுவாய் பெயர் | வினை அடி | தன் வினை | பிற வினை | காரண வினை |
|---|---|---|---|---|
| நான் | ஓடு | ...................... | ...................... | ......................... |
| காவியா | வரை | ....................... | ...................... | ......................... |
| கவிதை | நனை | ..................... | ....................... | ......................... |
| இலை | அசை | ...................... | ........................ | ........................ |
| மழை | சேர் | ....................... | ........................ | ........................ |

| எழுவாய் பெயர் | வினை அடி | தன் வினை | பிற வினை | காரண வினை |
|---|---|---|---|---|
| நான் | ஓடு | ஓடினேன் | ஓட்டினேன் | ஓட்டச் செய்தேன் |
| காவியா | வரை | வரைந்தாள் | வரைவித்தாள் | வரையச் செய்தாள் |
| கவிதை | நனை | நனைந்தது | நனைத்தது | நனைக்கச் செய்தது |

www.nammakalvi.com



| | | | | |
|---|---|---|---|---|
| இலை | அசை | அசைந்தது | அசைத்தது | அசையச் செய்தது |
| மழை | சேர் | சேர்ந்தேன் | சேர்த்தேன் | சேரச் செய்தேன் |

## செயல் திட்டம்

**நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் பேசும் மொழிகளைப் பட்டியலிட்டு அம்மொழி பேசப்படுகின்ற இடங்களை நிலப்படத்தில் வண்ணமிட்டுக் காட்டுக.**

## கலைச்சொல் அறிவோம்

உருபன் - Morpheme

ஒலியன் - Phoneme

ஒப்பிலக்கணம் - Comparative Grammar

பேரகராதி - Lexicon

## நிற்க அதற்குத் தக

**உங்களுடைய நாட்குறிப்பில் இடம் பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| திங்கள் | வருத்தம் தெரிவிக்கிறேன். பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| செவ்வாய் | நீ தேர்வில் வெற்றி பெற்றதற்கு வாழ்த்து - நண்பன் என்னைப் பாராட்டினான். |
| புதன் | வகுப்பில் கேட்பாரற்றுக் கிடந்த ரூ 500ஐ எடுத்து உரியவரிடம் கொடுத்தேன் - தலைமை ஆசிரியர் பாராட்டினார். |
| வியாழன் | தெருவில் கிடந்த பணப்பையைக் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் - உரியவர் என்னையும் குடும்பத்தையும் பாராட்டினார். |
| வெள்ளி | வீட்டிற்கு தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன் - அம்மா பாராட்டினார். |
| சனி | மாற்றுத் திறனாளியைச் சாலையைக் கடக்க உதவினேன்- பொதுமக்கள் பாராட்டினர். |
| ஞாயிறு | நூலகத்தில் படியில் தள்ளாடிய பெரியவரை கைபிடித்து வழி நடத்தினேன். பெரியவர் பாராட்டினார். |

www.nammakalvi.com



## இயல் 1

## அலகுத் தேர்வு 1

மதிப்பெண்கள்: 50

I.உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1.இந்திய மொழிக் குடும்ப வகைகள் __________.

அ) 8 ஆ) 18 இ) 6 ஈ) 4

2. 'சென்ரியு' என்பது தமிழிலக்கியத்தின் _________ வடிவம்

அ) கதை ஆ) சிறுகதை இ) கவிதை ஈ) உரைநடை

3. 'நான் வந்தேன்' இதில் வரும் பயனிலை __________.

அ) பெயர்ப் பயனிலை ஆ) வினைப் பயனிலை

இ) உரிப் பயனிலை ஈ) வினா பயனிலை.

II.நிரப்புக 3x1=3

4. ஒரு சொற்றொடரில் அமையும் வினைச்சொல் ________ ஆகும்.

5. சிந்து என்பது ஒருவகை__________.

6.2004 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்ற தமிழன்பன் நூல் __________.

III. விடையளி: 4x2=8

7. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

8. தமிழோவியம் கவிதையில் நும்மை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.

9. எவையெல்லாம் தூதாக அனுப்பப்படும்?

10. பகுபத உறுப்புகள் யாவை?

IV. விடையளி: 3x3=9

11. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

12. தன்வினை, பிறவினைகளை சான்றுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

13. மூன்று என்னும் எண்ணுப் பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

V.விடையளி: 7x1=7


14. உங்கள் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின்,'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

VI.விடையளி: 3x5=15

15. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை சான்றுகளுடன் விளக்குக.

16. 'தூது அனுப்பத் தமிழே சிறந்தது' - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

17. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



VII. மொழிப்பயிற்சிகள்: 5x1=5

18. பதவியை விட்டு நீக்கினான் - இத்தொடரைப் பிறவினைத்தொடராக மாற்றுக.

19. இயங்கு - செய்வினை, செயப்பாட்டு வினைத் தொடராக்குக.

20. மொழி பெயர்க்க : Linguistics.

21. அகராதியில் காண்க : புரிசை.

www.nammakalvi.com



22. அடைப்புக்குள் உள்ள சொல்லைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக.

இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ________ (திகழ்).

## இயல் 1

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I. உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1. 'தமிழியன்' என்று தென்னக மொழிகளை பெயரிட்டு அழைத்தவர் ________.

அ) கால்டுவெல் ஆ) மாக்ஸ் முல்லர் இ) ஸ்டென்கனோ ஈ) ஹோக்கன்.

2. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!

- இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் ________

அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை ஆ) இயைபு, அளபெடை செந்தொடை

இ) எதுகை, மோனை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி.

3. 'அவன் திருந்தினான்' எவ்வகைத் தொடர்?

அ) செய்வினைத்தொடர் ஆ) வினாத்தொடர்

இ) தன்வினைத்தொடர் ஈ) பிறவினைத்தொடர்.

II. நிரப்புக 3x1=3

4. பதம் ________ வகைப்படும்.

5. தமிழ்விடுதூது ________ என்னும் இலக்கியத்தைச் சார்ந்தது.

6. 'திராவிடம்' என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் ________.

III. விடையளி: 4x2=8

7. தென்திராவிட மொழிகள் யாவை?

8. "அகமாய் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்"

- இலக்கியங்களின் பாடுபொருளாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?

9. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

10. வீணையோடு வந்தாள், கிளியே பேசு தொடர் வகையைச் சுட்டுக.

IV. விடையளி: 3x3=9

11. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

12. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

13. அ) இலக்கணக் குறிப்ப தருக : எத்தனை எத்தனை

ஆ) பகுபத உறுப்பிலக்கணம் தருக : வந்தனன்

V. விடையளி: 4x5=20

14. தித்திக்கும் ..... எனத் தொடங்கும் 'தமிழ்விடு தூது' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

15. தமிழின் தனித்தன்மைகள் யாவை?

16. உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழிநாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

17. நயம் பாராட்டுக :

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்

www.nammakalvi.com



விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

VI. மொழிப்பயிற்சிகள்: 7x1=7

18. அகராதியில் காண்க : நயவாமை.

19. மொழிபெயர்க்க : Comparative Grammar.

20. அந்தாதி சொற்களை எழுதுக : குருவி.

21. கற்றோர்க்குச் சென்ற _________ (பழமொழியை நிறைவு செய்க).

22. ஓடினேன் - பிறவினையாக எழுதுக.

23. தவறுகளைத் _____ (திருத்து). [அடைப்புக்குள் உள்ள சொல்லை பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக]

24. ‘வரைந்தான்’ - இச்சொல்லின் வினைஅடியை எழுதுக.

www.nammakalvi.com



# இயல் இரண்டு

# உயிருக்கு வேர்



**கற்றல் நோக்கங்கள்**

- நீரின் இன்றியமையாமையை உணர்ந்து நீர்நிலைகளைப் பாதுகாத்தல்
- கருத்தரங்கில் கருத்துகளை வெளிப்படுத்த அறிதல்
- கட்டுரைகள், கதைகளைப் படித்துக் கருத்துகளைச் சுருக்கியும் விரித்தும் எழுதுதல்
- இயற்கை அழகைப் போற்றும் கவிதைகளைப் படைத்தல்
- துணைவினைகளை முறையாகப் பயன்படுத்துதல்

www.nammakalvi.com




இயல் இரண்டு

உரைநடை உலகம்

# நீரின்றி அமையாது உலகு

## மனவரைபடம்




## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. மிசை என்பதன் பொருளின் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே  ஆ) மேலே  இ) இசை  ஈ) வசை  **[விடை : கீழே]**

2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி  ஆ)ஆறு  இ) இலஞ்சி  ஈ) புலரி  **[விடை : புலரி]**

3. பொருந்தாத விடையைத் தேர்வு செய்க.

அ) நீரின்று அமையாது உலகு - திருவள்ளுவர்  ஆ) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்

இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்  **[விடை : நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்]**

4. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக _________

அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் _________

அ) வந்தான், வருகிறான்  ஆ) வந்துவிட்டான், வரவில்லை

இ) வந்தான், வருவான்  ஈ) வருவான், வரமாட்டான்  **[விடை : வந்துவிட்டான், வரவில்லை]**

5. சனி நீராடு என்பது _________ வாக்கு

அ) ஔவை  ஆ) வள்ளுவர்  இ) மூத்தோர்  ஈ) கம்பர்  **[விடை : ஔவை]**

6. உலகச் சுற்றுச் சூழல் நாள் ___________ என கொண்டாடப்படுகிறது.

அ) ஜூன் 5  ஆ) செப்டம்பர் 16  இ) ஜூலை 5  ஈ) டிசம்பர்  **[விடை : ஜூன் 5]**

7. தௌலீஸ்வரம் அணைகட்டப்பட்ட ஆண்டு ________

அ) 1733  ஆ) 1872  இ) 1874  ஈ) 1873  **[விடை : 1873]**

8. ஜான் பென்னி குவிக் கட்டிய அணைக்கட்டின் பெயர் _________

அ) முல்லைப் பெரியாறு அணை  ஆ) வைகை அணை

www.nammakalvi.com



இ) மேட்டூர் அணை ஈ) கல்லணை **[விடை : முல்லைப் பெரியாறு அணை]**

**9. முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் _________**

அ) இராஜராஜசோழன் ஆ) பென்னிகுவிக் இ) ஆர்தர் காட்டன் **[விடை : பென்னிகுவிக்]**

**10. "குள்ளக் குளிர நீராடி" என்றவர் _________**

அ) தெ. பரமசிவன் ஆ) ஆண்டாள் இ) திருவள்ளுவர் ஈ) சேக்கிழார்

**[விடை : ஆண்டாள்]**

**11. தெய்வச் சிலைகளைக் குளி(ர்)க்க வைப்பதை ________ கூறுவர்**

அ) குளித்தல் ஆ) குடமுழுக்கு இ) நீராட்டு ஈ) திருமஞ்சனம் ஆடல்

**[விடை : திருமஞ்சனம் ஆடல்]**

## குறுவினா

**1. "கூவல் என்று அழைக்கப்படுவது எது?**

உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலையை "கூவல்" என்று அழைக்கிறோம்.

**2. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர் நிலைகளின் பெயர்களை குறிப்பிடுக.**

மழைநீர், ஆற்றுநீர், ஊற்று நீர் என நீர் நிலைகளை மூன்றாக வகைப்படுத்துவர். எங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகள் ஏரி, குளம், கிணறு.

**3. மணிநீரும் மண்ணும் மயலயம் அணி நிழற் காடும் உடையது அரண் - இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?**

"மணிநீரும் மண்ணும் மயலயம் அணி நிழற்
காடும் உடையது அரண்"

என்னும் குறட்பாவில் நாட்டின் சிறந்த அரண்களுள் நீருக்கே முதலிடம் தருகிறார் திருவள்ளுவர். உணவெனப்படுவது நிலத்தொடு நீரே என்னும் சங்கப்பாடல், நீரின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது.

**4. பூட்டைக் கிணறு என்று அழைக்கப்படுவது எது?**

**பூட்டைக் கிணறு :**

கமலை நீர்ப்பாய்ச்சும் அமைப்புள்ள கிணறுக்கு பூட்டைக் கிணறு என்கிறோம்.

**5. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக.**

- இவ்வரிகள் புறநானூற்றுப் பாடலில் இடம் பெற்றுள்ளது.
- உடலானது நீர் இல்லாமல் அமையாது.
- உணவால் அமைவது. உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே உணவு கொடுப்பவர் உயிர் கொடுப்பவராகக் கருதப்படுவர்.

**6. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரிய புராணம் எதனை ஒப்பிடுகிறது?**

- அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும்.
- இக்காட்சியானது நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்குவதாகப் பெரிய புராணம் கூறுகிறது.

www.nammakalvi.com



## சிறுவினா

**1. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.**

- ஐம்பூதங்களுள் ஒன்று நீர். அது நிலம், காற்று, நெருப்பு, வானம் ஆகிய நான்குடன் தொடர்பு கொண்டு இயங்கவல்லது. நம் முன்னோர் கிடைத்த நீரை அளவோடு பயன்படுத்தினர்.
- அதனால் நாமும், நீரை அளவோடு பயன்படுத்தி வரும் தலைமுறைக்கு பாதுகாத்து வைக்க வேண்டும்.
- குளம் தொட்டு வளம் பெருக்கி, வாழ்ந்தவர்கள் தமிழர். இன்றும் நீர்நிலைகளைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும்.
- மழை நீரைப் பயன்படுத்தும் முறை அறிய வேண்டும். இளம் தலைமுறையினருக்கு நீர் மேலாண்மை பயிற்சி வழங்க வேண்டும்.

**2. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?**

**சோழர்காலக் குமிழித்தூம்பு :**

- மழைக் காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலை தூக்குவர்.
- அடியில் இரண்டு துளைகள் காணப்படும். மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும்.
- கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும் இதனால் தூர்வார வேண்டிய அவசியம் இல்லை.

**3. தமிழகத்தின் நீர்நிலைகளின் பெயர்கள் ஏதேனும் ஐந்தும், அதன் விளக்கமும் தருக.**

| | | |
|---|---|---|
| ஆறு | - | இரு கரைகளுக்கிடையே ஓடும் நீர்ப்பரப்பு |
| ஊருணி | - | மக்கள் பருகு நீர் உள்ள நீர்நிலை |
| ஏரி | - | வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம் |
| ஊற்று | - | அடியிலிருந்து நீர் ஊறுவது |
| குண்டு | - | குளிப்பதற்கேற்ற சிறுகுளம். |

இவைகள் எல்லாம் தமிழகத்தின் நீர்நிலைகளின் பெயர்கள் ஆகும்.

**4. கல்லணை சிறுகுறிப்பு தருக.**

- கல்லணை நீளம் 1080 அடியாகவும், அகலம் 40 முதல் 60 அடியாகவும், உயரம் 15, 18 அடியாகவும் இருக்கிறது.
- காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன. அதுமேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத ஒருவித ஒட்டும் களி மண்ணைப் புதிய பாறைகளில் பூசி இரண்டையும் ஒட்டிக் கொள்ளும் விதமாகச் செய்தனர்.
- இதுவே கல்லணையைக் கட்டப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பமாகக் கருதப்படுகிறது.

**5. ஜான் பென்னி குவிக் - குறிப்பு வரைக.**

- தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகியவற்றின் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் உதவும் முல்லைப் பெரியாறு அணையை 1895 ஆம் ஆண்டு கட்டியவர் ஜான் பென்னி குவிக்.
- அவர் "பஞ்சம் போக்கிய பரமனாக" அப்பகுதி மக்கள் வழிபடுகின்றனர்.
- அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக தம் குழந்தைகளுக்குப் பென்னி குவிக் பெயர் சூட்டி இன்றும் நினைந்து, நினைந்து போற்றுகின்றனர்.

www.nammakalvi.com



## நெடுவினா

**1. நீரின்றி அமையாது உலகு என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**குறிப்புச் சட்டகம் :**

1. முன்னுரை
2. வான் சிறப்பு
3. மழையே ஆதாரம்
4. நீரே ஆதாரம்
5. முடிவுரை

**முன்னுரை :**

நீர் இன்றி அமையாது என்னும் கருத்தைத் திருவள்ளுவர் தம் குறள்கள் வாயிலாக தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அவருடைய கருத்துகளைக் காண்போம்.

வான் சிறப்பு :

உணவு உற்பத்திக்கு அடிப்படை நீரே. அது மட்டுமின்றி நீரே உணவாகவும் இருக்கிறது என்பதை இரண்டாயிரம் **ஆண்டுகளுக்கு முன்பே**

**"துப்பார்க்கு துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை"**

என்று திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.

**மழையே ஆதாரம் :**

- மழை நீரே மண்ணை வளம் பெறச் செய்கிறது. பயிர்களை விளைவிக்கிறது.
- எரி, குளங்கள், வாய்க்கால் வழியாகப் பாசன வசதியை ஏற்படுத்தி வேளாண்மையை வளமடையச் செய்கிறது.

**நீரே ஆதாரம் :**

- நீர் இல்லாமல் எத்தகையோர்க்கும் உலக வாழ்க்கை அமையாது. அது போல மழையில்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாது.
- வானத்திலிருந்து மழைத்துளி மண்ணில் வீழ்ந்தால் அன்றி, உலகில் ஓரறிவுயிராகிய பசும்புல்லின் தலையையும் காண முடியாது.

**முடிவுரை :**

தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த நாம் சிக்கனமுடன் தண்ணீரைச் சேமிப்போம். தெவிட்டாத இன்ப வாழ்வைப் பெறுவோம்.

## சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக

1. வாரம் தோறும் நல்லெண்ணெய் தேய்த்து குளிப்பதை தமிழர்கள் மரபாகவே வைத்திருக்கின்றனர்.

   **விடை :** வாரம் தோறும் நல்லெண்ணெய் தேய்த்துக் குளிப்பதைத் தமிழர்கள் மரபாகவே வைத்திருக்கினறனர்.

2. உலகம் முழுவதும் தண்ணீர் பஞ்சம் உருவாக தொடங்கி விட்டது

   **விடை :** உலகம் முழுவதும் தண்ணீர்ப் பஞ்சம் உருவாகத் தொடங்கி விட்டது.

3. மழை நீரை தேக்கி வைத்து பாசனத்திற்கு பயன்படுத்த வேண்டும்.

   **விடை :** மழை நீரைத் தேக்கி வைத்துப் பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

www.nammakalvi.com



4. மழையே பயிர் கூட்டமும் உயிர் கூட்டமும் மகிழ்ச்சியாக வாழ பெருந்துணை புரிகிறது.

**விடை :** மழையே பயிர்க் கூட்டமும் உயிர்க் கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிகிறது.

5. ஏரிகளை தூர்வாரி முறையாக பராமரிப்பு பணிகளை செய்தல் வேண்டும்.

**விடை :** ஏரிகளைத் தூர்வாரி முறையாகப் பராமரிப்புப் பணிகளைச் செய்தல் வேண்டும்.

6. உலகின் பல்லுயிர் பாதுகாப்பிற்கு அடிப்படை தேவையாக உள்ள தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

**விடை :** உலகின் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு அடிப்படைத் தேவையாக உள்ள தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

7. அடுத்து உலக போர் என்று உருவாகினால், அது தண்ணீருக்கு தான் உருவாகும்.

**விடை :** அடுத்து உலகப் போர் என்று உருவாகினால், அது தண்ணீருக்குத் தான் உருவாகும்.

## விடைக்கேற்ற வினா அமைக்க

1. தெய்வச் சிலைகளைக் குளிக்க வைப்பதை "குள்ளக் குளிரக் குடைந்து நீராடி" என்கிறார் ஆண்டாள்

**விடை :** தெய்வச் சிலைகளைக் குளிக்க வைப்பதை எவ்வாறு கூறுவர்?.

2. தெய்வச் சிலைகளைக் குளிக்க வைப்பதைத் "திருமஞ்சனம் ஆடல்" என்று கூறுவர்.

**விடை :** தெய்வச் சிலைகளைக் குளிக்க வைப்பதை எவ்வாறு கூறுவர்?

3. உலகம் முழுவதும் தண்ணீர்ப் பஞ்சம் உருவாகத் தொடங்கி விட்டது.

**விடை :** உலகம் முழுவதும் எப்பஞ்சம் உருவாகத் தொடங்கி விட்டது?

4. மழைநீர், ஆற்று நீர், ஊற்று நீர் ஆகியவற்றைச் சிறிய பெரிய நீர் நிலைகளில் சேகரிக்க வேண்டும்.

**விடை :** எவற்றைச் சிறிய, பெரிய நீர் நிலைகளில் சேகரிக்க வேண்டும்?

5. வாரம் தோறும் நல்லெண்ணெய் தேய்த்துக் குளிப்பதைத் தமிழர்கள் மரபாகவே வைத்திருக்கின்றனர்.

**விடை :** எதைத் தமிழர்கள் மரபாகவே வைத்திருக்கின்றனர்?

6. அடுத்த உலகப் போர் என்று உருவாகினால் அது தண்ணீருக்காகத்தான் உருவாகும்.

**விடை :** அடுத்த உலகப் போர் எதற்காக உருவாகும்?

## ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக

1. குளித்தல் என்ற சொல்லைக் குறித்துக் கூறும் கருத்துகள் நமக்குப் புதிய சிந்தனையைத் தருகின்றது.

**விடை :** குளித்தல் என்ற சொல்லைக் குறித்துக் கூறும் கருத்துகள் நமக்குப் புதிய சிந்தனையைத் தருகின்றன.

2. திருமணமான பின் கடலாடுதல் என்னும் வழக்கமும் தமிழகத்தில் நிலவுகின்றன.

**விடை :** திருமணமான பின் கடலாடுதல் என்னும் வழக்கமும் தமிழகத்தில் நிலவுகின்றது.

3. நீரே உணவாகவும் இருக்கின்றன என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**விடை :** நீரே உணவாகவும் இருக்கிறது என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

4. மழை உழவுக்கு உதவுகின்றன.

**விடை :** மழை உழவுக்கு உதவுகின்றது.

5. ஏரிகளும் குளங்களும் பாசனத்திற்கான எளிய வடிவங்களாகப் பெருமளவில் பயன்பட்டது.

**விடை :** ஏரிகளும் குளங்களும் பாசனத்திற்கான எளிய வடிவங்களாகப் பெருமளவில் பயன்பட்டன.

www.nammakalvi.com



## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையை எழுதுக

தமிழ் மரபில் நீரும் நீராடலும் வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவையாக விளங்குகின்றன என்பார் பேராசிரியர் தொ. பரமசிவன். அவர் குளித்தல் என்ற சொல்லைக் குறித்துக் கூறும் கருத்துகள் நமக்குப் புதிய சிந்தனைகளைத் தருகின்றன.

குளித்தல் என்ற சொல்லுக்கு உடம்பினைத் தூய்மை செய்தல் அல்லது அழுக்கு நீக்குதல் என்பதல்ல பொருள்; சூரிய வெப்பத்தாலும் உடல் உழைப்பாலும் வெப்ப மடைந்த உடலைக் குளிர வைத்தல் என்பதே அதன் பொருளாகும். குளிர்த்தல் என்பதே குளித்தல் என்று ஆயிற்று என்பது அவரது விளக்கம். "குள்ளக் குளிரக் குடைந்து நீராடி" என்கிறார் ஆண்டாள். தெய்வச் சிலைகளைக் குளி(ர்)க்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்.

**1. தமிழ் மரபு பற்றி பேராசிரியர் தொ. பரமசிவன் கூறியது என்ன?**

தமிழ் மரபில் நீரும் நீராடலும், வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவையாக விளங்குகின்றன என்கிறார் பேராசிரியர் தொ. பரமசிவன்.

**2. குளித்தல் என்ற சொல்லின் பொருள் யாது?**

குளித்தல் என்பது உடம்பினைத் தூய்மை செய்தல் அல்லது அழுக்கு நீக்குதல் என்பதல்ல உடலைக் குளிர வைத்தலே அதன் பொருளாகும்.

**3. குளித்தல் என்ற சொல் எதன் மூலம் வந்தது?**

குளிர்த்தல் என்ற சொல்லிருந்துதான் குளித்தல் என்று உருவானது.

**4. 'குள்ளக் குளிரக் குடைந்து நீராடி' என்று கூறியவர் யார்?**

ஆண்டாள்.

**5. திருமஞ்சனம் ஆடல் என்பது யாது?**

தெய்வச் சிலையைக் குளி(ர்)க்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்.

---

## கற்பவை கற்றபின்

**1. நீரின்று அமையாது உலகு, நீரின்று அமையாது யாக்கை இவ்விரண்டு தொடர்களையும் ஒப்புமைப்படுத்தி வகுப்பில் கலந்துரையாடுக.**

| நீரின்று அமையாது உலகு | நீரின்று அமையாது யாக்கை |
|---|---|
| இஃது திருக்குறளில் இடம் பெற்றுள்ளது. | இஃது புறநானூறில் இடம் பெற்றுள்ளது. |
| இஃது திருவள்ளுவர் கூறிய கூற்று. | இஃது குடபுலவியனர் பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் கூறியது. |
| மழையே பயிர்க் கூட்டமும், உயிர்க் கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிவதால் "நீரின்று அமையாது உலகம்" என்றார். | |

www.nammakalvi.com



**2. வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது இதற்கான நீர் எங்கிருந்து வருகிறது? இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தண்ணீர் போதுமானதாக இருக்கும்? என்பவற்றுக்கான தகவல்களைத் திரட்டி ஒப்படைவு உருவாக்குக.**

**வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் :**

- குடிநீர்க் குழாய்கள் வழியாகக் கிடைக்கிறது.
- நிலத்தின் அடியிலிருந்து கிடைக்கிறது.
- ஆழ்துளைக் கிணறுகள் மூலம் கிடைக்கிறது.
- ஏரிகள், குளங்கள், ஆறுகள் இவற்றிலுள்ள நீர் அரசாங்கத்தின் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகக் குழாய்களில் உறிஞ்சப்பட்டு பெரிய நீர்த் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு, அவை குழாய்கள் மூலமாக வீடுகளுக்கும் தெருக்களுக்கும் வந்து சேர்கிறது. அவற்றை மக்கள் எடுத்து வந்து தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.

**எங்கிருந்து வருகிறது :**

பூமியின் பல்வேறு அடுக்குகள் உண்டு. அவற்றில் கீழடுக்கில் நீர் உள்ளது. அவற்றினை நாம் பயன்படுத்துகிறோம். அதே வேளையில் நிலத்தில் பெய்து வரும் மழைநீர் நிலத்தில் அடியில் சென்று நீரின் அளவினைச் சமநிலைப்படுத்துகிறது. எனவே நீரானது, அருவிகள், பொங்கி எழும் ஆறுகள், மழை மூலமாக வருகிறது.

**தண்ணீர் போதுமானதாக இருக்கும் காலம் :**

மனிதன் தனது தேவைக்கு அதிகமாக நீரினை எடுப்பதாலும், இயற்கை அழித்து வருவதாலும் நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. இதனால் பூமி வெப்பமடைகிறது. நிலத்தில் வாழும் உயிரினங்கள் செடி கொடி, பயிரினங்கள் அழிந்து போகின்றன. மணல் கொள்ளையால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து போகிறது. இதனால் இன்னும் பத்தாண்டுகளில் நிரில்லா நிலை உருவாகும். இதனால் உயிரினங்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

**நீர் பற்றி பழமொழிகள் :**

- நீரின்றி அமையாது உலகு.
- மழைத்துளி நம் உயிர்த்துளி
- மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்
- மரம் நடுவீர் வளம் பெறுவீர்

---

இயல் இரண்டு

கவிதைப் பேழை

# பட்ட மரம்

–கவிஞர் தமிழ்ஒளி

**பாடலின் பொருள் :**

- இலைகள், துளிர்கள் எதுவும் இன்றி வறண்ட மொட்டைக் கிளைகளோடு நின்று, தினம் தினம் தன் நிலையை எண்ணி பெருமூச்சு விட்டுக் கொண்டு ஏக்கத்துடன் திகழும் பட்ட மரமே, உன்னையும் ஒருவன் வெட்டும் நாள் விரைவில் வரும் என்று எண்ணி மனக்குமுறல் அடைந்தாயோ?
- அமர்வதற்கு நிழல் தந்து, வாசனை பொருந்திய மலர்களை மலரச் செய்து, இலைகளால் கூரை விரித்திருந்த மரமே.
- வெப்பத்தால் வெந்து, கருகி இந்த நிறம் வந்ததே என்று வருந்துகிறாயோ?
- மரம் என்னும் பெயர் மாறி, கட்டை என்னும் பெயர் உற்று கொடுந்துயர் கொண்டனையே! உன் மரப்பட்டை என்னும் உடல் வெப்பமுற்று, கிழிந்து விட முற்றும் இழந்த நிலை அடைந்தாயோ.

www.nammakalvi.com



- காலம் என்னும் புயல் சீறிவர, கலங்கும் மனிதன் உதவி கேட்டு, ஓலமிட்டு கரம் நீட்டி தவிப்பது போல நீயும் துன்பத்தில் உழல்கிறாயோ!
- பாடும் பறவைகள் உன்னில் கூடி வாழ்ந்து, உனக்கு ஒரு பாடல் புனைந்ததும் மூடு பனித்திரை உனக்கு மோகம் கொடுத்ததும், ஆடும் கிளைகளில் சிறுவர்கள் ஏறிநின்று குதிரை ஓட்டி விளையாடுவதும் ஏட்டில் நின்ற பெருங்கதையாய் ஒரு கதையாய் முடிந்தனவே.
- அவையாவும் வெறுங்கனவாய் ஆனதே என்று, பட்டமரம் ஒன்று தன் நிலையை எண்ணி குமைவதாக எழுதியுள்ளார் கவிஞர் தமிழ் ஒளி அவர்கள்.

## ஆசிரியர் குறிப்பு

- ஆசிரியர் பெயர் : தமிழ் ஒளி
- இவரது இயற்பெயர் : விசயரெங்கம்.
- இவர் 1924 செப்டம்பர் 21 அன்று ஆடூர் என்ற ஊரில் பிறந்தார். (புதுவை)
- இவரது பெற்றோர் சின்னையா - செங்கேணி அம்மாள் ஆவர்.
- பாரதிதாசனின் மாணவராக இருந்து கவிதைப் படைத்தவர்.
- கவிஞரின் காதல், நிலை பெற்ற சிலை, வீராயி, மேதின மே வருக, கண்ணப்பன் கிளிகள், தமிழர் சமுதாயம், குருவிப்பட்டி போன்றன இவரின் படைப்புகளாகும்.

## பிரித்து எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. இழிந்தெழில் | - | இழிந்து + எழில் | 7. நாடெல்லாம் | - | நாடு + எல்லாம் |
| 2. வெறுங்கனவு | - | வெறுமை + கனவு | 8. செந்நெல் | - | செம்மை + நெல் |
| 3. புலிக்கொரு | - | புலிக்கு + ஒரு | 9. தண்மலர் | - | தண் + மலர் |
| 4. கண்டுழவர் | - | கண்டு + உழவர் | 10. வரம் பணைவார் | - | வரம்பு + அணைவார் |
| 5. வண்டலையும் | - | வண்டு + அலையும் | 11. பூவிரித்த | - | பூ + விரித்த |
| 6. கருங்குவளை | - | கருமை + குவளை | 12. நெடுங்குன்று | - | நெடுமை + குன்று |

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. விரித்த = விரி + த் + த் + அ**

| | |
|---|---|
| **விரி** | - பகுதி |
| **த்** | - சந்தி |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **அ** | - பெயரெச்ச விகுதி |

**2. குமைந்தனை = குமை + த்(ந்) + த் + அன் + ஐ**

| | |
|---|---|
| **குமை** | - பகுதி |
| **த்** | - சந்தி |
| **த் - ந்** | - ஆனது விகாரம் |
| **த்** | - இறந்தகால இடைநிலை |
| **அன்** | - சாரியை |

www.nammakalvi.com



| | | |
|---|---|---|
| ஐ | - முன்னிலை ஒருமை வினைமுற்று | விகுதி |

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| விசனம் | - கவலை | மிசை | - மேல். |
| கந்தம் | - வாசனை, மணம் | இற்று | - அழிந்து (இத்துப் போச்சு கொச்சை வழக்கு) |
| எழில் | - அழகு | | |
| ஓலம் | - அலறல் | வெம்பி | - வெப்பமடைந்து |
| குந்த | - உட்கார | இடர் | - துயரம் |

## இலக்கணக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| **வெந்து, வெம்பி, எய்தி** | - வினையெச்சங்கள் | **ஆடுங்கிளை** | - பெயரெச்சத் தொடர் |
| **மூடுபனி** | - வினைத்தொகைகள் | **வெறுங்கனவு** | - பண்புத் தொகை |

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. 'விசனம்' சொல் தரும் பொருள் ________**

அ) வேதனை ஆ) மகிழ்ச்சி இ) ஏக்கம் ஈ) கவலை **[விடை : கவலை]**

**2. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.**

அ) மிசை - மேல் ஆ) கந்தம் - மணம்

இ) வெப்பல் - பாடல் ஈ) குந்த - வருந்த **[விடை : குந்த - வருந்த]**

**3. 'பட்டமரம்' கவிதையை எழுதியவர் ________**

அ) தமிழன்பன் ஆ) தமிழ் ஒளி இ) கந்தர்வன் **[விடை : தமிழ் ஒளி]**

**4. தமிழ் ஒளியின் இயற்பெயர் ________**

அ) சின்னையா ஆ) கனக சபை இ) விசயரங்கம் **[விடை : விசயரங்கம்]**

**5. பட்டமரம் - கவிதை இடம் பெற்ற நூல் ________**

அ) நிலை பெற்ற சிலை ஆ) மாதவி காவியம்

இ) மேதினமே வருக ஈ) தமிழ் ஒளியின் கவிதைகள் **[விடை : தமிழ் ஒளியின் கவிதைகள்]**

**6. கவிஞர் தமிழ் ஒளி எழுதிய நூல் அல்லாதது ________**

அ) வீராயி ஆ) கவிஞனின் காதல்

இ) கிராமத்துக் கிளிகள் ஈ) குருவிப் பட்டி **[விடை : கிராமத்துக் கிளிகள்]**

www.nammakalvi.com



## சிறுவினா

**1. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?**

**பட்டமரத்தின் வருத்தங்கள் :**

- மொட்டைக்கிளையோடு பட்டுப் போய் பெருமூச்சு விடும் மரத்தின் வருத்தம் தாம் வெட்டப்படப்போகிறோம் என்று கவலைப்பட்டது.
- பச்சை மரம் பட்டமரமாகி கட்டை என்னும் பெயர் பெற்றுக் கொடுமையான துயரம் அடைந்து கருகி வருந்தியது.
- மரம் பட்டதால் பட்டை என்னும் மேல் உடை இற்றுக் கிழிந்து தன் அழகு முற்றிலும் இழந்து வருந்தியது.
- பசுமையான என்னில் பறவைகள் கூடி என்னைப் பாடுவதும் நின்று போனது.
- மூடுபனி உலகிற்கு மயக்கம் தருவதும் என் ஆடும் கிளைகளில் சிறுவர்கள் ஏறிக் குதிரை விளையாடுவதும் பழங்கதையாக இன்று கனவாகிட வருந்துகிறது பட்டமரம்.

---

## கற்பவை கற்றபின்

**1. விளைநிலங்கள் கட்டடங்களாகின்றன, வெட்டியும் ஒட்டியும் பேசுக.**

**கவிதா :**

விளைநிலங்கள் இன்று தண்ணீர் இன்றி கிடக்கின்றன. "நெல் நட்டேன் விலைபோகவில்லை, கம்பு நட்டேன் விலை போகவில்லை, கரும்பு நட்டேன் விலைபோகவில்லை, கல் நட்டேன் விலை போய்விட்டது"

என்பது போல இன்று வறுமையில் வாடும் விவசாயிகளுக்கு வறுமையைப் போக்க வழியின்றி மனைகளாக விற்று வயிற்றுப் பசி போக்கும் கொடிய நிலை ஏற்பட்டுவிட்டது. அணைகளிலும் நீரில்லை, நிலத்தடி நீரும் இல்லை. அரும்பாடுபட்டு விளைவித்த பொருளுக்கும் நல்ல விலையில்லை. வட்டிக்கு வாங்கி விவசாயம் செய்து, கட்டிய துணியும் இழந்து தெருவுக்கு வந்துவிட்டான் விவசாயி. எனவே கழனிகளை வீட்டடி மனைகளாக கட்டடங்களாக மாற்றுவதால் கால்வயிறு கஞ்சியும் மேல், கீழ், உடையும் உடுத்த, இருக்க முடிகிறது.(கட்டடங்களா?)

**ஓவியா :**

சுதந்திர இந்தியாவில் நாற்பது விழுக்காட்டிற்கு மேல் இந்திய நிலப்பரப்பில் காடுகள் இருந்தன. இன்று இருபது விழுக்காட்டிற்குள் வெட்டப்பட்டு கட்டடங்கள் ஆயின. பருவ மழை நின்று போனது. நிலத்தடி நீர்வளம் கானல் நீரானது. விவசாயம் செய்ய ஆள் இன்றி உணவு, தானியங்கள், காய்கறிகள் விலை விண்ணுக்கு ஏறிவிட்டது. தூயக்காற்று கேள்விக்குறியானது, பூமி சூடானது பனிமலைகள் உருகுகின்றன. எதிர் காலம், நிலப்பகுதி பாதி கடலில் மூழ்கப் போகிறது.

**"மரம் வளர்ப்போம்! மனிதம் காப்போம்.**
**காடு வளர்ப்போம்! நாடு மீட்போம்."**

**2. பட்டமரம், புதிதாக முளைவிட்ட குருத்து ஆகிய இரண்டும் பேசிக் கொள்வதாய்க் கற்பனை உரையாடல்.**

**குருத்து :**

என்ன ஆ! ஆ! பட்டுவிட்டாயா, உயிராக உயரமாக இருக்கும் போது என்ன ஆட்டம் போட்டாய்? எல்லாம் போய்விட்டதா.

www.nammakalvi.com



**பட்டமரம் :**

குருத்தே! கொஞ்சம் நான் சொல்வதைக் கேள்! இப்படித்தான் நானும் இளம் தளிராக இருக்கும்போது ஆட்டம்போட்டேன்... இப்போது பார்த்தாயா!

**குருத்து :**

சரி, போதனை செய்வதை விட்டுவிடு எனக்கு வேதனையாக இருக்கிறது.

**பட்டமரம் :**

ஆம்! இளமையில் போதனை வேதனையாகத்தான் இருக்கும் கேட்டு நடந்தால் வாழ்வில் சிறக்கலாம். மறந்துவிடாதே!

**குருத்து :**

சரி. இப்பகுதி மக்கள் விரும்பித் தேடி நிழலும், காயும், கனியும், இலையும், கிளையும் கொண்டு இருந்த நீ ஏன் இப்படிப் பட்டுப்போனாய்.

**3. பட்டணத்துப் பறவைகளும், ஊர்ப்பறவைகளும் என்ற தலைப்பில் பறவைகள் கூறுவன போலச் சிறு சிறு கவிதை படைக்க.**

**பட்டணத்துக் காக்கை :**

ஊரைத் தூய்மை செய்கின்றோம் உறவைக் கூட்டிப் பகிர்கின்றோம் கரைந்து தாகம் எடுக்கிறதே விரைந்து நீரை வைப்பீரே!

**கிராமத்துக் கிளி :**

தத்திப் பறக்கும் உறவுகளே கொத்தித் தின்ன வாருங்கள் பழுத்துத் தொங்கும் பழக்கூட்டம் கழுத்து வரைக்கும் உண்பீரே!

**பட்டணத்துப் புறா :**

மாடமின்றி மாடியிலே மத்தியான வேளையிலே மிஞ்சிய உணவையே கெஞ்சியே கேட்கிறோம் கொஞ்சம், கொஞ்சம் தருவீரா...?

**கிராமத்துக் குயில் :**

ஒய்யாரமாய் மரத்திலே உட்கார்ந்த வேளையிலே சிலலென்ற சோலையிலே சிங்காரமாய் பாட்டெடுத்து சின்னக்குயில் நான்பாடும் பாட்டைக் கேளுங்களேன்.....

---


## இயல் இரண்டு

கவிதைப் பேழை

# பெரியபுராணம்

— சேக்கிழார்

**மனவரைபடம்**



www.nammakalvi.com



**பாடலின் பொருள்**

1. காவிரிநீர் மலையிலிருந்து புதிய பூக்களை அடித்துக்கொண்டு வருகிறது. அப்பூக்களில் தேன் நிறைந்திருப்பதால் வண்டுகள் சூழந்து ஆரவாரம் செய்கின்றன. நீர்நிலைகள் நிறைந்த நாட்டுக்கு வளத்தைத் தரும் பொருட்டுக் காவிரி நீர் கால்வாய்களில் பரந்து எங்கும் ஓடுகிறது.

2. நட்டபின் வயலில் வளர்ந்த நாற்றின் முதலிலை சுருள் விரிந்தது. அப்பருவத்தைக் கண்ட உழவர் இதுதான் களைபறிக்கும் பருவம் என்றனர். அவ்வாறே களைகளைக் களைந்து செல்லும் உழத்தியரின் கால்களில் குளிர்ந்த முத்துகளை ஈனும் சங்குகள் இடறின. அதனால், இடை தளர்ந்து வண்டுகள் மொய்க்கும் கூந்தல் அசையுமாறு மென்மையாக நடந்து அருகில் உள்ள வரப்பினை அடைவர்.

3. காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்புகள் உள்ளன. சோலைகள் எங்கும் குழைகளில் (செடிகளின் புதிய கிளைகளில், புதிய தளிர்களில்) மலர் அரும்புகள் உள்ளன. பக்கங்களில் எங்கும் கரிய குவளை மலர்கள் மலர்ந்துள்ளன. வயல்களில் எங்கும் நெருக்கமாகச் சங்குகள் கிடக்கின்றன. நீர்நிலையின் கரையெங்கும் இளைய அன்னங்கள் உலவுகின்றன. குளங்கள் எல்லாம் கடலைப்போன்ற பரப்பை உடையன. அதனால், நாடு முழுதும் நீர்நாடு என்று சொல்லத்தக்கதாய் உள்ளது. இத்தகைய சிறப்புடைய சோழநாட்டிற்குப் பிற நாடுகள் ஈடாக மாட்டா.

4. அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும். அதனால், அந்நீர்நிலைகளில் உள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும். இக்காட்சியானது நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்கும்.

5. அரியப்பட்ட செந்நெற்கட்டுகளை அடுக்கிப் பெரிய போராகக் குவிப்பர். மிகுதியாகப் பிடிக்கப்பட்ட பலவகை மீன்களையும் நீண்ட குன்றைப்போல் குவிப்பர். வளைந்த சங்குகள் ஈன்ற முத்துகளையும் குன்றைப்போல் உயர்த்திக் கூட்டுவர். தேன்வடியும் விரிந்த மலர்த்தொகுதியை மலைபோல் குவித்து வைப்பர்.

6. நெல்கற்றைகள் குவிந்த பெரிய மலைபோன்ற போரை மேலேயிருந்து சாயச் செய்வர். பெரிய வண்டிகளைச் செலுத்தும் கருமையான எருமைக்கூட்டங்கள் வலமாகச் சுற்றிச்சுற்றி மிதிக்கும். இத்தோற்றமானது கரிய மேகங்கள் பெரிய பொன்மலைச் சாரல் மீது வலமாகச் சுற்றுகின்ற காட்சிபோல உள்ளது. இத்தகைய காட்சிகள் அங்கு மிகுதியாகத் தோன்றும்.

7. அந்நாட்டில் எங்கும் தென்னை, செருந்தி, நறுமணமுடைய நரந்தம் போன்றவை உள்ளன. அரச மரம், கடம்ப மரம், பச்சிலை மரம், குளிர்ந்த மலரையுடைய குரா மரம் போன்றவை எங்கும் வளரந்துள்ளன. பெரிய அடிப்பாகத்தைக் கொண்ட பனை, சந்தனம், குளிர்ந்த மலரையுடைய நாகம், நீண்ட இலைகளையுடைய வஞ்சி, காஞ்சி, மலர்கள் நிறைந்த கோங்கு முதலியன எங்கெங்கும் செழித்து வளர்ந்துள்ளன.

## பிரித்து எழுதுக

| | | | |
|---|---|---|---|
| கண்டுழவர் | - கண்டு + உழவர் | நாடெல்லாம் | - நாடு + எல்லாம் |
| தண்டரளஞ் | - தண்டு + அரளம் | துதைந்தெழும் | - துதைந்து + எழும் |
| தளர்ந்தசைவார் | - தளர்ந்து + அசைவார் | செந்நெல் | - செம்மை + நெல் |
| வண்டலையும் | - வண்டு + அலையும் | பொழிந்திழி | - பொழிந்து + இழி |
| காடெல்லாம் | - காடு + எல்லாம் | காலிரும் | - கால் + இரும். |
| கோடெல்லாம் | - கோடு + எல்லாம் | | |

www.nammakalvi.com



## பொருள் அறிக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | - வண்டு | மது | - தேன் | வரை | - மலை |
| வாவி | - பொய்கை | புனல் | - நீர் | கடைசியர் | - உழத்தியர் |
| தரளம் | - முத்து | வெற்பு | - மலை | சாலி | - நெல்கற்றை |
| பகடு | - எருமைக்கடா | பாண்டில் | - வட்டம் | சிமயம் | - மலையுச்சி |
| நாளிகேரம் | - தென்னை | நரந்தம் | - நாரத்தை | பணிலம் | - சங்கு |
| கழை | - கரும்பு | அரும்பு | - மலர்மொட்டு | மாடு | - பக்கம் |
| கோடு | - குளக்கரை | மேதி | - எருமை | பொய்கை | - குளம் |
| பொருப்பு | - குன்று | கோளி | - அரசமரம் | சாலம் | - ஆச்சா மரம் |
| தாமலம் | - பச்சலை மரம். | | | | |

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. சேர்ப்பார் = சேர் + ப் + ப் + ஆர்**

**சேர்** - பகுதி
**ப்** - சந்தி
**ப்** - எதிர்கால இடைநிலை
**ஆர்** - பலர்பால் வினைமுற்று விகுதி.

**2. செய்வார் = செய் + வ் + ஆர்**

**செய்** - பகுதி
**வ்** - எதிர்கால இடைநிலை
**ஆர்** - பலர்பால் வினைமுற்று விகுதி.

**3. சாய்த்து = சாய் + த் + த் + உ**

**சாய்** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்தகால இடைநிலை
**உ** - வினையெச்ச விகுதி

**4. பாய்வன = பாய் + வ் + அன்+ அ**

**பாய்** - பகுதி
**வ்** - எதிர்கால இடைநிலை
**அன்** - சாரியை
**அ** - பலவின்பால் வினைமுற்று விகுதி

## இலக்கணக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| **பொலி நாடு** | - வினைத்தொகை | **கருங்குவளை** | - பண்புத்தொகை |
| **விரிமலர்** | - வினைத்தொகை | **செந்நெல்** | - பண்புத்தொகை |
| **குளிர்மலர்** | - வினைத்தொகை | **கரும்பெரும்** | - பண்புத்தொகை |
| **தடவரை** | - உரிச்சொல் தொடர் | **நிறை மலர்** | - வினைத்தொகை |

## பொருத்துதல்

அ) மது - தேன்
வரை - மலை
புனல் - நீர்

ஆ) வெற்பு - மலை
கடைசியர் - உழத்தியர்
மேதி - எருமை

www.nammakalvi.com



| | | | |
|---|---|---|---|
| கழை | - கரும்பு | நாளிகேரம் | - தென்னை. |

## ஆசிரியர் குறிப்பு

- சேக்கிழார் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குன்றத்தூரில் பிறந்தவர்.
- இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர்.
- சோழ அரசன் 'இரண்டாம் குலேத்துங்கன்' அவையில் முதலமைச்சராக இருந்தவர்
- இவரது காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு.
- உத்தமச் சோழ பல்லவராயன் என்னும் பட்டம் பெற்றவர்.
- இவரை 'தெய்வச் சேக்கிழார்' என்றும்,'தொண்டர் சீர் பரவுவார்' என்றும் போற்றுவர்.

## நூல் குறிப்பு

- தனியடியார் அறுபத்து மூவர் தொகையடியார் ஒன்பது பேர் என எழுபத்து இரண்டு சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல்.
- பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் "பெரியபுராணம்" என்னும் பெயர் பெற்றது.
- "சுந்தரர்" இயற்றிய "திருத்தொண்டத் தொகை" அடியவர் பெருமையை ஓர் அடியில் கூறுகிறது.
- "நம்பியாணடார் நம்பி" எழுதிய "திருத்தொண்டர் திருவந்தாதி" ஒவ்வொரு பாடலிலும் அடியார்களின் சிறப்பைக் கூறுகிறது.
- இவ்விரண்டு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு சேக்கிழார் ஒவ்வொரு புராணத்திலும், ஒவ்வோர் அடியாராக, அறுபத்து மூவரின் சிறப்புகளையும், விளக்கிப் பாடியதே பெரியபுராணம் ஆகும்.
- 'திருத்தொண்டர் புராணம்' என்பதே பெருமை காரணமாக 'பெரியபுராணம்' எனப் போற்றப்படுகிறது.

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?**

பெரியபுராணத்தில் அழகாக திருநாட்டின் சிறப்பு வருணிக்கப்படுகிறது. அந்நாட்டின் நீர் நிலைகள் அன்னங்கள் விளையாடும் அகலமான படித்துறைகளைக் கொண்டன. அதில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும். அதனால் நீர் நிலைகளிலுள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும். இக்காட்சியானது வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்கும்.

www.nammakalvi.com



## நெடுவினா

**1. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

நீர் நிலைகள் நிறைந்த நாட்டுக்கு வளத்தைத் தரும் பொருட்டுக் காவிரி நீர் கால்வாய்களில் பரந்து எங்கும் ஓடுகிறது.

**வளமான நாடு :**

- காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்புகள் உள்ளன.
- சோலைகள் எங்கும் உள்ள செடிகளின் புதிய கிளைகளில் மலர் அரும்புகள் உள்ளன.
- பக்கங்களில் எங்கும் நெருக்கமாகச் சங்குகள் கிடைக்கின்றன.

**நீர் நிலைகளின் வளம் :**

நீர் நிலைகளில் அன்னப் பறவைகள் ஊர்ந்து செல்லும். எருமைகள் வீழ்ந்து மூழ்கும் வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும். இக்காட்சியானது நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்கும்.

**பொன்மாலைச் சாரல் காட்சி :**

நீலமணி போன்ற தெளிந்த நீரினை உடைய அகழிகள், நீண்ட, பரந்த மண்ணாலான நிலப்பகுதி.

**முடிவுரை :**

- வளர்ந்தோங்கிய தென்னை செருந்தி மரங்கள்.
- நறுமணமுடைய நாரத்தை மரங்கள், அரச மரம், கடம்பமரம், பச்சிலை மரங்கள் ஆகியவை ஆகும்.

---

## எதுகை எடுத்து எழுதுக

1. மண்டுபுனல் பரந்த வயல் வளர் முதலின் சுருள் விரியக்
   கண்டுழவர் பதங்காட்ட களைகளையுங் கடைசியர்கள்.
   **விடை :** மண்டுபுனல், கண்டுழவர்.
2. காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
   மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை.
   **விடை :** காடெல்லாம், மாடெல்லாம்
3. நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
   கோளிசா லந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்
   **விடை :** நாளிகேரம், கோளிசாலம்

www.nammakalvi.com



## கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாவிற்கு விடை எழுதுக

**அ)** **மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு**
**பூவி ரித்த புதுமதுப் பொங்கிட**
**வாவி யிற்பொலி நாடு வளந்தரக்**
**காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால்**

**1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?**

பெரியபுராணம்.

**2. இப்பாடலை இயற்றியவர் யார்?**

சேக்கிழார்.

**3. பொருள் தருக.**

| | | | |
|---|---|---|---|
| மா | - வண்டு | மது | - தேன் |
| வரை | - மலை | வாவி | - பொய்கை |

புனல் - நீர்

**4. இலக்கணக் குறிப்பு தருக.**

எழுந்த, ஆர்ப்ப, பொங்கிட - பெயரெச்சம்

**5. எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| மாவிரைத் | பூவிரித்த |
| வாவியிற் | காவிரிப்பு |

**6. மோனையை எடுத்து எழுதுக.**

காவிரிப்பு - கால் பரந்தோங்கு

**ஆ)** **காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு**
**மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை**
**கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன**
**நாடெல்லாம் நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம்**

**1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?**

பெரியபுராணம்.

**2. இப்பாடலை இயற்றியவர் யார்?**

சேக்கிழார்.

**3. பொருள் கூறுக.**

| | | | |
|---|---|---|---|
| கழை | - கரும்பு | கா | - சோலை |
| மாடு | - பக்கம் | கோடு | - குளக்கரை. |

**4. பிரித்து எழுதுக.**

காடெல்லாம் = காடு + எல்லாம்

கோடெல்லாம் = கோடு + எல்லாம்

நாடெல்லாம் = நாடு + எல்லாம்

**5. இலக்கணக் குறிப்பு தருக.**

கருங்குவளை, நெடுங்குவளை - பண்புத்தொகை

ஒவ்வா - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

**6. மோனையை எடுத்து எழுதுக.**

காடெல்லாம் - காவெல்லாம்.

**7. எதுகையை எடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| காடெல்லாம் | மாடெல்லாம் |
| கோடெல்லாம் | நாடெல்லாம் |

## கற்பவை கற்றபின்

**1. மூச்சுவிடும் மரம் என்னும் தலைப்பில் பள்ளி இலக்கிய மன்றத்தில் கவிதை படிக்க.**

**மூச்சுவிடும் மரம் :**

வானம் பார்த்த பூமியில், வாழ்வுக்கான போராட்டத்தில் கானம் பாடும் குயில்களோ, கவிதை பாடும் கிளிகளோ இல்லா, ஞாலம் கண்ட புதுமரமாய், தன்னந்தனியாய் வளர்கிறேன். சங்கை நெறிக்கக் காத்திருக்கும் கோடரிகள் நடுவே, சத்தமில்லாமல் மூச்சுவிடவே, சலனமுமில்லா வாழும் மரம் நானே!

www.nammakalvi.com



**2. பின்வரும் கவிதையின் விவரிப்பை உரைநடையில் எழுதுக.**

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
கானலின் நீரோ? - வெறுங் காட்சிப் பிழைதானோ?
போன தெல்லாம் கனவினைப்போல் புதைந்தழிந்தே
போனதனால் நானும்ஓர் கனவோ? - இந்த
ஞாலமும் பொய்தானோ? - பாரதியார்.

அழகிய வானம், இனியமையான இளவெயில், அடர்ந்து பரந்த மரங்களின் கூட்டம் இவையனைத்தும் கானல் நீர்போலத் தோன்றி மறைகின்ற வெறுங் காட்சிப் பிழைதானோ? இந்த உலகத்தில் இருக்கின்ற அழகிய இயற்கை வளங்களெல்லாம் தோன்றி மீண்டும் நினைவுக்கு எட்டாத வெறுங் கனவுகள் போல் இருப்பதால் என் வாழ்வும் ஒரு கனவாகவே தோன்றுகிறது. இந்த உலகமே பொய்யாகத் தோன்றி மறையும் பொருள்தானோ என்று பாரதியார் கூறுகிறார்.

---

இயல் இரண்டு

கவிதைப் பேழை

# புறநானூறு

குடபுலவியனார்

**மனவரைபடம்**

எட்டுத் தொகை

நற்றிணை | குறுந்தொகை | ஐங்குறு நூறு | பதிற்றுப் பத்து

பரிபாடல் | கலித்தொகை | அகநானூறு | புறநானூறு

உணவு உயிர் + நிலம் நீர் = உடல் உயிர்

நீர்நிலை பெருக்குதல் – அறம், பொருள், இன்பம் – புகழ் பெறுபவர்

நீர் நிலைகளைப் பெருக்காதவர் வீணே மடிவர்

www.nammakalvi.com



**திணை :** பொதுவியல் **துறை :** முதுமொழிக்காஞ்சி

**விளக்கவுரை : திணை, துறை**

**விளக்கம் : திணை**

வெட்சி முதல் பாடாண் திணை முடிய உள்ள புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளையும், அத்திணைகளுக்குள் முன்னர் விளக்கப்பட்ட செய்திகளையும் எடுத்துக் கூறுவது பொதுவியல் திணை எனப்படும்.

**விளக்கம் : துறை**

- "எரித்திலங்கு சடைமுடி முனிவர் புரிந்து கண்ட பொருள் மொழிந்தன்று" என்பது பொருண் மொழிக் காஞ்சித் துறையை விளக்கும் நூற்பா ஆகும்.
- மெய் உணர்ந்த சான்றோர்களும், முனிவர்களும் தங்கள் மெய்யறிவால் ஆராய்ந்து, தெளிந்த வாழ்வியல் உண்மைப் பொருளையும், நிலையாமைத் தத்துவத்தையும் பிறர்க்குப் பயன்படுமாறும், புரிந்து கொள்ளும் மாறும் எடுத்துரைப்பது பொருண்மொழிக் காஞ்சித்துறை ஆகும்.
- இம்மை, மறுமைக்கான உறுதிப் பொருளைக் கூறுவதும் இத்துறையின் நோக்கம் ஆகும்.

## பொருள் கூறுக

| | | | |
|---|---|---|---|
| வான் | - வானம் | மல்லல் | - வலிமைமிக்க, வளம் |
| வயவேந்தே | - வலிமை மிகுந்த மன்னனே | ஞாலம் | - உலகம் |
| இசை | - புகழ் | யாக்கை | - உடல் |
| உண்டி | - உணவு | புணரியோர் | - தந்தவர் |
| புன்புலம் | - புன்செய் நிலம், புல்லிய நிலம் | அடுபோர் | - வெல்லும் போர் |
| தாட்கு | - முயற்சி, ஆளுமை | | |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| **மூதூர், நல்லிசை, புன்புலம்** | - பண்புத் தொகைகள் |
| **நிறுத்தல்** | - தொழிற்பெயர் |
| **அமையா** | - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| **நீரும் நிலமும், உடம்பும் உயிரும்** | - எண்ணும்மைகள் |
| **அடுபோர்** | - வினைத்தொகை |
| **வேந்தே** | - விளித்தொடர் |
| **கொடுத்தோர்** | - வினையாலணையும் பெயர் |

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. நிறுத்தல் = நிறு + த் + தல்**

| | |
|---|---|
| **நிறு** | - பகுதி |
| **த்** | - சந்தி |
| **தல்** | - தொழிற்பெயர் விகுதி |

**2. கொடுத்தோர் = கொடு + த் + த் + ஓர்**

| | |
|---|---|
| **கொடு** | - பகுதி |

www.nammakalvi.com



| | | | |
|---|---|---|---|
| த் | - சந்தி | ஓர் | - பலர்பால் வினைமுற்று |
| த் | - இறந்தகால இடைநிலை | | |

## பிரித்து எழுதுக

| | |
|---|---|
| மூதூர் | - முதுமை + ஊர் |
| எனப்படுவது | - என + படுவது |
| புன்புலம் | - புன்மை + புலம் |

## ஆசிரியர் குறிப்பு

- நம் பாடப்பகுதியில் உள்ள ‘வான் உட்கும்’ பாடலை இயற்றியவர்
- குடபுலவியனார் ‘புலவியன்’ என்பது இவரது இயற்பெயர் ‘குடபுலம்’ என்னும் நாட்டுப் பகுதியில் இருந்து வந்தவர்
- ‘இயனார்’ என்னும் இசைக்கருவி முழக்கம் மரபில் வந்தவர் எனவே,

‘குடபுலவியனார்’ என அழைக்கப்பெற்றார்.

## நூல் குறிப்பு

- புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- புறம் என்றும், புறப்பாட்டு என்றும் அழைக்கப் பெறுவது புறநானூறு.
- இதனை புறம் + நான்கு + நூறு எனப் பிரிக்கலாம்.
- இந்நூலுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் அறியப்படவில்லை.
- இந்நூலின் கண் 11 புறத்திணைகளும், 65 துறைகளும் கையாளப்பட்டுள்ளன.

## பாடநூல் வினாக்கள்

**1. மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?**

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய **[விடை : வளம்]**

www.nammakalvi.com



## குறுவினா

**1. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே குறிப்பு தருக.**

- நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது.
- உணவையே முதன்மையாகவும் உடையது.
- எனவே, உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர்.
- இதைக் குடபுலவியனார், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடும் புறநானூற்றுப் பாடலில் இதைத் தெரிவிக்கிறார்.

---

## சிறுவினா

**1. நிலைத்த புகழைப் பெறுதற்குக் குடபுலவியார் கூறும் வழிகள் யாவை?**

- நிலம் குழியான இடங்கள் தோறும் நீர்நிலையைப் பெருகச் செய்தல் வேண்டும்.
- அவ்வாறு நிலத்துடன் நீரைச் சேர்த்துப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தோர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் பெறுவர்.

---

## கற்பவை கற்றபின்

**1. பின்வரும் புறநானூற்றுத் தொடர்களுக்கான பொருளைப் பற்றி நூலகத்திற்குச் சென்று அறிந்து எழுதுக.**

**அ) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! (புறம் - 18)**

**பொருள் :**

மறுமை இன்பத்தை பெறவிரும்பினாலும், உலகு முழுவதையும் வெல்ல வேண்டுமென்று நினைத்தாலும், நிலைபெற்ற புகழை விரும்பினாலும், அதற்குச் செய்ய வேண்டுவன யாவை எனில், நீர்மை இன்றி வாழாத உடல், அவ்வுடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர்கொடுத்தவரும் ஆவர். உணவால் உளதாவதுதான் மனித உடல் என்று குடபுலவியனார் கூறுகிறார்.

**ஆ) உண்பது நாழி உடுப்பவை இரண்டே (புறம் - 189)**

**பொருள் :**

இவ்வுலகம் ஆள விரும்பும் அரசனாக இருந்தாலும், ஒன்றும் இல்லாது அன்றாட உணவுக்கே விலங்குகளை வேட்டையாடிப் பிழைக்கும் கல்லாத ஒருவனுக்கும் உண்பது நாழி அளவு உணவு மட்டுமே. அதுபோல உடுத்தப் பயன்படுபவை இடை ஆடை. மேலாடை என இரண்டே என்று நக்கீரனார் கூறுகின்றார்.

**இ) யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறம் - 192)**

**பொருள் :**

எவ்வூராயினும் அஃது எம் ஊரே! யாவராயினும் அவர் எம் உறவினரே. அதாவது எல்லா மக்களும் ஒரு தாயின் மக்கள் என்ற உயரிய எண்ணத்தை எடுத்துரைக்கிறார் கணியன் பூங்குன்றனார்.

**ஈ) சான்றோன் ஆக்குதல் தந்தைககுக் கடனே!**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே! (புறம் - 312)**

**பொருள் :**

www.nammakalvi.com



தான் பெற்ற மகனை சான்றோனாக்குவது தந்தைக்குக் கடமையாகும். அதுபோலவே, நல்ல முறையில் அவனுக்குப் போர்ப்பயிற்சி முதலியவை அளித்தல் வேந்தனின் கடமை ஆகும் என்று பொன்முடியார் பாடுகிறார்.

**உ) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே! (புறம் - 183)**

**பொருள் :**

கற்றவனே உலகின் முதன்மையானவனாகக் கருதப்படுவதால் ஊறுபாடு நேர்ந்தவிடத்து உதவியும், மிக்க பொருளைக் கொடுத்தும், அதனால் நேரும் இழப்பு வருத்தம் முதலிய நிலைகளைக் கண்டு வேறுபடாது. முயற்சியுடன் அனைவரும் கற்ற அறிவுடையவராகி மேம்படுதலே நன்றாகும் என்று ஆரியப் படை காத்த நெடுஞ்செழியன் பாடினார்.

2. "உணவாகும் மழை" என்னும் தலைப்பில் விளக்கக் குறிப்புகளுடன் கூடிய படத்தொகுப்பை உருவாக்குக.

| | |
|---|---|
|  | மழையால் காடுகள் மற்றும் மலைப்பகுதிகள் செழிக்கின்றன. காய்கள், கனிகள் அவற்றால் பெருகுகின்றன. |
|   | ஊட்டச்சத்து மிக்க கீரைகள், பயிறு மற்றும் பருப்பு வகைகள் மழையால் நன்கு வளர்ந்து, நீண்டநாள் நலத்துடன் வாழ நல்லுணவைத் தருகின்றன. |
|  | நோயற்ற வாழ்வு வாழ அறுசுவை உணவு அவசியம். அதனை அளிப்பது மழையே! |

## பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

**நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்!**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;**
**நீரும் நிலமும் புணரியோர்,ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே!**

**1. இப்பாடல் இடம் பெறும் நூல் எது?**
புறநானூறு.

**2. இப்பாடலை இயற்றியவர் யார்?**
குடபுலவியனார்.

**3. 'யாக்கை' என்பதன் பொருள் யாது?**
உடம்பு

**4. இலக்கணக் குறிப்பு தருக.**
நீரும் நிலமும், உடம்பும் உயிரும் } - எண்ணும்மைகள்

**5. 'உணவு' எனப்படுவது எது?**
உணவு எனப்படுவது நிலத்தோடு கூடிய நீர் ஆகும்.

**6. 'உண்டி' என்பதன் பொருள் யாது?**
உணவு.

www.nammakalvi.com



**7. அடி மோனையை எடுத்து எழுதுக.**

உண்டி உணவெனப்படுவது உடம்பும்

**8. சீர் மோனையை எடுத்து எழுதுக.**

உண்டி - உயிர்

உண்டி - உணவின்

உடம்பும் - உயிரும்

**9. 'உணவெனப்படுவது' - என்ற சொல்லை பிரித்து எழுதுக.**

உணவு + எனப்படுவது.

---

விரிவானம்

# இயல் இரண்டு

## தண்ணீர்

– கந்தர்வன்

### மனவரைபடம்

**கந்தர்வர்**

- நாகலிங்கம் (இயற்பெயர்)
- இராமநாதபுரம் (மாவட்டம்) சிக்கல்
- பணி, கருவூலக் கணக்குத்துறை (அரசு)
- கவிதை, சிறுகதை படைப்பாளர்
- சாசனம், கொம்பன், ஒவ்வொரு கல்லாய் (சிறுகதை)
- பிறப்பு 03.02.1944
- இறப்பு 22.04.2004

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கந்தர்வன் இயற்பெயர் _______ [விடை : நாகலிங்கம்]
2. இவர் படைத்த நூல்கள் _______ [விடை : கவிதைகள், சிறுகதைகள்]
3. இவர் _______ மாவட்டத்தைச் சேர்ந்தவர் [விடை : இராமநாதபுரம்]
4. இவர் _______ துறையில் பணியாற்றினார் [விடை : தமிழ்நாடு அரசின் கருவூலக் கணக்குத்]
5. இவர் பிறந்த ஆண்டு _______ [விடை : 03.02.1944]
6. இவர் காலமான ஆண்டு _______ [விடை : 22.04.2004]
7. _______ என்பவர் வெள்ளை உடைகளோடும் பச்சைக் கொடியோடும் வந்தார். [விடை : ஸ்டேஷன் மாஸ்டர்]
8. ரயில் _______ பிளிறிக்கொண்டு வருவதுபோல் நிலையத்துக்குள் வந்தது [விடை : காட்டு யானை]
9. கிராம மக்கள் தண்ணீர் கிடைக்காமல் _______ ஊருக்கு போக வேண்டும். [விடை : பிலாப்பட்டிக்கு]
10. பெண்கள் தண்ணீருக்காக _______ தூரம் பிலாப்பட்டிக்கு நடக்க வேண்டும் [விடை : மூணு மைல் தூரம்]
11. ரயிலில் கிராமத்து பெண்கள் தண்ணீர் பிடிப்பது _______ ஏற்பாடு [விடை : பாய்ண்டஸ் மேன்]
12. இன்று நீர் _______ உச்சத்தில் இருக்கிறது. [விடை : நெருக்கடி]
13. தண்ணீர் என்னும் துணைப்பாடத்தை இயற்றியவர் _______ [விடை : கந்தர்வன்]
14. இக்கதை எதை உணர்த்துகிறது?

www.nammakalvi.com



தண்ணீர் பஞ்சம் இன்று நீர் நெருக்கடி உச்சத்தில் உள்ளது. சிற்றூர்களில் நெருக்கடி வாழ்க்கை சிக்கலாகவே மாறிவருகிறது. இதை உணர்த்துகிறது இச்சிறுகதை.

15. கிணற்று நீரில் _______ போடலாம் என்று ஊர்மக்கள் கூறினார்கள். **[விடை : உப்பளம்]**

16. இரண்டு பஸ்கள் போய் மூன்றாவதாக வந்த _______ பஸ்ஸில் ஏறினார்கள். **[விடை : இராமநாதபுரம்]**

17. இன்ஜினிலிருந்து _______ வந்தது. **[விடை : ஊதல்]**

## சரியா? தவறா?

1. கந்தர்வன் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் **[விடை : தவறு]**
2. இவர் கல்லூரியில் பணியாற்றினார். **[விடை : தவறு]**
3. கந்தர்வனின் இயற்பெயர் நாகலிங்கம். **[விடை : சரி]**
4. இவர் எழுதிய நூல் கவிதைகள் மட்டும் **[விடை : தவறு]**
5. கிராமத்தில் தண்ணீர் அருவியாக ஓடியது. **[விடை : தவறு]**
6. ஒரு காலத்தில் உலகம்மாள் கோவில் கிணறு மட்டும் நல்ல தண்ணீராக இருந்தது. **[விடை : சரி]**

## பாடநூல் வினாக்கள் - நெடுவினா

**1. 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.**

**குறிப்புச் சட்டகம் :**

- முன்னுரை
- சிற்றூர்களின் - தண்ணீர் சிக்கல்
- இந்திரா - தண்ணீர் பிடித்தல்
- இந்திராவின் ஆத்திரம்
- தண்ணீர் பிடிப்பதில் குடிப்பம்
- இந்திராவைத் தேடல்
- தாயின் துயரம்
- முடிவுரை

**முன்னுரை :**

இன்று நீர் நெருக்கடி உச்சத்தில் இருக்கிறது. குறிப்பாகச் சிற்றூர்களில் இந்த நெருக்கடி வாழ்க்கைச் சிக்கலாகவே மாறி வருகிறது. இதைக் கந்தர்வன் ஆசிரியர்,'தண்ணீர்' சிறுகதை மூலம் உணர்த்துகிறார்.

**சிற்றூர்களின் - தண்ணீர் சிக்கல் :**

வெயிலின் கொடுமை சற்றுக் குறைந்ததும் வல்லநேந்தல் தாண்டி வந்து கொண்டிருந்த பாசஞ்ஜர் ரயிலின் கூவல் ஒலி கேட்டு, இந்திரா குடத்தை எடுத்துக் கொண்டு, வாரியைத் தாண்டி, மேட்டை எட்டும்போது, அங்கு ஏழெட்டுப் பெண்கள் இந்திராவை முந்தப் பார்த்தார்கள். இரண்டு மூன்று குடங்களுடன் புயல் நுழைவதுபோல் ரயில் நிலையத்துக்குள் பாய்ந்தார்கள்.

**இந்திரா - தண்ணீர் பிடித்தல் :**

இந்திரா படுகெட்டியான பெண். எல்லோருக்கும் முன்பாக இடம் பிடிக்கச் சென்றாள். எல்லோரும் கூட்டமாக முந்தியடித்துச் சென்றதால், ஸ்டேஷன் மாஸ்டர் சச்சரவைப் பார்த்துவிட்டு 'ஒரு நாளைக்கு ஸகுவார்டை வரச்சொல்லி, உங்களை அள்ளிக்கிட்டு போய், ஜெயில்ல போடுறேன்' என்றார்.

www.nammakalvi.com



ரயில், காட்டுயானை பிளறிக்கொண்டு வருவது போல் நிலையத்துக்குள் நுழைந்தது. பயணிகள் இறங்கும்முன் இந்திரா குடத்தோடு பெட்டிக்குள் பாய்ந்தாள். முகம் கழுவும் பேசின் குழாயை அழுத்தி வேகம் வேகமாக அரைச்செம்பும் கால் செம்புமாக தண்ணீர் பிடித்துக் குடத்தில் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

இந்தக் குழாயில் தண்ணீர்ச் சனியனும் விறுவிறுவென்று வந்துவிடாது. இநதப் பீடைக்குடமும் நிறைந்து தொலைக்காது.

**இந்திராவின் ஆத்திரம் :**

இதுதான் நாளை மாலை வரை குடிதண்ணீர். இல்லையென்றால் பிலாப்பட்டி - கிராமத்துக்குச் சென்று குடி தண்ணீர் பிடிக்க வேண்டும். இந்த ஊரும் - பக்கத்து ஊரும் வறண்டு விட்டது. இந்த ஊரில் நாலு கிணறு வெட்டியும் பயனில்லை. கிணற்றுத் தண்ணீரால் உப்பளம் போடலாம் என்றார்கள். மழையில்லாததால் நந்தவனமாக இருந்த கிராமம் பூண்டற்றுப் போய்விட்டது.

**தண்ணீர் பிடிப்பதில் குழப்பம் :**

3 மணி இரயிலுக்கு மதியம் 12 மணிக்கே வந்து, சத்தம் போட்டனர் பெண்கள். ஸ்டேஷன் மாஸ்டர் சிப்பந்திகளைக் கொண்டு ஒருநாள் வீடுவரை விரட்டினார். பிறகு பக்கத்து ஊர்க்காரர் பாய்ண்ட்ஸ்மேன் வந்து பேசி முடித்து, அமைதி ஏற்பட வைத்துத் தண்ணீர் பிடிக்க ஏற்பாடு செய்தார்.

இந்திரா உள்ளங்கையை இன்னும் அழுத்திக் கொண்டிருந்தாள். தண்ணீர் சன்னமாக வந்தது. பாதிக்குடம் கூட நிறையவில்லை. ரயில் நகரப் போகுது; அம்மா,'சொட்டு தண்ணியில்லை' என்று முனகியது ஞாபகத்திற்கு வந்தது. கொஞ்சம் கூடப் பிடித்ததும், குதித்துவிடலாம் என நினைத்தாள். ஓடும் ரயிலில் குதிக்கப் பார்த்ததும், வட நாட்டுப்பெண் தடுத்து நிறுத்தினாள்.

**இந்திராவைத் தேடல் :**

இந்திராவின் தம்பி ரயில் போயிருச்சு, அக்கா இன்னும் வரல, என்றான். தந்தை வீடு வந்தவுடன் அம்மா படபடவென்று, "ஓடுங்க, அந்த ரயிலைப் பிடிங்க, அடுத்த ஸ்டேசன்ல எம் மகள பிடிங்க" என்றாள். எல்லா உறவினர்களும் இந்திராவைத் தேட பஸ்பிடிச்சு இராமநாதபுரம் சென்றும் அங்குமில்லை; குடத்தோடு ஒரு பொண்ணு எறங்குச்சா...? என்று கேட்க,ஈ எறும்புக் கூட இல்லை. இராமநாதபுரத்தையே சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்துக் கவலையாக ஊர் திரும்பினர்.

**தாயின் துயரம் :**

'எம் புள்ள எந்த ஊரு தண்ட வாளத்திலெ விழுந்து கெடக்கோ' என்று ஆவேசம் வந்தவள் போல் இரயில் நிலையத்திற்கு ஓடினாள் தாய். ஊர் ஜனமும் பின்னால் ஓடியது. தூரத்தில் ஓர் உருவம் தெரிந்தது. நெருங்கியதும் அம்மா கத்தினாள். 'அந்தா இந்திரா வருது' நிறைகுடம் சொட்டும் சிந்தாமல் கொண்டு வந்துவிட்டாள். மகள் வந்ததில், ஐயா மகிழ்ச்சியுற்று, இத்தனை மைலுக்கும் தண்ணிர் குடத்தை சொமந்துகிட்டா வரணும்? என்று கேட்டார். அதற்கு இந்திரா தண்ணீர் இல்லையெனில் நாளைக்கு வரை குடிக்க எங்க போறது? என்றாள்.

**முடிவுரை :**

"நீரின்றியமையாது உலகு" நீர் இன்றேல் உலகு இருளில் மூழ்கும். இதனைக் கந்தர்வன் அவர்கள் மிகத் தெளிவாய் 'தண்ணீர்' சிறுகதையில் கூறியுள்ளார். நீர்ப்பற்றாக் குறையுள்ள கிராமங்களில் மக்களின் துயரத்தை இச்சிறுகதை நன்கு உணர்த்துகிறது.

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

**1. உலகில் நீர் இல்லை என்றால் என்னவெல்லாம் நடக்கும் என்பதைக் கற்பனை செய்து உங்கள் கருத்துக்களை வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.**

உலகில் நீர் இல்லை என்றால் உயிரினங்கள் வாழ்வது கடினம். ஏனெனில் 'நீரின்றி அமையாது உலகு' எனத் திருவள்ளுவரே கூறியிருக்கிறார். புல், பூண்டு முதல் பல்வகையாகன மரங்களும் தாவரங்களும் வாழ்வது கடினமாகிவிடும். நாம் உயிர்வாழக் காரணமான நீர் இல்லை என்றால் இந்த உலகில் உயிரினங்களும் வாழமுடியாது.

உலகம் தோன்றியதிலிருந்து நாளது வரை பல மாற்றங்களையும், பலவகை உயிரினங்கள் தோன்றியும், முழுவதுமாக அழிந்தும் வருவதற்கு தண்ணீரே காரணமாதலால் அத்தண்ணீரைப் புதிதாக உற்பத்தி செய்ய இயலாது. மனிதன் உயிர் வாழ உணவு தேவை. அத்தகைய உணவை உற்பத்தி செய்யத் தேவையான நீர் இல்லை என்றால் மனிதன் உணவின்றி மடிய நேரிடும்.

**2. பீங்...பீங்.... என்ற சத்தத்துடன் தண்ணீர் வாகனம் ஒன்று வேகமாக வந்து நின்றது. அம்மா குடங்களுடன் ஓடிச்சென்று வரிசையில் நின்றாள். அப்போது கருமேகங்கள் திரண்டன... கதையைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

தண்ணீர் வாகனம் தூசியைக் கிளப்பிக் கொண்டு வேகமாக வந்து நின்றது. கண்ணம்மா, கையில் ரெண்டும் கக்கத்தில் ரெண்டும் கொண்டு வந்தது வரிசையில் போட்டாங்க. தெருவில் உள்ள வயசுப் பொண்ணிலிருந்து பாட்டிவரையிலும் வந்தாச்சு.

வானம் மேகம் மூட்டத்துடன் கருத்து நின்றது. ஈரக் காற்றுடன் புயல் அடிப்பதுபோல சுழன்று அடித்தது. வாகனத் தண்ணியும் மழைத்தண்ணியும் சேர்த்துப் பிடித்தார்கள். பாறைப்பட்டி இதுவரையிலும் இப்படிப்பட்ட மழையைக் கண்டதில்லை, காற்று நின்றதனால் பேய்மழையாகப் பெய்தது.

எல்லோரும் காளியம்மன் கோவிலுக்குள் நின்று பேசிய பேச்செல்லாம் சத்தியம் செய்தது போல இருந்தது. "ஆற்றில் மணல் அள்ளியதால் எவ்வளவு மழைபெய்தாலும் தண்ணீர் தேங்குவதில்லை" இது ஆப்பக்கடை அன்னம் ஊருக்கு வாற வழியிலே இருந்த மரங்களை எல்லாம் ரோட்டுக்காக வெட்டியாச்சு.

மணியகாரர் ரத்தினம் ஆற்றுப்படுகையில் என்னென்னமோ மீத்தேன், ஹைட்ரோ கார்பன்.... என்ன சனியனோ ஊரத் தொடச்சிட்டாங்க.

அரசு மேனிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்புப் படிக்கும் மாணவி மாலதி மரங்களை நிறைய நடனும், என்ன மரங்கன்னு கேளுங்க.... பூவரச, மகிழம், ஆலம், அரசு, மாமரம், வேம்பு இது பூரா பூமியின் வெப்பத்தைப் பெரிதும் குறைக்குமாம்... எங்க சயின்ஸ் டீச்சர் சொன்னாங்க.

இந்த மரம் நடுற நல்ல காரியத்தை உடனடியா தொடங்குங்க பூஜை போட்டுறலாம்.

www.nammakalvi.com




இயல் இரண்டு

கற்கண்டு

# துணைவினைகள்

மனவரைபடம்




## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. பொருத்தமான விடையை எடுத்து எழுதுக.**

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ________

அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ________

அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை இ) வந்தான், வருவான்

**[விடை : வந்துவிட்டான், வரவில்லை]**

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. வினைச் சொற்களை அமைப்பின் அடிப்படையில்________, ________ என இருவகைப்படும் **[விடை : தனி வினை, கூட்டு வினை]**
2. தமிழில் ________ துணை வினைகள் உள்ளன. **[விடை : 40]**
3. முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை ________ **[விடை : துணை வினை]**
4. கூட்டு வினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை ________ **[விடை : முதல் வினை]**
5. கூட்டு வினைகள் பொதுவாக ________ வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. **[விடை : மூன்று]**
6. படி என்னும் வினையடி ________ ஆகும். **[விடை : பகாப்பதம்]**
7. பகுபதமாக உள்ள வினையடிகளை ________ என்பர் **[விடை : கூட்டு வினையடிகள்]**

www.nammakalvi.com



8. கூட்டு வினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் ________ என்பர் [விடை : கூட்டு வினை]
9. பார் என்னும் வினையின் ________ பொருள் அல்லது ________ எனலாம். [விடை : அடிப்படைப் பொருள், சொற்பொருள்]
10. ஓடப்பார், எழுதிப்பார் என்பன ________ வினைகள் ஆகும். [விடை : கூட்டு]
11. ஓடப்பார், எழுதிப்பார் இவற்றில் ________ உறுப்புகள் உள்ளன. [விடை : இரண்டு]
12. ஓட, எழுதி என்பன ________ உறுப்பு [விடை : முதல்]
13. ஓடப்பார்த்தேன் - இதில் பார் என்பது முயன்றேன் என்னும் ________ பொருளைத் தருகிறது. [விடை : முயற்சிப்]
14. எழுதிப் பார்த்தேன் - இதில் பார் என்பது ________ என்னும் பொருளைத் தருகிறது. [விடை : சோதித்து அறிதல்]
15. ஒரு கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை ________ வினை எனப்படும். [விடை : முதல்]
16. கூட்டு வினையின் முதல் வினை ________ அல்லது ________ என்னும் வினையெச்ச வடிவில் இருக்கும். [விடை : செய, செய்து]
17. துணை வினை ________ வடிவில் இருக்கும். [விடை : வினையடி]
18. தமிழில் உள்ள 40 துணை வினைகளில் பெரும்பாலானவை ________ ஆகவும் செயல்படுகின்றன. [விடை : முதல் வினை]
19. விடு, தள்ளு, பார், இரு, வை முதலானவை ________ வினைகளாகவும் செயல்படுகின்றன. [விடை : இருவகை]
20. ________ லேயே துணை வினைகளின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. [விடை : பேச்சு மொழியிலேயே]
21. கூடும், கூடாது, தா, தொலை, படு போன்ற பல சொற்கள் ________ வழங்குகின்றன. [விடை : துணை வினைகளாக]
22. நான் மதுரைக்குப் போயிருக்கிறேன் என்ன வினை? [விடை : துணை வினை]
23. என்னிடம் பணம் இருக்கிறது என்ன வினை? [விடை : முதல் வினை]
24. அவன் வானொலியில் பாட்டு பாடினான் என்பது ________ வினை [விடை : முதல் வினை]
25. நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான் என்பது ________ வினை [விடை : துணை வினை]
26. மழை பெய்யப் போகிறது ________ வினை [விடை : துணை வினை]
27. நீ நாளைக்கு வீட்டுக்கு வா ________ வினை [விடை : முதல் வினை]
28. ஆங்கில மொழியில் துணை வினைகள் ________ களுக்கு முன்பாக வரும். [விடை : முதல் வினை]
29. பார்த்தான் என்பது ________ [விடை : துணை வினை]
30. தமிழில் துணை வினையாக வரும் வேர்ச் சொல் சில தொடர்களில் ________ ஆகவும் வரும். [விடை : முதல் வினை]

## பொருத்துக

1. தமிழ் துணை வினைகள் - அ) மூன்று
2. கூட்டு வினை - ஆ) பகாப்பதம்
3. என்னிடம் பணம் இருக்கிறது - இ) 40
4. நான் பயந்து போனேன் - ஈ) முதல் வினை
5. படி என்னும் வினையடி - உ) துணை வினை [விடை : 1-இ, 2-அ, 3-உ, 4-ஈ, 5-ஆ]

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

**1. பொருத்தமான துணை வினைகளைப் பயன்படுத்து.**

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) வேறுபடுத்துவது மொழியாகும்.

ஆ) திராவிட மொழிகள் சில, பொதுப் பண்புகளை (பெறு) பெற்றிருக்கின்றன.

இ) காலந்தோறும் தன்னைப் (புதுப்பித்து) புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ்.

ஈ) என் ஐயத்தைக் கேட்பதற்கு எவரேனும் கிடைக்க மாட்டார்களா என்று (தேடு) தேடிக் கொண்டிருக்கிறேன்.

**2. கீழ்க்காணும் துணை வினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை எழுதுக.**

அ) வேண்டும் - ஆசிரியர் கூறும் அறிவுரையைக் கேட்க வேண்டும்.

ஆ) பார் - காசை எண்ணிப்பார்.

இ) உள் - மனதில் உள்ளதைச் சொல்

ஈ) வா - நேரில் வா

உ) விடு - தீய பழக்கத்தை விட்டு விடு

**3. பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணை வினைகளைச் சேர்க்கிறோம். பிறமொழிச் சொற்களைத் தமிழ் மொழிகளாக மாற்றி, ஏற்ற துணை வினைகள் இட்டு எழுதுக.**

(மார்னிங் எழுந்து, பிரஷ் பண்ணி, யூனிஃபார்ம் போட்டு ஸ்கூலுக்கு போனாள்.

| | |
|---|---|
|  | காலையில் எழுந்து, பல் துலக்கி, சீருடை அணிந்து, பள்ளிக்குப் போனாள் |

## சிந்தனை வினா

**அ) வேற்று மொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணை வினைகளின் பங்கு குறித்துச் சிந்தித்து எழுதுக.**

| வேற்று மொழிச் சொற்கள் | துணை வினை |
|---|---|
| பேனாவை யூஸ் பண்ணு | பேனாவைப் பயன்படுத்து |
| காம்படிசனில் பாயின்ட்ஸை மிஸ் பண்ணாமல் பேசு | போட்டியின் பேச்சுக்காக குறிப்புக்களைத் தவறவிடாமல் பேசு |
| கிளாஸ் மிஸ்கிட்ட டிஸ்கஸ் பண்ணி முடிவு சொல்கிறேன் | வகுப்பு ஆசிரியரிடம் கலந்து பேசி முடிவைச் சொல்கிறேன் |
| வாட்டரை வேஸ்ட் பண்ணாதே | குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்து |

**ஆ) சந்தையில் காய்கறிகளை வாங்கும் போது உங்களுக்கும் கடைக்காரர்களுக்கும் நடக்கும் உரையாடலைத் துணை வினைகளைப் பயன்படுத்தி எழுதுக.**

**கடைக்காரர்** : வாங்க... நாலு நாளா வரல

**நான்** : திருச்சி போயிருந்தேன்.

**கடைக்காரர்** : போன வாரம் அம்மா வந்திருந்தாங்க?

www.nammakalvi.com



**நான்** : வெங்காயம் என்ன விலை?
**கடைக்காரர்** : 50 ரூபா.
**நான்** : வேணாம். நேற்று சந்தைக்குப் போய் 5 கிலோ வாங்கிப் போட்டேன் அடுத்த வாரம் வாங்கிக்கிறேன்.
**கடைக்காரர்** : நீங்க 280 ரூபாயக்கு வாங்கியிருக்கீங்க. (பணம் பெற்றுக் கொண்டவுடன் 2000 ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டு)
**நான்** : பக்கத்துக் கடையில் வாங்கி கொடுங்க.
**கடைக்காரர்** : இருங்க. வாங்கி வரச் சொல்றேன்.

## மொழியை ஆள்வோம்

### அறிஞர்களின் பொன்மொழிகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக

1. Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval
   ஒவ்வொரு மலரும் இயற்கையில் மலரும் பொழுது மேன்மை அடைகிறது - (ஜெரார்டு டீ நெர்வல்)
2. Sunset is still my favourite colour, and rainbow is second - Mattie Stepanek
   கதிரவனின் மறைவு நிறம் எனக்கு பிடித்தமானது; வானவில் காட்சி எனக்கு இரண்டாவதாகப் பிடிக்கும். - (மாட்டி ஸ்டிபெனெக்)
3. An early morning walk is a blessing for the whole day - Henry David Toreau
   அதிகாலை நடைப்பயிற்சி, அன்றைய நாள் முழுமைக்கான வாழ்த்தாகும். - (ஹென்றி டேவிட் தோரியோ)
4. Just living is not enough .... One must have sunshine, freedom, and a little flower - Hans Christian Anderson
   வாழ்வது மட்டும் போதுமானதல்ல, கதிரவனைப் போலச் சுதந்திரமாக,மலரைப் போல மென்மையாக வாழ்வதே அவசியம். - ( ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆன்டர்சன்)

### பிழை நீக்கி எழுதுக

1. சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்தி கொண்டு தான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது.
   **விடை :** சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்தி கொண்டு தான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டி**னார்**.
2. மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.
   **விடை :** மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்**தான்**.
3. மழையே பயிர்க் கூட்டமும் உயிர்க் கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.
   **விடை :** மழையே பயிர்க் கூட்டமும் உயிர்க் கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்**றது**.
4. நீலனும் மாலனும் அவசர காலத் தொடர்புக்கான தொலைப்பேசி எண்களின் பட்டியலை வைத்திருக்கிறோம்.
   **விடை :** நீலனும் மாலனும் அவசர காலத் தொடர்புக்கான தொலைபேசி எண்களின் பட்டியலை வைத்திருக்கி**றார்கள்**.
5. சூறாவளியின் போது மேல் மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.
   **விடை :** சூறாவளியின் போது மேல் மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பி**த்தான்**.

www.nammakalvi.com



## பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க

1. நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல

   **விடை :** மாணவனும் நாவன்மை மிக்கவனாய் விளங்கினான்.

2. தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.

   **விடை :** தாயின் அரவணைப்பு பூங்கொடிக்கு மகிழ்வைத் தந்தது.

3. மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.


   **விடை :** இன்சொற்களால் இனிமையான மனிதன் ஆனான்.

4. கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.

   **விடை :** சொல்லிக் கொடுப்பதால் தன் அறிவில் குறைந்து விட மாட்டான்.

## வடிவம் மாற்றம் செய்க

**நீர்ச் சுழற்சி குறித்த கருத்து விளக்கப்படத்தின் உட்பொருளை புரிந்துணர்ந்து பத்தியாக மாற்றி அமைக்க.**



சுற்றுச் சூழலின் ஒரு முக்கியப் பகுதிப் பொருள் நீர் ஆகும். இது அனைத்து உயிரினங்களையும் மிகவும் இன்றியமையான ஒன்றாகும். மிகப்பெரிய நீர்த்தேக்கங்களாக (நீர் நிலைகள்) விளங்கக்கூடிய பெருங்கடல்களில் இருந்து நீர் ஆவியாகி மேகங்களைத் தோற்றுவிக்கின்றன. மற்ற நீர் நிலைகளான ஆறுகள், ஏரிகள், குளங்களில் இருந்தும் நீர் ஆவியாகி மேகங்களைத் தோற்றுவிக்கிறது. பயிர்களில் தங்கியுள்ள நீர் ஆவியாகி வளி மண்டலத்தை அடைகிறது. மேகங்களில் உள்ள நீராவி குளிர்ச்சி அடைந்து மழையாகப் பொழிகிறது. மழைநீர் ஆறுகள் மூலமாகச் சென்று இறுதியில் கடலை அடைகிறது. மேலும் பனி மற்றும் உறைபனியில் உள்ள நீர் உருகி ஓடைகள் மற்றும் ஆறுகள் மூலமாக இறுதியில் கடலை அடைகிறது.

1. **உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

18.07.20XX,
வ.உ.சி. நகர்,
திருவில்லிபுத்தூர்.

அன்புள்ள நண்பன் மணிக்கு,

நான் இங்கு நலமாய் உள்ளேன். உன் நலம் அறிய ஆவலாக உள்ளேன். மணி எப்படி இருக்கிறாய்? நீ புதியதாய் சேர்ந்த பள்ளி உனக்கு சிறப்பாக உள்ளதா? என்னுடைய பிறந்த நாளுக்கு நீ வராதது எனக்கு மிகவும் வருத்தமாக

www.nammakalvi.com



இருந்தது. இருப்பினும், நீ அனுப்பிய "கால் முளைத்த கதைகள்" என்ற நூல் நீ என்னுடன் இருப்பது போல் இருந்தது.

மணி! பிறந்தநாள் என்றாலே இனிப்புகளும், வாழ்த்து அட்டைகளும், குறுந்தகவல்களும் நம் நினைவில் நீங்காது நிற்கும். ஆனால், அவையெல்லாம் நீ கொடுத்த நூலிற்கு ஈடாகுமா? "நூலறிவே ஆகுமாம் நுண்ணறிவு" என்பதை உணர்ந்து என் அறிவு வளர நீ அளித்த பரிசு என் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளது.

நண்பா! "கால் முளைத்த கதைகள்" என்ற நூலில் உள்ள ஒவ்வொரு கதைகளுமே அறிவுக்கு விருந்தாகவும், நன்னெறி காட்டும் பாதையாகவும் அமைந்துள்ளது. எனது ஞானத்தை வளர்த்திட இந்நூல் இருக்கும் என நம்புகிறேன்.

நண்பா! உன்னை நேரில் பார்த்து வாழ்த்து சொல்ல வேண்டும் என எண்ணினேன். இயலவில்லை. ஊருக்கு வரும் பொழுது சந்திக்கிறேன். மிக்க நன்றி நண்பா!

இடம் : திருவில்லிபுத்தூர் இப்படிக்கு

நாள் : 18.07.20XX உன் ஆருயிர் நண்பன்,

முத்தமிழன்.

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

இரா. மணி,
67/ 3 ஏ, அண்ணா நகர்,
சீவலப்பேரி,
திருநெல்வேலி.

## வரவேற்பு மடல்

சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

இடம் : அரசு மேல்நிலைப் பள்ளி, விருதுநகர்.
நாள் : 23.07.2019 செவ்வாய்க் கிழமை.
நேரம் : பிற்பகல் 3.30 மணி.

**"சுத்தம் சோறு போடும்"**
**"கந்தையானாலும் கசக்கிக் கட்டு"**
**"கூழானாலும் குளித்துக் குடி"**

என்னும் பழமொழிக்கு ஏற்ப எங்கள் பள்ளி சிறப்பாக அமைந்துள்ளது. தூய்மையே எங்களின் தாரக மந்திரம். நெகிழிப் பயன்பாடு எங்கள் பள்ளியில் தடைசெய்யப்பட்டுள்ளது. மக்கும் குப்பை, மக்கா குப்பைகளுக்கு என தனித் தனி தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. கழிவுகளுக்கும் தனித் தொட்டிகள் உள்ளன. இயற்கை உரம் தயாரித்து எங்கள் பள்ளியில் உள்ள தோட்டங்களைப் பராமரிக்கிறோம். மாவட்டத்தில் சிறந்த பள்ளியாக எம் பள்ளியைத் தேர்ந்தெடுத்து விருது பெற்றுள்ள இப்பெரு விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்கும் வணக்கத்திற்கும் போற்றுதலுக்குரிய மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களே!

www.nammakalvi.com



நேரிய பார்வையும், நிமிர்ந்த நன்நடையும் கொண்டவரே! கடமை உணர்வுடன், உழைப்பைத் தன் உடைமை ஆக்கியவரே! மாவட்டம் கல்வியில் சிறந்தோங்கிட இராப்பகலாய் உழைத்தவரே! குப்பைகளைப் பக்குவமாய் பிரித்துப் பயன்படுத்த நல்வழி காட்டிய அன்னப் பறவையே!

ஏழை மாணவர், மெல்லக் கற்கும் மாணவர் வாழ்விலும் ஒளி ஏற்றிட, சிகரம் தொட்டிட சீரிய வழி சமைத்தவரே! எம் மாவட்டக் கல்வி அலுவலரே! உம்மை எங்கள் பள்ளியின் சார்பில் வருக! வருக! என உளம் மகிழ வரவேற்கிறோம்.

நன்றி.

இவண்,
இரா. மணிமாறன்,
பள்ளிக்குழு மாணவர் தலைவர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
விருதுநகர்.

---

## நயம் பாராட்டுக

**கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்**
**காடும் செடியும் கடந்துவந்தேன்;**
**எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்**
**இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.**
**ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல**
**ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;**
**ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்**
**ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.**
**- கவிமணி .**

**திரண்ட கருத்து :**

**"தென்னைக்கு அழகு குருத்து**
**பாடலுக்கு அழகு கருத்து"**

கல்லுகளிலும் மலைகளின் உச்சியிலிருந்தும் குதித்து வந்தேன். காடுகளிலும் செடிகளிலும் கடந்து வந்தேன். சமவெளிகளில் இறங்கித் தவழ்ந்து வந்தேன். மேட்டுப் பகுதிகளிலும் ஏறி வந்தேன். பல ஏரி, குளங்கள் நிரம்பி மக்கள் பயன்பாட்டிற்காக வந்தேன். ஊற்று வராத நிலப்பகுதிகளிலும் உள்ளே புகுந்து வந்தேன். ஓடை மணல்களில் எல்லாம் ஓடிப் பாய்ந்து வந்தேன் என்று கருத்து மிக்க பாடலைக் கவிமணி அவர்கள் இயற்றியுள்ளார்.

**மையக் கருத்து :**

மலை உச்சியிலிருந்து புறப்பட்டு ஆறு வழியாக ஓடைகளில் பொங்கிட ஓடிவந்தேன் என்று ஆற்றின் வரலாற்றை வரிசையாகக் கூறி வளப்படுத்திய பகுதிகளை சிறப்பாகக் கூறியுள்ளார்.

**தொடை நயம் :**

**"தொடையற்ற பாட்டு நடையற்று போகும்"**

என்னும் முதுமொழிக்கேற்ப இப்பாடலில் மலர்களை மாலையாகத் தொடுப்பதுபோல் மோனை, எதுகை, இயைபு, முரண் நயங்கள் சிறப்பாக அமைந்துள்ளன.

www.nammakalvi.com



**அ) மோனை நயம் :**

**"குயவனுக்குத் தேவை பானை**
**புலவனுக்குத் தேவை மோனை"**

சீர் அல்லது அடி தோறும் முதல் எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது மோனை நயமாகும்.

**எ.கா :** கல்லும் - காடும் எல்லை - எங்கும்
ஏறாத - ஏறி ஊறாத - ஊற்றிலும்

**ஆ) எதுகை நயம் :**

**"மதுரைக்கு அழகு வைகை**
**பாடலுக்கு அழகு எதுகை"**

சீர் அல்லது அடி தோறும் இரண்டாம் எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது எதுகை நயமாகும்.

**எ.கா :** கல்லும் | ஏறாத
எல்லை | ஊறாத

**இ) இயைபு நயம் :**

செய்யுளில் அடுத்த அடுத்த சொல்லோ, அடியின் கடைசிச் சீரோ, எழுத்தோ, அசையோ ஒன்றுபோல் இயைந்து வருவது இயைபு நயமாகும்.

**எ.கா :** கடந்து வந்**தேன்** | தவழ்ந்து வந்**தேன்**
நிரம்பி வந்**தேன்** | ஓடி வந்**தேன்**.

**ஈ) முரண் நயம் :**

செய்யுளில் முரண் பட்ட சொற்கள் அமையப் பெறுவது முரண் நயமாகும்.

**எ.கா :** இறங்கி - ஏறி

**சொல் - பொருள் நயம் :**

**"அர்ச்சுனனுக்கு வில்லு**
**பாடலுக்குச் சொல்லு"**

இச்செய்யுளில் சொல்லும் பொருளும் சிறப்பாக அமைந்துள்ளன. ஆற்றின் போக்கிற்கேற்ப பாடல் அமைத்துள்ளார்.

**சான்று :** குதித்து வந்தேன் - தவழ்ந்து - ஓடி - சமவெளி

**சுவை நயம் :**

**"நாவிற்கு அறுசுவை**
**பாவிற்கு எண்சுவை"**

என்பதற்கேற்ப இச்செய்யுளில் 'தவழ்ந்து தவழ்ந்து' என்று அடுக்குத் தொடராக அமைந்து சுவை நயமிக்க பாடலாக அமைந்துள்ளது.

**சந்த நயம் :**

**"சந்தம் பாட்டுக்குச் சொந்தம்"**

செய்யுளில் மோனை, எதுகை, இயைபு, முரண் நயங்கள் அமையப் பெற்று பாடல் சந்த நயத்துடன் பாடுவதற்கு ஏற்ப அமைந்துள்ளது சிறப்பாகும்.

**அணி நயம் :**

**"அணியற்ற பாடல் அழகற்றுப் போகும்"**

www.nammakalvi.com



புலவர் ஆறு தன் பெருக்கெடுத்து ஓடி வரும் நிலையைப் பற்றி இயல்பாக இருப்பதை உள்ளதை உள்ளவாறே கூறியுள்ளதால், இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி அமைந்து வந்துள்ளது.

**பாடலுக்கு ஏற்ற தலைப்பு :**

**"தலைப்பில்லாக் கவிதை**
**தாயில்லாப் பிள்ளை போல"**

இச்செய்யுளுக்கு ஏற்ற தலைப்பு "நீரின் துள்ளல்".

## மொழியோடு விளையாடு

### சொல்லுக்குள் சொல் தேடுக

**எ.கா :** ஆற்றங்கரையோரம் - ஆறு, கரை, ஓரம்

கடையெழு வள்ளல்கள், எடுப்பார்கைப் பிள்ளை, தமிழ்விடு தூது, பாய்மரக் கப்பல், எட்டுக்கால் பூச்சி.

கடையெழு வள்ளல்கள் - கடை, ஏழு, வள்ளல்கள், கள்.
எடுப்பார்கைப் பிள்ளை - எடுப்பார், கை, பிள்ளை, பார்
தமிழ்விடு தூது - தமிழ், விடு, தூது
பாய்மரக் கப்பல் - பாய், மரம், கப்பல்
எட்டுக்கால் பூச்சி - எட்டு, கால், பூச்சி

### அகராதியில் எழுதுக

கந்தி, நெடில், பாலி, மகி, கம்புள், கைச்சாத்து.

கந்தி - மரகதம், கழுகு, துவரை
நெடில் - நெட்டெழுத்து, மூங்கில், நீளம்.
பாலி - உதடு, தாழி, கத்தியின் பிடி, ஆலமரம்.
மகி - பூமி, பசு
கம்புள் - வானம்பாடி, சம்பங்கோழி
கைச்சாத்து - கையெழுத்து

### சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக

**எ.கா :** அரிசி போடுகிறேன்.

**விடை :**

புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.
நான் நாள்தோறும் காலையில் ஒருபோதும் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

www.nammakalvi.com



1. மழை பெய்தது. 2. வானவில்லைப் பார்த்தேன். 3. குழந்தை சிரித்தது.
4. எறும்புகள் போகின்றன. 5. படம் வரைந்தான்.

**1. மழை பெய்தது :**

**விடை :**

மதுரையில் மழை பெய்தது.
மதுரையில் மழை நன்றாகப் பெய்தது.
மதுரையில் நீண்ட நேரம் மழை நன்றாகப் பெய்தது.
மதுரையில் நீண்ட நேரம் மழை நன்றாகப் பெய்து வெள்ளம் ஓடியது.

**2. வானவில்லைப் பார்த்தேன் :**

**விடை :**

வானத்தில் வானவில்லைப் பார்த்தேன்.
வானத்தில் வானவில்லை நன்றாகப் பார்த்தேன்.
வானத்தில் வானவில்லை நண்பர்களோடு நன்றாகப் பார்த்தேன்.
வானத்தில் வானவில்லை நானும் நண்பர்களும் இணைந்து பார்த்தோம்.

**3. குழந்தை சிரித்தது :**

**விடை :**

குழந்தை நன்றாகச் சிரித்தது.
குழந்தை நேற்று நன்றாகச் சிரித்தது.
குழந்தை நேற்று மாலை நன்றாகச் சிரித்தது.
குழந்தை நேற்று மாலை மிக நன்றாகச் சிரித்தது.

**4. எறும்புகள் போகின்றன :**

**விடை :**

எறும்புகள் சாரைசாரையாய்ப் போகின்றன.
எறும்புகள் சுவரில் சாரைசாரையாய்ப் போகின்றன.
எறும்புகள் சுவரில் ஊர்ந்து சாரைசாரையாய்ப் போகின்றன.
எறும்புகள் சுவரில் ஊர்ந்து கொண்டே சாரைசாரையாய்ப் போகின்றன.

**5. படம் வரைந்தான் :**

வளவன் படம் வரைந்தான்.
வளவன் நன்றாகப் படம் வரைந்தான்.
வளவன் மிக நன்றாகப் படம் வரைந்தான்.
வளவன் புத்தகத்தில் மிக நன்றாகப் படம் வரைந்தான்.


## வேறுபட்ட வினையெச்சங்களைப் பயன்படுத்தி முதல் வினைகளைத் துணை வினைகளாக மாற்றுக

முதல் வினைகள் - பார்த்தேன், கொடுத்தோர், நடந்தான், சேர்ந்தார், அமைத்தோம்.

**எ.கா :** **பார்த்தேன்.**

www.nammakalvi.com






அ) எழுதிப் பார்த்தேன்

ஆ) கொடுத்துப் பார்த்தேன்

இ) தடுக்கப் பார்த்தேன்

ஈ) ஓடப் பார்த்தேன்

உ) எழுதி கொடுத்தார்

ஊ) கொடுத்து நடந்தான்.

## வினையடிகளை முதல் வினையாகவும் துணை வினையாகவும் அமைத்துத் தொடர்களாக மாற்றுக

வினையடி - வா, போ, செய், மாற்று, இரு, கொடு, கொள், எழுது, விடு, போடு

**எ.கா :** வினையடி - வை


| முதல் வினை | துணை வினை |
|---|---|
| மூட்டையைத் தலையில் வைத்தான்.<br>இலையில் இனிப்பை வைத்தனர். | அம்மா குழந்தையைத் தூங்க வைத்தார்.<br>நான் உனக்கு ஒரு நூல் வாங்கி வைத்தேன்.<br>எதற்கும் சொல்லி வை. |

| முதல் வினை | துணை வினை | வினையடி |
|---|---|---|
| 1. வா<br>மாணவர்கள் வகுப்பிற்கு | வந்துப் படித்தனர் | வா |
| 2. போ<br>தொழிலாளிகள் வேலைக்குப் | போய்வந்தார்கள் | போ |
| 3. செய்<br>உழவர் வயலில் வேலை | செய்து திரும்பினர் | செய் |
| 4. மாற்று<br>வங்கியில் பணத்தை | மாற்றிச் சென்றனர் | மாற்று |
| 5. இரு<br>திருடன் ஒளிந்து | இருந்தான் | இரு |
| 6. கொடு<br>வள்ளல் புலவர்க்குப் பரிசு | கொடுத்து மகிழ்ந்தான் | கொடு |
| 7. கொள்<br>மாணவன் பரிசை பெற்று | கொண்டு சென்றான் | கொள் |
| 8. எழுது<br>மாணவி பாடம் | எழுதி காட்டினாள் | எழுது |

www.nammakalvi.com



## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



தன் உழைப்பில் நேர்மையாய் உள்ள
எறும்புகளைப் போல - நாமும்
நம் வாழ்வில் நேர்மையாய்
துணிச்சலோடு செயல்படுவோம்
செய்யும் வேலையில் முழு ஈடுபாட்டுடன்
கவனமாய் அவ்வேலையை முடிப்போம்
நாம் நம் வாழ்வில் வெற்றி அடைவோம்.

## செயல் திட்டம்

கொடுக்கப்பட்ட இணையத்தள இணைப்பில் உள்ள காணொலியைக் கண்டு அது குறித்த உங்கள் கருத்துகளை இருபக்க அளவில் எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.

https : // www.youtube. com/watch?v=0ReVrONNvoQ

## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள் :**

அ) தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.

ஆ) வகுப்பறையில் நண்பர்கள் வைத்திருக்கும் புதிய அழகிய பொருள்களைப் பார்த்தால் ஆசை வரும். அவர்களைப் போல நானும் முயன்று உழைத்து அவற்றை என்னுடைய பணத்தில் வாங்குவேன்.

இ) அறையை விட்டு வெளியே செல்லும்போது மின்விசிறி, மின்விளக்குகளை நிறுத்திவிட்டுச் செல்வேன்.

ஈ) வெற்றுக் காகிதங்களைச் சுருட்டி வகுப்பறைக்குள்ளும் பள்ளி வளாகத்திலும் போடமாட்டேன்.

உ) பள்ளி வளாகத்துக்குள் ஊறு விளைவிக்க மாட்டேன்.

ஊ) ஆசிரியர்களிடத்தும் பெற்றோர்களிடத்தும் மதிப்புடன் நடந்து கொள்வேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| குமிழிக்கல் | - Conical Stone | பாசனத் தொழில் நுட்பம் | - Irrigation Technology |
| நீர் மேலாண்மை | - Water management | வெப்ப மண்டலம் | - Tropical Zone. |

www.nammakalvi.com



**மறை நீர் [Virtual Water]**

கண்ணுக்குத் தெரியாமல் நாம் இரண்டு வகையில் நீரைப் பயன்படுத்துகிறோம். முதல் வகை நாம் பயன்படுத்தும் பொருள்கள் வழியாக, இரண்டாவது வகை நாம் உண்ணும் உணவின் வழியாக. புலப்படாத் தண்ணீர் என்பது உணவுப் பொருள்களின் உற்பத்தி குறித்தும் அதனை உற்பத்தி செய்யச் செலவிடப்பட்ட தண்ணீர்த் தேவை குறித்தும் பேசுவது ஆகும். ஒரு கிலோ ஆப்பிளை உற்பத்தி செய்ய 822 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ சர்க்கரையை உற்பத்தி செய்ய 1780 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ அரிசியை உற்பத்தி செய்ய 2500 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ காப்பிக் கொட்டையை உற்பத்தி செய்ய 18,900 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகிறது. நீர்வளத்தைப் பாதுகாக்க நாட்டின் மேல்புற நீர்வளம் மற்றும் நிலத்தடி நீர்வளம் குறித்து அக்கறை கொள்ள வேண்டும். நீர் அதிகம் தேவைப்படும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதைத் தவிர்த்து, தேவைக்கேற்ப இறக்குமதி செய்துகொள்ள வேண்டும். இதனால் நாட்டின் நிலத்தடி நீரும் ஆற்று நீரும் சேமிக்கப்படும்.

(மா. அமரேசன் - கண்ணுக்குப் புலப்படாத தண்ணீரும் புலப்படும் உண்மைகளும்)

## இயல் 2

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது ________.
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
2. ‘மிசை’ - என்பதன் எதிர்ச் சொல் ________.
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை.
3. பொருத்தமான விடையைத் எடுத்து எழுதுக.
   கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ________
   அ) வந்தான் ஆ) வந்துவிட்டான் இ) வருவான் ஈ) வருகிறான்.

II. நிரப்புக 3x1=3

4. நீர்நாடு எனப் போற்றப்படும் நாடு ________.
5. உணவைத் தந்தவர் ________ தந்தவர் ஆவார்.
6. சனிநீராடு என்றவர் ________.

III. விடையளி: 4x2=8

7. ‘கூவல்’ என்று அழைக்கப்படுவது எது?
8. கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புகள் யாவை?
9. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக.
10. பகுபத உறுப்பிலக்கணம் தருக : கொண்டு.

IV. விடையளி: 3x3=9

11. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.
12. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?
13. சந்தையில் காய்கறிகளை வாங்கும்போது உங்களுக்கும் கடைக்காரருக்கும் நடக்கும் உரையாடலைத் துணைவினைகளைப் பயன்படுத்தி எழுதுக.

V. விடையளி: 4x5=20


14. ‘தண்ணீர்’ கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.
15. ‘நீரின்றி அமையாது உலகு’ - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை சான்றுகளுடன் விவரி.

www.nammakalvi.com



16. சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

17. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



VI. மொழிப்பயிற்சிகள்: 7x1=7

18. துணைவினைகளைப் பயன்படுத்தி புதிய தொடரை எழுதுக.
வேண்டும்.

19. இலக்கணக் குறிப்பு தருக : விரிமலர்.

20. மொழி பெயர்க்க : Every flower is a soul blossoming in nature - Gerard De Neruval.

21. பிழை நீக்கி எழுதுக :
மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.

22. சொற்றொடரில் அமை :
மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.

23. பொருள் கூறுக : மகி.

24. கலைச்சொல் அறிக : Tropical Zone.

## இயல் 2

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I.உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1. பொருத்தமான விடையைத் தேர்க.
அ) நீரின்றி அமையாது உலகு - திருவள்ளுவர்
ஆ) நீரின்றி அமையாது யாக்கை - ஔவையார்
இ) மாமழை போற்றும் - இளங்கோவடிகள்
i) அ, இ, ஆ ii) ஆ, இ, அ iii) ஆ, அ, இ iv) அ, ஆ, இ.

2. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசம் பூ இ) வளம் ஈ) பெரிய

3. 'விசனம்' சொல் தரும் பொருள் _______
அ) வேதனை ஆ) மகிழ்ச்சி இ) ஏக்கம் ஈ) கவலை.

II.நிரப்புக 3x1=3

4. திருத்தொண்டத் தொகை பாடியவர் ___________.

5. 'தாட்கு' என்ற சொல்லின் பொருள் ___________.

6. தந்தி + அடி - இதில் பெயர் _______ ; வினை_______.

III. விடையளி: 4x2=8

7. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

8. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

9. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண் - இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?

www.nammakalvi.com



10. ‘இரு’ என்ற வினையடி கொண்டு முதல் வினை இரண்டு தொடர்களும் துணை வினை இரண்டு தொடர்களும் எழுதுக.

IV. விடையளி: 4x5=20

11. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.
12. "நீர் இன்றி அமையா ..." எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
13. பாடலைப் படித்து விடை எழுதுக.

"காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்"

அ) இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
ஆ) இப்பாடலை இயற்றியவர் யார்?
இ) இப்பாடலின் எதுகைச் சொற்களை எழுதுக.
ஈ) கழை, கா - என்பதன் பொருள் யாது?
உ) நாடெல்லாம் - பிரித்து எழுதுக.

14. ‘பா’ நயம் பாராட்டுக :

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

V.விடையளி: 3x3=9

15. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
16. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
17. மறைநீர் - குறிப்பு வரைக.

VI. மொழிப்பயிற்சிகள்: 7x1=7

18. கலைச்சொல் எழுதுக : Water Management.
19. பொருள் கூறுக : கந்தி.
20. சொல்லுக்குள் சொல் தேடுக : பாய்மரக்கப்பல்.
21. சொற்றொடரில் அமைக்க : கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.
22. பிழை நீக்கி எழுதுக :

சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரை தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.

23. மொழி பெயர்க்க :

An early morning walk is a blessing for the whole day. - Henry David Thoreau.

24. விடைக்கேற்ற வினா அமை :

மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிகின்றது.

www.nammakalvi.com



# இயல் மூன்று

# உள்ளத்தின் சீர்



**கற்றல் நோக்கங்கள்**

- தமிழர்களின் பண்பாட்டு அசைவுகளை உணர்ந்து பின்பற்றுதல்
- அறவுணர்வை வெளிப்படுத்தும் வீர விளையாட்டென ஏறுதழுவுதலை ஏற்றல்
- தொல்லியல் எச்சங்களைப் பாதுகாத்தல்
- விழாக்கள் பண்பாட்டின் தொடர்ச்சியாகக் கொண்டாடப்பட்டு வருபவை என்பதை உணர்ந்து பங்கேற்றல்
- பட்டிமன்றம் என்ற கருத்துப்பரிமாற்ற வடிவத்தை நேர்த்தியுடன் பயன்படுத்துதல்

www.nammakalvi.com




உரைநடை உலகம்

இயல் மூன்று

# ஏறு தழுவுதல்

மனவரைபடம்




## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. பொருந்தாத இணை எது?**

அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டி மண்டபம்

**[விடை : திருவாரூர் - கரிக்கையூர்]**

**2. முறையான தொடர் அமைப்பினை குறிப்பிடுக.**

அ) தமிழர்களின் வீர விளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.

ஆ) தொன்மையான வீர விளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.

இ) தமிழர்களின் வீர விளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.

ஈ) தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு ஏறுதழுவுதல்.

**[விடை : தமிழர்களின் தொன்மையான வீர விளையாட்டு ஏறுதழுவுதல்]**

**3. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று.**

அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

ஈ) பட்டி மண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

**[விடை :எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது]**

**4. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்**

அ) திசைச் சொற்கள் ஆ) வட சொற்கள்

இ) உரிச் சொற்கள் ஈ) தொகைச் சொற்கள் **[விடை : தொகைச் சொற்கள்]**

www.nammakalvi.com



**5. சொற்றொடர்களை முறைப்படுத்துக.**

அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி இ) தழுவிப் பிடித்தல் என்கிறது

i) ஆ - அ - இ ii) ஆ - இ - அ iii) இ - ஆ - அ iv) இ - அ - ஆ **[விடை :i) ஆ - அ - இ]**

## குறுவினா

**1. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?**

ஜ(ச)ல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு, ஏறுதழுவுதல், காளை விரட்டு, மாடு பிடித்தல், எருது கட்டி, ஏறுவிடுதல் எனப் பல்வேறு வடிவங்களில் ஏறுதழுவுதல் அழைக்கப்படுகிறது.

**2. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.**

முல்லைக் கலியில், ஏறுதழுவுதல் என்றும் சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களில் 'ஏறுகோள்' என்றும் கண்ணுடையம்மன் பள்ளு என்ற சிற்றிலக்கியத்தில் 'எருதுகட்டி' என ஏறுதழுவுதல் பற்றி குறிக்கப் பெற்றுள்ளன.

**3. ஏறுதழுவுதல் குறித்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.**

- ஏறுதழுவுதல் குறித்த பல நடுகற்கள், புடைப்புச் சிற்பங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன.
- "எருது பொருதார் கல்" - சேலம் மாவட்டம்
- கோவுரிச் சங்கன் கருவந்துறை
- நீலகிரி மாவட்டம் கோத்தகிரி - கரிக்கையூர்
- மதுரை உசிலம்பட்டி அருகில் கல்லூத்து மேட்டுப்பட்டி

## சிறுவினா

**1. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள தீட்சியை விளக்குக.**

ஏறு தழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும், மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும், பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது. இதுவே, வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.

**2. ஏறு தழுவுதல், திணை நிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?**

**பண்பாட்டு அடையாளம் :**

- ஏறு தழுவுதல் முல்லை நிலத்து மக்களின் அடையாளம்.
- மருத நிலத் திணையோடு பின்னிப் பிணைந்து பண்பாடு மிக்கது.
- உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப் பெரிதும் துணைநின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப்பொங்கல்.
- அவ்விழாவன்று மாடுகளைக் குளிப்பாட்டி, அலங்கரித்து, பூமாலை அணிவித்துத் தளிகைப் பொங்கலை ஊட்டி விடுவர்.

www.nammakalvi.com



- வேளாண் குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறு தழுவுதலாகும்.

## நெடுவினா

**1. ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.**

**இளைஞர்களின் வீரம் :**

வீரத்திற்கும் வினைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப்படுத்தப்படுபவை மாடுகள். முல்லை மற்றும் மருத நிலங்களில் கால் கொண்டு தமிழர் தம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து பண்பாடாகியுள்ளது ஏறு தழுவுதல். ஏறு தழுவுதல் தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு; இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு. இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

**வன்மமும், போர்வெறியும் :**

மேலை நாடுகளுள் ஒன்றான ஸ்பெயினில், காளைச் சண்டை தேசிய விளையாட்டாகக் கொண்டாடப்படுகிறது. அதில் காளையை அடக்கிக் கொல்பவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவர் காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் காளை கொல்லப்படுவதும் உண்டு. மேலை நாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையுமே வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.

**அன்பும் வீரமும் :**

தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக்கூடாது. நிகழ்ச்சியின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். அடக்க முடியாத காளைகளும் உண்டு. எனவே, காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

## சந்திப் பிழை நீக்கி எழுதுக

1. மாட்டை தழுவும் வீரருக்கு அந்த பணமுடிப்பு சொந்தமாகும்.

   **விடை :** மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும்.

2. நம்முன்னோரின் பண்பாட்டு கூறுகளை பேணி பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

   **விடை :** நம்முன்னோரின் பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

3. மாடுகளை போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டு பொங்கல்.

   **விடை :** மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப் பொங்கல்.

4. ஸ்பெயின் நாட்டில், காளையை கொன்று அடக்குபவனே வீரனாக கருத படுவான்.

   **விடை :** ஸ்பெயின் நாட்டில் காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப் படுவான்.

www.nammakalvi.com



5. இயற்கையை சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர் சங்க கால தமிழர்கள்.

**விடை :** இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர் சங்க காலத் தமிழர்கள்.

6. கலிதொகையில் ஏறு தழுவுதல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

**விடை :** கலித் தொகையில் ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. காளைகள் போருக்கு செல்லும் மருத நிலத்து போர் வீரர்களை நிகர்த்தனவாக இருந்தன.

**விடை :** காளைகள் போருக்கச் செல்லும் மருத நிலத்துப் போர் வீரர்களை நிகர்த்தனவாக இருந்தன.

## விடைக்கேற்ற வினா அமைக்க

1. பண்பாட்டுத் தொன்மையும் இலக்கிய வளமையும் வாய்ந்தது தமிழர் வரலாறு.

**விடை :** எத்தகைய சிறப்புகள் வாய்ந்தது தமிழர் வரலாறு?

2. காளைகளின் பாய்ச்சல் பற்றியும் கலித் தொகை கூறுகிறது.

**விடை :** எதன் பாய்ச்சல் பற்றக் கலித் தொகை கூறுகிறது.

3. சல்லிக்கட்டு பேச்சு வழக்கில் திரிபுற்று ஜல்லிக்கட்டு என அழைக்கப்படுகிறது.

**விடை :** சல்லிக்கட்டு பேச்சு வழக்கில் திரிபுற்று எவ்வாறு அழைக்கப்படுகிறது.

4. இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர் சங்க காலத் தமிழர்கள்.

**விடை :** இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தவர்கள் யார்?

5. தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறு தழுவுதல் இரண்டாயிரம் ஆண்டுகள் தொன்மையுடையது.

**விடை :** தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறு தழுவுதல் எத்தனை ஆண்டுகள் தொன்மையுடையது?

6. ஏறு தழுவுதல், தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு.

**விடை :** எது தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு?

7. சங்க இலக்கியமான கலித் தொகையில் ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விடை :** எச்சங்க இலக்கியத்தில் எந்நூலில் ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது?

## ஒருமை, பன்மை பிழைகளை நீக்கி எழுதுக

1. ஏறு தழுவுதல் பற்றிச் சங்க இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளது.

**விடை :** ஏறு தழுவுதல் பற்றிச் சங்க இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் **உள்ளன.**

2. சங்க இலக்கியமான கலித்தொகையில் ஏறு தழுவுதுல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**விடை :** சங்க இலக்கியமான கலித்தொகையில் ஏறு தழுவுதல் பற்றிக் **குறிப்பிடப்பட்டுள்ளது.**

3. சிந்துவெளி நாகரிக வரலாற்றில் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**விடை :** சிந்துவெளி நாகரிக வரலாற்றில் காளை முக்கியப் பங்கு **வகிக்கின்றது.**

4. சல்லிக்கட்டு பேச்சு வழக்கில் திரிபுற்று ஜல்லிக்கட்டு என அழைக்கப்படுகின்றன.

**விடை :** சல்லிக்கட்டு பேச்சு வழக்கில் திரிபுற்று ஜல்லிக்கட்டு என **அழைக்கப்படுகின்றது.**

www.nammakalvi.com



## தேவையான இடங்களில் நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக

1. முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள் சைகைகள் ஒலிகள் ஓவியங்கள் போன்றவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர்.

   **விடை :** முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் போன்றவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர்.

2. திராவிட மொழிக் குடும்பத்திலுள்ள தமிழ் கன்னடம் மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகள் ஆகும்.

   **விடை :** திராவிட மொழிக் குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகள் ஆகும்.

## பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. மூன்று எருதுகளைப் பலர் விரட்டுவது | - அ) சேலம் | |
| 2. திமிலுடன் கூடிய காளையை அடக்குவது | - ஆ) தேனி | |
| 3. திமிலுடன் கூடிய காளை | - இ) மதுரை | |
| 4. எருது பொருதார் கல் | - ஈ) நீலகிரி | **[விடை : 1-ஈ, 2-இ, 3-ஆ, 4-அ]** |

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையை எழுதுக

சிந்துவெளி நாகரிக வரலாற்றிலும் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது. இம்மக்கள் காளையைத் தெய்வமாக வழிபட்டதை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் வாயிலாக அறிகிறோம். சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் கல் முத்திரை ஒன்று ஏறு தழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.

**1. எது ஏறு தழுவுதலைக் குறிக்கிறது என ஐராவதம் மகாதேவன் கூறுகிறார்?**

சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் கல் முத்திரை ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளத்தைக் குறிக்கிறது.

**2. சிந்துவெளி நாகரிக வரலாற்றில் முக்கிய பங்கு வகிப்பது எது?**

காளை.

**3. சிந்துவெளி மக்கள் காளையை தெய்வமாக வழிபட்டதை எதன்மூலம் அறியலாம்?**

அகழாய்வில் கிடைக்கப்பட்ட சான்றுகள்.

**4. சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட பொருள்களில் ஒன்று**

மாடு தழுவும் கல் முத்திரை.

**5. மேற்கூறிய பத்திக்கு (உரைப் பகுதிக்கு) ஏற்ற தலைப்பினை எழுதுக.**

தொல் சான்றுகள்.

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

**1. இலக்கியங்கள் காட்டும் ஏறு தழுவுதல் காட்சிகளை உங்கள் பகுதியில் நடைபெற்ற எருது விடும் விளையாட்டு நிகழ்வுடன் ஒப்பிட்டு வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**நண்பர் 1** : நண்பா... ஏறு தழுவுதல் தமிழரின் வீர விளையாட்டு தெரியுமா!

**நண்பர் 2** : தெரியும்.

**நண்பர் 1** : எப்படித் தெரியும்?

**நண்பர் 2** : எங்கள் ஊர்த் திருவிழாவின் போது எருது விடும் போட்டி நடைபெறும். அப்போது எங்கள் ஊரினைச் சார்ந்த இளைஞர்கள் வீரத்தோடு எருவை அடக்கிட களம் குதிப்பர்.

**நண்பர் 3** : ஆமாம். இந்த எருதுகளை யார் வளர்ப்பர்? எருதை அடக்குவதால் கிடைக்கும் பயன் என்ன?

**நண்பர் 2** : நண்பா! ஊரிலுள்ள பெரியவர்கள் மாட்டினை வீரத்தோடு வளர்ப்பர். பொழு கொழு என வளர்ந்த எருதுவைப் போட்டிகளுக்காக தயார்ப்படுத்துவர். எருது விடும் விளையாட்டன்று எருதுவின் கொம்பில் பரிசுகளைக் கட்டிவிட்டு அவற்றை எடுத்துப் போரிடத் தயார் செய்வர். இதற்காகவே இளைஞர்கள் நெஞ்சில் உரம் கொண்டு எருதுகளை அடக்குவர். மனதில் உறுதி கொண்டு காளையர்கள் எருதுகளை அடக்கக் களம் குதிக்கும்போது எனக்கும் எருது விடும் விளையாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் தோன்றும்.

**நண்பர் 1** : நண்பா! இலக்கியங்கள் காட்டும் ஏறு தழுவுதலுக்கும் உங்கள் ஊரில் நடக்கும் எருது விடும் விளையாட்டு நிகழ்வுக்கும் தொடர்பு உண்டா?

**நண்பர் 3** : நண்பா! பண்டைய இலக்கியங்கள் காட்டும் ஏறு தழுவுதல் என்பது மாட்டினைத் தழுவி வீரத்தினை நிலைநாட்டும் ஒரு வீர விளையாட்டு, வீரம் செறிந்த இளைஞனுக்கே பெண் கொடுக்கும் சடங்கும் உண்டு. ஆனால் எங்கள் ஊரில் நடக்கும் எருது விடும் விளையாட்டானது ஓர் பொழுதுபோக்கு விளையாட்டு யார் வேண்டுமானாலும் களம் இறங்கி மாட்டினை அடக்கி பரிசினைப் பெறலாம். எனவே இலக்கியம் காட்டும் ஏறு தழுவுதல் ஒரு வீர விளையாட்டு, எருது விடும் விளையாட்டு ஒரு பொழுதுபோக்கு விளையாட்டு.

நன்றி!

**2. உங்கள் ஊரில் பொங்கல் விழா நடைபெறுகிறது. அவ்விழாவில் சாக்கு ஓட்டம், தவளை ஓட்டம், புட்டியில் தண்ணீர் நிரப்புதல், இசை நாற்காலி, உருளைக் கிழங்கு பொறுக்குதல், ஊசியில் நூல் கோத்தல், கோலம் போடுதல், கயிறு இழுத்தல், மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல், பானை உடைத்தல் ஆகிய போட்டிகள் நடைபெறுகின்றன. அப்போட்டிகள் குறித்து நேரடி வருணனை செய்க.**

**பொங்கல் விழா 2022**

**ஊராட்சி ஒன்றியம் திருவில்லிபுத்தூர் விருதுநகர் மாவட்டம்.**

| | | | |
|---|---|---|---|
| இடம் | : விளையாட்டரங்கம் | தலைமை | : ஊராட்சி மன்றத் தலைவர் |
| நாள் | : 15.1.20XX | முன்னிலை | : தலைமையாசிரியர். |
| நேரம் | : காலை 8 மணி | | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, மம்சாபுரம். |

www.nammakalvi.com



## நிகழ்ச்சி நிரல்

**1. சாக்கு ஓட்டம் :**

சிறுவர்களே! சிறுமியர்களே! முதலாவது நிகழ்ச்சியாக பன்னிரெண்டு வயதுக்குட்பட்டவர்களுக்கு இப்போட்டி. சாக்குக்குள்ள காலை நுழைத்துக் கொண்டு ஓடி வர வேண்டும். சாக்கு இல்லேன்னு சாக்குச் சொல்லாதீங்க. வாங்க... போட்டிக்கு வாங்க!

**2. தவளை ஓட்டம் :**

தண்ணியில்லா நேரத்தில் தவளை எங்கிருந்து வரும்? அப்படினு நினைக்காதீங்க! குட்டிக் குட்டித் தவளைகள் எட்டி எட்டிப் பாக்குது.... தவளைகளே தவ்வித் தவ்விதான் போகணும் எந்திருச்சி ஓடக் கூடாது! வரிசையில் உக்காருங்க... போட்டி தொடங்குது.

**3. புட்டியில் தண்ணீர் நிரப்புதல் :**

மகளிர் வாங்க... உங்க சிக்கனத்தை நான் கண்டுபிடித்துச் சொல்றேன். கையில் தண்ணீர் எடுத்து புட்டியில் நிரப்ப வேண்டும். தண்ணீர் சிக்கனம் இக்கணம் தேவை.

**4. இசை நாற்காலி :**

சிறுவர்களுக்கு என்று ஒரு போட்டி சிறுமியர்களுக்கென ஒரு போட்டி பாட்டு கேட்டுகிட்டே கவனத்தோடு நாற்காலியில் இடம் பிடிக்கவும். கவனமாக நீங்க இருக்கிறீங்களா... ஒரு தேர்வு.

**5. உருளைக் கிழங்கு பொறுக்குதல் :**

இவ்விளையாட்டில் இரண்டிற்கு மேற்பட்ட எத்தனை நபர்களும் விளையாடலாம்.

சில மீட்டர் இடைவெளியில் இரு பக்கமும் வரிசையாக எத்தனை நபர் விளையாடுகிறார்களோ அத்தனை கட்டங்கள் போட வேண்டும். ஒரு பக்கத்தில் உள்ள கட்டத்திற்குள் தேவைக்கேற்ப உருளைக் கிழங்குகள் வைத்திருக்க வேண்டும். எதிர்பக்கத்தில் உள்ள கட்டம் காலியாக இருக்க வேண்டும். மணி ஒலித்தவுடன் உருளைக் கிழங்கு இருக்கும் கட்டத்திற்கு முன் நிற்பவர்கள் அதிலிருந்து ஒன்று எடுத்து தனக்கு நேர் எதிரே இருக்கும் கட்டத்திற்குள் கொண்டுபோய் வைக்க வேண்டும். இப்படியாக ஒவ்வொன்றாக ஓடி வந்து எடுத்து முதலில் நிரப்புகிறவர்கள் வெற்றியாளர்களாக அறிவிக்கப்படுவர்.

**ஏறு தழுவுதல் :**

உலகில் பழைமையான நாகரிகமான சிந்து வெளி நாகரிகத்தின் அகழாய்வில் கண்டுபிடித்த கல்முத்திரை ஏறு தழுவுதலை நம்முன்னோர் நிகழ்த்தினர் என்பதை எடுத்தியம்புகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் வீர விளையாட்டாக இருக்கும் (சல்லிக்கட்டு) ஏறு தழுவுதலை நடத்தி நம் பண்பாட்டைக் காக்க வேண்டியது நம் கடமையாகும்.

**அன்பும் வீரமும் :**

காளைகளைத் தமிழர்கள் தெய்வமாக நினைத்து ஏறு தழுவுதலில் முன்பும் பின்பும் வழியாடு செய்வர். ஏர் உழும் காளைகளுக்கு நன்றிகூறி மாட்டுப் பொங்கல் கொண்டாடி வரும் ஒரே இனம் தமிழ் இனம்.

**மணிமேகலை காட்டும் இந்திர விழா :**

புகார் நகரில் இருபத்து எட்டு நாள் நடக்கும் இந்திர விழா ஏற்பாடுகளும் அலங்காரங்களும் விழா முன்னேற்பாடுகள் துகில் கொடி, கம்புகளில் கொடிகட்டுதல், தோரணங்கள் கட்டுதல் இன்றும் விழாக்களுக்கு முன்னோடியாகப் பண்பாட்டில் மணிமகுடமாகக் காட்சி தருகிறது.

www.nammakalvi.com



**கீழடி அகழாய்வு :**

பகுதி கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப் பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப் பொருட்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.

**முதல் அகழாய்வு :**

1863 இல் இராபர்ட் புரூஸ்புட் தொல்லியர் அறிஞர். பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவிகளையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவி தான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாரியுதம். இந்தக் கல்லாயுதம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டெடுத்தோம். தமிழரின் கடல்வணிகம், கருவிப்பயன்பாட்டின் உயரிய நாகரிகப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன.

**அகழாய்வு :**

அகழாய்வின் மூலம் கிடைத்த சுடுமண், கல், இரும்பு, செம்பு ஆகியவற்றாலான புழங்கு பொருட்கள், கருவிகள், பலநூற்றாண்டுகளாக வாழையடி வாழையாகப் பயன்பாட்டில் இருந்தன. இயற்கையோடு இணைந்த பண்பாட்டு வாழ்க்கை நம்முடையது என்பதை அறிந்து கொண்டோம். இதுவே மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்து கொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக் கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணைநிற்கின்றது.

நம்முன்னோரின் பண்பாட்டின் எச்சங்களை அழிக்காமல் காப்போம்! வாழ்வில் தமிழரின் இயற்கையோடு இணைந்த வாழ்வாக்குவோம்.

**தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!**

---

இயல் மூன்று

கவிதைப் பேழை

# மணிமேகலை

– சீத்தலைச் சாத்தனார்


**மனவரைபடம்**

ஐம்பெருங் காப்பியங்கள்
- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவக சிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

ஐம்பெருங் குழு
- அமைச்சர்
- சடங்கு செய்விப்போர்
- படைத் தலைவர்
- தூதர்
- சாரணர் (ஒற்றர்)

www.nammakalvi.com






**விளக்கவுரை :**

உயர்வுடைய புகார் நகரில் உண்மையினை உணர்த்துகின்ற நூல்களின் திறம். உலகியல் நன்மை தரும் தத்துவப் பொருள், முக்தி என்று சொல்லப்படுகின்ற இவைகளை அவர்கள் இயல்பால் உணர்த்தும் சமயவாதிகளும், எண்ணிச் சொல்லும் காலக் கணக்கராகிய சோதிடர்களும், தமது தேவ உருவத்தை மறைத்து மக்கள் பார்க்குமாறு மனித உருவம் தாங்கி வந்து புகார் நகரத்திலே இருக்கும் தேவர்களும், பல்வேறு இடங்களிலிருந்து வந்து கூடிய வேறுபட்ட மொழிகள் பேசும் அயல்நாட்டு மக்களும், அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியார், தூதுவர், சாரணர் எனப்படும் ஐம்பெருங் குழுவினரும், கரணத்து இயல்வர், கரும் காரர், கனகச் சுற்றம், கடைக் காப்பாளர், நகர மக்கள், படைத்தலைவர், யானை, குதிரைப்படை வீரர் ஆகிய எண்பேராயத்தினரும் ஆகிய இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி சபையில் திரண்டனர்.

இந்திரவிழா புகார் நகரில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செயப்படுகிறது. கொடித் தோரணங்ள் விளங்கும் தெருக்கள், குற்றமில்லாத கோவில் மன்றங்கள் ஆகிய இடங்களில் பூரணகும்பங்களும் பொன் பாலிகைகளும் (பொன்னால் ஆன நவதானியம் முளைத்த தாழி) மற்றும் பல்வேறு விதமான மங்கலப் பொருள்களை முறையாக அலங்கரிப்பீர்களாக! என்று அறிவித்த விதத்தினைப் பார்க்கும் போது, புகார் நகர வீதிகள் மிகச் செழிப்புடன் காணப்படுவதை அறிய முடிகிறது. காய்ந்த குலைகளோடு கூடிய பாக்குமரங்களும், வாழை, வஞ்சி, மலர்க் கொடிகள், கரும்புகள் ஆகியவற்றை நட்டு அலங்கரிப்பீராக. விழாக்கோலம் பூண்ட பழைய நகர வீதிகளிலும் பொது மன்றங்களிலும் பழைய மணலை எடுத்துவிட்டுப் புதுமணலைப் பரப்பித் தூய்மை செய்வீராக! இப்பழக்கம் நம் தமிழர் பண்பாட்டிற்குத் திலகமாய் அமைகிறது. விழாக்காலங்களில் நகரமே புதுமையாய்க் காட்சியளிக்க இப்பழக்கம் இருந்ததை அறிய முடிகிறது. துகில் கொடிகள், கொம்புகளில் கட்டும் கொடிகள் ஆகியவற்றைப் பெரிய மாடங்களிலும் வாயில்களிலும் கட்டி அலங்கரிப்பீர்களாக.

குளிர்ந்த மணலைப் பரப்பிய பந்தல்களிலும் மரங்கள் நிழல்தரும் மன்றங்களிலும் நல்ல சொற்பொழிவுகளை நடத்துங்கள்! அவரவர் தத்துவங்களைப் பற்றி வாதிடுவோர் பட்டிமண்டபமுறைகளைத் தெரிந்து விவாதம் செய்யுங்கள். மாறுபாடு கொண்ட பகைவர்களிடத்திலும் கோபமும் பூசலும் விடுத்து அவர்களிடமிருந்து தள்ளி நில்லுங்கள். மணல் திட்டுகள், பூஞ்சோலைகள், ஆற்றோரங்கள், தண்ணீர்த்துறைகள் ஆகிய இடங்களில் தேவர்களும் மனிதர்களும் வேறுபாடின்றி கலந்து மகிழ்ந்து உலாவும் விழாக் காலமான இருபத்து எட்டு நாள்களிலும் எங்கும் முறையாய் சிறப்பாகச் செய்து கொண்டாடுங்கள் இக்காட்சி தெய்வங்கள் மக்களோடு கலந்து திரிந்ததை உணர்த்துகின்றது. இதனை "தேவரும் மக்களும் ஒத்து உடன் திரிதரும்" என்னும் அடியால் உணாத்துகின்றனர். இவ்வாறு வாளேந்திய காலாட்படை வீரர்கள், தேர்ப்படை மறவர்கள், குதிரைப்படை, யானைப்படை வீரர்கள் ஆகியோர் சூழ்ந்து, அகன்ற முரசினை அடித்து மேற்கண்ட செய்திகளை நகர மக்களுக்கு அறிவித்தான் முதுகுடி வள்ளுவன். 'நமது நாட்டில் பசியே இல்லாது மறைக! நம்மிடையேயும் மாற்றாரிடமும் பகை

www.nammakalvi.com



நீங்கும்! நம் மக்களிடையே நோய்கள் தீர்ந்தும் நலம் பெருகுக! எங்கும் மழை பெய்து வளம் பெருகுக!' என வாழ்த்திப் புகார் நகரத்துப் பல பாகங்களிலும் இந்திர விழா பற்றிய செய்திகளை வள்ளுவன் முரசறைந்து அறிவித்தான்.

## நூல் குறிப்பு

- மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
- சிலப்பதிகாரமும், மணிமேகலையும், தமிழ் மக்களின் வாழ்வியலைச் சொல்லும் கருவூலங்களாகத் திகழ்கின்றன.
- மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால் இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்ற பெயரும் உண்டு.
- இது பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம்.
- பண்பாட்டுக் கூறுகளைக் காட்டும் தமிழ்க் காப்பியம்.
- இக்காப்பியம் சொற்சுவையும் பொருட்சுவையும் இயற்கை வருணனைகளும் நிறைந்தது.
- பௌத்தச் சார்புடைய நூல்.
- முப்பது காதைகளைக் கொண்டது இந்நூல்.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார். |
| **இயற்பெயர்** | : | சாத்தன். |
| **பிறந்த ஊர்** | : | திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர். |
| **சிறப்புக் காரணம்** | : | மதுரையில் கூலவாணிகம் (தானியம்) செய்தமையால் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று அழைக்கப்பட்டார். |
| **சிறப்புகள்** | : | இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவர். இவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். |
| **சிறப்புப் பெயர்கள்** | : | தண்டமிழ் ஆசான், நன்நூற் புலவன், சாத்தன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார். |
| **சமயம்** | : | பௌத்த சமயம். |
| **காலம்** | : | கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. |

www.nammakalvi.com



## பொருள் அறிக

| | | |
|---|---|---|
| 1. | மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும். | உண்மைப் பொருளை உணர்த்தும் உலகியல் தத்துவம், வீடுபேறு ஆகிய பொருள்களை |
| 2. | இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டும் | அவரவர் இயற்கைத் தன்மைக்கு ஏற்ப விளக்கும். |
| 3. | சமயக் கணக்கரும் | சமயவாதிகள் கூடியிருக்கின்றனர்.. |
| 4. | தந்துறை போகிய அமயக் கணக்கரும் அகலாராகிக் | தமது நெறியில் சிறந்தவராக விளங்கும் காலத்தைக் கணக்கிட்டுச் சொல்லும் காலக்கணிதரும் கூடியிருப்ப |
| 5. | கரந்துரு எய்திய கடவுளாளரும் | தம் தேவருடலை மறைத்து மக்கள் உருவில் வந்திருக்கும் கடவுளரும். |
| 6. | பரந்தொருங்கு ஈண்டிய | கடல் வழி வாணிகம் செய்து பெரும் செல்வம் ஈட்டியவர்களும் |
| 7. | பாடை மாக்களும் | பலமொழி பேசும் அயல் நாட்டினரும் |
| 8. | ஐம்பெருங்குழுவும் எண்பேர் ஆயமும் | அரசர்க்குரிய அமைச்சர் குழுவாகிய ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தைச் சேர்ந்தவர்களும் |
| 9. | வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுள் | அரசவையில் ஒன்று திரண்டிருக்கின்றனர். |
| 10. | தோரண வீதியும் | தோரணங்கள் கட்டிய தெருக்களிலும் |
| 11. | தோம் அறு கோட்டியும் | குற்றமில்லாத பொது மன்றங்களிலும் |
| 12. | பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும் | பூரண கும்பம், பொற்பாலிகைகளும் |
| 13. | பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின் | பாவை விளக்கு மற்றும் பலவகையான மங்கலப் பொருள்களை முறையாக அழகுபடுத்தி வையுங்கள். |
| 14. | காய்க்குலைக்கமுகும் | குலை முற்றிய பாக்கு மரத்தையும் |
| 15. | வாழையும் வஞ்சியும் | வாழை மரத்தையும் வஞ்சிக் கொடிகளையும் |
| 16. | பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின் | பூக்கள் நிறைந்த கொடிகளையும் கரும்பையும் நட்டு வையுங்கள் |
| 17. | பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து | வீடுகளின் முன் தெருத்திண்ணையில் தங்கத் தூண்களில் |
| 18. | முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின் | முத்து மாலைகளை வரிசையாகத் தொங்க விடுங்கள் |
| 19. | விழவுமலி மூதூர் | விழாக்கள் நிறைந்த இப்பழமையான ஊரின் |
| 20. | வீதியும் மன்றமும் | தெருக்களிலும் மன்றங்களிலும் |
| 21. | பழமணல் மாற்றுமின் | பழைய மணலை மாற்றிப் |
| 22. | புதுமணல் பரப்புமின் | புதிய மணலைப் பரப்புங்கள் |
| 23. | கதலிகைக் கொடியும் | துகில் நிறைந்த கொடிகளையும் |
| 24. | காழ் ஊன்று விலோதமும் | கம்புகளில் கட்டிய கொடிகளையும் |
| 25. | மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின் | பெரிய மாடங்களிலும், மாடங்களின் வாயில்களிலும் சேர்த்துக் கட்டுங்கள். |

www.nammakalvi.com



| | | |
|---|---|---|
| 26. | தண் மணற் பந்தரும் | குளிர்ந்த மணல் பரப்பிய பந்தல்களிலும் |
| 27. | தாழ்தரு பொதியிலும் | மரங்கள் தாழ்ந்து நிழல் தரும் ஊர் மன்றங்களிலும் |
| 28. | புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின் | நல்லன பற்றிச் சொற்பொழிவாற்றுங்கள் |
| 29. | ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள் | அவரவர் சமயத்திற்கு உரிய உட்பொருளறிந்து வாதிடுவோர். |
| 30. | பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின் | பட்டி மண்டப முறைகளைத் தெரிந்து வாதிட்டுத் தீர்வு காணுங்கள். |
| 31. | பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும் | மாறுபாடு கொண்ட பகைவர்களிடம் கூட |
| 32. | செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின் | கோபமும் பூசலும் கொள்ளாது அவர்களிடம் தள்ளி நில்லுங்கள். |
| 33. | வெண்மணல் குன்றமும் | வெண்மையான மணல் திட்டுகளிலும் |
| 34. | விரிபூஞ்சோலையும் | விரித்த மலர்களைக் கொண்ட பூஞ்சோலைகளிலும் |
| 35. | தண்மணல் துருத்தியும் | குளிர் மணலுடன் கூடிய ஆற்றோரங்களிலும் |
| 36. | தாழ்பூந்துறைகளும் | மரக்கிளைகள் நிழல் தரும் தண்ணீர் துறைகளிலும் |
| 37. | தேவரும் மக்களும் ஒத்துடன் திரிதரும் | தேவர்களும் மக்களும் ஒன்றுபட்டு உலாவி வருவர். |
| 38. | நாலேழ் நாளினும் நன்கறிந்தீர் என | இருபத்தெட்டு நாள்களிலும் என |
| 39. | ஒளிறுவாள் மறவரும் | ஒளிவீசும் வாளேந்திய காலாட் படையினரும் |
| 40. | தேரும் மாவும் | தேர்ப்படையினரும், குதிரைப்படையினரும் |
| 41. | களிறும் சூழ்தரக் | யானைப்படையினரும் சூழ்ந்து வர |
| 42. | கண்முரசு இயம்பி | அகன்ற முரசினை அறைந்து |
| 43. | பசியும் பிணியும் | கொடுமையான பசியும், துயர் தரும் நோயும் |
| 44. | பகையும் நீங்கி | அமைதியை இழக்கச் செய்யும் பகையும் நீங்கி |
| 45. | வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி | மழையும் வளமும் எங்கும் பெருகுவதாக என வாழ்த்தி |
| 46. | அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென் | இந்திரவிழா செய்திகளை நகருக்கு முரசறைவோன் அறிவித்தான். |

## பிரித்து எழுதுக

1. நன்பொருள் = நன்மை + பொருள்
2. பூக்கொடி = பூ + கொடி
3. பசும்பொன் = பசுமை + பொன்
4. நல்லுரை = நன்மை + உரை

## இலக்கணக் குறிப்பு

**1. பசியும் பிணியும், வசியும் வளனும், தோரண வீதியும் தோமறு கோட்டியும்** - எண்ணும்மைகள்

www.nammakalvi.com



| | | |
|---|---|---|
| 2. நன்பொருள், தண்மணல், நல்லுரை, பசும்பொன், மூதூர், வெண்மணல் | - | பண்புத்தொகைகள் |
| 3. பற்றா மாக்கள் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| 4.காய்க்குலைக் கமுகு, பூக்கொடிவல்லி, முத்துத்தாமம் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| 5. மாற்றுமின், பரப்புமின் | - | 'மின்'ஈற்று ஏவல் வினைமுற்றுகள் |
| 6. உறுபொருள் | - | உரிச்சொல் தொடர் |
| 7. தாழ்பூந்துறை, விரிபூஞ்சோலை | - | வினைத்தொகைகள் |
| 8. பாங்கறிந்து | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| 9. குழீஇ | - | சொல்லிசையளபெடை |

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. பரப்புமின் = பரப்பு + மின்**

பரப்பு - பகுதி

மின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

**2. அறைந்தனன் = அறை + த்(ந்) + த் + அன் + அன்**

அறை - பகுதி

த் - சந்தி

த்-ந் - ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

அன் - சாரியை

அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

**3. எய்திய = எய்து + இன் + ய் + அ**

எய்து - பகுதி

இன் - இறந்தகால இடைநிலை

ய் - உடன்படுமெய் சந்தி

அ - பெயரெச்ச விகுதி

**4. அறிந்தோர் = அறி + த்(ந்) + த் + ஓர்**

அறி - பகுதி

த் - சந்தி

த்-ந் - ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**5. இயம்பி = இயம்பு + இ**

இயம்பு - பகுதி

இ - வினையெச்ச விகுதி

**6. வளர்ப்பாய் = வளர் + ப் + ப் + ஆய்**

வளர் - பகுதி

ப் - சந்தி

ப் - எதிர்கால இடைநிலை

ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**7. கொள்வார் = கொள் + வ் + ஆர்**

கொள் - பகுதி

வ் - எதிர்கால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**8. உணர்ந்த = உணர் + த்(ந்) + த் + அ**

உணர் - பகுதி

த் - சந்தி

த்-ந் - ஆனது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

**9. விரித்த = விரி + த் + த் + அ**

விரி - பகுதி

www.nammakalvi.com



த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

10. பாய்வன = பாய் + வ் + அன் + அ
பாய் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
அன் - சாரியை
அ - பலவின்பால் வினைமுற்று விகுதி

11. குமைந்தனை = குமை + த்(ந்) + த் + அன் + ஐ
குமை - பகுதி
த் - சந்தி
த்-ந் - ஆனது விகாரம்
அன் - சாரியை
ஐ - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

12. நிறுத்தல் = நிறு + த் + தல்
நிறு - பகுதி
த் - சந்தி
தல் - தொழிற்பெயர் விகுதி

13. கொடுத்தோர் = கொடு + த் + த் + ஓர்
கொடு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

## பொருத்துக

அ) 1. தோம் - அ) மாலை
2. கோட்டி - ஆ) மழை
3. பொலம் - இ) குற்றம்
4. வசி - ஈ) போர்
5. செற்றம் - உ) மன்றம்
6. கலாம் - ஊ) சினம்
7. தாமம் - எ) பொன்

[விடை : 1-இ, 2-உ, 3-எ, 4-ஆ, 5-ஊ, 6-ஈ, 7-அ]

## விரித்து எழுதுக

1. ஐம்பெருங்குழு
   - அமைச்சர்
   - சடங்கு செய்விப்போர்
   - படைத்தலைவர்
   - தூதர்
   - சாரணர் (ஒற்றர்)
2. எண்பேராயம்
   - கரணத்தியலவர்
   - கருமவிதிகள்
   - கனகச் சுற்றம்
   - கடைக்காப்பாளர்
   - நகர மாந்தர்
   - படைத்தலைவர்
   - யானை வீரர்
   - இவுளி மறவர்

www.nammakalvi.com



**3. இரட்டைக்காப்பியங்கள்**

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை

**4. ஐம்பெரும் காப்பியங்கள்**

- சிலப்பதிகாரம்
- வளையாபதி
- மணிமேகலை
- குண்டலகேசி
- சீவக சிந்தாமணி

**5. மும்முரசு**

- படை முரசு
- விழா முரசு
- கொடை முரசு

**6. ஐஞ்சிறு காப்பியங்கள்**

- யசோதர காவியம்
- நீலகேசி
- உதயணகுமார காவியம்
- சூளாமணி
- நாககுமார காவியம்

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்களை உணர்த்தும் இலக்கணம்**

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

**[விடை : தொகைச்சொற்கள்]**

## குறுவினா

**1. பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலை காப்பியத்தில் இடம் பெற்றிருக்கிறது இத்தொடர்.

**பொருள்** : விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புது மணலைப் பரப்புங்கள் என்ற குறிப்பிடப்படுகிறது.

**விளக்கம்** : மணிமேகலைக் காப்பியத்தில் முப்பது காதைகளுள் முதல் காதையாக விளங்குவது விழாவறை காதை ஆகும். புகார் நகரில் இருபத்தெட்டு நாள் நடைபெறக்கூடிய இந்திரவிழா தொடங்க உள்ளது. இந்த அறிவிப்பை யானை மீது அமர்ந்து முரசறைவோன் அறிவித்தான். விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள் என்று அறிவிக்கிறான்.

**2. பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.**

பட்டிமண்டபம் என்பது இலக்கிய வழக்கு, ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சு வழக்கும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

www.nammakalvi.com



"மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன்"
பகைப் புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம் எனச் சிலப்பதிகாரத்திலும்,
"பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்" என மணிமேகலையிலும்
"பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை;
எட்டினோடு இரண்டும் அறியனையே" என்று திருவசாகத்திலும்
"பன்னரும் கலை தெரி பட்டிமண்டபம்" எனக் கம்பராமாயணத்திலும்
இச்சொல் பயின்று வருதலை அறியலாம்.

## சிறுவினா

**1. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.**

| | | |
|---|---|---|
| 1. | ஊர் நாட்டாண்மை, மணியம் ஊாப் பெரியோர், கோயில் குருக்கள், முதியோர், இளைஞர்கள் எல்லோரும் ஒருங்கே கூடி கோயில் முன்பாக அமர்ந்தனர். | புகார் நகரில் இந்திரவிழா நடைபெறுவது குறித்து முரசறைவோன் நான்கு வகைப் படைகளும் சூழ அகன்ற முரசறைந்து "பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க" அறிவித்தான். அயல்நாட்டினரும் அரசர், அமைச்சர் ஐம்பெருங்குழு, எண்பேராயம் அவையில் திரண்டிருந்தனர் |
| 2. | ஊர்த் திருவிழாவிற்கு நாள் குறித்தவுடன் ஊர் சாட்டல், ஊர் நுழைவாயிலிலேயே வேப்பிலை, மாவிலைத் தோரணங்கள் கட்டுதல், வீடுகளுக்குச் சுண்ணாம்பு பூசுதல் கோயில்களுக்கு வண்ணம் பூசுதல் ஆகிய முன்னேற்பாடான ஆயத்தப் பணிகள் செய்தனர் | தோரணம் கட்டிய தெருக்கள், மன்றங்களில் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மங்கலப் பொருள்கள் அழகுபடுத்தி வைக்கப்பட்டன. பாக்கு மரம், வாழை மரம் வஞ்சிக் கொடி, கரும்புகளையும் நட்டு வைத்தனர். தங்கத் தூண்களில் முத்துமாலைகள் தொங்கவிட்டனர். |
| 3. | ஊரவர் வேறுபாடின்றி ஒற்றுமையாக பட்டிமன்ற நிகழ்ச்சி வழியாக சமூகப் பிரச்சனைகளை விவாதித்து தீர்வு கண்டனர். தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளான தெருக்கூத்து, கரகாட்டம், பொய்க்கால் நிகழ்ச்சிகள் நடத்தினர் | பட்டிமண்டபம் ஏறுமின்<br>ஊர் மன்றங்களில் அவரவர் சமயத்திற்கு உரிய பொருளை வாதிட்டுத் தீர்வு கண்டனர். |
| 4. | உறவினர்களையும் விருந்தினர்களையும் அழைத்து திருவிழா நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளச் செய்தனர். | கருத்துமாறுபாடு கொண்ட பகைவர்களிடம் கோபமும் பூசலும் கொள்ளாது தேவரும் மக்களும் ஒன்றுபட்டு இருபத்தெட்டு நாள்களிலும் உலவி வந்தனர். |

www.nammakalvi.com



## கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தை தேர்ந்தெழுதுக

1. ஐம்பெ ________ (று, ரு) குழுவும் எ ________ பேர் ஆயமும் (ண், ன்)

**[விடை : ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்]**

2. பாவை வி ________ க்கும் ப ________ வுடன் பரப்பின் (ல,ழ) **[விடை : பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்]**

3. வெ ________ மணற் கு ________ றமும் விரிபூஞ் சோலையும் (ன், ண்) (லை, ளை)

**[விடை : வெண் மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்]**

---

## கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாவிற்கு விடை எழுதுக

"தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்;
பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்"

**1. இப்பாடலை இயற்றியவர் யார்?**

சீத்தலைச் சாத்தனார்.

**2. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?**

மணிமேகலை.

**3. இப்பாடல் பெறும் காதை எது?**

விழாவறை காதை.

**4. பொருள் கூறுக :** தண், பொதி, பாங்கு, செற்றம், ஏற்றுமின்

தண் - குளிர்ச்சி
பொதி - ஊர் மன்றங்கள்
பாங்கு - முறை
செற்றம் - கோபம்
ஏற்றுமின் - தீர்வு காணங்கள்

**5. இலக்கணக் குறிப்பு தருக.**

பொருந்துமின், ஏற்றுமின், அகலுமின் - தன்மை பன்மை வினைமுற்று விகுதி

செற்றமும் கலாமும் - எண்ணும்மை

**6. எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| தண்மணற் | ஒட்டிய | பற்றா |
| புண்ணிய | பட்டிமண் | செற்நமும் |

**7. மோனையை எடுத்து எழுதுக.**

தண்மணற் - தாழ்திரு
பட்டிமண்டபம் - பாங்கறிந்து

---

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை வடிவமைக்க.**

**ஸ்ரீ அருள்மிகு பெரிய மாரியம்மன் மாசிப் பெருவிழா**

**திருவில்லிபுத்தூர்**

www.nammakalvi.com



# திருவிழா அழைப்பிதழ்

அன்பார்ந்த பெரிய மாரியம்மன் பக்தகோடிகளே!

இந்தாண்டு ஸ்ரீஹே விளம்பி வருடம் மாசி மாதம் 11 ஆம் நாள் திருவில்லிபுத்தூர் அருள்மிகு ஸ்ரீ பெரிய மாரியம்மன் மாசிப் பெருவிழா நடைபெறும். அப்பொழுது கீழ்க்குறித்த நாள்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும். பக்தகோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவண்,
நிர்வாகக் குழுவினர்,
ஸ்ரீ அருள்மிகு பெரிய மாரியம்மன்
மாசிப் பெருவிழாக் குழுவினர்
திருவில்லிபுத்தூர்.

**நிழ்ச்சி நிரல்**

| நாள் | நிகழ்ச்சி | சிறப்புச் செய்பவர்கள் |
|---|---|---|
| 12.3.20 வியாழன் | விழா கொடியேற்றல் | |
| 13.3.20 வெள்ளி | பூத்தமலர் பூச்சொரிதல் விழா | வணிகர்கள் சங்கம் |
| 15.3.20 ஞாயிறு | சாமி சாட்டுதல் | |
| புதன் - வெள்ளி | கொடிமரத்துக்கு மஞ்சள் நீர் ஊற்றுதல் | |
| வியாழன் | அங்குவிலாஸ் வணிகக் குழுமத்தின் மண்டகப்படி | அங்குவிலாஸ் வணிகக் கம்பெனி |
| வெள்ளி | பூக்குழி இறங்குதல் | பக்தர்கள் |
| சனி | தசாவதாரம் | அருள் நிகழ்ச்சிகள் |
| ஞாயிறு | நாடகம் (தெருக்கூத்து) | மருதப்பா குழுவினர் |

**2. குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்தெழுதுக.**

பூஞ்சோலை - சிரிக்கும் மலர்கள் - பசுமையான புல்வெளி - கூவும் குயில் - வீசும் தென்றல் - விளையாடும் குழந்தைகள் - அழகிய காட்சிகள்.

எங்கள் ஊரில் குளத்திற்கு அருகே அமைந்திருக்கும் பூஞ்சோலை, சிரிக்கும் மலர்களால் பூத்துக் குலுங்குகின்றது. அங்கே பசுமையான புல்வெளிகள் அமைந்திருக்கின்றன. மரங்களில் கூவும் குயில் அமர்ந்து, இனிமையான ஓசையை ஒலியெழுப்புகின்றது. அச்சோலையில் வீசும் இனிய தென்றல் காற்றின் சுகத்தில் குழந்தைகள் விளையாடுகின்றனர். இந்த அழகிய காட்சிகள் அனைத்தையும் காணும்பொழுது, மனத்தில் பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது.

www.nammakalvi.com




# இயல் மூன்று

விரிவானம்

## அகழாய்வுகள்
(பட்டிமன்றம்)

**மனவரைபடம்**




## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. **"அறிவை விரிவு செய்" என்று கூறியவர் யார்?**
   அ) பாவேந்தர் ஆ) பாரதியார் இ) கவிமணி ஈ) வள்ளுவர் **[விடை : பாவேந்தர்]**
2. **"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்று கூறியவர்**
   அ) திருவள்ளுவர் ஆ) பழம் பாடல் இ) பவணந்தி முனிவர் ஈ) ஔவையார்.
   **[விடை : பவணந்தி முனிவர்]**
3. **முதல் அகழாய்வு எந்த ஆண்டு யாரால் சென்னை, பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும், கற்கருவியையும் கண்டு பிடிக்கப்பட்டது?**
   அ) இராபர்ட் புரூஸ்புட் ஆ) கி.மு. 2300 - கால்டுவெல்
   இ) 1963 - ஜி.யூ. போப் ஈ) உ.வே. சாமிநாதர். **[விடை : இராபர்ட் புரூஸ்புட்]**

## குறுவினா

1. **தொல்லியல் ஆதாரங்கள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்யவேண்டும் ஏன்?**

**ஏன் அகழாய்வு :**

மனிதன் தோன்றிய பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து விட்டன. இன்றும் பண்பாட்டு அளவில் சிறந்த வாழ்வை வெளிப்படுத்திய தமிழர்களின் வரலாற்றை அறிந்து கொள்ளத் தமிழகத்தின் தொல்லியல் ஆதாரங்கள் காணப்படும் இடங்களைத் தொன்மையான பகுதிகளை அகழாய்வு செய்தல் இன்றியமையாதது. அகழாய்வு வரலாறு முழுமைபெற உதவுகிறது. அகழாய்வில் கிடைத்த பொருட்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமின்றி, நமது வரலாற்றையும் உணர்த்துகின்றன.

www.nammakalvi.com



**2. பட்டிமண்டபம் - பட்டிமன்றம் இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.**

**பட்டிமண்டபம் :**

என்பதுதான் இலக்கிய வழக்கு சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், கம்பராமாயணம் பட்டிமண்டபம் என்று தான் கூறுகின்றன.

பாடற்சுவை மண்டபம், வித்யாமண்டபம் ஒலிக்க மண்டபம், திருவோலக்கம் என்றும் அகராதிகள் கூறுகின்றன.

**பட்டிமன்றம்:**

அணியினராகப் பிரிந்து கொடுக்கப்பட்ட தலைப்புப் பொருளை ஆதரித்தும், எதிர்த்தும் பேசும் மேடை, விவாத நிகழ்ச்சி என்கிறது.

காலப்போக்கில் நடைமுறையில் பட்டிமண்டபம் - பட்டிமன்றம் ஆனாலும் பேச்சு வழக்கையும் ஏற்றுக் கொள்கிறோம்.

---

## சிறுவினா

**1. பட்டிமண்டபம் பற்றி இலக்கியங்கள் கூறும் செய்திகளைத் தருக.**

**பட்டிமண்டபம் :**

- "மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன்" பகைப்புறத்துக் கொடுத்த "பட்டிமண்டபம்" (சிலப்பதிகாரம், காதை 5 அடி 102)
- "பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்" (மணிமேகலை, காதை 1 அடி 16)
- "பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை; எட்டினோடு இரண்டும் அறியேனையே" (திருவாசகம் சதகம் -14)
- "பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம்" (கம்பராமாயணம் பாலகாண்டம், நகரப்படலம் -154) பட்டிமண்டபம் என்ற சொல் இலக்கியங்களில் பயின்று வருகிறது.

**2. கீழடி அகழாய்வு பற்றிக் கூறுக.**

**கீழடி**

மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருட்கள், உலோகப் பொருள்கள், முத்துக்கள், கிளிஞ்சல் பொருட்கள், மான்கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், சதுரங்கக்காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர்முனைகள், தமிழ் - பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள் உறைக்கிணறுகள், சுடுமண் கூரை ஓடுகள் போன்ற பல்வேறு தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன. மூன்று வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன. இதுவரை அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பான்மையான இடங்கள் இறப்பு தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. ஆனால், கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப்பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப் பொருட்களும் தமிழரின் உயரிய நாகரீகத்தைக் கண்முன் காட்டும் காட்சிகளாய் அமைந்துள்ளன.

www.nammakalvi.com



**3. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்துரைக்க.**

**அகழாய்வுத் தேவை**

- மனிதன் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்றும் பண்பாட்டு அளவில் சிறந்த வாழ்வை வெளிப்படுத்திய தமிழர்களின் வரலாற்றை அறிந்து கொள்ளத் தமிழகத்தின் தொன்மையான பகுதிகளை அகழாய்வு செய்தல் இன்றியமையாதது.
- அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமின்றி, நமது வரலாற்றையும் உணர்த்துகின்றன.
- நம் முன்னோர்களின் பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதற்குக் கடந்த காலத்தைப் புரிந்து கொள்ளாமல் நிகழ்காலத்தில் வெற்றி பெற முடியாது. எதிர்காலத்தைக் கணிக்க இயலாது.
- நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவியலின் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தார்கள். அவர்களின் உணவு, உடை, வாழிடம் முதலிய இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.
- நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெரும் கருவியாக அமைகின்றன.
- நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக் கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணை நிற்கிறது.

## நெடுவினா

**1. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டியசெயல்களைத் தொகுத்து எழுதுக.**

"பண்புடையார் பட்டுண்டு உலகம்" நம்முன்னோர்கள் என்கிற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப தனிப் பெரும் பண்பாட்டுடன் வாழ்ந்தனர். அப்பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது தமிழர்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**ஏறு தழுவுதல் :**

உலகில் பழைமையான நாகரிகமான சிந்து வெளி நாகரிகத்தின் அகழாய்வில் கண்டுபிடித்த கல்முத்திரை ஏறு தழுவுதலை நம்முன்னோர் நிகழ்த்தினர் என்பதை எடுத்தியம்புகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் வீர விளையாட்டாக இருக்கும் (சல்லிக்கட்டு) ஏறு தழுவுதலை நடத்தி நம் பண்பாட்டைக் காக்க வேண்டியது நம் கடமையாகும்.

**அன்பும் வீரமும் :**

காளைகளைத் தமிழர்கள் தெய்வமாக நினைத்து ஏறு தழுவுதலில் முன்பும் பின்பும் வழிபாடு செய்வர். ஏர் உழும் காளைகளுக்கு நன்றிகூறி மாட்டுப் பொங்கல் கொண்டாடி வரும் ஒரே இனம் தமிழ் இனம்.

**மணிமேகலை காட்டும் இந்திர விழா :**

புகார் நகரில் இருபத்து எட்டு நாள் நடக்கும் இந்திர விழா ஏற்பாடுகளும் அலங்காரங்களும் விழா முன்னேற்பாடுகள் துகில் கொடி, கம்புகளில் கொடிகட்டுதல், தோரணங்கள் கட்டுதல் இன்றும் விழாக்களுக்கு முன்னோடியாகப் பண்பாட்டில் மணிமகுடமாகக் காட்சி தருகிறது.

www.nammakalvi.com



**கீழடி அகழாய்வு :**

கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப் பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப் பொருட்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.

**முதல் அகழாய்வு :**

1863 இல் இராபர்ட் புரூஸ்புட் தொல்லியர் அறிஞர். பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவிகளையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம். இந்தக் கல்லாயுதம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டெடுத்தோம். தமிழரின் கடல்வணிகம், கருவிப்பயன்பாட்டின் உயரிய நாகரிகப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன.

**அகழாய்வு :**

அகழாய்வின் மூலம் கிடைத்த சுடுமண், கல், இரும்பு, செம்பு ஆகியவற்றாலான புழங்கு பொருட்கள், கருவிகள், பலநூற்றாண்டுகளாக வாழையடி வாழையாகப் பயன்பாட்டில் இருந்தன. இயற்கையோடு இணைந்த பண்பாட்டு வாழ்க்கை நம்முடையது என்பதை அறிந்து கொண்டோம். இதுவே மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்து கொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக் கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணைநிற்கின்றது.

நம்முன்னோரின் பண்பாட்டின் எச்சங்களை அழிக்காமல் காப்போம்! வாழ்வில் தமிழரின் இயற்கையோடு இணைந்த வாழ்வாக்குவோம்.

**தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!**

---

## கற்பவை கற்றபின்

**1. இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பமா? சமூகமா? என்னும் தலைப்பில் சொற்போர் நிகழ்த்துக.**

**சொற்போர்**

**கதாபாத்திரங்கள்**

**நடுவர் : கபிலன் - தமிழாசிரியர்.**

**குடும்பமே : அமுதா(மாணவி), சமூகமே : வாணன் (மாணவன்)**

**நடுவர்** : அவையோருக்கு வணக்கம்!

இன்று நம் இலக்கிய மன்ற விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும இனிய மாலை வணக்கம்!

இன்றைய சூழலில் நம் இளைய சமுதாயத்துக்கு பல வாய்ப்புகள், வசதிகள் உலகைப் பற்றி அறிய பல வாயில்கள் உள்ளன. எனினும் பண்பாட்டைக் கற்றுக் கொடுப்பது எது என ஆராயும் போது ஒரு சொற்போர் நடத்த வேண்டும். மாணவர்களின் சிந்தனைகளை அறிய வேண்டும் என்ற அவா எழுந்தது! அதனால் உருவானதே இத்தலைப்பு இப்போது குடும்பமே என சொற்போர் நிகழத்த வருகிறார் அமுதா.

**அமுதா** : அனைவருக்கும் இனிய வணக்கம்.

ஐயா! "நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்பார்கள் "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்பார்கள். பெற்றோர்களே முதல் ஆசான் இவற்றையெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

www.nammakalvi.com



இந்தக் கூற்றுகள் எல்லாம் அதனை உணர்த்துகிறது. ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து வரும் குடும்பச் சூழ்நிலைதான் பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது அல்லவா!

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவன் நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" என்று கவிஞரின் அடிகளைச் சான்றாக்கி நற்பண்பாட்டினை வளர்ப்பது குடும்பமே... குடும்பமே.... என்று கூறி என் சொற்போரை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்!

**நடுவர்** : ஆகா! அருமையான கருத்துகள் வாங்க வாணன் உங்கள் கருத்தை வலியுறுத்துங்கள் பார்க்கலாம்.

**வாணன்** : ஐயா! அமுதா எந்த நூற்றாண்டில் இருக்கிறாள் என்றே தெரியவில்லை! நீங்களே சொல்லுங்கள்! ஒரு குழந்தை 3 வயது வரைதான் இப்போதெல்லாம் குடும்ப பராமரிப்பில் இருக்குது! மூணு வயதிலே சமூகத்துக்கு வந்துடுது ஐயா...

தன் ஆசிரியரைப் பார்க்கிறது. தன் சக மாணவ, மாணவியரைப் பார்க்கிறார்கள், வண்டி ஓட்டும் ஓட்டுநர் முதல் ஆயா வரை அந்த குழந்தைக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். வளர்கிறான்.... சமூகத்தின் பல செய்தி சாளரங்கள் திறக்கின்றன. தன்னையும் அறியாமல் அவற்றை ஆராய்கிறான்; நன்மை தீமை அறிகிறான்; அவன் மன வலிமையைப் பொறுத்து பண்பாட்டைக் காப்பவனாகவோ அல்லது மீறுபவனாகவோ மாறுகிறான். எனவே சமூகமே பெரும்பங்கு வகிக்கிறது. நன்றி வணக்கம்!

**நடுவர்** : இருவருடைய உரையைக் கேட்கும் போது, பண்பாட்டைக் கற்றுக் கொடுப்பது குடும்பமாக இருந்தாலும் அதனை வளர்த்தெடுக்கும் பங்கு சமூகத்தையே சார்ந்தது..... நன்றி வணக்கம்!

**2. தொல்லியல் துறை சார்ந்த அலுவலர் ஒருவரிடம் நேர்காணல் நிகழ்த்துவதற்கான வினாப்பட்டியலை உருவாக்குக.**

- ஐயா, தொல்லியல் துறை எந்த ஆண்டில் உருவாக்கப்பட்டது?
- தமிழகத்தில் அகழாய்வுகள் நடத்தப்பட்ட இடங்கள் யாவை?
- அங்குக் கண்டறிந்த பொருள்களின் பட்டியலை விளக்க முடியுமா?
- தொன்மையான இடங்களை ஆராய்ந்ததில் நம் தமிழர்களின் நாகரிகம் பண்பாடும் எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டனவாய் உள்ளன?
- தொல்பொருள்களைக் கொண்டு நம் தமிழர்கள் எந்தெந்த நாடுகளோடு வாணிபத்தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் கூறுங்கள்.
- மிகத் தொன்மையான கோவில்கள், கட்டடங்கள் ஆகியன தமிழகத்தில் எங்கெங்கு உள்ளன?
- தொல்பொருள்களின் பயன்பாடுகள் என்னென்ன?
- அகழாய்வின் பயன், தேவைகள் யாவை?
- தமிழ்நாட்டின் முக்கிய தொல்லியல் ஆய்வாளர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
- தொல்லியல் சார்ந்த படிப்புகள் யாவை?
- மாணாக்கர்களுக்குத் தொல்லியல் சார்ந்த படிப்புகள் எவ்வகையில் பயன்படும்? விளக்கமாய்க் கூறுக.

**3. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டுக் குறிப்பெழுதுக.**

- எனது ஊருக்கு அருகிலுள்ள தொன்மையான ஊர், பாரி மன்னன் ஆண்ட பறம்புமலையாகும். தற்பொழுது பிரான்மலை என்று அழைக்கப்படுகிறது.
- அங்கு மிகச் சிறப்பு வாய்ந்த கொடுங்குன்றீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது.
- சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகாவிற்கு உட்பட்டது பிரான்மலையாகும்.
- கொடுங்குன்றநாதர், குயிலமிர்த நாயகி ஆகியோர் தெய்வங்களாய்க் குடிகொண்டிருக்கும் கோவில்.

www.nammakalvi.com



- முல்லைக்குத் தேர் கொடுத்த ‘பாரி மன்னன்’ ஆண்ட நிலப்பகுதியாகும்.
- 2000 அடி உயரமுள்ள பிரான்மலைக்கு அடியில் இக்கோவில் அமைந்துள்ளது.
- மலை உச்சியில் விநாயகர் கோவில், முருகன் கோவில், முஸ்லிம் தர்கா ஆகியன உள்ளன. இவை மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றன.
- முல்லைக்குத் தேர் தந்த பாரி மன்னனின் சிலை ஒன்று அடிவாரக் கோவிலில் அமைந்துள்ளது.
- இக்கோவில் மூன்று அடுக்குகளாய் அமைந்துள்ளது.
- இவ்வடுக்குகள் உலகின் பாதாள லோகம், பூலோகம், வான லோகம் ஆகியவற்றை உணர்த்துவனவாய் உள்ளன.
- இக்கோவில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.
- ஐந்து அழகான கோபுரங்களைக் கொண்டுள்ளது.
- பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று.
- இக்கோவிலில் உள்ள பெரிய மணியின் ஒலியானது 40 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு கேட்கக் கூடியதாகும்.
- இங்குப் பழங்காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.
- சுந்தரபாண்டியன் மண்டபம், ஆறுகால் மண்டபம், இலட்சுமி மண்டபம் முதலிய மண்டபங்கள் அமைந்துள்ளன.
- விசுவநாதர் கோவில், சுப்பிரமணிய சுவாமி கோவில் முதலியனவும் கோவிலுக்குள் உள்ளன.
- இறைவன் மங்கைநாதர் எனவும், கொடுங்குன்றமுடைய நாயனார் எனவும், நல்லமங்கை பாகர் எனவும், குன்றாண்ட நாயனார் எனவும் குறிப்பிடப்பெறுகின்றார்.

---

இயல் மூன்று

கற்கண்டு

## வல்லினம் மிகும் இடங்கள்

### கூடுதல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் - சான்று________.**

அ) ஓடிப்போனார் ஆ) புலித்தோல் இ) நிலாச்சோறு ஈ) உலகப்பந்து **[விடை : புலித்தோல்]**

**2. விகாரப் புணர்ச்சியின் வகைகள்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு **[விடை : மூன்று]**

**3. வல்லினம் மிகுந்து வருதல் விகாரப் புணர்ச்சியின் பாற்படும்.**

அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) மிகுதல் **[விடை : தோன்றல்]**

**4. கூற்று 1 :** மிக எனும் சொல்லின் பின் வல்லினம் மிகாது.

**கூற்று 2 :** சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்.

அ) கூற்ற 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1, 2 தவறு

இ) கூற்று 1, 2 சரி ஈ) கூற்று 1 தவறு, 2 சரி **[விடை : கூற்று 1 தவறு, 2 சரி]**

www.nammakalvi.com



**5. கடைப்பிடித்தல் - இச்சொல்லின் பொருள்**

அ) கடையைப் பிடித்தல் ஆ) வாழ்தல் இ) பின்பற்றுதல் ஈ) நிலைநிறுத்தல் **[விடை : பின்பற்றுதல்]**

## வல்லினம் மிகும் இடங்கள்

**வாணன் வேலைக் கொடுத்தான்.**

**வாணன் வேலை கொடுத்தான்.**

இந்த இரண்டு தொடர்களுக்கும் உள்ள பொருள் வேறுபாடு யாது?

வல்லலெழுத்துகள், க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை நிலைமொழியுடன் புணர்கையில் அவற்றின மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும். இதை வல்லினம் மிகுதல் என்பர். இவ்வாறு எந்த எந்த இடங்களில் அவ்வல்லினம் மிகும் என்பதை விதிகளின் மூலமும் எடுத்துக்காட்டுகள் மூலமும் அறியலாம்.

தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்.

வல்லினம் மிகுந்து வருதல் தோன்றல் விகாரப் புணர்ச்சியின் பாற்படும். சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும் பொருள் மயக்கத்தை தவிர்க்கவும் பேச்சில் இயல்பைப் பேணவும் இனிய ஓசைக்காகவும் இவ்வல்லின எழுத்துகளின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது.

**வல்லினம் மிகும் இடங்கள் :**

தற்கால உரைநடையில் வல்லினம் மிக வேண்டிய இடங்களாகக் கீழ்க்காண்பனவற்றைக் கூறலாம்.

| | | |
|---|---|---|
| 1. | அச்சட்டை இந்தக்காலம்<br>எத்திசை? எந்தப் பயணம்? | அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும் அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். |
| 2. | கதவைத்திற<br>தகவல்களைத்திரட்டு<br>காட்சியைப்பார் | ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| 3. | முதியவருக்குக் கொடு<br>மெட்டுக்குப்பாட்டு ஊருக்குச்<br>சொல் | கு என்னும் நான்காம வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| 4. | எனக்கேட்டார் வருவதாகக்கூறு | என, ஆக போன்ற சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும். |

மேற்கண்டவாறு வல்லினம் மிகும் இடங்களை இனங்கண்டு பயன்படுத்தத் தொடங்கினாலே, தவறுகளைத் தவிர்த்துவிடலாம். மரபையும் பட்டறிவையும் தாண்டி சொற்களை ஒலித்துப் பார்ப்பதும் வல்லினம் மிகும், மிகா இடங்களை அறிவதற்கு எளியவழி எனலாம்.

**மேலும் சில வல்லினம் மிகும் இடங்களை அறிந்து கொள்வோம்.**

| | |
|---|---|
| அதற்குச் சொன்னேன்<br>இதற்குக் கொடு எதற்குக்<br>கேட்கிறாய்? | அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| இனிக்காண்போம் தனிச்சிறப்பு | இனி,கனி ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| மிகப்பெரியவர் | மிக என்னும் சொல்லின் பின் வல்லினம் மிகும். |
| எட்டுத்தொகை பத்துப்பாட்டு | எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகும். |
| தீப்பிடித்தது பூப்பந்தல் | ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும். |
| கூவாக் குயில் ஓடாக் குதிரை | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும். |

www.nammakalvi.com



| | |
|---|---|
| கேட்டுக்கொண்டான் விற்றுச் சென்றான் | வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். |
| ஆடச் சொன்னார் ஓடிப்போனார் | (அகர, இகர,ஈற்று வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். |
| புலித்தோல் | ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் |
| கிழக்குப் பகுதி கிழக்குப் பக்கம் | திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும். |
| மல்லிகைப்பூ சித்திரைத்திங்கள் | இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும். |
| தாமரைப்பாதம் | உவமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| சாலப்பேசினார் தவச்சிறிது | சால, தவ, தட, குழ என்னும் உரிச் சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| நிலாச்சோறு கனாக் கண்டேன் | தனிக் குற்றெழுத்தை அடுத்து வரும் அகர எழுத்தின் பின் மிகும். |
| வாழ்க்கைப்படகு உலகப்பந்து | சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். |

## கற்பவை கற்றபின்

**வல்லினம் மிகலாமா?**

அ) பெட்டி _ செய்தி — அ) பெட்டிச்செய்தி

ஆ) விழா _ குழு — ஆ) விழாக்குழு

இ) கிளி _ பேச்சு — இ) கிளிப்பேச்சு

ஈ) தமிழ் _ தேன் — ஈ) தமிழ்த்தேன்

உ) தை _ பூசம் — உ) தைப்பூசம்

ஊ) கூட _ கொடு — ஊ) கூடக்கொடு

எ) கத்தியை விட _ கூர்மை — எ) கத்தியை விடக் கூர்மை

ஏ) கார் _ பருவம் — ஏ) கார்ப்பருவம்

## தொடர் தரும் பொருளைக் கூறுக.

அ) சின்னக்கொடி - சின்னம் தாங்கிய கொடி
சின்னகொடி - சிறிய கொடி

ஆ) தோப்புக்கள் - தோப்பில் எடுத்த கள்
தோப்புகள் - தென்னை மரத் தோப்பு

இ) கடைப்பிடி - பின்பற்றுதல்
கடைபிடி - கடையைப் பிடித்தல்

ஈ) நடுக்கல் - மையத்தில் உள்ள கல்
நடுகல் - நடப்பட்ட கல்

உ) கைம்மாறு - பிரதிபலன்
கைமாறு - கைக்கு கை மாறுதல்

ஊ) பொய்ச்சொல் - பொய்யான சொல்
பொய்சொல் - பொய்யைச் சொல்

www.nammakalvi.com



## சிந்தனை வினா

**நாளிதழ்கள் சிலவற்றில் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாமல் எழுதிவருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்குமா? வல்லினம் மிகவேண்டியதன் முக்கியத்துவத்தை எழுதுக.**

| | |
|---|---|
| அதற்க்கு - தவறு | **அதற்கு = அது + அன் + கு**<br>அது (சுட்டுப்பெயர்) அன்(சாரியை) கு (வேற்றுமை உருபு)<br>அதன் + கு =**அதற்கு** - என்பதே சரி .<br>**எ.கா :** இந்தப் பொருள் வேண்டாம். அதற்குப் பதிலாக இதை வைத்துக் கொள். |
| கடைபிடித்தல்<br>கடைப்பிடித்தல் | கடைபிடித்தல் - கடையைப் பிடித்தல்<br>கடைப்பிடித்தல் - பின்பற்றுதல்.<br>எ.கா : சேகர் புதிதாக வாணிகம் தொடங்கக் கடைபிடித்தார்.<br>நாங்கள் என்றும் தூய்மையைக் கடைப்பிடிப்போம். |

வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாமல் எழுதும் போது பொருள் மாறுபடும். பொருள் மாறுபடும் போது சொற்றொடரே பிழையாக அமைந்துவிடும். எனவே வல்லினம் மிகும் இடங்களில் மிகாமல் எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்காது.

**வல்லினம் மிகவேண்டியதன் முக்கியத்துவம்:**

1. சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும்
2. பொருள் மயக்கததைத் தவிர்க்கவும்.
3. பேச்சின் இயல்பைப் பேணவும்
4. இனிய ஓசைக்காவும் தேவைப்படுகிறது.

**4. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்ற பொருள்களும் உறுதி படுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

கீழடியில் வாழ்ந்த மக்களுள் பலர் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு குறைவான எண்ணிக்கையில் தான் தங்கத்தினாலான பொருள்கள் கிடைக்கின்றன.

மேலும் இரும்பை பயன்படுத்தி செய்தக் கோடாரி, குத்தீட்டிகள் முதலான கருவிகளும் யானை தந்தத்தினால் செய்தச் சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள், கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு போன்றவையும் கிடைத்துள்ளன.

**விடை :**

பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்ற பொருள்களும் உறுதிப்படுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

கீழடியில் வாழ்ந்த மக்களுள் பலர் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு குறைவான எண்ணிக்கையில் தான் தங்கத்தினாலான பொருள்கள் கிடைக்கின்றன.

மேலும் இரும்பைப் பயன்படுத்திச் செய்த கோடரி, குத்தீட்டிகள் முதலான கருவிகளும் யானைத் தந்தத்தினால் செய்த சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள், கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு போன்றவையும் கிடைத்துள்ளன.

www.nammakalvi.com



## மொழியை ஆள்வோம்

### பொன் மொழிகளை மொழிபெயர்க்க

1. A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi

   ஒரு நாட்டின் பண்பாடானது மக்களின் இதயங்களிலும் ஆன்மாவிலும் தங்கியுள்ளது - மாகத்மா காந்தி

2. The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru

   மக்களின் கலையானது அவர்களின் உண்மையான மனதின் கண்ணாடியாகும் - ஜவகர்லால் நேரு

3. The biggest problem is the lack of love and charity - Mother Teresa

   உனது கனவுகள் உண்மையாகும் வரை நீ கனவு காண வேண்டும். - A.P.J. அப்துல் கலாம்.

4. You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam

   அன்புக்குறைவும் இரக்கமின்மையும் தான் இன்றைய மிகப் பெரிய பிரச்சனையாகும். - அன்னை தெரசா

5. Winners don't to different things; they do things differently - Shiv Khera

   வெற்றியாளர்கள் வேறுபட்ட செயல்களைச் செய்வதில்லை. அவர்கள் செயல்களை வித்தியாசமாகச் செய்கிறார்கள் - சிவ் கிரா

### வடிவம் மாற்றுக

**பின்வரும் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.**

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன.
3. இங்கு கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.
4. தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.

**விடை : 4, 2, 3, 1**

1. தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.
2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன.
3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.
4. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

www.nammakalvi.com



## மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

**1. மேடும் பள்ளமும் :**

சேரி மக்களின் வாழ்க்கை **மேடும் பள்ளமும்** கொண்டதாக இருக்கிறது.

**2. நகமும் சதையும் :**

என் உயிர்த்தோழனும் நானும் என்றென்றும் **நகமும் சதையும்** போல நட்புடன் பழகுவோம்.

**3. முதலும் முடிவும் :**

இது போன்ற தவறுகள் **முதலும் முடிவும்** ஆக இருக்கட்டும் என்று ஆசிரியர் அவர்களிருவரையும் எச்சரித்தார்.

**4. கேளிக்கையும் வேடிக்கையும் :**

எங்கள் ஊர்த் திருவிழா **கேளிக்கையும் வேடிக்கையும்** நிறைந்தாக இருந்தது.

**5. கண்ணும் கருத்தும் :**

அன்பழகன் **கண்ணும் கருத்துமாகப்** படித்துத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றான்.

**6. மேலும் கீழும் :**

சுமதி சொன்னதில் நம்பிக்கை இல்லாமல் குமார் **மேலும் கீழும்** பார்த்தான்.

---

## தொகுப்புரை எழுதுக

**பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.**

பள்ளி மாணவர்களால் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்பட்டது. தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவர் மாணவர் குமார் வந்தோரை வரவேற்றார். தமிழாசிரியர் இலக்கியமன்ற நிகழ்வுகளையும் சிறப்பையும் எடுத்துரைத்தார். கலை நிகழ்ச்சிகள், நாட்டுப்புற, நடனம் போன்றவை அரங்கேறின. சிறப்பு விருந்தினர் சிறப்புரையாற்றினார். பள்ளித் தலைமையாசிரியர் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார். இலக்கியமன்றத் துணைத் தலைவர் நன்றியுரை வழங்கினார். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிவைுற்றது.

---

## பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று காங்கேயம் கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறு தழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.

**பின்வரும் நான்கு வினாக்களுக்கு பொருந்தும் ஒரு விடையைத் தருக.**

**அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறு தழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?**

www.nammakalvi.com



**விடை :** காங்கேயம் காளைகள்

**ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?**

விடை : காங்கேயம்

**இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது?**

**விடை :** காங்கேயம் காளை.

**ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது?**

**விடை :** காங்கேயம் என்னும் மாட்டினத்தின் சிறப்பினை.

## பொருந்தாத சொல்லைக் கண்டறிக

அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா **[விடை : இலங்கை]**

## பிரித்து எழுதுக

**1. கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன
ஆ) கண்டு + எடுக்கப்+ பட்டுள்ளன.
இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன
ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன.

**[விடை : கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன]**

**1. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. இது எவ்வகைத் தொடர்?**

அ) வினாத்தொடர்
ஆ) கட்டளைத் தொடர்
இ) செய்தித்தொடர்
ஈ) உணர்ச்சித்தெடர்

**[விடை : செய்தித்தொடர்]**

## மொழியோடு விளையாடு

## பொருள் எழுதித் தொடரமைக்க

**1. கரை, கறை**

கரை - எல்லை - கல்விக்குக்கரை இல்லை
கறை - களங்கம் - வாழைக்கறை பட்டால் அழியாது.

**2. குளவி, குழவி**

குளவி - வண்டு - மலரில் உள்ள தேனை உண்ணக் குளவிகள் மொய்த்தன.
குழவி - குழந்தை - இடியோசை கேட்டுக் குழந்தை அழுதது.

**3. வாளை, வாழை**

வாளை - ஒருவகைமீன் - அந்தக் குளத்தில் அதிகமாக வாளைமீன்கள் இருந்தன.
வாழை - மரம் - திருமண வீடுகளில் தவறாது வாழைமரம் கட்டுவார்கள்.

**4. பரவை, பறவை**

www.nammakalvi.com



பரவை - கடல் - இவ்வுலகம் பரவையால் சூழப்பட்டது.
பறவை - பட்சி - காலை நேரத்தில் பறவைகள் இரை தேடிப்பறந்தன.

**5. மரை, மறை**

மரை - மான் - காட்டில் கூட்டமாக மரைகள் திரிந்தன.
மறை - வேதம் - நான்கு மறைகளையும் கற்றுத்தேர்ந்தவர்கள் சான்றோர்கள் என அழைக்கப்படுவார்கள்.

6. அலை - கடலலை - இன்று கடலலையின் வேகம் மிக அதிகமாக உள்ளது.
அழை - வரவழைத்தல் - என் நண்பர்களை வரவழைத்துள்ளேன்.

## அகராதியில் காண்க

இயவை, சந்தப்பேழை, சிட்டம், தகழ்வு, பௌளி

1. இயவை - வழி, மூங்கில் அரிசி, துவரை, தோரைநெல், காடு, வாத்தியம்
2. சந்தப்பேழை - மூங்கில்பெட்டி, சந்தனப்பெட்டி, அழகுப்பெட்டகம்.
3. சிட்டம் - நூல் சிட்டம், எரிந்து கருகிறது, பெருமை, அறிவு, நீதி, உயர்ந்தது.
4. தகழ்வு - அகழ், அறிவு, உண்கலம், நெருப்பு, வீண் ஆடம்பரம்.
5. பௌளி - பெரும் பண்வகை, பண் வகைகளுள் ஒன்று.

## பொருள்தரும் வகையில் சொற்றொடர் உருவாக்குக

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள்தரும் வகையில் ஒரு சொல்லில் தொடரைத் தொடங்குக. அத்துடன் அடுத்தடுத்துச் சொற்களைச் சேர்த்து, புதிய புதிய சொற்றொடர்களை உருவாக்குக. இறுதித் தொடர் அனைத்துச் சொற்களையும் சேர்த்ததாக அமைய வேண்டும்.

காலங்களில் தெருவில் வைக்காதீர்கள் காப்புக் கம்பிகள் கவனக் குறைவுடன் ஆகியவற்றுடன் மீது காலை அறுந்த மழை மின்கம்பிகள்.

**விடை :**

1. வைக்காதீர்கள்.
2. மழைக் காலங்களில் அறுந்த மின் கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது காலை வைக்காதீர்கள்.
3. மழைக் காலங்களில் தெருவில் அறுந்த மின் கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது கலை வைக்காதீர்கள்.
4. மழைக் காலங்களில் தெருவில் அறுந்த மின் கம்பிகள் காப்புக் கம்பிகள் மீது கவனக் குறைவுடன் காலை வைக்காதீர்கள்.

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஏ | | 2இ | ந் | 3தி | ர | 4வி | ழா | |
| று | 5த | வ | | ர | | தை | | 6சா |
| 7த | வ | ளை | 8ஓ | ட் | ட | ம் | | ல |

www.nammakalvi.com



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ழு | | | ரை | [9]சி | | [10]வி | தி | |
| வு | ய் | [11]ஆ | | ர் | னா | த | த் | [12]சா |
| த | | | | கா | | [13]மா | [14]வ | டி |
| ல் | | ர் | [15]க | க் | ளை | [16]கா | | க |
| | ள் | [17]யா | னி | [18]த | | | [19]கோ | ள் |

**இடமிருந்து வலம் :**

2. விழாவறை காதை குறிப்பிடும் விழா (6) - இந்திர விழா
5. சரி என்பதற்கான எதிர்ச்சொல் தரும் எழுத்துக்கள் இடம் மாறியுள்ளன. (3) - தவறு
7. பொங்கல் விழாவையொட்டி நடத்தப்படும் சிறுவர்களுக்கான போட்டிகளில் ஒன்று (7) - தவளை ஓட்டம்
10. ஊழ் என்பதற்குத் தற்காலப் பயன்பாட்டில் உள்ள சொல் (2) - விதி
13. மா + அடி - இதன் புணர்ந்த வடிவம் (3) - மாவடி
19. கொள்ளுதல் என்பதன் முதல்நிலை திரிந்த சொல் (2) - கோள்

**வலமிருந்து இடம் :**

9. தூய்மையற்ற குருதியை எடுத்துச்செல்லும் இரத்தக் குழாய் (2) - சிரை
11. ஆராய்ச்சி என்பதன் சொற் சுருக்கம் (3) - ஆய்வு
12. மணிமேகலைக் காப்பியத்தின் ஆசிரியர் (5) - சாத்தனார்
16. சல்லிக்கட்டு விளையாட்டுக்கு உரிய விலங்கு (2) - காளை
18. தனி + ஆள் - சேர்த்து எழுதுக (4) - தனியாள்

**மேலிருந்து கீழ் :**

1. தமிழர்களின் வீர விளையாட்டு (7) - ஏறு தழுவுதல்
2. இவள் + ஐ - சேர்த்தால் கிடைப்பது (3) - இவளை
3. மரத்தில் காய்கள் ______ ஆகக் காய்த்திருந்தன (4) - திரட்சி
4. ஆடிப்பட்டம் தேடி ______ (2) - விதை
5. உரிச்சொற்களுள் ஒன்று (2) - தவ
6. ______ சிறந்தது. (2) - சால
8. நேரத்தைக் குறிப்பிடும் வானியல் சொல் (2) - ஓரை
12. அகழாய்வில் கிடைத்த கொள் கலன்களுள் ஒருவகை (4) - சாடிகள்
15. காய் பழுத்தால் ______ (2) - கனி

**கீழிருந்து மேல் :**

14. ஒருவர் பற்றி ஒருவர் பிறரிடம் இதை வைக்கக் கூடாது (3) - வத்தி
17. யா முதல் வரும் வினாப் பெயர் (2) - யார்
18. தகவிலர் என்பதற்கு எதிர்ச்சொல்லாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது (4) - தக்கார்

www.nammakalvi.com



## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



நாதமும் மேளமும் நல்லவர் மட்டும்
நல்வீணையும் பரதமும் குல விளக்கான
மாதர்தம் கோலத்தோடு - எங்கும்
மாண்போடு கொண்டாடும் எம்குல சாமியின்
திருவிழாக்களுமே தமிழர்தம் அடையாளம்!

## நிற்க அதற்குத் தக

**நயன் பாராட்டுப் பெற்ற சூழல்கள் :**

அ) கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்த போது.
ஆ) கட்டுரை ஏடுகளைக் கீழே தவறவிட்ட என் ஆசிரியருக்கு அதை எடுத்துத் தந்தபோது.
இ) நகரப் பேருந்து நிலையத்தில் வழிகேட்ட பெரியவருக்கு வழிகாட்டிய போது.
ஈ) பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தபோது முதியவரின் பழுதாகி நின்ற இரு சக்கர வாகனத்தைச் சரிசெய்த போது

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. அகழாய்வு | - Excavation | 2. கல்வெட்டியல் | - Epigraphy |
| 3. நடுகல் | - Herostones | 4. பண்பாட்டுக் குறியீடு | - Cultural symbol |
| 5. புடைப்புச் சிற்பம் | - Embossed sculpture | 6. பொறிப்பு | - Inscription |

www.nammakalvi.com



இயல் மூன்று

வாழ்வியல்

# திருக்குறள்

–திருவள்ளுவர்

## மனவரைபடம்

**திருவள்ளுவரின் வேறு பெயர்கள்**

- தேவர்
- நாயனார்
- முதற் பாவலர்
- நான்முகனார்
- தெய்வப் புலவர்
- மாதனு பங்கி
- செந்நாப் போதார்
- பெருநாவலர்
- பொய்யா மொழிப் புலவர்

**வாழ்வியல் திருக்குறள்**

- தீவினை அச்சம்
- பொறையுடைமை
- தீ நட்பு
- பழைமை
- பேதைமை
- வினைத் தூய்மை
- ஒற்றாடல்
- தெரிந்து தெளிதல்
- கேள்வி

## நூற் குறிப்பு

- உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல் திருக்குறள்.
- இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை நூல்.
- திரு + குறள் = திருக்குறள். மேன்மையான குறள் வெண்பாக்களால் ஆகிய நூலாதலின் திருக்குறள் எனப் பெயர் பெற்றது.
- இஃது அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒன்பது இயல்களையும், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பத்து குறட்பாக்களையும் கொண்டு விளங்குகிறது. அறம் 38 அதிகாரங்களையும், பொருள் 70 அதிகாரங்களையும், இன்பம் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது.
- ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் முதலிய உலக மொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
- இந்நூல் முப்பால், தமிழ் மறை, பொய்யாமொழி, பொது மறை, வாயுறை வாழ்த்து, உத்தர வேதம், முதுமொழி, தெய்வ நூல், திருவள்ளுவம் வேறு சில சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

www.nammakalvi.com



- திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர்.
- இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலை.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | திருவள்ளுவர் |
| **பெற்றோர்** | : | ஆதி, பகவன் |
| **ஊர்** | : | மயிலாப்பூர் (மதுரை என்று கூறுவாரும் உளர்) |
| **வேறு பெயர்கள்** | : | நாயனார், தேவர், முதற் பாவலர், தெய்வப் புலவர், நான்முகன், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில் புலவர். |
| **காலம்** | : | கி.மு. 31 க்கும் கி.பி. முதல் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம். |

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| 1. அகழ்வார் | - | வினையாலணையும் பெயர். |
| 2. இகழ்வார் | - | வினையாலனையும் பெயர். |
| 3. பொறுத்தல் | - | தொழிற் பெயர். |
| 4. திறம் > திறன் | - | மகரத்திற்கு னகரம் போலி.. |
| 5. அறம் > அறன் | - | மகரத்திற்கு னகரம் போலி.. |
| 6. செய்யாமை | - | எதிர்மறைத் தொழிற்பெயர் |
| 7. வென்றுவிடல் | - | ‘அல்’ஈற்று வியங்கோள் வினைமுற்று. |
| 8. சூழற்க | - | வியங்கோள் வினைமுற்று. |
| 9. சூழ்ந்தவன் | - | வினையாலணையும் பெயர். |
| 10. கேடு | - | கெடு > கேடு முதனிலை திரிந்த தொழிற்பெயர். |
| 11. கேள்வியர் | - | வினையாலணையும் பெயர். |
| 12. வாயினர் | - | வினையாலணையும் பெயர். |
| 13. அவியினும் வாழினும் | - | எண்ணும்மை. |
| 14. ஈன்றாள் | - | வினையாலணையும் பெயர். |
| 15. சான்றோன் | - | வினையாலணையும் பெயர். |
| 16. விழைதகையான் | - | வினையாலணையும் பெயர். |
| 17. கெழுதகையான் | - | வினையாலணையும் பெயர். |
| 18. தானடங்காப் பேதை | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். |
| 19. பேதையார் | - | வினையாலணையும் பெயர். |

www.nammakalvi.com



## பகுபத உறுப்பிலக்கணம்

1. பொறுத்தல் = பொறு + த் + த் + அல்

பொறு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அல் - தொழிற்பெயர் விகுதி

2. அகழ்வார் = அகழ் + வ் + ஆர்

அகழ் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

3. விடல் = விடு + அல்

விடு - பகுதி
அல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று விகுதி

4. சூழற்க = சூழல்(ற்) + க

சூழல் - பகுதி
ற் - ஆனது விகாரம்
க - வியங்கோள் வினைமுற்று

5. நுணங்கிய = நுணங்கு + இ(ன்) + ய் + அ

நுணங்கு - பகுதி
இ(ன்) - இறந்தகால இடைநிலை னகரம் புனர்ந்து கெட்டது விகாரம்
ய் - உடன்படுமெய் சந்தி
அ - பெயரெச்ச விகுதி

6. வணங்கிய = வணங்கு + இ(ன்) + ய் + அ

வணங்கு - பகுதி
இ(ன்) - இறந்தகால இடைநிலை னகரம் புணர்ந்து கெட்டது விகாரம்
ய் - உடன்படுமெய் சந்தி
அ - பெயரெச்ச விகுதி

7. செய்யற்க = செய் + அல் + க

செய் - பகுதி
அல் - ல்-ற் ஆனது விகாரம்
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

8. பட்டார் = படு(பட்டு) + ஆர்

படு - பகுதி
படு - பட்டு என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது
ஆர் - படர்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி

9. நாணாமை = நாண் + ஆ + மை

நாண் - பகுதி
ஆ - எதிர்மறை இடைநிலை
மை - பண்புப்பெயர் விகுதி

10. உணர்த்தும் = உணர்+ த் + த் + உம்

உணர் - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உம் - தெரிநிலை வினையெச்ச விகுதி

11. உணர்த்தும் = உணர் + த்(ந்) + த் + ஓம்

உணர் - பகுதி
த் - சந்தி
ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

12. உரைத்தும் = உரை + த் + த் + உம்

உரை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உம் - தெரிநிலை வினையெச்ச விகுதி

www.nammakalvi.com




## பொருத்துக

1. அறம் - அ) எழுபது
2. பொருள் - ஆ) இருபத்தைந்து
3. இன்பம் - இ) முப்பத்தெட்டு [விடை : 1-இ, 2-அ, 3-ஆ]

## கற்பவை கற்றபின்

**1. படத்திற்கேற்ற குறளைத் தேர்வு செய்க.**



அ) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்

ஆ) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்

இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை

**[விடை :செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை]**

**2. பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**பாடல் :**

ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்
ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம்செய் - மாண்பற்ற
காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.

**குறள் :**

அ) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்

இ) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

**[விடை :குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்]**

**3. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.**

| | |
|---|---|
| பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று | ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல் |
| தத்தம் கருமமே கட்டளைக்கல் | அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும் |
| அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | சுடாத மண்கலத்தில் நீருற்றி வைப்பதைப் போல |

www.nammakalvi.com



**விடை :**

| | |
|---|---|
| பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று | சுடாத மண்கலத்தில் நீருற்றி வைப்பதைப் போல |
| தத்தம் கருமமே கட்டளைக்கல் | அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும் |
| அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல் |

**4. தீரா இடும்பை தருவது எது?**

அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்

இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை **[விடை : ஆராயாமை, ஐயப்படுதல்]**

**5. சொல்லுக்கான பொருளைத் தொடரில் அமைத்து எழுதுக.**

அ) நுணங்கிய கேள்வியர் - நுட்பமான கேள்வியறிவு உடையவர்

அடக்கமான சொற்களைப் பேசுபவர் அதன்படி நடந்து கொள்வர்.

ஆ) பேணாமை - பாதுகாக்காமை

நல்லனவற்றைப் பாதுகாக்காமை அறிவிலியின் செயலாகும்.

இ) செவிச்செல்வம் - கேட்பதால் பெறும் அறிவு

செவிச்செல்வம் செல்வங்களில் சிறந்த செல்வமாகும்.

ஈ) அறனல்ல செய்யாமை - அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல்

அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் சான்றோர்க்குரிய நற்பண்பாகும்.

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?**

தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம் போலத் தன்னை இகழ்பவரிடம் பொறுமை காக்க வேண்டும்.

**2. தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும் - இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.**

தீயவை தீயவற்றையே தருதலால் தீயை விடக் கொடியதாகக் கருதி அவற்றைச் செய்ய அஞ்ச வேண்டும்.

**3. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்**
**ஒற்றினால் ஒற்றிக் கொளல் - இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.**

**மோனை நயம் :**

அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும். இக்குறட்பாவில் ஒற்றொற்றித் - ஒற்றினால் என முதல் எழுத்து ஒன்றி வந்துள்ளது.

**எதுகை நயம் :**

பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும். இக்குறட்பாவில் ஒற்றொற்றி - ஒற்றினால் என இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுக்கப்பட்டுள்ளது.

**4. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?**

- செயல்வேறு, சொல்வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.
- கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
- சொல்வேறு பட்டார் தொடர்பு

www.nammakalvi.com



**கதைக்கு பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.**

மௌனவிரதம் என்னும் தலைப்பில் நான்கு நண்பர்கள் ஒரு சொற்பொழிவைக் கேட்டனர். தாங்களும் ஒரு வாரத்துக்கு மௌனவிரதம் இருப்பதாகத் தீர்மானம் செய்தனர். மௌனவிரதம் ஆரம்பமாகி விட்டது! கொஞ்ச நேரம் போனதும் ஒருவன் சொன்னான், "எங்கள் வீட்டு அடுப்பை அணைத்துவிட்டேனா தெரியவில்லையே!"

பக்கத்திலிருந்தவன் "அடப்பாவி! பேசிட்டியே!" என்றான்

உடனே மூன்றாவது ஆள், "நீ மட்டும் என்ன? நீயும்தான் பேசிவிட்டாய்!" என்றான்.

நான்காவது ஆள், "நல்லவேளை! நான் மட்டும் பேசவில்லை!" என்றான்.

இப்படியாக அவர்களின் மௌனவிரதம் முடிந்து போனது.

1. மறந்தும் பிறன்கேடு சூழந்த சூழின்
   அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.
2. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
   அறனல்ல செய்யாமை நன்று
3. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
   பேதையின் பேதையார் இல்.

**விடை :**

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.

ஒருவருக்கொருவர் தீர்மானம் செய்த மௌன விரதத்தை அவரவர்களே மீறியது அறிவற்ற தன்மையாகும்.

---

## திருக்குறள் பற்றிய சில ஆராய்ச்சிச் செய்திகள்

- திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812
- திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகர ஒற்றில் முடிகிறது.
- திருக்குறள் இருமுறை வரும் ஒரே அதிகாரம் - குறிப்பறிதல்
- திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் - தஞ்சை ஞானப்பிரகாசர்
- திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் - மணக்குடவர்
- திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழு இடங்களில் இடம்பெற்றுள்ளது.
- ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.
- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் - ஜி. யு. போப்
- திருக்குறள் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

---

## கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தை தேர்ந்தெழுதுக

1. நா __ மை (னா, ணா) நாடாமை நா __ ன்மை (ரி, றி) யாதொன்றும்

   **விடை :** நா<u>ணா</u>மை நாடாமை நா<u>ரி</u>ன்மை யாதென்றும்.

2. அற __ சூழும் சூழ் __ தவன் கேடு (ந், ஞ்)

   **விடை :** அற<u>ன்</u> சூழும் சூழ்<u>ந்</u>தவன் கேடு.

3. ஈ__ றான் (ண், ன்), பசிகா __ பான் ஆயினும் (ன், ண்)

www.nammakalvi.com



**விடை :** ஈன்றான் பசி காண்பான் ஆயினும்.

4. பெ __ மைக்கும் (ரு, று), ஏனைச் சி __ மைக்கும் (று, ரு).

**விடை :** பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்.

## குறுவினா

1. **ஒற்றாடல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்து யாது?**

"ஒற்றொற்றித் தந்த பொருளையையும் மற்றுமோர்
ஒற்றினால் ஏற்றிக் கொளல்"

ஒற்றர் ஒருவர் சொன்ன செய்தியை மற்றோர் ஒற்றரால் அறிந்து முடிவு செய்க.

2. **வினைவேறு சொல் வேறு பட்டார் தொடர்பு எத்தகையது?**

செயல்வேறு சொல்வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.

3. **பேதையின் செயல்கள் யாவை?**

தகாத செயலுக்கு வெட்கப்படாமை, தக்கவற்றை நாடாமை, பிறரிடம் அன்பு இன்மை, ஏதொன்றையும் பாதுகாக்காமை ஆகியவை பேதையின் செயல்களாகும்.

4. **ஒருவதற்கு ஆன்ற பெருமை தருவது எதுவென, வள்ளுவர் கூறியுள்ளார்?**

எவ்வளவு சிறிதானாலும் நல்லவற்றைக் கேட்டால், கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்.

5. **தீரா இடும்பைத் தருவது எது?**

ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும், தேர்வு செய்தபின் அவரைப் பற்றி ஐயப்படுதலும் தீராத துன்பம் தரும்.

6. **தகுதியான் வென்றுவிட வேண்டியவர் யார்?**

செருக்கினால் துன்பம் தந்தவரைப் பொறுமையால் வெல்ல வேண்டும்.

7. **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

இக்குறட்பாவில் உவமையணி பயின்று வந்துள்ளது.

**இலக்கணம் :**

உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைத்து அவற்றிடையே போல என்னும் உவம உருபு வெளிப்படையாக அமைந்து வருவது உவமை அணியாகும்.

**பொருத்தம் :**

தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம் போலத் தன்னை இகழ்பவரைப் பொறுப்பது தலைசிறந்தது.

| | | |
|---|---|---|
| அகழ்வாரைத் தாங்கும் நிலம் | - | உவமானம் |
| போல | - | உவம உருபு |
| இகழ்வார்ப் பொறுத்தல் தலை | - | உவமேயம் |

8. **தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும் - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

இக்குறட்பாவில் சொற்பொருள் பின்வருநிலை அணி பயின்று வந்துள்ளது.

**இலக்கணம் :**

செய்யுளில் முன் வந்த சொல் மீண்டும் ஒரே பொருளைத் தருவது சொற்பொருட் பின்வருநிலை அணி.

www.nammakalvi.com



**விளக்கம் :**

இப்பாடலில் 'தீய' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'தீமை' என்ற ஒரே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வருநிலை அணி ஆகும்.

**9. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல் - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

இக்குறட்பாவில் ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது.

**இலக்கணம் :**

எடுத்து கொண்ட பொருட்கள் எல்லாவற்றையும் உருவகம் செய்து விட்டு ஒன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**விளக்கம் :**

ஒருவர் செய்யும் செயலின் பெருமைக்கும், சிறுமைக்கும் அவரவர் செயல்தான் உரைக்கல்லாக அமையும் என்பதே. ஆனால் மேற்கண்ட குறட்பாவில் தத்தம் கருமத்தைக் 'கட்டளைக்கல்லாக' உருவகித்த திருவள்ளுவர் பெருமை - சிறுமை இவற்றை உருவகிக்காமல் விட்டுவிட்டதால் இஃது ஏகதேச உருவக அணி ஆயிற்று

**10. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாந் தலை - அணி சுட்டி விளக்குக.**

**1. அணி சுட்டல் :**

இக்குறட்பாவில் சொற்பொருள் பின்வருநிலையணி இடம் பெற்றுள்ளது.

**2. அணி இலக்கணம் :**

செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர் பலமுறை வருமாறு கூறுவது சொற்பபொருள் பின்வருநிலையணியாகும்.

**3. அணி விளக்கம் :**

செல்வத்தில் சிறந்தது செவியால் கேட்டறியும் கேள்விச் செல்வம். அது பிற வழிகளில் வரும் செல்வங்களை விடத் தலைசிறந்தது. செல்வம் என்ற சொல் ஐந்து முறை அடுக்கி வந்து ஒரே பொருளைத் தருவதால் இப்பாடல் சொல் பொருள் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது.

**11. குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல் - அணி சுட்டி விளக்குக.**

**1. அணி சுட்டல் :**

இக்குறட்பாவில் சொற்பொருள் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது.

**2. அணி இலக்கணம் :**

செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர் பலமுறை வருமாறு கூறுவது சொற்பபொருள் பின்வருநிலையணியாகும்.

**3. அணி விளக்கம் :**

ஒருவரின் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்நது அவற்றுள் மிகுதியானதைக் கொண்டு அவரைப்பற்றி முடிவு செய்க. இதில் நாடி என்ற சொல் மூன்று முறை அடுக்கி வந்து ஒரே பொருளைத் தருவதால் இப்பாடல் சொற்பொருள் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது.

www.nammakalvi.com



**4. அணிப் பொருத்தம் :**

நாடி, நாடி, நாடி என்று மூன்றுமுறை அடுக்கி வந்து ஒரே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வருநிலையணி பொருத்தமாகப் படைத்துள்ளார்.

**12. சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமண்**
**கலத்துநீர் பெய்திரீஇ யற்று - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

**1. அணி சுட்டல் :**

இக்குறட்பாவில் உவமையணி பயின்று வந்துள்ளது.

**2. அணி இலக்கணம் :**

செய்யுளில் உவமை ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் வந்து இவை இரண்டிற்கும் இடையில் உவம உருபு வெளிப்படையாக வந்ததால் அது உவமையணியாகும்.

**3. அணி விளக்கம் :**

தீய செயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தல் சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போன்றது. உவமையையும் உவமேயத்தையும் கூறி "அற்று" உருவஉருபு வெளிப்பட உவமையணி அமையக் கவிஞர் படைத்துள்ளார்.

**4. அணிப் பொருத்தம் :**

| | | |
|---|---|---|
| உவமை | : | சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைத்தல் |
| உவமேயம் | : | தீய செயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தல் |
| உவம உருபு | : | அற்று. |

## சிறுவினா

**2. கேள்வி பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைக் கூறுக.**

1. "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
   செல்வத்துள் எல்லாந் தலை."

   செல்வத்தில் சிறந்தது செவியால் கேட்டறியும் கேள்விச் செல்வம். அது பிற வழிகளில் வரும் செல்வங்களை விடத் தலைசிறந்தது.

2. "எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
   ஆன்ற பெருமை தரும்."

   எவ்வளவு சிறிதானாலும் நல்லவற்றைக் கேட்டால், கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்.

3. "நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
   வாயினர் ஆதல் அரிது."

   நுட்பமன கேள்வியறிவு இல்லாதவர் அடக்கமான சொற்களைப் பேசுவது அரிது.

4. "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
   அவியினும் வாழினும் என்."

   கேட்பதன் சுவையை உணராமல் நாவின் சுவை மட்டும் உணர்பவர் இறந்தால் தான் என்ன! இருந்தால் தான் என்ன! என்கிறார் வள்ளுவர்.

www.nammakalvi.com



**3. தெரிந்து தெளிதல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை?**

1. "குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

ஒருவரின் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்நது அவற்றுள் மிகுதியானதைக் கொண்டு அவரைப்பற்றி முடிவு செய்க.

2. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்."

ஒருவரின் பெருமைக்கும் சிறுமைக்கும் அவரது செயல்பாடுகளே ஆராய்ந்து அறியும் உரைகல் ஆகும்.

3. "தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயறவும்
தீரா இடும்பை தரும்."

ஆராயாமல் ஒருவரை தேர்வு செய்வது.
அவ்வாறு தேர்வு செய்தபின் அவரைப் பற்றி ஐயப்படுதலும் தீராத துன்பம் தரும் என்கிறார் வள்ளுவர்.

**4. வினைத்தூய்மை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?**

1. "ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்."

வாழ்வில் உயர நினைப்பவர் புகழைக் கெடுக்கும் செயல்களைப் புறம் தள்ள வேண்டும்.

2. "ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை."

தாயின் பசியைக் கண்டபோதும் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யாதே.

3. "சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துநீர் பெயதிரீஇ யற்று."

தீய செயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தல் சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போன்றது.

**5. திருக்குறள் - நூல் குறிப்பு வரைக.**

- உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல் திருக்குறள்.
- இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை இந்நூல்.
- இது "முப்பால், பொதுமறை, முதுமொழி, பொருளுறை போன்ற பல தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுரை போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- தருமர், மணகுடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மரால் திருக்குறளுக்கு முற்காலத்தில் உரை எழுதப்பட்டது.
- இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர்.
- இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவமாலை.
- உலகின் பல மொழிகளிலும் பன்முறை மொழிபெயர்க்கப்பட்டதுடன், இந்திய மொழிகளிலும் தன் ஆற்றல் மிக்க அறக்கருத்துகளால் இடம் பெற்றது திருக்குறள். தமிழில் எழுதப்பட்ட உலகப்பனுவல் இந்நூல்.
- பிற அறநூல்களைப் போல் இல்லாமல் பொது அறம் பேணும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
- இவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

www.nammakalvi.com



**6. திருக்குறளுக்கு வழங்கப்படும் வேறுப் பெயர்கள் யாவை?**

1. முப்பால்
2. பொது மறை
3. பொய்யா மொழி
4. வாயுறை வாழ்த்து
5. தெய்வ நூல்
6. தமிழ் மறை
7. முதுமொழி
8. பொருளுறை

போன்ற பல பெயர்களால் அழைக்கப்டுகிறது.

**7. திருக்குறளுக்கு முற்காலத்தில் உரையெழுதியவர்கள் யாவர்?**

1. தருமர்
2. மணக்குடவர்
3. தாமத்தர்
4. நச்சர்
5. பரிதி
6. பரிமேலழகர்
7. திருமலையர்
8. மல்லர்
9. பரிப்பெருமாள்
10. காளிங்கர்

ஆகிய பதின்மரால் திருக்குறளுக்கு முற்காலத்தில் உரை எழுதப்பட்டது. இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர்.

**8. திருவள்ளுவருக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் யாவை?**

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் இவருக்கு

1. நாயனார்
2. தேவர்
3. முதற்பாவலர்
4. நான்முகனார்
5. தெய்வப்புலவர்
6. மாதனுபங்கி
7. செந்நாப் போதார்
8. பெருநாவலர்

போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

## அணி இலக்கணம்

**1. உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக?**

**இலக்கணம் :**

ஒரு பொருளை அத்தன்மை கொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை அணி எனப்படும். உவமை, உவமிக்கப்படும் பொருள், உவம உருபு மூன்றும் வெளிப்படையாய் அமைந்திருக்கும்.

**எ.கா :** "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

**விளக்கம் :**

உவமை - தம்மைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம்
உவமிக்கப்படும் பொருள் - தன்னை இகழ்பவரைப் பொறுத்தல்
உவம உருபு - போல

**பொருள் :**

தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம் போலத்
தம்மை இகழ்பவரைப் பொறுப்பதே தலைசிறந்தது.

www.nammakalvi.com



**அணிப் பொருத்தம் :**

உவமை, உவமேயம், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாகக் காணப்படுவதால் இப்பாடல் உவமை அணிக்கு பொருத்தமாயிற்று.

**2. ஏகதேச உருவக அணியை எடுத்துக் காட்டுடன் விளக்குக?**

**இலக்கணம் :**

ஒரு செய்யுளில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொருள்களை உருவகம் செய்யும் பொழுது, ஒன்றை உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் கூறுவது ஏகதேச உருவக அணியாகும்.

**விளக்கம் :**

ஒருவரின் செயல்களை அவர் செய்த பெருமையையும் சிறுமையையும் ஆராய்ந்து அறியும் உரைகல் என்று உருவகப்படுத்திய வள்ளுவர் பெருமை எது, சிறுமை எது என்று அவர் உருவகப்படுத்தவில்லை. எனவே இதில் ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது.

**3. சொற்பொருள் பின்வருநிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக?**

**இலக்கணம் :**

செய்யுளில் ஒரு சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருமாயின் அது சொற்பொருள் பின்வருநலையணி எனப்படும்.

**எ.கா :** "தீயவை தீய பயந்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்"

**விளக்கம் :**

தீய என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து தீமை என்னும் ஒரே பொருளைத் தருவதால் இதில் சொற்பொருள் பின்வருநிலையணி அமைந்துள்ளது.

எ.கா : "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை."

**விளக்கம் :**

செல்வம் என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருகிறது.

**எ.கா :** "குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

**விளக்கம் :**

இக்குறட்பாவில்' நாடி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'ஆராய்ந்து' என்னும் ஒரே பொருளைத் தருவதால் இதில் சொற்பொருள் பின்வருநிலையணி அமைந்துள்ளது.

## மாறியுள்ள சீர்களை முறைப்படுத்துக

1. பிறன்கேடு சூழற்க சூழின் மறந்தும்
சூழ்ந்தவன் கேடு அறஞ்சூழம்

**விடை :** மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழம் சூழ்ந்தவன் கேடு.

2. நல்லவை கேட்க எனைத்தானும் ஆன்ற

www.nammakalvi.com



பெருமை அனைத்தானும் தரும்

**விடை :** எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்.

## இயல் 3

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1. பொருந்தாத இணை எது?
   அ) ஏறுகோள் - எருது கட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டி மண்டபம்
2. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்
3. தீரா இடும்பைத் தருவது எது?
   அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
   இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை.

II. நிரப்புக 3x1=3

4. காளைச் சண்டையை தேசிய விளையாட்டாகக் கொண்ட நாடு __________.
5. இந்திர விழாவைக் குறிப்பிடும் காதை __________.
6. பூ _____ பந்தல்; எட்டு _____ தொகை.

III. விடையளி: 4x2=8

7. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
8. தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும். ஏன்?
9. திசைப்பெயர்களில் வல்லினம் மிகுமா சான்று தருக.
10. புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

IV. விடையளி: 3x3=9

11. ஏறு தழுவுதல், திணை நிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது.
12. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்து உரைக்க.
13. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
    கருமமே கட்டளைக் கல்
    - இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

V. விடையளி: 4x5=20

14. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.
15. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



16. குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்து எழுதுக.
    பூஞ்சோலை - சிரிக்கும் மலர்கள் - பசுமையான புல்வெளி - கூவும் குயில் - வீசும் தென்றல் - விளையாடும் குழந்தைகள் - அழகிய காட்சிகள்.
17. மணிமேகலை நூலின் விழாவறை காதையில் சொல்லப்படும் கருத்துகளைக் கூறுக.

www.nammakalvi.com



VI. மொழிப்பயிற்சிகள்: 7x1=7

18. மொழி பெயர்க்க :

The biggest problem is the lack of love and charity. - Mother Teresa.

19. சொற்றொடரில் அமை : கண்ணும் கருத்தும்.

20. பிரித்து எழுதுக : கண்டெடுக்கப்பட்டுள்ளன.

21. பொருள் எழுதித் தொடரமைக்க : அலை - அழை.

22. பொருள் கூறுக : பௌரி

23. கலைச்சொல் அறிக : Excavation.

24. இலக்கணக் குறிப்பு தருக : ஈன்றாள்.

## இயல் 3

## அலகுத் தேர்வு 2

மதிப்பெண்கள்: 50

I.உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1. சொற்றொடர்களை முறைப்படுத்துக.

அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி இ) தழுவிப் பிடித்தல் என்கிறது.

i) ஆ, அ, இ ii) ஆ, இ, அ iii) இ, ஆ, அ iv) இ, அ, ஆ

2. பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம் __________.

அ) சீவகசிந்தாமணி ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) வளையாபதி

3. திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் _____ ல் உள்ளது.

அ) கோத்தகிரி ஆ) கரிகையூர் இ) ஆதிச்சநல்லூர் ஈ) கல்லூத்து மேட்டுப்பட்டி

II.நிரப்புக 3x1=3

4. ஏறுதழுவுதல் பற்றிக் கூறும் இலக்கண நூல் __________.

5. கூலம் என்பதன் பொருள் __________.

6. மிக __ பெரியவர்; தாமரை __ பாதம்.

III. விடையளி: 4x2=8

7. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

8. பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் தருக.

9. ஏறு தழுவுதல் குறித்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.

10. பழமணல் மாற்றுமின்; புது மணல் பரப்புமின் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

IV. விடையளி: 3x3=9

11. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

12. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

13. உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

V.விடையளி: 4x5=20

14. ஏறு தழுவுதல் அறச் செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

15. பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

16. ஓஒதல் ... எனத் தொடங்கும் குறளையும்,'தரும்' என முடியும் குறளினையும் அடிபிறழாமல் எழுதுக.

17. 'அகழாய்வு' - குறித்துப்பாடப்பகுதி கருத்துகளைக் கூறுக.

VI. மொழிப்பயிற்சிகள்: 7x1=7

18. மொழி பெயர்க்க :

The art of people is a true mirror to their minds. - Jawaharlal Nehru.

www.nammakalvi.com



19. சொற்றொடரில் அமை : நகமும் சதையும்
20. எவ்வகைத் தொடர்?


    தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன.
21. பொருள் எழுதித் தொடரமைக்க : கரை - கறை
22. பொருள் கூறுக : சிட்டம்.
23. கலைச்சொல் அறிக : Embossed Sculpture.
24. இலக்கணக்குறிப்பு தருக : தண்மணல்.

www.nammakalvi.com



# இயல் நான்கு

# எட்டுத்திக்கும் சென்றிடுவீர்



**கற்றல் நோக்கங்கள்**

- மின்னணு இயந்திரங்களின் தேவையையும் இணையத்தின் இன்றியமையாமையையும் அறிந்து பயன்படுத்துதல்
- இலக்கியங்கள் காட்டும் தமிழர்களின் அறிவியல் சிந்தனைகள், சமூகத் தேவைகளுக்கு ஏற்ப மேம்பட்டு வருவதை உணர்தல்
- தொல்காப்பியம் குறிப்பிடும் உயிர்களின் வகைப்பாட்டினை அறிவியல் செய்திகளோடு ஒப்பிடல்
- அறிவியல் செய்திகளையும் கவிதையாக்க முடியும் என்பதை அறிந்து படைப்பூக்கம் பெறுதல்
- நேர்காணலின் நோக்கமறிந்து ஏற்றவாறு வினாக்களை வடிவமைத்தல்

www.nammakalvi.com




உரைநடை உலகம்

# இயல் நான்கு

# இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்

மனவரைபடம்




## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள்

அ) இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.

ஆ) வங்கி அட்டை இல்லையென்றால் அலைபேசி எண், வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது.

இ) திறன் அட்டைகள் என்பது குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்.

i) அ, ஆ ஆகியன சரி, இ தவறு ii) அ, இ ஆகியன சரி, ஆ தவறு

iii) அ தவறு, ஆ, இ ஆகியன சரி iv) மூன்றும் சரி **[விடை : மூன்றும் சரி]**

2. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு

இ) தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

**[விடை : ஊரகத் திறனாய்வுத் தேர்வு]**

www.nammakalvi.com



## குறுவினா

**1. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.**

- தொலைநகல் இயந்திரம் (Fax)
- தானியக்கப் பண இயந்திரம் (Automated Teller Machine)
- அட்டை பயன்படுத்துதல் இயந்திரம் (Swiping Machione)
- தமிழக அரசின் நியாய விலைக் கடை திறனட்டைக் கருவி (TNEPDS)
- இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழக இணைய வழி பதிவு (Indian Railway Catering Tourism corporation)

## சிறுவினா

**1. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.**

- தமிழக அரசு ஆண்டு தோறும் பல கல்வி உதவித் தொகை தேர்வுகளை நடத்துகின்றது.
- 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு - தேசியத்திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு (NMMS)
- 9 ஆம் வகுப்பு கிராம பள்ளி மாணவர்களுக்கு - ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST)
- 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு - தேசியத்திறனாய்வு தேர்வு (NTSE) நடத்தப்படுகின்றது. அவற்றில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தாங்கள் படிக்கும் பள்ளிகளிலேயே இணையத்தின் சேவையைப் பெறலாம்.
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு, அரசின் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செய்யப்பட வேண்டிய பதிவு, ஆண்டுதோறும் அவர்கள் படித்த பள்ளிகளிலேயே இணையத்தின் வழியாகச் செய்யப்பட்டு வருகிறது.
- அரசின் விலையில்லா மிதிவண்டி, மடிக்கணினி ஆகியவற்றைப் பெற மாணவர்களின் விவரங்கள் இணையத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

## நெடுவினா

**1. அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணைவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.**

தற்காலத்தில் பேருந்து முன்பதிவு, விமான முன்பதிவு தங்கும் விடுதிகள் முன்பதிவு ஆகியவற்றை இணையம் மூலமாக மேற்கொள்ளப் பலமுகமைகள் உள்ளன. இது பலருக்கு வேலைவாய்ப்பையும் தருகிறது. பெரு நகரங்களில் திரைப்படங்களுக்கு இருக்கைகள் முன்பதிவு செய்வதுகூட இணையம் மூலம் நடைபெறுகின்றது. அரசுக்குச் செலுத்த வேண்டிய சொத்துவரி, தண்ணீர் வரி, ஆகியன இணைய வழியில் செலுத்தப்படுகின்றன. இச்சேவையில் ஒன்று பயணச்சீட்டு வழங்குவதையும் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்வதையும் பயனுள்ள வகைளில் செய்து வருகிறது. இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம். மற்றொன்று தானியக்கப் பண இயந்திரம்.

www.nammakalvi.com



**இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழக இணைய வழிப் பதிவு (IRCTC - INDIAN RAILWAY CATERING AND TOURISM CORPORATION)**

மக்கள் தொகை மிகுந்த இந்தியா போன்ற நாடுகளில் வரிசையில் நிற்பது நேரவிரயம். இதனைக் குறைப்பதுடன் இருந்த இடத்திலிருந்தே பயணச் சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய அமைப்பு இந்நிறுவனம் ஆகும். பயணம் செய்ய வேண்டிய நாளில் ஊர்களுக்குச் செல்லும் தொடர்வண்டிகளையும் அவற்றின் நேரங்களையும் பயணம் செய்ய விரும்பும் பெட்டி வகைகளையும் அதற்குரிய தொகையையும் காண்பிக்கிறது. வங்கி அட்டைகளின் உதவியுடன் தொகையைச் செலுத்தி முன்பதிவு கொள்ளலாம். மின்னஞ்சலில் பயணச்சீட்டு வந்து விடுகிறது. நமது அலைபேசிக்குக் குறுஞ்செய்தியும் வந்து விடுகிறது. 2002 ஆம் ஆண்டு இந்த வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது ஒரு நிமிடத்திற்கு 1500 பயணச் சீட்டுகள் பதிவு செய்யவும் ஒரே நேரத்தில் மூன்று இலட்சம் பயனர்கள் இணைய வழிச் சேவையைப் பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**தானியக்கப் பண இயந்திரம் (Automated Teller Machine)**

இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளரான ஜான் ஷெப்பர்டு பாரன் (John Shepered Barron) என்பவர் தலைமையிலான குழுவொன்று பார்க்லேஸ் வங்கிக்காக இலண்டனில் 1967 ஜூன் 27 இல் தானியக்கப் பண இயந்திரத்தை நிறுவியது.

வங்கியில் வழங்கப்பட்ட காசோலையைக் கொண்டு தான் அப்போது பணம் எடுக்கப்பட்டது. அந்தக் காசோலையில் உள்ள குறியீடுகளை இயந்திரம் படித்துப் புரிந்து கொண்டு பணத்தைத் தள்ளும். அதற்குப்பின் வாடிக்கையாளரின் ஆறிலக்கக் கடவுச்சொல் (Password) தருமாறு மேம்படுத்தப்பட்டது. வங்கிகளின் அட்டைகளில் தனிப்பட்ட அடையாள எண்ணை உருவாக்கித் தானியக்கப் பண இயந்திரத்தில் பயன்படுத்தத் தொடங்கினார்.

## சந்திப்பிழை நீக்கி எழுதுக

1. குடும்ப உறுப்பினர் நியாயவிலை கடைக்கு செல்கையில் அந்த அட்டையை எடுத்து செல்ல வேண்டும்.

   **விடை :** குடும்ப உறுப்பினர் நியாயவிலை கடைக்கு செல்கையில் அந்த அட்டையை எடுத்துச் செல்ல வேண்டும்.

2. தானியங்கி பண இயந்திர வரவால் வங்கிக்கு செல்வது பெருமளவு குறைந்துவிட்டது.

   **விடை :** தானியங்கிப் பண இயந்திர வரவால் வங்கிக்கு செல்வது பெருமளவு குறைந்துவிட்டது.

3. வங்கியில் வழங்கபட்ட காசோலையை கொண்டு தான் பணம் எடுக்கப்பட்டது.

   **விடை :** வங்கியில் வழங்கப்பட்ட காசோலையைக் கொண்டு தான் பணம் எடுக்கப்பட்டது.

4. அறிவியல் கண்டுபிடிப்புகள் நமது நேரத்தை பலவழிகளிலும் மிச்சப்படுத்துகின்றன.

   **விடை :** அறிவியல் கண்டுபிடிப்புகள் நமது நேரத்தைப் பலவழிகளிலும் மிச்சப்படுத்துகின்றன.

5. அந்த பணிசுமையே அவரை இப்புதிய கண்டுபிடிப்பை நோக்கி தள்ளியது.

   **விடை :** அந்தப் பணிச்சுமையே அவரை இப்புதிய கண்டுபிடிப்பை நோக்கித் தள்ளியது.

6. பணத்தை எடுக்க பழையமுறைபடி வங்கிக்கு செல்ல வேண்டியதில்லை.

   **விடை :** பணத்தை எடுக்கப் பழையமுறைப்படி வங்கிக்குச் செல்ல வேண்டியதில்லை.

www.nammakalvi.com



7. அரசின் மின்னணு சேவை மையங்களின் உதவியை நாடியும் மேற்கண்ட சேவைகளை பெறலாம்.

**விடை :** அரசின் மின்னணுச் சேவை மையங்களின் உதவியை நாடியும் மேற்கண்ட சேவைகளைப் பெறலாம்.

## விடைக்கேற்ற வினா அமைக்க

1. ஹாங்க் மாக்னஸ்கி என்பவர் கணினி மூலம தொலைநகல் எடுக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தார்.

**விடை :** கணினி மூலம் தொலைநகல் எடுக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

2. குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக தற்போது திறன் அட்டைகள் வழங்கப்படுகின்றன.

**விடை :** குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக எவ்வட்டைகள் வழங்கப்படுகின்றன?

3. பள்ளிக் கட்டணம், கல்லூரிக் கட்டணம்ஆகியவற்றையும் இணையம் வழியாகவே செலுத்த முடியும்.

**விடை :** எவ்வெவ் கட்டணங்கள் இணையம் வழியாகவே செலுத்த முடியும்?

4. தானியங்கிப் பண இயந்திரம் வங்கிக்குச் செல்வதைப் பெருமளவு குறைத்துவிட்டது.

**விடை :** எந்த இயந்திரம் வங்கிக்குச் செல்வதைப் பெருமளவு குறைத்துவிட்டது?

5. தமிழக மக்கள் பயன்படுத்தும் குடும்ப அட்டைகள் திறன் அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன.

**விடை :** தமிழக மக்கள் பயன்படுத்தும் குடும்ப அட்டைகள் எவ்வாறு மாற்றப்பட்டுள்ளன?

## ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக

1. அறிவியல் கண்டுபிடிப்புகள் நமது நேரத்தைப் பவழிகளிலும் மிச்சப்படுத்துகின்றது.

**விடை :** அறிவியல் கண்டுபிடிப்புகள் நமது நேரத்தைப் பலவழிகளிலும் மிச்சப்படுத்துகின்**றன**.

2. தொலைநகல் இயந்திரம் கோப்புகளையும் ஒளிப்படங்களையும் உடனடியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் பயன்படுகின்றன.

**விடை :** தொலைநகல் இயந்திரம் கோப்புகளையும் ஒளிப்படங்களையும் உடனடியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் பயன்படுகின்**றது**.

3. சூரிய ஆற்றலால் இயங்கும் இயந்திரங்கள் இந்தியாவில் வந்துவிட்டது.

**விடை :** சூரிய ஆற்றலால் இயங்கும் இயந்திரங்கள் இந்தியாவில் வந்துவிட்**டன**.

4. தானியங்கிப் பண இயந்திரம் வங்கிக்குச் செல்வதைப் பெருமளவு குறைத்து விட்டன.

**விடை :** தானியங்கிப் பண இயந்திரம் வங்கிக்குச் செல்வதைப் பெருமளவு குறைத்து விட்**டது**.

5. இன்று, பல பெரிய நிறுவனங்கள் ஒளிப்படி எடுக்கும் கருவியை உருவாக்கி விற்பனைசெய்தாலும் ஜெராக்ஸ் என்ற பெயரே நிலைத்து விட்டன.

**விடை :** இன்று, பல பெரிய நிறுவனங்கள் ஒளிப்படி எடுக்கும் கருவியை உருவாக்கி விற்பனை செய்தாலும் ஜெராக்ஸ் என்ற பெயரே நிலைத்துவிட்**டது**.

6. 1959 இல் ஒளிப்படி இயந்திரம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

**விடை :** 1959 இல் ஒளிப்படி இயந்திரம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்**டது**.

www.nammakalvi.com



7. ஹாங்க் மாக்னஸ்கி தொலைநகல் இயந்திரத்திற்கு காமா ஃபேக்ஸ் என்று பெயரிட்டு விற்பனைக்குக் கொண்டு வந்தனர்.

**விடை :** ஹாங்க் மாக்னஸ்கி தொலைநகல் இயந்திரத்திற்கு காமா ஃபேக்ஸ் என்று பெயரிட்டு விற்பனைக்குக் கொண்டு வந்**தார்**.

8. அட்டைகளில் சில்லு என்று சொல்லப்படும் பகுதி மூலம் வணிகப் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றது.

**விடை :** அட்டைகளில் சில்லு என்று சொல்லப்படும் பகுதி மூலம் வணிகப் பரிமாற்றங்கள் நடைபெறுகின்**றன**.

## பொருத்துதல்

1. ஒளிப்படி இயந்திரம் - Photo Copier
2. தொலைநகல் இயந்திரம் - Fax
3. தானியக்கப் பண இயந்திரம் - Automated Teller Machine
4. அட்டை பயன்படுத்தும் இயந்திரம் - SwipingMachine

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

அரசுக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, தண்ணீர் வரி ஆகியன இணைய வழியில் செலுத்தப்படுகின்றன. அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் உரிய படிவங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அவற்றை நிரப்பி இணையம் மூலமாகவே விண்ணப்பிக்கலாம். பிறப்புச் சான்றிதழ், வருமான வரிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்றவை அரசால் மக்களுக்கு இணையம் மூலம் வழங்கப்படுகின்றன. அரசின் மின்னனுச் சேவை மையங்களின் உதவியை நாடியும் மேற்கண்ட சேவைகளைப் பெறலாம்.

**1. அரசுக்குச் செலுத்த வேண்டிய எந்தெந்த வரியை இணைய வழி செலுத்தப்படுகின்றன.?**

சொத்து வரி, தண்ணீர் வரி.

**2. இணைய வழியாக எந்த படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்?**

அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் உரிய படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**3. அரசால் மக்களுக்கு இணைய மூலம் வழங்கப்படும் சான்றிதழ்கள் யாவை?**

- பிறப்புச் சான்றிதழ்.
- வருமான வரிச் சான்றிதழ்.
- சாதிச் சான்றிதழ்.

**4. பல்வேறு சான்றிதழ்களைப் பெற எதன் உதவியை நாம் நாடிப் பெறலாம்?**

அரசின மின்னணுச் சேவை மையங்கள்.

**5. மேற்கூறிய உரைநடைப் பகுதிக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.**

இணையப் பயன்பாடு.

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

**1. வங்கியில் இணைய வழிச் சேமிப்புக் கணக்குத் தொடங்கும் நடைமுறையை எழுதுக.**

நம் பணத்தை வங்கியில் செலுத்தவும், தேவையான நேரங்களில் பணத்தை எடுத்துச் செலவிடவும், பிறர்க்குப் பணத்தை எளிதாக மாற்றவும் இணைய வழி சேமிப்புக் கணக்கு உதவுகிறது.

சேமிப்புக் கணக்குத் தொடங்குபவரின் பெயர், அவருடைய வீட்டு முகவரி போன்ற தகவல்களை நிரப்பி வங்கியில் தர வேண்டும். தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, ஆதார் எண் போன்ற விபரங்களும் படிவத்தில் சேர்க்க வேண்டும்.

எந்த வங்கியில், எந்த கிளையில் நாம் வங்கிக் கணக்கைத் தொடங்க இருக்கிறோமோ அந்த வங்கியில் மேற்கண்ட தகவல்களை நிரப்பி இணையவழிச் சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம்.

**2. உங்கள் குடும்பத்தினருடன் வெளியூர் சென்ற தொடர்வண்டிப் பயணத்திற்கு இணையத்தில் எவ்வாறு முன்பதிவு செய்தீர்கள்? அதன் வழிமுறைகளை அனுபவத்தில் (அ) கேட்டறிந்து வகுப்பறையில் வழங்குக.**

- முதலில் இணையத்தில் www. irctc.com என்ற முகவரிக்குச் செல்ல வேண்டும்.
- User id & Password ஐ டைப் செய்து புறப்படும் இடம், சேரும் இடம் இவற்றைத் தந்தால் எந்தத் தொடர்வண்டி என்றும், தேதி, எந்தெந்த நேரம் என்றும், இருக்கை வகைகள் எப்படி என்றும் எப்படித் தேவை என்றும் காட்டும்.
- இவற்றை எல்லாம் பூர்த்தி செய்தால் பயணச்சீட்டு முன்பதிவு பயணத்திற்கான தொகை வரும்.
- அதனையும் இணைய வழியில் செலுத்த வேண்டும்.
- பிறகு உறுதி செய்யப்பட்ட பயணச்சீட்டு வந்து விடும்.

**3. விரவியல் (Pendrive) உள்ள பாடல்களையும், எழுத்துக் கோப்புகளையும் (Document) கணினியில் நுழைத்துஉறைகளில் (Folder) இட்டுச் சேமிப்பதைச் செய்து பார்த்துத் தெரிந்து கொள்க.**

'விரலி' என்ற வார்த்தை Pendrive என்ற ஆங்கில வார்த்தையில் தமிழாக்கம் ஆகும்.

**விரலியில் உள்ள பாடல்கள் எழுத்துக் கோப்புகளை கணினியில் சேமிக்கும் முறை :**

- முதலில் விரலியை அதன் பகுதியில் நுழைத்தல் வேண்டும்.
- கணினித் திரையில் குறியீடு ஒன்று தோன்றும்.
- அந்தக் குறியீட்டை இயக்கும் போது, விரலியில் உள்ள செய்திகளை எந்தப் பகுதியில் சேமிக்க வேண்டும். தனி உறை வேண்டுமா என்று திரையில் தோன்றும்.
- கோப்புகள் உள்ள பகுதியில் சேமிக்க வேண்டுமென்றாலும் குறிப்பிட்ட கோப்புப் பகுதியை இயக்கி அதனுடன் சேமித்துக் கொள்ளலாம்.
- தனியாக ஒரு உறையை உருவாக்கியும் சேமித்துக் கொள்ளலாம்.
- திரையின் முகப்புப் பகுதியில் உறையை உருவாக்கி வைத்துக் கொண்டோம் என்றால் விரலி மூலம் நாம் சேமித்த செய்திகள் பாடல்கள், எழுத்துக் கோப்புகளை உடனடியாக இயக்கி பயன்படுத்திக் கொள்ளலாம்.
- இதுவே விரலியில் உள்ளனவற்றை கணினியில் சேமிக்கும் முறையாகும்.

www.nammakalvi.com




## இயல் நான்கு

கவிதைப் பேழை

# ஓ, என் சமகாலத் தோழர்களே!

– வைரமுத்து

**மனவரைபடம்**




## ஆசிரியர் குறிப்பு

- தேனி மாவட்டத்திலுள்ள வடுகபட்டி என்னும் ஊரில் 1953 ஆம் ஆண்டு ஜூலை 13 அன்று பிறந்தார்.
- இவருடைய பெற்றோர் இராமசாமி - அங்கம்மாள் ஆவர்.
- கள்ளிக்காட்டு இதிகாசம் நாவலுக்காக 2003 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
- இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை ஏழு முறையும், மாநில அரசின் விருதினை நான்கு முறையும் பெற்றவர்.
- காப்பியப் பேரறிஞர், கவியரசு, கவிப் பேரரசு எனப் பாராட்டப்பட்டவர்.
- கவிதைகள், கட்டுரை, நாவல், திரைப்படப் பாடல்கள் அனைத்திலும் முத்திரை பதித்தவர்.

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| 1. கழனிகள் | - வயல்கள் | 4. வாகனம் | - ஊர்தி |
| 2. முதுமொழி | - பழமொழி, அறச் சொற்கள் | 5. பெருமை | - மேன்மை |
| 3. கோலம் | - வடிவம் | | |

www.nammakalvi.com



## பிரித்து எழுதுக

1. தூரமில்லை - தூரம் + இல்லை
2. பாரமில்லை - பாரம் + இல்லை
3. பட்டுப் பூச்சி - பட்டு + பூச்சி
4. கணிப்பொறியுள்ளே - கணிப்பொறி + உள்ளே
5. முதுமொழி - முதுமை + மொழி
6. அறிவியல் - அறிவு + இயல்

## இலக்கணக் குறிப்பு

1. பண்பும் அன்பும் - எண்ணும்மை
2. இனமும் மொழியும் - எண்ணும்மை
3. சொன்னோர் - வினையாலணையும் பெயர்
4. பாய்ந்து - வினையெச்சம்
5. முதுமொழி - பண்புத்தொகை
6. இழந்து, தொலைந்த - பெயரெச்சங்கள்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. பொருத்துங்கள் = பொருத்து + உம் + கள்

பொருத்து - பகுதி
உம் - முன்னிலை பன்மை விகுதி
கள் - விகுதி மேல் விகுதி

2. பாய்ந்து = பாய் + த்(ந்) + த் + உ

பாய் - பகுதி
த் - விகுதி
த் - ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க

அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்
எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்
இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்.

அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகனை **[விடை : தமிழ்]**

www.nammakalvi.com



## கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தை இட்டு எழுதுக

1. எ __ யும் (வி, ரி) தீயை இ__ ந்த திரிதான்.

   **விடை :** எரியும் தீயை இழந்த திரிதான்.

2. ஆ __ ம் (ழு, ளு) தமிழை நி __ த்துங்கள் (ரு, று)

   **விடை :** ஆளும் தமிழை நிறுத்துங்கள்.

3. அ __ வியல் (றி, ரி) எ __ னும் (ன், ண்) வாகனம் மீதி (ல், ள்)

   **விடை :** அறிவியல் என்னும் வாகனம் மீதில்.

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

**1. கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.**

- கூட்டுப்புழுவானது தக்க பருவம் வரை கூட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும். அப்போது தான் பட்டுப் பூச்சியாய் வடிவம் பெறும்.
- அதைப் போல வாழ்விலே நாம் காட்டும் பொறுமையும், அடக்கமும் தான் நம்மை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும்.

## சிறுவினா

**1. 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?**

- அறிவியல் என்னும் ஊர்தியின் மீது ஆட்சி செய்கின்ற தமிழை நிறுத்துங்கள்.
- கல்லணையைக் கவினுற கட்டிய கரிகாற் சோழனின் மேன்மையெல்லாம் கணிப்பொறி உள்ளே சேமித்து வையுங்கள்.
- ஏவுகின்ற திசையில் பாய்ந்த அம்பைப் போல நம் தமிழ் இனத்தை வீரமுடையதாக்குங்கள்.
- அறிவியல் முன்னேற்றத்தால் நாம் ஏவுகின்ற ஏவுகணையிலும் தமிழை எழுதி எல்லாக் கோள்களிலும் ஏற்றுங்கள் என வேண்டுகோள் விடுகிறார் கவிஞர் வைரமுத்து.

## நெடுவினா

**1. ஓ, என் சமகாலத் தோழர்களே கவிதை மூலம் கவிஞர் வைரமுத்து கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக**

**தூரம் இல்லை - பாரமில்லை :**

- பறக்கின்ற கிளிக்கு றெக்கை இருக்கும் வரையிலும் கிழக்கே உதிக்கின்ற வானம் தூரம் இல்லை.
- பூமியில் முளைக்கின்ற விதைகள் மண்ணை விட்டு வெளியே முளைக்கத் துடித்தால் அவை இப்பூமிக்குப் பாரமில்லை.

www.nammakalvi.com



**நிரப்ப வாருங்கள் :**

- பூமியில் பாய்ந்து பரவி வருகின்ற நதிகளே வரும் வழியிலுள்ள அனைத்துப் பள்ளங்களையும் நிரப்ப வாருங்கள்.
- வறண்டு காய்ந்து கிடக்கின்ற வயல்வெளிகள் எல்லாம் நீர் வளத்தால் நல்ல விளைச்சலைப் பெற்றுத் தாருங்கள்.

**துன்பம் வாராது :**

நம் முன்னோர்கள் கூறிய அறிவுரைகளை எல்லாம் நம் வாழ்வில் கேட்டால் மட்டும் போதாது. அவற்றை நம் வாழ்வில் வாழ்வாக்கினால் நமக்குத் துன்பம் வாராது.

**உணர்ச்சி :**

- அறிவை மறந்த உணர்ச்சியானது திரியை மறந்த பற்றாத தீயாகும்.
- எரிகின்ற தீயை இழந்த திரியால் பயன் இல்லை. உணர்ச்சியைத் தொலைத்த அறிவாலும் பயனில்லை.

**வேண்டுகோள் :**

- அறிவியல் என்னும் ஊர்தியின் மீது ஆட்சி செய்கின்ற தமிழை நிறுத்துங்கள்.
- கல்லணையைக் கவினுற கட்டிய கரிகாற் சோழனின் மேன்மையையெல்லாம் கணிப்பொறி உள்ளே சேகரித்து வையுங்கள்.
- ஏவுகின்ற திசையில் பாய்ந்த அம்பைப் போல நம் தமிழ் இனத்தை வீரமுடையதாக்குங்கள்.
- அறிவியல் முன்னேற்றத்தால் நாம் ஏவுகின்ற ஏவுகணையிலும் தமிழை எழுதி எல்லாக் கோள்களிலும் ஏற்றுங்கள் என வேண்டுகோள் விடுக்கிறார் கவிஞர் வைரமுத்து.

---

## கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாவிற்கு விடை எழுதுக

**அறிவியல் என்னும் வாகனம் மீதில்**
**ஆளும் தமிழை நிறுத்துங்கள்**
**கரிகா லன்தன் பெருமை எல்லாம்**
**கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்**
**ஏவும் திசையில் அம்பைப் போல**
**இருந்த இனத்தை மாற்றுங்கள்**
**ஏவுகணையிலும் தமிழை எழுதி**
**எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்**

1. இப்பாடல் இடம்பெறும் கவிதைத் தொகுப்பு எது?
   ஒ, என் சமகாலத் தோழர்களே!.
2. இப்பாடலினை இயற்றியவர் யார்?
   வைரமுத்து.
3. ஆளும் தமிழை எதன் மீது நிறுத்த வேண்டும்?
   அறிவியல் என்னும் வாகனம் மீதில்.
4. கரிகாலன் பெருமையெல்லாம் எதனுள்ளே பொருத்த வேண்டும்?
   கணிப்பொறி.
5. அம்பைப் போல இருப்பது எது?
   இனம்.

www.nammakalvi.com



**6. ஏவும் கணையில் எவற்றை எழுத வேண்டும்?**

தமிழை எழுத வேண்டும்.

**7. எவற்றை எல்லாக் கோளிலும் ஏற்ற வேண்டும்?**

ஏவுகணையில் தமிழை எழுதி.

**8. இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

நிறுத்துங்கள் பொருத்துங்கள்

மாற்றுங்கள் ஏற்றுங்கள்

**9. மோனையை எடுத்து எழுதுக.**

அறிவியல் - ஆளும்

கரிகாலன் - கணிப்பொறி

ஏவுகணை - எல்லாக் - ஏற்றுங்கள்.

**10. எதுகையை எடுத்து எழுதுக.**

ஏவும் திசையில்

ஏவும் கனணயிலும்.

## கற்பவை கற்றபின்

**1. அறிவியல் செய்திகளை வெளிப்படுத்தும் கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

அறிவியலெல்லாம் இன்று
அழிவை நோக்கியே செல்கிறது
ஆதி வாழ்க்கையை இழந்ததனால்
இமைகளில் கண்ணீர்த் துளிகள்.
தூரத்தைப் பக்கமாக்கியது
வானத்தை நடைபாதையாக்கியது
நீர்வெளிகளைக் கடந்து செல்ல
கணப்பொழுதில் அறிவியல் உதவுகிறது

கம்யூட்டர் நாகரிகத்தை
நாடெல்லாம் பரப்பி
அறிவியல் ஆற்றலால்
ஆனந்தமாய்க் கொக்கரிக்கிறது.
அறிவியல் வளர்ச்சி
வாழ்வின் தரத்தை வீழ்த்திடக் கூடாது.
இயற்கைச் சூழலை
காற்றிலே அலைகிறது.

**2. விமானமும் ஏவுகணையும் பேசிக்கொள்வது போல ஓர் உரையாடலைக் குழுவாகச் சேர்ந்து உருவாக்குக.**

**விமாணம்** : ஏவுகணையே நலமா? என்னைப் பற்றி முதலில் சொல்கிறேன். நீ உன்னைப் பற்றிச் சொல்.

**ஏவுகணை** : விமானமே நான் நலம். நீ நலமா?

**விமானம்** : எனக்கு இறக்கைகள் உண்டு. நான் தரையில் ஊர்ந்து சென்று, பின்பு மேலே பறப்பேன். கடல் தாண்டிப் பல பகுதிகளுக்கும் விரைவாகச் செல்வேன்.

**ஏவுகணை** : அப்படியா... நான் தரையிலிருந்து செங்குத்தாக வான் நோக்கிச் சீறிப் பாய்வேன்.

**விமானம்** : எனது வேகம் மெதுவாகக் கூடும்.

**ஏவுகணை** : அதிகபட்ச வேகத்தை எட்டிய பிறகு தான் நான் பூமியிலிருந்து புறப்படுவேன்.

**விமானம்** : நான் மனிதர்களையும், சரக்குகளையும் ஏற்றிச் செல்வேன்.

**ஏவுகணை** : நான் அணு ஆயுதங்கள், வெடி பொருட்களை மட்டுமே ஏற்றிச் செல்வேன்.

**விமானம்** : நான் இரு நாடுகளின் இடையில் நட்பு ரீதியாக மட்டுமே பயணம் செய்வேன்.

**ஏவுகணை** : நான் எதிரி நாடுகளை அச்சுறுத்தவும், அழிக்கவும் என் நாட்டைப் பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகிறேன்.

**விமானம்** : என்னில் ஜெட் என்ஜின்கள் பயன்படுத்தப்படுகிறது.

**ஏவுகணை** : என்னில் இராக்கெட் என்ஜின் பயன்படுகிறது.

**விமானம்** : போதும் போதும். நன்றி! நான் வருகிறேன்.

**ஏவுகணை** : மீண்டும் சந்திப்போம். வருகிறேன்.

**3. பாடலில் அமைந்துள்ள தொடை நயங்களை எழுதுக.**

**கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்**
**கிழக்கு வானம் தூரமில்லை**

www.nammakalvi.com



**முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்**
**பூமி ஒன்றும் பாரமில்லை**

**விடை :**

**தொடை நயங்கள் :**

**கிளிக்கு, கிழக்கு :**

முதல் எழுத்து ஒன்றி வருவது “மோனை நயம்” உள்ளது.

**முளைக்கும், முளைக்கத் :**

இதில், முதல் எழுத்து ஒன்றிவந்து “சீர் மோனை” நயமும் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து “சீர் எதுகை” நயமும் இடம் பெற்றுள்ளது.

**தூரமில்லை - பாரமில்லை :**

இதில் “மில்லை” என்னும் இறுதிச் சீர் ஒன்றி வந்து “இயைபுத் தொடை” நயம் அமைந்துள்ளது.

---

# இயல் நான்கு

கவிதைப் பேழை

## உயிர்வகை

– தொல்காப்பியர்

**மனவரைபடம்**

ஆறு அறிவு

- தொடுதல் → புல் மரம்
- சுவைத்தல் → நத்தை சிப்பி
- நுகர்தல் → கரையான் எறும்பு
- காணல் → நண்டு தும்பி
- கேட்டல் → பறவை விலங்கு
- பகுத்தறிதல் (மனம்) → மனிதன்

## ஆசிரியர் குறிப்பு

- தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர்
- இவரது இயற்பெயர் : காப்பியன்
- சோமசுந்தர பாரதியாரும் தொல்காப்பியன் இயற்றிய நூலுக்கும் தொல்காப்பியன் என்றே பெயராயிற்று என்பர்.
- இவரது காலம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.
- பல இலக்கண நூலுக்கு முதல் நூல் தொல்காப்பியம் ஆகும்.
- எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் போன்றவற்றில் மொழி இலக்கணங்கள் விளக்கப்படுகின்றன.
- பொருளதிகாரத்தில் மக்களின் அரசு, புற வாழ்வியல்கள் விளக்கப்படுகின்றன.

www.nammakalvi.com



- மனிதனின் வாழ்வை வெளிக்காட்டும் பொருள் இலக்கணம் உலகின் வேறு எந்த மொழியிலும் இல்லையென்று தமிழறிந்த உலக அறிஞர் பலர் புகழ்ந்துள்ளனர்.

## நூல் குறிப்பு

- தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் தொல்காப்பியம்.
- இந்நூல் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது.
- தமிழின் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளை இந்நூல் விளக்குகிறது.
- பல அறிவியல் கருத்துகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.
- இந்நூலில் அறிவியல் சார்ந்த கருத்தாக உயிர் வகைப்பாடு அமைந்திருப்பது தமிழர்களின் அறிவாற்றலுக்குச் சிறந்த சான்றாகும்.
- "தொல்காப்பியம் பண்டைத்தமிழ் நூல்களுக்கெல்லாம் மணிமுடியாய் விளங்குகிறது" என்று சுப்பிரமணிய ஐயர் குறிப்பிடுகிறார்.
- மூதறிஞர் வரதராசனார், "தொன்மையும் நாகரிகச் சிறப்பையும் விளக்கும் பழம்பெரும் நூல் தொல்காப்பியம்" என மொழிந்துள்ளார்.
- தொன்மையில் புலவர் பாராட்டும் பண்புகளிலும் தன்மையிலும் இறவாச் சிறப்புடைய தமிழ்நூல் தொல்காப்பியம் ஆகும்.
- பல்வேறு உரையாசிரியர்கள் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளனர். இளம்பூரணர் உரையே சிறப்புடையது.

## பிரித்து எழுதுக

1. ஒன்றறிவதுவே - ஒன்று + அறிவதுவே
2. உற்றறிவதுவே - உற்று + அறிவதுவே
3. இரண்டறிவதுவே - இரண்டு + அறிவதுவே
4. மூன்றறிவதுவே - மூன்று + அறிவதுவே
5. நான்கறிவதுவே - நான்கு + அறிவதுவே
6. ஐந்தறிவதுவே - ஐந்து + அறிவதுவே
7. ஆறறிவதுவே - ஆறு + அறிவதுவே

## இலக்கணக் குறிப்பு

1. **உயர்ந்தோர்** - வினையாலணையும் பெயர்
2. **பண்பும் அன்பும், இனமும் மொழியும்** - எண்ணும்மைகள்
3. **சொன்னோர், உணர்ந்தோர்** - வினையாலணையும் பெயர்
4. **முதுமொழி** - பண்புத்தொகை

www.nammakalvi.com



## பகுபத உறுப்பிலக்கணம்

**1. பாய்ந்து = பாய் + த்(ந்) + த் + உ**

பாய் - பகுதி
த் - சந்தி
ந் - ஆனது விகாரம்
த் - இறந்த கால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**2. மறந்த = மற + த்(ந்) + த் + அ**

மற - பகுதி
த் - சந்தி
ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**3. நெறிப்படுத்தினர் = நெறிப்படுத்து + இன் + அர்**

நெறிப்படுத்து - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை
அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**4. உணர்ந்தோர் = உணர் + த்(ந்) + த் + ஓர்**

உணர் - பகுதி
த் - சந்தி
ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

## பொருத்துதல்

1. ஓரறிவுயிர் - மரம்
2. ஈரறிவுயிர் - நத்தை
3. மூவறியுர் - கரையான்
4. நாலறிவுயிர் - வண்டு
5. ஐந்தறிவுயிர் - விலங்கு

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

1. **ஒன்றறிவதுவே உற்றறிவதுவே**
   **இரண்டறிவதுவே அதனொடு நாவே**
   **இவ்வடிகளில் அதனோடு என்பது எதைக் குறிக்கிறது?**
   அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல் **[விடை : தொடு உணர்வு]**

## கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தை இட்டு எழுதுக

1. நே __ தின் உணர்ந்தோர் நெ __ ப்படுத்தினரே (றி, ரி)
   **விடை :** நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே
2. இர __ டறி வதுவே (ன், ண்) அத __ டு நாவே (ணொ, னொ)
   **விடை :** இரண்டறி வதுவே அதனொடு நாவே.

www.nammakalvi.com



3. ஐந்த __ (றி, ரி) வதுவே அவ __ றோடு (ற், ர்) செவியே

**விடை :** ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே.

4. ஒ __ றறி (ன், ண்) வதுவே உற் __ றி வதுவே

**விடை :** ஒன்றறி வதுவே உற்றறி வதுவே.

## பாடநூல் வினாக்கள் - குறுவினா

1. **மூன்றறிவதுவே அவற்றோடு மூக்கே**
**நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே - இவ்வடிகளில் தொல்காப்பியர் குறிப்பிடும் மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உயிர்கள் யாவை?**

| வ. எண் | அறிவும் ஆற்றல் | புலன்கள் | உயிர்கள் | அறிவு |
|---|---|---|---|---|
| 1. | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் | மூக்கு | கரையான், எறும்பு | மூன்றறிவு |
| 2. | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் | கண் | நண்டு, தும்பி (வண்டு) | நான்கறிவு |
| 3. | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் | காது | பறவை, விலங்கு | ஐந்தறிவு |

## சிறுவினா

1. **அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்பு படுத்துகிறார்?**

| வ.எண் | அறிவுநிலை | உணர்வு | உயிரினங்கள் |
|---|---|---|---|
| 1. | ஓர் அறிவு உயிர் | தொடுதல் உணர்வு மட்டும் உடையவை | புல், மரம் |
| 2. | ஈரறிவு | தொடுதல் உணர்வுடன் நாவினால் சுவைத்தறிதல் உடையவை | சிப்பி, நத்தை / சங்கு, கிளிஞ்சல் |
| 3. | மூவறி உயிர் | தொடுதல், நாச்சுவை, மூக்கால், முகர்தல் கண்ணாற் காண்டல் | கரையான், எறும்பு, செல்,ஈசல், தம்பாப்பூச்சி, பட்டுப்பூச்சி |
| 4. | நான்கறிவு உயிர் | தொடுதல், நாச்சுவை, மூக்கால் முகர்தல் கண்ணாற் காண்டல் | நண்டு, தும்பி,ஈ, குளவி |
| 5. | ஐயறிவுயிர் | தொடுதல், நாக்குச் சுவை, மூக்கால் முகர்தல் கண்ணாற் காண்டல், கேட்டல் | பறவை, விலங்கு |

www.nammakalvi.com



| | | | |
|---|---|---|---|
| 6. | ஆறறிவு | தொடுதல், நாக்குச்சுவை, மூக்கால் முகர்தல், கண்ணாற் காணல், செவியாற் கேட்டல் இவை ஐந்தும் ஐம்பொறிகளால் அறியும் ஐம்புல அறிவுகள், அவற்றுடன் ஆறாவதாகிய மனத்தால் அறியும் அறிவுடைய உயிர்கள் | மனிதன் |

## எதுகையை எடுத்து எழுதுக

1. மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே

விடை :

மூன்றறி
நான்கறி } - அடி எதுகை

## மோனையை எடுத்து எழுதுக

1. ஆறறி வதுவே அவற்றோடு மனமே

விடை :

ஆறறி - அவற்றொடு

## கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
தொல்காப்பியம்.
2. இப்பாடலை எழுதியவர் யார்?
தொல்காப்பியர்.
3. ஓரறிவு அறியும் ஆற்றல் எது?
தொடு உணர்வு
4. ஈரறிவு அறியும் ஆற்றல் எது?
தொடுதல், சுவைத்தல்.
5. மூவறிவு அறியும் ஆற்றல் எது?
தொடுதல், சுவைத்தல், நுகர்தல்.
6. ஓரறிவு உயிர்வகை எவை?
புல், மரம்

www.nammakalvi.com



**7. ஈரறிவு உயிர் வகை எவை?**

சிப்பி, நத்தை.

**8. மூவறிவு உயிர் வகை எவை?**

கரையான், எறும்பு.

**9. நான்கறிவு உயிர் வகை எவை?**

நண்டு, தும்பி.

**10. ஐந்தறிவு உயிர் வகை எவை?**

பறவை, விலங்கு.

**11. ஆறறிவு உயிர் வகை எது?**

மனிதன்.

**12. பொருள் கூறுக :** நெறி

நெறி - வழி

**13. இலக்கணக் குறிப்பு தருக :** உணர்ந்தோர்

உணர்ந்தோர் - வினையாலணையும் பெயர்

**14. பாடலில் இடம்பெறும் இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

நாவே, மூக்கே, கண்ணே, செவியே, மனனே.

**15. இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பு எழுதுக.**

உயிர் வகை.

---

## கற்பவை கற்றபின்

1. அ) தட்டான் பூச்சி தாழப்பறந்தால் தப்பாமல் மழை வரும்.

ஆ) வானில் பறக்குது குதிரை

பறக்கப் பறக்க வால் குறையும் குதிரை - அது என்ன?

**விடை :**

விமானம்.

இவை போன்ற அறிவியல் செய்திகள் கொண்ட பழமொழிகள், விடுகதைகளைப் படித்தும் கேட்டும், அவற்றின் அறிவியல் அடிப்படையை வகுப்பறையில் கலந்துரையாடுக.

---

**அறிவியல் சார்ந்த பழமொழிகள், விடுகதைகள்**

**விடுகதைகள் :**

1. செல்லும் இடமெல்லாம் நானும் வருவேன், கையிலும் வைக்கலாம், பையிலும் வைக்கலம், நானின்றி இன்று மனித உயிர்கள் இல்லை - நான் யார்?

**விடை :** அலைபேசி

2. காற்றுப் புக முடியாத இடத்திலும் நான் புகுவேன். எங்கெங்கு சென்றாலும் அங்குள்ள தன்மையை செய்தியாகப் புகைப்படமாக அனுப்புவேன். ஆராய உகந்தவன் - நான் யார்?

**விடை :** செயற்கைக்கோள்.

**பழமொழிகள் :**

1. அறிவை மேம்படுத்துவது அறிவியல்
2. அறிவியல் இல்லாத ஆன்மீகம் முடமாகும்.
3. ஆறாவது அறிவே அறிவியல்
4. அறிவியல் அறிவை மேம்படுத்தும் வாழ்வை மேம்படுத்தும்.
5. இன்றைய அறிவியலே நாளைய தொழில்நுட்ப வளர்ச்சி

**2. 'விமான நிலையத்தில் நான்' - கற்பனையாக கதை ஒன்றினை எழுதுக.**

சென்னையிலிருந்து சிங்கப்பூர் செல்வதற்கான சென்னை விமான நிலையத்திற்கு நான் சென்றிருந்தேன். என் மாமா அங்கு உள்ளார். பள்ளி விடுமுறையில் குடும்பத்தோடு அங்குச் செல்ல நேர்ந்தது. விமானப் பயணிகளை அங்குள்ள அதிகாரிகள் சோதனை செய்தார்கள். வரிசையில் நின்ற என் முகத்தையும் கடவுச்சீட்டிலுள்ள என்

www.nammakalvi.com



புகைப்படத்தையும் சரிபார்த்தனர். என்னுடைய பெயர் மற்றும் அனைத்துத் தகவல்களையும் சரிபார்த்து உள்ளே அனுமதித்தனர். என்னுடைய பைகளை நன்றாக சோதனை செய்த பின் ஓரிடத்தில் எங்கள் அனைவரையும் அமர வைத்தனர். சிறிது நேரத்தில் விமானம் வந்தது. மகிழ்ச்சியுடன் சென்று விமானத்தில் ஏறினேன். பேருந்து, புகைவண்டிகளில் பயணம் செய்த நான், முதன் முதலில் விமானத்தில் பயணம் செய்வதை எண்ணி மகிழ்ச்சி கொண்டேன். நீங்களும் என்னைப் போல் விமானத்தில் பயணம் செய்யுங்கள். வாழ்த்துகள்.

---


**இயல் நான்கு**

விரிவானம்

# விண்ணையும் சாடுவோம்

4AZI4P

**மனவரைபடம்**




## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. விடை வரிசையைத் தேர்க.**

அ) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.

ஆ) இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி

1. நேவிக், சித்தாரா 2. நேவிக், வானூர்தி

3. வானூர்தி, சித்தாரா 4. சித்தாரா, நேவிக **[விடை : சித்தாரா, நேவிக்]**

---

## குறுவினா

**1. செயற்கைக்கோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியைப் பற்றி திரு. சிவன் கூறுவது யாது?**

- செயற்கைக்கோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியின் பெயர் சித்தாரா.
- இது செயற்கைக்கோள் பற்றிய முழு விவரங்களையும் மின்னிலக்க முறையில் சேகரிக்கும்.

www.nammakalvi.com



- அதைப் பயன்படுத்தி வாகனத்தின் செயல்பாடு எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டியே கணிக்கலாம்

## சிறுவினா

**1. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு யாது?**

**விவசாய உற்பத்தி :**

செயற்கைக் கோள்களினால் ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்தின் மூலம் உற்பத்தியைப் பெருக்க வழிவகைகளை அரசுக்குத் தெரிவிக்க முடிகிறது.

- அரசானது பற்பல விவசாய முன்னேற்றத் திட்டங்களை வகுக்க முடிகிறது.
- நிலத்தில் எந்த இடத்தில் நீரின் அளவு இருக்கும் என்பதைச் செயற்கைக் கோள் மூலம் அறிவதால் அதற்கேற்பப் பயிர் செய்ய முடிகிறது.
- விவசாயத்தில் தன்னிறைவு ஏற்படும் போது மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.
- கடல், பகுதியில் எந்த எந்த இடங்களில் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் என்று மீனவர்களுக்குச் சொல்ல முடிகிறது.
- திறன்பேசிகள், தானியக்கப் பண இயந்திரம் அட்டை பயன்படுத்தும் இயந்திரம் இதற்கெல்லாம் செயற்கைக்கோள் பயன்படுகிறது. மக்கள் செயல்படுத்தும் இணையச்செயல்கள் அனைத்திற்கும் செயற்கைக்கோள் அவசியம் தேவை.
- இவ்வாறு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்குச் செயற்கைக் கோள்கள் பயன்படுகின்றன.

## நெடுவினா

**1. இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விளக்குக.**

**முன்னுரை :**

ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகசைப்பு உலகில் எங்கோ எதிர்விளைவு ஏற்படுத்தும் என்று அறிவியல் கூறுகிறது. ஆனால், நம் இந்திய விண்வெளித் துறை விண்ணில் அனுப்பிய செயற்கைக்கோள்கள் மக்களின் வாழக்கைத் தரத்தில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கினறன. இதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**செயற்கைக்கோள் :**

ஒரு செயற்கைக்கோள் ஏவுதளத்தில் என்ன மாதிரி மென்பொருள் பயன்படுத்த வேண்டும். வாகனத்தின் வடிவம் எப்படி இருக்க வேண்டும, எவ்வளவு உயரம், எவ்வளவு அகலம், எந்தப் பாதையில் போக வேண்டும் ஆகியவற்றை முடிவு செய்ய வேண்டும்.

**சித்தாரா :**

இச்செயலி செயற்கைக்கோள் ஏவு ஊர்தி பற்றிய முழு விவரங்களையும் மின்னிலக்க முறையில் சேகரிக்கும். அதைப் பயன்படுத்தி வாகனத்தின் செயல்பாடு எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டியே கணிக்கலாம். இதைப் பயன்படுத்தி தான் பி.எஸ்.எல்.வி. ஏவப்பட்டது. இப்போது வரை நம்முடைய நாட்டிலிருந்து ஏவப்படும் அனைத்துச் செயற்கைக்கோள் ஏவு ஊர்திகளும் "சித்தாரா" செயலியைப் பயன்படுத்தித் தான் விண்ணில் ஏவப்படுகின்றன.

www.nammakalvi.com



**பயன்கள் :**

ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்தின் மூலம் எவ்வளவு விளைச்சல் கிடைக்கும் என்பதைக் கணித்து அரசுக்குத் தெரிவிக்க முடிகிறது. இதைப் பயன்படுத்தி அரசால் அதற்கு ஏற்ற திட்டங்கள் வகுக்க முடிகிறது.

நிலத்தின் எந்த இடத்தில் நீரின் அளவு எவ்வளவு இருக்கும் என்பதைச் செயற்கைக்கோள் மூலம் சொல்கிறோம். கடல் பகுதியில் எந்த எந்த இடங்களில் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் என்றும் மீனவர்களுக்குச் சொல்ல முடிகிறது.

தானியக்கப் பண இயந்திரம், அட்டைப் பயன்படுத்தும் இயந்திரம் இதற்கெல்லாம் செயற்கைக்கோள் பயன்படுகிறது. மக்கள் பயன்படுத்தும் இணையச் செயல்கள் அனைத்திற்கும் செயற்கைக்கோள் அவசியம். தேவை நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்குச் செயற்கைக்கோள் பயன்படுகின்றது.

**எதிர்காலத் திட்டம் :**

இதுவரை இந்தியாவுக்காக 45 செயற்கைக்கோள்கள் செலுத்தப்பட்டுள்ளன. ஆனால் நம்முடைய தேவைகளுக்கு மேலும் 45 செயற்கைக்கோள்கள் தேவை. இப்போது இருக்கும் வசதி வாய்ப்புகளை வைத்து இவற்றை நிறுவக் குறைந்தது நான்கு ஆண்டுகளாவது ஆகும்.

**தொழில் நுட்பம் :**

தொழில் நுட்பம் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வருகிறது. குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெறுவதே சிறப்பானது. தற்போது மறுபயன்பாட்டிற்கு ஏற்ற ஏவு ஊர்திகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். சந்திராயன் -1 நிலவின் புறவெளியை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. செயற்கைக்கோளை நிலவில் இறக்குவுதன் விளைவை ஆராய்ந்து பார்த்துவிட்டோம். சந்திராயன் -2 நிலவில் இறங்கும் இடத்தைக் கூடத் தீர்மானித்துவிட்டோம்.

**முடிவுரை :**

நம் நாட்டிற்குத் தேவையான செயற்கைக்கோளை விண்ணில் அனுப்பி நம் தேவைகளை நிறைவு செய்வதே இஸ்ரோவின் செயல்பாடு விண்வெளி ஆய்வு நம் மண்ணில் உள்ளோர்க்கு என்றும் பயன்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## கற்பவை கற்றபின்

1. **பி.எஸ்.எல்.வி. (PSLV) பற்றியும் ஜி.எஸ்.எல்.வி. (GSLV) பற்றியும் செய்திகளைத் திரட்டி விளக்கப் படத்தொகுப்பு உருவாக்குக.**

| பி.எஸ்.எல்.வி. | ஜி.எஸ்.எல்.வி. |
|---|---|
| செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தும் ராக்கெட். | இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட்டை உருவாக்குகிறது. |
| இந்திய விண்வெளி ஆய்வு மையமான ISRO வினால் இயக்கப்படும். | இது ஒரு டெல்டா - II வகை செயற்கைக்கோள் (ஏவு ஊர்தி). இஸ்ரோவினால் இயக்கப்படும். |
| மீளப்பாவிக்க முடியாத (இழக்கத்தக்கதொரு ஏவு) அமைப்பு. | மீளப்பாவிக்க முடியாத (இழக்கத்தக்கதொரு ஏவு) அமைப்பு |
| அமைப்பு ஐ.எஸ்.ஆர்.ஓ. | அமைப்பு ஐ.எஸ்.ஆர்.ஓ. |
| நாடு - இந்தியா | நாடு - இந்தியா |

www.nammakalvi.com



| | |
|---|---|
| உயரம் - 44மீ, விட்டம் 2.8 மீ (- நிறை - 294.000கிகி). | உயரம் - 49 மீ (160 அடி) விட்டம் 2.8 (9.1 அடி) நிறை (402.00 கிகி) 886.000 பவுண்டு. |
| படிகள் - 4. | படிகள் - 3. |
| கொள்திறன் Pay Load to LEO 3.800 கிகி. | கொள்திறன் - 5500 பவுண்டு 2.500 கிகி. |
| நிலை - நடப்பில் உள்ளது. | நிலை - நடப்பில் உள்ளது. |
| ஏவல் பகுதி - சதீஷ் தவான். | ஏவல் பகுதி - சதீஷ் தவான். |
| விண்வெளி மையம் - ஸ்ரீஹரிகோட்டா. | விண்வெளி மையம் - ஸ்ரீஹரிகோட்டா. |
| மொத்த ஏவல்கள் - 13. | மொத்த ஏவல்கள் - 6. |
| வெற்றி - 11, தோல்வி - 1. | வெற்றி - 2, தோல்வி - 3. |
| முதல் பயணம் செப் 20, 1993. | முதல் பயணம் - 18 ஏப்ரல் 2001. |
| No. Boosters - 6 | Thrust 680 கி. நியூட்டன் |
| Thrust 502.600 கிகி. | Total Thrust 2720 கி. நியூட்டன். |
| குறித்த உந்தம் - 262 செ. | குறித்த உந்தம் - 262 நொடிகள். |
| எரி நேரம் - 44 செக் | எரிநேரம் - 160 நொடிகள். |
| எரிபொருள் - HTPB (திண்மம்). | எரிபொருள் - டைநைடிரசன் டெட்ராக்சைடு ($N_2O_4$) |

**2. வகுப்புத் தோழர் ஒருவரை அறிவியல் அறிஞராக அமரச் செய்து வகுப்பறையில் கற்பனையாக நேர்காணல் ஒன்றை நிகழ்த்துக.**

**கற்பனை நேர்காணல்**

**மாணவன் 1:** அறிஞர் அவர்களே, உங்களுக்கு எனது வணக்கம். (போட்டி காண்பவர்)

**மாணவன் 2:** வணக்கம். ஐயா. (அறிஞர்)

**மாணவன் 1:** ஐயா, நீங்கள் இந்த ஆண்டு நிலவில் ஆராய்ச்சி செய்யும்பொருட்டு ஒரு செயலியை உருவாக்கியுள்ளீர்கள் அன்றோ? அதன் செயல்பாடுகளை விளக்க முடியுமா?

**மாணவன் 2:** ஆம். சொல்கிறேன். இந்தச் செயலின் பெயர் 'சந்திரயான்' என்பதாகும். இச்செயலி நிலவில் உள்ள மண், கல் மற்றும் செடி, கொடிகள் உள்ளனவா என்பனவற்றை ஆராய உதவுகிறது.

**மாணவன் 1:** நாம் நிலவை ஆராய்வதன் பயன்கள் என்னென்ன?

**மாணவன் 2:** நிலவில் மனிதன் வாழ முடியுமா? அங்கு மனிதன் வாழ்வதற்கான சாத்தியம் உள்ளதா? என்பனவற்றை ஆராய்வதே நோக்கமாகும்.

**மாணவன் 1:** இந்த ஆராய்ச்சியில் ஏதேனும் முன்னேற்றம் உண்டா?

**மாணவன் 2:** தற்பொழுது நம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'இஸ்ரோ' வானது செயற்கைக்கோள்களை அனுப்பியுள்ளது. அச்செயற்கைக்கோள் தான் நான் கண்டறிந்த செயலியைப் பயன்படுத்தும் வகையில் பொருத்தப்பட்டுள்ளது.

**மாணவன் 1:** அப்படியா, ஐயா மிக்க மகிழ்ச்சி. தங்கள் பணி மேன்மேலும் சிறக்க வேண்டும் என்று வாழ்த்தித் தங்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

**மாணவன் 2:** மிக்க நன்றி.

www.nammakalvi.com



இயல் நான்கு

கற்கண்டு

# வல்லினம் மிகா இடங்கள்

## பாடநூல் வினாக்கள் - பலவுள் தெரிக

**1. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

நாம் பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகும், மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

**எ.கா :**

வண்டித் தொடர் - வண்டிகள் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றன.

வண்டி தொடர் - வண்டி செல்கிறது அதைப்பின் தொடர்ந்து செல்.

## வல்லினம் மிகா இடங்கள்

தோப்புக்கள் - தோப்புகள்

கத்தி கொண்டு வந்தான் - கத்திக்கொண்டு வந்தான்

மேற்கண்ட சொற்களில் வல்லினம் மிகும்போது ஒரு பொருளும் மிகாதபோது வேறொரு பொருளும் வருவதை அறியலாம். நாம் பேசும்போதும் எழுதும்போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

**வல்லினம் மிகா இடங்கள் :**

தற்கால உரைநடையில் வல்லினம் மிகா இடங்களாகக் கீழ்க்காண்பவற்றைக் கூறலாம்.

| | |
|---|---|
| அது செய்<br>இது காண் | அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| எது கண்டாய்?<br>எவை தவறுகள்? | இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| குதிரை தாண்டியது.<br>கிளி பேசும். | எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது. |
| அண்ணனோடு போ.<br>எனது சட்டை | மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது. |
| தந்தையே பாருங்கள்.<br>மகளே தா. | விளித் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| வந்த சிரிப்பு<br>பார்த்த பையன் | பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| நாடு கண்டான்.<br>கூடு கட்டு. | இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது. |
| வரும்படி சொன்னார்.<br>பெறும்படி கூறினார். | படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது. |

www.nammakalvi.com



| | |
|---|---|
| வாழ்க தமிழ்.<br>வருக தலைவா! | வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது. |
| குடிதண்ணீர், வளர்பிறை,<br>திருவளர்செல்வன் | வினைத்தொகையில் வல்லினம் மிகாது. |
| ஒரு புத்தகம், மூன்று கோடி | எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணர வல்லினம் மிகாது. |
| தாய் தந்தை, இரவு பகல் | உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது. |
| அன்று சொன்னார். என்று தருவார்.<br>அவராவது தருவதாவது<br>யாரடா சொல். எனடி செல்கிறாய்?<br>கம்பரைப் போன்ற கவிஞர் யார்? | அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| அவ்வளவு பெரியது. அத்தனை<br>சிறியது. அவ்வாறு பேசினான்.<br>அத்தகைய பாடங்கள், அப்போதைய<br>பேச்சு. அப்படிப்பட்ட காட்சி.<br>நேற்றைய சண்டை. | அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, அத்தகைய, இத்தகைய, எத்தகைய, அப்போதைய, இப்போதைய, எப்போதைய, அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| என்னோடு சேர். மரத்திலிருந்து பறி.<br>குரங்கினது குட்டி. | மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| தமிழ் படி. (ஐ) கை தட்டு (ஆல்) வீடு<br>சென்றாள் (கு) கரை பாய்ந்தான்<br>(இருந்து) | இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், வேற்றுமைத் தொகைளில் வல்லினம் மிகாது. |
| தலைவி கூற்று. தொண்டர் படை. | நிலைமொழி உயர்திணையாய் அமையும் பெயர்த் தொகையில் வல்லினம் மிகாது. |
| உறு பொருள் நனி நின்றான்.<br>கடி காவல் | சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய ஊரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| பார் பார் சலசல | அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது. |
| கருத்துகள், பொருள்கள்,<br>வாழத்துகள் | கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. (மிகும் என்பர் சிலர்) |
| பைகள், கைகள் | ஐகார வரிசை உயிர்மெய் ஓரெழுத்துச் சொற்களாய் வர, அவற்றோடு கள் விகுதி சேரும்பொது வல்லினம் மிகாது. |

## கற்பவை கற்றபின்

**1. வல்லினம் வருமா?**

அ) தோழி __ கூற்று - தோழி கூற்று

ஆ) பெரிய __ தம்பி - பெரிய தம்பி

இ) சிறிய __ பறவை - சிறிய பறவை

ஈ) பழகு __ தமிழ் - பழகு தமிழ்

உ) இது __ கேள் - இது கேள்

ஊ) எலி __ கடிக்கும் - எலி கடிக்கும்

எ) ஓடிய __ குதிரை - ஓடிய குதிரை

ஏ) தரும்படி __ சொன்னார் - தரும்படி சொன்னார்

ஐ) வாழ்க __ தலைவர் - வாழ்க தலைவர்

ஒ) கார் __ காலம் - கார் காலம்

**விடை :** வல்லினம் மிகாது.

**2. வல்லினம் இடலாமா?**

அ) வாழ்த்து __ கள்

ஆ) எழுத்து __ கள்

www.nammakalvi.com



இ) திருநிறை __ செல்வன் ஈ) திருவளர் __ செல்வி

**விடை :**

அ) வாழ்த்துகள்
ஆ) எழுத்துகள் } - வல்லினம் வராது.
இ) திருநிறைச் செல்வன்
ஈ) திருவளர்ச் செல்வி } - வல்லினம் வரும்.

**3. எது சரி? எது தவறு? காரணம் கூறுக.**

அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - சரி

**காரணம் :** (நிலைமொழி ஐகார ஈறு மிகும்; வருமொழி வல்லினம் வரும்).

ஆ) அத்தனைச் சிறிய - தவறு

**காரணம் :** (அத்தனை, இத்தனை என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது).

இ) ஆத்திச் சூடி - தவறு

**காரணம் :** (இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது).

ஈ) எடுத்துக்காட்டுகள் - சரி

**காரணம் :** (வன்தொடாக் குற்றியலுகரங்கள், நிலைமொழியால் இருந்த புணர்ச்சியில் வலினம் வரும்).

உ) கீழ்பக்கம் - தவறு

**காரணம் :** (திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்).

ஊ) சான்றோர் பேரவை - சரி

**காரணம் :** (பலர்பால் படர்க்கை வினைமுற்றின் பின் சில இடங்களில் வல்லினம் மிகாது)

எ) சென்னைப் பல்கலைக் கழகம் - சரி

**காரணம் :** (இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் வரும்).

ஏ) தயிர்ச்சோறு - சரி

**காரணம் :** (இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் வரும்).

**4. கீழ்க்காணும் தொடர்களில் வல்லினம் மிகும், மிகா இடங்களைக் கண்டறிந்து அதற்கான இலக்கணம் அறிக.**

அ) வங்கி கடன் - வங்கிக் கடன்

(இகர ஈற்று வரும்போது ஏற்றுமிகும்).

ஆ) பழங்களை பறிக்காதீர்கள் - பழங்களைப் பறிக்காதீர்கள்.

(இரண்டாடம் வேற்றுமை வரியில் வல்லினம் மிகும்).

இ) திட்ட குழு - திட்டக் குழு

(திட்டம் என்பது மகர ஈறு வரும்போது வல்லினம் மிகும்).

ஈ) அரசு ஆணை பிறப்பித்தது - அரசு ஆணை பிறப்பித்தது.

(இரண்டாம் வேற்றுதைத் தொகையில் ஒற்று மிகாது)

உ) மருந்து கடை - மருந்துக் கடை

(மென்றொடர் குற்றியலுகரம் ஒற்று மிகும்)

ஊ) வேலையில்லா பட்டதாரி - வேலையில்லாப் பட்டதாரி

(ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஒற்று மிகும்).

எ) சிறப்பு பரிசு - சிறப்புப் பரிசு

(உகர ஈற்று புணர்ச்சி வல்லினம் மிகும்).

www.nammakalvi.com



## மொழியை ஆள்வோம்

### மொழி பெயர்க்க

Bottle xylophone : Make music with bottles

You will need : 6 glass bottles, Wooden spoon, Water, Food coloring.

1. Fill one bottle with water, then fill each other bottle with slightly less than the bottle next to it.
2. Add some food coloring to help you to see the different levels of water.
3. Tap bottles with the end of a wooden spoon. Can you play a true?

**Water music :**

Hitting the bottles with the spoon makes them vibrate and produce a sound. The more the bottle vibrates, the higher the note will be. The more water in a bottle, the less it vibrats, so less water means higher notes.

**விடை :**

கண்ணாடிக் குவளை சைலோபோன் கண்ணாடிக் குவளைகளை வைத்து இசை அமைத்தல். உங்களுக்குத் தேவை 6 கண்ணாடிக் குவளைகள், ஒரு மரக்கரண்டி, தண்ணீர், வண்ணச்சாயநீர்.

1. ஒரு கண்ணாடி குவளை முழுவதையும் நீரால் நிரப்பு, மற்றவற்றில் குறைத்துக் குறைத்து நீர் நிரப்பு.
2. நீர் பல அளவுகளில் உள்ளதை நீ அறிய, வண்ணச்சாய நீரைக் கலக்கவும்.
3. மரக்கரண்டி முனையால் குவளைகளைத் தட்டுங்கள், இசை எழுப்ப உங்களால் முடிகிறதா?

**தண்ணீர் இசை :**

மரக்கரண்டியைக் கொண்டு குவளைகளைத் தட்டியதில் அவை அதிர்வுகளையும் ஒலியையும் ஏற்படுத்தின. அதிகத் தண்ணீர் இருந்த குவளைகள் குறைந்த அதிர்வுகளையும், குறைந்த நீர் இருந்த குவளைகள் அதிக அதிர்வுகளையம் ஒலியையும் ஏற்படுத்தின.

---

### பின்வரும் பத்தியில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை எழுதுக

நாக்குதான் ஐம்புலன்களிலேயே ரொம்ப வீக்கு! அதற்கு நான்கு ஆதார ருசிகள்தாம் தெரியும். எலுமிச்சையின் புளிப்பு, சர்க்கரையின் தித்திப்பு, காபியின் கசப்பு, உப்பு. இவை தவிர ஸேவரி என்று சொல்கிற டேஸ்ட் எல்லாம் இந்த நான்கு ஆதார ருசிகளின் கலப்புதான். இந்த ருசிகளைத் தொட்டு அறிய நாக்கில் வெவ்வேறு இடங்கள் உண்டு. தித்திப்பு - நுனி நாக்கு, உப்பு - பரவலாக, குறிப்பாக நுனியில். கசப்பு - உள்நாக்கு. புளிப்பு, ஸேவரி - நாக்கின் வலது - இடது புறங்கள்! ஒரு சராசரி மனிதனுடைய நாக்கில் 9,000 சுவை அரும்புகள் உண்டு. அலட்டல் வேண்டாம். குழந்தையின் நாக்குடன் ஒப்பிடும்போது இது ஒன்றுமே இல்லை. ஏதாவது மருந்தை நாக்கில் தொட்டால் குழந்தைகள் என்னமாக எக்ஸ்பிரஷன் காட்டுகின்றன! சுவைக்கு வாசனையும் சேரவேண்டும். இரண்டும் ஒத்துழைத்தால்தான் பாதாம் அல்வா, ஐஸ்கிரீம் போன்றவற்றை ரசிக்க முடியும். மூக்கைப் பிடித்துக் கொண்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டுப் பாருங்கள். ஜில்லென்று இருக்கும். அவ்வளவே. கூடவே சூடும், உணவின் தோற்றமும் முக்கியம். மூக்குக்கு மொத்தம் ஏழு வாசனைகள். கற்பூர வாசைன, பெப்பர்மிண்ட் வாசனை, மலர்களின் வாசனை, மஸ்க் என்னும் அரபுசேக் செண்ட் வாசனை,ஈத்தர் அல்லது பெட்ரோல் வாசனை, அழுகிய

www.nammakalvi.com



முட்டை வாசனை, காட்டமான அமில வாசனை. இந்த ஏழு வாசனைகளின் கலப்புகளால் நம்மால் ஆயிரக்கணக்கான வாசனைகளை உணர முடிகிறது. (ஏன்? எதற்கு? எப்படி? - சுஜாதா)

**விடை :**

1. வீக்கு - பலவீனம்
2. ருசிகள் - சுவைகள்
3. காபி - கொட்டை வடிநீர்
4. ஸேவரி - காரம்
5. டேஸ்ட் - ருசி, சுவை
6. எக்ஸ்பிரஷன் - வெளிப்பாடு
7. வாசனை - மணம்
8. ஐஸ்கிரீம் - பனிக்கூழ்
9. ஜில் - குளிர்ச்சி
10. பெப்பர்மிண்ட - மிளகுச்சுவை இனிப்பு
11. மஸ்க் - வாசனை திரவியம்
12. ஈத்தர் - வண்ணமில்லாத நீர்
13. பெட்ரோல் - மசகு எண்ணெய்
14. அரபுசேக் செண்ட் - அரபு நாட்டு வாசனைத் திரவியம்

## கதையைப் படித்து உரையாடலாக மாற்றுக

ஒரு சிப்பி, இன்னொரு சிப்பியிடம் சொன்னது - 'ஐயோ, என்னால் வலி தாங்கமுடியவில்லை' - 'ஏன்? என்னாச்சு?' ன்று விசாரித்தது இரண்டாவது சிப்பி.

'எனக்குள் ஏதோ ஒரு கனமான உருண்டை, பந்து உருள்வதுபோல் இருக்கிறது. ரொம்ப வலி'

இதைக் கேட்டதும் இரண்டாவது சிப்பிக்கு மிகுந்த மகிழ்ச்சி, பெருமையுடன் நெஞ்சை நிமிர்த்தி,'ஆகா! நான் எந்த வலியும் இல்லாமல், நலமாக இருக்கிறேன்' என்றது உற்சாகமாக.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு நண்டு, இரண்டாவது சிப்பியிடம் சொன்னது - 'உனக்கு எந்த வலியும் இல்லை என்பது உண்மையாக இருக்கலாம். வலியைத் தாங்க விரும்பாத நீ எப்பொழுதும் இப்படியே வெறுமையாகக் கிடக்க வேண்டியதுதான். ஆனால், இப்போது சிரமப்படுத்தும் அந்த வலி, இன்னும் சில நாள்களில் ஓர் அழகான முத்தாக உருவெடுக்கும். அது பெருமை தேடித்தரும்'.

**விடை :**

**சிப்பி 1** : ஐயோ, என்னால் வலி தாங்க முடியவில்லையே.

**சிப்பி 2** : ஏன் என்னாச்சு?

**சிப்பி 1** : எனக்குள் ஏதோ ஒரு கனமான உருண்டை, பந்து உருள்வதுபோல் இருக்கிறது, ரொம்ப வலி

**சிப்பி 2** : ஆகா! நான் எந்த வலியும் இல்லாமல், நலமாய் இருக்கிறேன்.

**நண்டு** : உனக்கு எந்த வலியும் இல்லாமல் இருக்கலாம். வலியைத் தாங்க விரும்பாத நீ, எப்பொழுதும் இப்படியே வெறுமையாகக் கிடக்க வேண்டியதுதான். ஆனால் இப்போது சிரமப்படுத்தும் அந்த வலி, இன்னும் நாள்களில், ஓர் அழகான முத்தாக உருவெடுக்கும். அது பெருமை தேடித்தரும்.

## செய்து கற்க

**1. செய்தித்தாள்களில் இடம்பெற்றுள்ள ஒரு வாரத்திற்குரிய அறிவியல் செய்திகளைப் படித்துக் குறிப்பிடுக.**

நாள் : 18.04.20

சனிக்கிழமை

www.nammakalvi.com



**தினமணி**

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து புதிய செயலி உருவாக்கிய திண்டுக்கல் மாணவர்களுக்கு முதல் பரிசு.

சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைப் பொதுமக்களிடம் எளிதாகக் கொண்டு செல்வதற்கான புதிய செயலி மற்றும் இணைய முகவரி உருவாக்கி இருக்கின்றனர் மாணவர்கள்.

நாள் : 18.04.20

சனிக்கிழமை

**தி இந்து**

**மம்மி பூனை**

எகிப்தில் பூனை கடவுளின் ஒரு வடிவம். அரசர் குடும்பத்தைப் போலவே பூனைகளையும் பாடம் பண்ணிக் காத்துவந்தனர். பிரமிடுகளிலுள்ள சுவற்றில் புனிதப் பூனைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இது பற்றி பிரபல சூழலியல் எழுத்தாளர், சு. தியோடர் பாஸ்கரன் கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

நாள் : 17.04.20

வெள்ளிக்கிழமை

**தினமணி**

ஐ.ஆர்.என்.எஸ் ஐ செயற்கைக்கோள் விண்ணில் வெற்றிகரமாக நிலைநிறுத்தம். செயற்கைக்கோளுடன் பி.எஸ்.எல்.வி..சி. 41. ராக்கேட் ஸ்ரீஹரிகோட்டா ஆராய்ச்சி மைய ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது. செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்து அதன் தலைவர் சிவன் கூறினார்.

2. **அங்காடியில் வாங்கிய உணவுப் பொருளின் உருவாக்க நாள், முடிவு, நாள், உறையில் அச்சடிக்கப்பட்ட உணவுப்பொருளின் ஆற்றல், குறியீட்டுப் பட்டை (Barcode) ஆகியவற்றின் விவரங்களைக் கொண்டு உணவுப் பொருளின் உண்மைத்தன்மையை எப்படி அறிவது?**

**விடை :**

நாம் அங்காடிக்குச் சென்று, உணவுப் பொருள், குளிர்பானங்கள், அழகுசாதனப் பொருள்கள் போன்றவற்றை வாங்கும்போது, அதன் உறைகளிலோ அல்லது மேல் அட்டைப் பெட்டியிலோ குறியீட்டு பட்டை (Barcode) அமைந்திருக்கும். அதன் உண்மைத் தன்மையை ஆராயும் முறை குறியீட்டுப் பட்டை இடம் பெற்றிருக்கும் பகுதியை கணினியுடன் கூடிய ஒளிக்கதிர் மூலம் வருடும் போது (Scanning) அப்பொருளின்

- எடை
- நாள்
- விலை
- எந்த நாள் வரை பயன்படுத்தலாம் (முடிவு நாள்)
- உற்பத்தி செய்த இடம்
- அப்பொருளில் அடங்கியிருக்கும் பிறபொருள்களின் அளவு, தன்மை, உற்பத்தி உரிமம் போன்ற அனைத்து விபரங்களும் திரையில் தெரியவரும். இம்முறையில் தான் ஒரு பொருளை வாங்கும்பொழுது ஆராய்ந்து வாங்குதல் வேண்டும்.

## நயம் பாராட்டுக

**பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்ச்சிலிர்க்கும்**
**சிங்கமே வான வீதி திகுதிகு என எரிக்கும்**
**மங்காத தணற்பி ழம்பே மாணிக்கக் குன்றே தீர்ந்த**
**தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே**

www.nammakalvi.com



**கடலிலே போடி போடிக் கதிர்க் கைகள் ஊன்று கின்றாய்**
**நெடுவானில் கோடிகோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி**
**இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ**
**அடங்கநின் ஒளிஅு ளாவ அமைந்தனை! பரிதி வாழி!**

**- பாரதிதாசன்.**

**முன்னுரை :**

புதுச்சேரியில் பிறந்த பாரதிதாசன், பாரதியார் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். பாவேந்தர், புரட்சிக் கவிஞர் என அழைக்கப்பட்டார். குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, அழகின் சிரிப்புப் போன்ற அழியாக் காவியங்களை இயற்றியவர். அவர் எழுதியுள்ள இப்பாடலில் அமைந்துள்ள நயங்களைப் பற்றிக் காண்போம்.

**பொருள் நயம் :**

**வழைக்குக் குருத்தழகு**
**பாடலுக்குக் கருத்தழகு**

**திரண்ட கருத்து :**

புதுப்பிடரிமயிர் சிலிர்க்கும் சிங்கம் போலப் பொங்கி எழுந்து, வான வீதி முழுதும் மங்காது எரியும் வெப்பம் மிகுந்த பிழம்பு மாணிக்கக் குன்றுபோல் ஒளி வீசும் தங்கத் தகட்டான பெரியவிளக்கு நெடுவானிலிருந்து தன்னுடைய ஒளிக் கதிர்களைக் கடல், மணல், காடு, பொய்கை, ஆறு என அனைத்தின் மீது படரச் செய்து என்றும் மங்காத ஒன்றாக வளர்ந்திருக்கும் சூரியனே நீ வாழ்வாயாக எனப் பாரதிதாசன் பாடுகிறார்.

**மையக்கருத்து :**

கதிரவனின் பெருமைகளை இப்பாடல் மூலம் பாரதிதாசன் வருணிகக்கின்றார்.

**தொடை நயம் :**

**தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்**

**மோனைத் தொடை :**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடை எனப்படும்.

**எ.கா :** பொங்கியும் பொலிந்தும் - சீர்மோனை

**எதுகைத் தொடை :**

அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடை எனப்படும்.

பொங்கியும், சிங்கமே, மங்காதே, தங்கத்தின் - அடி எதுகை.

**சொல் நயம் :**

**அர்ச்சுனனுக்கு வில்லு**
**பாடலுக்குச் சொல்லு**

பாரதிதாசனின் இப்பாடலில் சொல்நயம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. குறிப்பாக "மங்காத தணற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவிளக்கே! என்ற வரிகளில் சொல்நயம் மிளிர்வதைக் காணலாம்.

**சுவை நயம் :**

**நாவிற்கு அறுசுவை**
**பாவிற்கு எண் சுவை**
**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை - என**

www.nammakalvi.com



அப்பாலெட்டே மெய்ப்பாடென்க என்பதற்கேற்ப இப்பாடலில் நெடுவானில் கோடி கோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி என்ற வரிகளில் பெருமிதச் சுவை மிகுந்துள்ளதைக் காணலாம்.

**அணி நயம் :**

**கோவிலுக்கு அழகு மணி**
**செய்யுளுக்கு அழகு மணி**

உவமைக்கும் பொருளுக்கும் இடையே உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும். "மங்காத தணற்பிழம்பே! மாணிக்கக்குன்றே!" என்ற வரியில் மங்காத தணல் போன்ற பிழம்பே! மாணிக்கம் போன்ற குன்றே! எனப்பொருள் வருவதால் இதில் போல என்ற உவம உருபு மறைந்து வந்துள்ளதால் இதில் எடுத்துக்காட்டு உவமை அணி அமைந்துள்ளது.

**முடிவுரை :**

'பொங்கியும் பொலிந்தும்' எனத் தொடங்கும் பாரதிதாசன் பாடலில் பொருள் நயம், தொடை நயம், சுவை நயம், சொல் நயம், அணி நயம் எனப் பல நயங்கள் அழகுற அமைந்திருப்பதினால் இப்பாடலை நாம் படிக்கும் போது மட்டுமன்று பிறர் படிக்க நாம் கேட்கவும் இனிமைநிறை பாடலாக அமைந்துள்ளதைக் காணலாம்.

## மொழியோடு விளையாடு

### குழுவில் விளையாடுக

- நான்கு மாணவர்கள் கொண்ட குழுக்களாக எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரிந்து கொள்க.
- முதல் மாணவர் ஒரு சொல்லைத் தொடங்குக.
- அதனோடு தொடர்புடைய ஒரு சொல்லை இரண்டாம் மாணவர் கூறுக.
- இப்படியே நான்கு மாணவர்களும் கூறிய சொற்களைக் கொண்டு ஒரு தொடர் அமைக்க.

**எ.கா :**

**மாணவர் 1** : கணினி
**மாணவர் 2** : அறிவியல்
**மாணவர் 3** : தமிழ்
**மாணவர் 4** : மொழி

சொல்லப்பட்ட சொற்கள் : கணினி, அறிவியல், தமிழ், மொழி.

**தொடர் :**

அறிவியல் கணினித் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஈடுகொடுத்துத் தமிழ் மொழி வளர்ந்து வருகிறது.

**விடை :**

1. **மாணவர் 1** : ஏவு ஊர்தி
**மாணவர் 2** : பாயும்
**மாணவர் 3** : விண்வெளி
**மாணவர் 4** : ஏவுகணை

**தொடர் :**

விண்வெளி மையத்தில் ஏவு ஊர்தியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏவுகணை விண்ணில் பாயும்.

2. **மாணவர் 1** : அடக்கம்
**மாணவர் 2** : இரு கண்கள்
**மாணவர் 3** : நமக்கு
**மாணவர் 4** : பொறுமை

**தொடர் :**

அடக்கமும், பொறுமையும் நமக்கு இரு கண்களாகத் திகழ்கிறது.

3. **மாணவர் 1** : தொழில் நுட்பம்
**மாணவர் 2** : நம் நாடு
**மாணவர் 3** : வருகிறது
**மாணவர் 4** : நாளுக்கு நாள்

www.nammakalvi.com



**தொடர் :**

நம் நாட்டில் தொழில்நுட்பங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

4. **மாவணர் 1** : சுவைத்தல்
   **மாணவர் 2** : காணல்
   **மாணவர் 3** : நுகர்தல்
   **மாணவர் 4** : தொடுதல்

**தொடர் :**

தொடுதல், சுவைத்தல், நுகர்தல், காணல் ஆகிய நான்கு புலன்களால் அறியும் ஆற்றல் கொண்டவை நான்கறிவு உயிர்கள் என்படும்.

மாவணர்களே இவ்வாறாக உங்கள் நண்பர்களுடன் விளையாடும் போது உங்கள் மொழி அறிவு வளரும்.

## அகராதியில் காண்க

இமிழ்தல் - ஒலித்தல்
துவனம் - ஒலி
துகலம் - நுண்ணொலி
இசைவு - ஏற்றல்
சபலை - மின்னல், திருமகள், திப்பிலி

## ஒரு சொல்லால் தொடரில் இரு இடங்களை நிரப்புக

(விலங்கு, எழுதி, அகல், கால், அலை)

அ) எண்ணெய் ஊற்றி **அகல்** விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு **அகல்**.

ஆ) எனக்கு **கால்** பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்; பார்த்து உன் **கால்** ஐ வை.

இ) கைப்பொருளைக் கடல் **அலை**யில் தொலைத்து விட்டு, கரையில் தேடி **அலை**ந்தால் கிடைக்குமா.

ஈ) வீட்டு **விலங்கு** ஆன நாயுடன் விளையாடுவது மகிழ்ச்சி தரும்; வெளியில் அதனைக் கழுத்து **விலங்கு** உடன் மட்டுமே பிடித்துச் செல்ல வேண்டும்.

உ) எழுத்தாணி கொண்டு **எழுதி**ய தமிழை, ஏவுகணையில் **எழுதி** எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

## ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக

1. **விரிந்தது - விரித்தது.**
   மழைக்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் **விரிந்தன**; மயில் தோகையை **விரித்தது**.
2. **சேர்ந்து - சேர்த்து**
   ஊரார் அனைவரும் **சேர்ந்து** பணத்தைச் **சேர்த்து**த் திருவிழாக் கொண்டாடினர்.
3. **குவிந்து - குவித்து**
   கருமேகங்கள் **குவிந்து** மழைமேகம் சூழ்நதது. அதனால் நெல்மணிகளை உழவர்கள் **குவித்து** அள்ளினர்.
4. **பணிந்து - பணித்து**
   ஆசிரியர் மாணாக்கரிடம்,'பெரியோர்களிடம் **பணிந்து** நடந்துகொள்ள வேண்டும்' என்று **பணித்தார்.**
5. **பொருந்து - பொருத்து**
   அட்டவணைகளைப் படித்து மிகச் சரியான விடையைப் **பொருந்தும்படிபொருத்துக.**


www.nammakalvi.com



6. மாறு, மாற்று

தெருவிளக்கின் ஒளி தெரியாததால் விளக்குத் தெரியுமாறு,மாற்றுப் பக்கத்தில் திருப்பி அமைத்தனர்.

## காட்சியைக் கண்டு கவினுறக் கருத்தளிக்க



விலங்கிலிருந்து பிறந்தான் மனிதன்
விலங்கினையே வேட்டையாடினான் - அந்த
விலங்கே மனிதனை வழி நடத்திச் செல்ல
மனிதன் ஏழாம் அறிவினை உருவாக்கினான்
வியத்தகு உலகம் அறிவியல் முன்னேற்றம்
நவீனயுகத்தில் முக்கியப் பங்கு வகிக்கும்

## செயல் திட்டம்

**மின்சாரச் சேமிப்பு பற்றிய விழிப்புணர்வு முழக்கத்தொடர்களை எழுதி வகுப்பறைகளிலும் பள்ளிகளிலும் காட்சிப்படுத்துக.**

**விடை :**

மின்சாரச் சேமிப்பு பற்றிய முழக்கத் தொடர்கள்

1. மின் இயந்திரங்களைத் தவிர்ப்போம் மின்சாரம் சேமிப்போம் - நம் ஆரோக்கியத்தையும் காப்போம்.
2. மின்சார சேமிப்பு மின்சார உற்பத்திக்குச் சமமாகும்.
3. நீராதாரம் பெருக்குவோம் மின் உற்பத்தியையும் பெருக்குவோம்.
4. ஆள் இல்லா அறைகளில் மின் விசிறி இயக்காதீர்
5. மின்சார சிக்கனம் தேவை இக்கணம்.
6. குழல் விளக்கையும் குண்டு விளக்கையும் தவிர்ப்போம். மின்சாரம் சேமிப்போம்.

## நிற்க அதற்குத் தக

என் பெற்றோர் மகிழுமாறு நான் செய்ய வேண்டியது.

என் வீட்டின் நிலையறிந்து, தேவையறிந்து பொருள்கள் வாங்குவது.

அலைபேசிப் பயன்பாட்டினைப் பத்து நிமிடங்களுக்கு மேல் நீட்டிக்காமல் இருப்பது.

தொலைக்காட்சி பார்ப்பதைக் குறிப்பிட்ட நேரமாகக் குறைத்துக் கொள்வது.

**விடை :**

அம்மா ஏதாவது உதவி கேட்டால் மனமுவந்து செய்வது.

நண்பர்களுடன் வீண் பேச்சுப் பேசுவதைக் குறைத்துக் கொள்வது.

படிப்பதற்காக வீட்டில் அதிக நேரம் செலவழிப்பது.

www.nammakalvi.com



## கலைச்சொல் அறிவோம்

1. ஏவு ஊர்தி - Launch Vehicle
2. ஏவுகணை - Missile
3. கடல் மைல் - Nautical Mile
4. காணொலிக் கூட்டம் - Video Conference
5. பதிவிறக்கம் - Download
6. பயணியர் பெயர்ப் பதிவு - Passenger Name Record (PNR)
7. மின்னணுக் கருவிகள் - Electronic devices

## இயல் 4

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 50**

I. உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு
   இ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஈ) மூன்றும் சரி.
2. அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன். எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன். இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர். நான் யார்? __________.
   அ) இணையம் ஆ) தமிழ் இ)கணினி ஈ) ஏவுகணை.
3. "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
   இரண்டறிவதுவே அதனொடு நாவே" - இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
   அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

II. நிரப்புக 3x1=3

4. ஆறறிவு உடைய உயிரினம் __________.
5. எழுத்துகள் - எழுத்துக்கள் - இவற்றில் சரியான சொல் __________.
6. இணைய வணிகத்தை கண்டுபிடித்தவர் __________.

III. விடையளி: 4x2=8


7. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
8. கூட்டுப் புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.
9. திரு + நிறை + செல்வன் - இச்சொற்களுக்கு இடையில் வல்லினம் இடலாமா? ஏன்?
10. பகுபத உறுப்பிலக்கணம் தருக : நெறிப்படுத்தினார்

IV. விடையளி: 3x4=12

11. 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
12. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு யாது?
13. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை சான்றுகளுடன் விளக்குக.

V. விடையளி: 3x6=18

14. அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.
15. காட்சியைக் கண்டு கவினுற கருத்தளிக்க.



www.nammakalvi.com



16. அடிபிறழாமல் எழுதுக.

ஒன்றறி வதுவே ..... எனத் தொடங்கும் உயிர் வகைப் பாடல்.

VI. மொழிப்பயிற்சிகள்: 6x1=6

17. மொழி பெயர்க்க :

Add some food coloring to help you to see the different levels of water.

18. பொருள் கூறுக : துவனம்.

19. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக : விரிந்தது - விரித்தது.

20. கலைச்சொல் அறிக : Missile.

21. சந்திப்பிழை நீக்கி எழுதுக :

மின்னனு புகைப்பட ஆய்வுகளுக்கு தமது சமையலறையையே செஸ்டர் கார்ல்சன் பயன்படுத்திக்கொண்டார்.

22. பிழை நீக்கி எழுதுக :

அறிவியல் முன்னேற்றத்தால், மனிதன் பயண நேரம் குறைந்துவிட்டன.

## இயல் 4

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 50**

I. உரிய விடையை எடுத்து எழுதுக. 3x1=3

1. தானியக்கப் பண இயந்திரத்தை நிறுவியவர்

அ) ஸ்டீவ் ஜாப்ஸ் ஆ) ஸ்டீபன் ஹாக்கின்ஸ்

இ) ஜான் ஷெப்பர்டு பாரன் ஈ) செஸ்டர் கார்ல்சன்

2. விடை வரிசையைத் தேர்க :

அ) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.

ஆ) இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி __________.

i) நேவிக், சித்தாரா ii) நேவிக், வானூர்தி

iii) வானூர்தி, சித்தாரா iv) சித்தாரா, நேவிக்

3. பட்டுப் பூச்சியாய் உருப்பெறுவது __________.

அ) தேனீ ஆ) வரும் இ) கூட்டுப்புழு ஈ) ஈசல்.

II. நிரப்புக 3x1=3

4. குறுஞ்செய்தியின் வருகைக்குப் பின் ________விடைபெற்றுக் கொண்டது.

5. இந்தியாவின் 11-ஆவது குடியரசுத் தலைவர் __________.

6. உம்மைத் தொகையில் வல்லினம்__________.

III. விடையளி: 4x2=8

7. ஆத்தி + சூடி - இச்சொற்களுக்கு இடையில் வல்லினம் இடலாமா? ஏன்?

8. செயற்கைக்கோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியைப் பற்றி திரு. சிவன் கூறுவது யாது?

9. ஒளிப்படி இயந்திரம் - குறிப்பு வரைக.

10. ஈரறிவு உயிர்கள் யாவை?

IV. விடையளி: 3x4=12

11. ஏவுகணை நாயகன் - அப்துல்கலாம் குறித்துக் கூறுக.

12. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

13. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

www.nammakalvi.com



V. விடையளி: 3x6=18

14. இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

15. "அறிவியல் என்னும் ...." எனத்தொடங்கும் 'ஓ, என் சமகாலத் தோழர்களே!' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

16. 'பா' நயம் பாராட்டுக.

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்ச்சிலிர்க்கும்
சிங்கமே வான வீதி திகுதிகு என எரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே மாணிக்கக் குன்றே தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே
கடலிலே போடி போடிக் கதிர்க் கைகள் ஊன்று கின்றாய்
நெடுவானில் கோடிகோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅ ளாவ அமைந்தனை! பரிதி வாழி!

VI. மொழிப்பயிற்சிகள்: 6x1=6

17. சந்திப்பிழை நீக்கி எழுதுக :

தொலைபேசியை கண்டுபிடிப்பதற்கு பதினோராராண்டுகளுக்கு முன்பே இந்நிகழ்வு நடந்தது.

18. விடைக்கேற்ற வினா அமைக்க :

'சித்தாரா' என்னும் செயற்கைக்கோள் ஏவு ஊர்தி பற்றிய முழு விவரங்களையும் மின்னிலக்க முறையில் சேகரிக்கும்.

19. மொழி பெயர்க்க :

Tap the bottles with the end of a wooden spoon. Can you play a tune?

20. பொருள் கூறுக : துகலம்.

21. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

பணிந்து - பணித்து.

22. கலைச்சொல் அறிக : Video Conference.

www.nammakalvi.com



| | | |
|---|---|---|
| 31 | நாச்சியார் திருமொழி | ஆண்டாள் |
| 32 | நட்புக்காலம் | கவிஞர் அறிவுமதி |
| 33 | திருக்குறள் கதைகள் | கிருபானந்தவாரியார் |
| 34 | கையா, உலகே ஒரு உயிர் | ஜேம்ஸ் லவ்லாக் - தமிழில் : சா. சுரேஷ் |
| 35 | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | மா. சு. அண்ணாமலை |
| 36 | சீவக சிந்தாமணி | திருத்தக்க தேவர் |
| 37 | மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் |
| 38 | ஆகாயத்துக்கு அடுத்த வீடு | மு. மேத்தா |
| 39 | தமிழ்ப் பழமொழிகள் | கி. வா. ஜகந்நாதன் |
| 40 | இருட்டு எனக்கு பிடிக்கும் (அன்றாட வாழ்வியல் அறிவியல்) | ச. தமிழ்ச்செல்வன் |
| 41 | ஒளியின் அழைப்பு | ந. பிச்சமூர்த்தி |
| 42 | தாவோ தே ஜிங் | லா. வேட்சு |
| 43 | பெரியாரின் சிந்தனைகள் | வே. ஆனைமுத்து |
| 44 | அஞ்சல் தலைகளின் கதை | எஸ். பி. சட்டர்ஜி (மொழிபெயர்ப்பு- வீ. மு. சாம்பசிவன்) |
| 45 | தங்கைக்கு | மு. வரதராசன் |
| 46 | தம்பிக்கு | அறிஞர் அண்ணா |
| 47 | அக்கறை | கல்யாண்ஜி |
| 48 | குறுந்தொகை | பாலை பாடிய பெருங்கடுங்கோ |
| 49 | சிற்பியின் மகள் | பூவண்ணன் |
| 50 | அப்பா சிறுவனாக இருந்தபோது | அலெக்சாந்தர் ரஸ்கின் (தமிழில் நா. முகமது செரீபு) |

## அலகிட்டு வாய்ப்பாடு

**1. அரியவற்றுள் எல்லா அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| அரிய/வற்/றுள் | நிரை/நிரை/நேர் | கருவிளங்காய் |
| எல்/லா | நேர்/நேர் | தேமா |
| அரி/தே | நிரை/நேர் | புளிமா |
| பெரி/யா/ரைப் | நிரை/நேர்/நேர் | புளிமாங்காய் |
| பே/ணித் | நேர்/நேர் | தேமா |
| தம/ராக் | நிரை/நேர் | புளிமா |
| கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

**2. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

www.nammakalvi.com



| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| ஒழுக்/கம் | நிரை/நேர் | புளிமா |
| விழுப்/பம் | நிரை/நேர் | புளிமா |
| தர/லான் | நிரை/நேர் | புளிமா |
| ஒழுக்/கம் | நிரை/நேர் | புளிமா |
| உயி/ரினும் | நிரை/நிரை | கருவிளம் |
| ஓம்/பப் | நேர்/நேர் | தேமா |
| படும் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

3. **ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| ஒழுக்/கத்/தின் | நிரை/நேர்/நேர் | புளிமாங்காய் |
| எய்/துவர் | நேர்/நிரை | கூவிளம் |
| மேன்/மை | நேர்/நேர் | தேமா |
| இழுக்/கத்/தின் | நிரை/நேர்/நேர் | புளிமாங்காய் |
| எய்/துவர் | நேர்/நிரை | கூவிளம் |
| எய்/தப் | நேர்/நேர் | தேமா |
| பழி | நிரை | மலர் |

இக்குறட்பா "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

4. **நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| நன்/றிக்/கு | நேர்/நேர்/நேர் | தேமாங்காய் |
| வித்/தா/கும் | நேர்/நேர்/நேர் | தேமாங்காய் |
| நல்/லொழுக்/கம் | நேர்/நிரை/நேர் | கூவிளங்காய் |
| தீ/யொழுக்/கம் | நேர்/நிரை/நேர் | கூவிளங்காய் |
| என்/றும் | நேர்/நேர் | தேமா |
| இடும்/பை | நிரை/நேர் | புளிமா |
| தரும் | நிரை | மலர் |

இக்குறட்பா "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

www.nammakalvi.com



## வேலை வேண்டி விண்ணப்பம்

**அனுப்புநர்**

மா. கண்ணன்
91, தோப்புத் தெரு,
திருவில்லிபுத்தூர்.

**பெறுநர்**

நகராட்சி ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
திருவில்லிபுத்தூர்

**ஐயா,**

**பொருள் :** வேலை வேண்டி விண்ணப்பித்தல்.

திருவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் எழுத்தர் வேலைக்கான விண்ணப்பங்கள் வேண்டித் தாங்கள் அறிவிப்புச் செய்திருந்தமையை நகர்மன்ற அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டிருந்த விளம்பரத்தின் மூலமாய் அறியலானேன்.

மேற்படி எழுத்தர் வேலைக்கு என்னையும் ஒருவனாக எடுத்துக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். நான் திருவில்லிபுத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் படித்து 1990 ஆம் ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேர்வில் 420 மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றுள்ளேன். தமிழ்த் தட்டெழுத்திலும், ஆங்கிலத் தட்டெழுத்திலும் பயிற்சி பெற்று உயர்நிலைச் சான்றிதழ் பெற்றுள்ளேன்.

இவ்விண்ணப்பத்துடன் எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியரும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் தந்த நற்சான்றிதழ்களையும் இணைத்துள்ளேன். அத்துடன் தட்டெழுத்துச் சான்றிதழ், எஸ். எஸ். எல். சி. சான்றிதழ் முதலியவற்றில் படிகளையும் இணைத்துள்ளேன்.

தாங்கள் கருணை கூர்ந்து திருவில்லிபுத்தூர் நகராட்சியில் எனக்கு ஓர் எழுத்தர் வேலையளிக்க வேண்டுகிறேன்.

**திருவில்லிபுத்தூர்** **இப்படிக்கு,**
15.12.20XX **தங்கள் உண்மையுள்ள,**
**மா. கண்ணன்**

**உறைமேல் முகவரி :**

**பெறுநர் :**

நகராட்சி ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
திருவில்லிபுத்தூர்

## மருத்துவ வசதி கோரி விண்ணப்பம்

**அனுப்புநர்**

சா. நாராயணன்,
மம்சாபுரம்,
திருவில்லிபுத்தூர்

www.nammakalvi.com



**பெறுபவர்**

ஊராட்சி ஒன்றியத் தலைவர்,
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
திருவில்லிபுத்தூர்

**ஐயா,**

**பொருள் :** மருத்துவ வசதி கோரி விண்ணப்பித்தல்

எங்கள் ஊராகிய மம்சாபுரம், திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இரண்டு பேரூராட்சி மன்றங்களில் மிகப் பெரியது. இங்குள்ள மொத்த மக்கள் தொகை சுமார் 22,000 ஆகும். இங்குப் பல அரசாங்க அலுவலகங்களும், பள்ளிக்கூடங்களும், தொழிற்சாலைகளும் உள்ளன.

இவ்வளவு வசதிகள் இருந்தும் திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் நடைபெறும் சிறிய மருத்துவமனை ஒன்றே இங்கு உள்ளது. அதுவும் பெயரளவில் மட்டும் தான் மருத்துவமனையாக உள்ளது. இங்கு நிரந்தரமான டாக்டர் இல்லை. போதிய மருந்துகளும் கிடைப்பதில்லை. திருவில்லிபுத்தூரிலிருந்து சில நாள் மட்டுமே மருத்துவர் வந்து செல்கிறார். இதனால் மக்களுக்குத் தேவையான நேரத்தில் மருத்துவ வசதி கிடைக்க வழியில்லை.

ஆகவே எங்கள் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைக்குப் போதிய மருத்துவ வசதிகள் செய்து தருவதோடு நிலையான எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற மருத்துவரை நியமிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மம்சாபுரம்** **இப்படிக்கு,**

15.12.20 XX **தங்கள் உண்மையுள்ள,**

**சா. நாராயணன்**

**உறைமேல் முகவரி :**

**பெறுநர் :**

ஊராட்சி ஒன்றியத் தலைவர்,
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
திருவில்லிபுத்தூர்

## குடிநீர்க்கேட்டு கூட்டு விண்ணப்பம்

**அனுப்புநர்**

பொதுமக்கள்,
மம்சாபுரம் பேரூராட்சி,
மம்சாபுரம்,
திருவில்லிபுத்தூர்.

**பெறுநர்**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
ஆட்சியர் அலுவலகம்
விருதுநகர்.

**மதிப்பிற்குரிய ஐயா,**

விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, திருவில்லிபுத்தூர் வட்டத்தைச் சார்ந்த மம்சாபுரம் பேரூராட்சி மன்றப் பகுதியில் வாழும் பொது மக்கள் அன்புடன் விடுக்கும் வேண்டுகோள்.

www.nammakalvi.com



எங்கள் மம்சாபுரம் மக்கள் தொகை 22,000. எங்கள் ஊரில் நெடுஞ்சாலைக்குக் கிழக்கே உள்ள பகுதியில் உள்ள கிணறுகள் எல்லாம் உவர் நீர்க் கிணறுகளே. சாலைக்கு மேற்கே உள்ள கிணறுகளில் நீண்ட கால வறட்சியின் காரணமாகத் தண்ணீரே இல்லை. மழை பொழியாமல் ஆறு, குளங்களில் அறவே தண்ணீர் இல்லை. ஆடு, மாடுகளைக் குளிப்பாட்டுவது கூட மிகவும் துன்பமாக உள்ளது. நல்ல தண்ணீர் எடுக்க ஊருக்கு வெளியே இரண்டு கிலோ மீட்டர் தொலைவுக்கு மேல் நடக்க வேண்டியுள்ளது. இதனால் மகளிர் படும் தொல்லைக்கோர் எல்லை இல்லை.

எங்கள் ஊருக்க வெளியே அனுமன் ஆற்றுப்படுகையில் நல்ல தண்ணீர் கிடைப்பதற்குரிய வாய்ப்பு உள்ளதாக நிலத்தடி நீர் ஆய்வு செய்த குடிநீர் வாரியத்தினர் கூறி உள்ளனர். அதன் அடிப்படையில் எங்கள் பேரூராட்சி மந்றத்தினர் சார்பாக குடிநீர்த் திட்டம் ஒன்று. பத்து லட்சம் செலவில் தீட்டி தங்கள் பார்வைக்கும், அரசுக்கும், குடிநீர் வாரியத்துக்கும் அனுப்பி ஓராண்டு ஆகியும் எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை.

ஆகவே பெருமதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எங்கள் வேண்டுகோளை ஏற்று எங்கள் பேரூராட்சி மன்றம் தீட்டிய குடிநீர்த்திட்டம் நிறைவெய்திட ஆவன செய்து எங்கள் நீர்வேட்கையை தணிக்குமாறு வேண்டுகிறோம்.

**மம்சாபுரம்** **இப்படிக்கு,**

15.12.20XX **மம்சாபுரம் பொதுமக்கள்,**

**வே. தங்கவேல்**

**த.வளவன்**

**(இன்னும் பல கையொப்பம் இடுக)**

**உறைமேல் முகவரி :**

**பெறுநர்**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
ஆட்சியர் அலுவலகம்,விருதுநகர்.

## புத்தகம் அனுப்புமாறு மடல்

**அனுப்புபவர்**

லெ. ராஜேஷ்
77- அண்ணா நகர்,
மதுரை.

**பெறுபவர்**

சூர்யா பதிப்பகம்
நெடுங்சாலை
மதுரை-1

**ஐயா,**

வணக்கம். தங்கள் பதிப்பகத்திலிருந்து உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக வெளியிட்டுள்ள கட்டுரைக் கரும்பையும், நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்காக வெளியிட்டுள்ள கட்டுரைக கனியையும், இலக்கண நூலாகிய இனிக்கும் இலக்கணத்தையும் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. மாணவர் அறிவு நலன் நாடியும் தேர்வுப் பயன் கருதியும் சுருக்கமும், எளிமையும் இனிமையும் நிறைந்த மூன்று நூல்களும் மாணவர் உலகுக்கு வழி காட்டிடல் ஆகும்.

www.nammakalvi.com



அவற்றைப் பெற்றுப் பயன்பெற விருப்புகிறேன். மூன்று நூல்களுக்கு உரிய பணம் 60ஐ பணவிடை வழியாக இன்று அனுப்பியுள்ளேன். தாங்கள் குறித்து உள்ளது போல் தங்கள் செலவில் விரைவில் அனுப்பி வைத்து உதவுமாறு அன்பாய் வேண்டுகிறேன்.

**மதுரை** **தங்கள் உண்மையுள்ள,**
15.12.20XX **லெ. ராஜேஷ்.**

**உறைமேல் முகவரி :**

**பெறுபவர்**

சூர்யா பதிப்பகம்
நெடுங்சாலை
மதுரை-1

## தேர்வில் முதலிடம் பெற்றவனுக்குப் பாராட்டு மடல்

17, கம்பர் தெரு,
திருவில்லிபுத்தூர்,
15.12.20XX.

**அன்புள்ள செந்தில் குமரனுக்கு**

வாழ்க. நலம். நலமே நாட்டம். இவ்வாண்டு பத்தாம் வகுப்புத் தேர்வில் நீ மாநில முதன்மை பெற்ற செய்தியை நாளிதழ் வழி அறிந்தேன், மகிழ்ந்தேன். எங்கள் வீட்டில் அனைவரிடமும் கூறி உன்படம் வெளிவந்த பத்திரிகையையும் காட்டினேன். நான் பெற்ற பெருமதிப்பாகவே எண்ணி எங்கள் வீட்டில் அனைவரும் உன்னைப் பாராட்டினர்.

இதுபோன்றே நீ மேல்நிலைப் பள்ளித் தேர்விலும் முதல் மதிப்பெண் பெற வேண்டும் என விரும்புகிறேன். நானும் நன்குப் படித்து நல்ல மதிப்பெண் பெற உனக்குக் கிடைத்த வெற்றி எனக்கும் நல்வழி காட்டியுள்ளது.

"மகன்தந்தைக் காற்றும் உதவிஇவன் தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கணமாய் நிற்கும் உன்னை மீண்டும் பாராட்டி மேலும் பல வெற்றிகளைக் குவிக்க வேண்டிக் கொள்ளுகிறேன்.

**இடம் :** திருவில்லிபுத்தூர் **இப்படிக்கு,**
**நாள் :** 15.12.20XX **உன் ஆருயிர் நண்பன்,**
**த. செழியன்**

**உறைமேல் முகவரி :**

**பெறுபவர் முகவரி :**

இரா. செந்தில் குமரன்,
80, அம்மன் சந்நிதித் தெரு,
திருவில்லிபுத்தூர்.

www.nammakalvi.com



**அன்புள்ள குமாரவேலுக்கு,**

வணக்கம். நலம். நலமே நாட்டம். உன் அழைப்பை ஏற்று உன் பள்ளியில் நடைபெற்ற பாரதி விழாவில் கலந்து கொண்டமைக்காகப் பெரிதும் மகிழ்கிறேன். விழாவில் நடந்த பாரதி பற்றிய நிகழ்ச்சிகள் சிறப்புற அமைந்திருந்தன.

சிந்து நதிமிசை நிலவினிலே, பாரத மணித்திரு நாடு, ஓடி விளையாடு பாப்பா ஆகிய பாரதி பாடல்கள் இசையோடு பாடப்பெற்றமை எனக்கு மனநிறைவைத் தந்தது. பாஞ்சாலி சபதம் ஓரங்க நாடகக் காட்சி அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தது சிறப்பாகும்.

அனைத்திற்கும் மேலாக பாரதி விழா பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற உன் பேச்சைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன். நெஞ்சு பொறுக்குதில்லையே என்ற தலைப்பில் நீ பேசிய பேச்சு தற்கால இளைஞர் சமுதாயத்தைத் தட்டி எழுப்புவதாக இருந்தது. உன்னைக் ‘குரலரசு குமரவேல்’ என்று மாவட்ட ஆட்சித் தலைவர் புகழ்ந்தபோது எதிர்காலத்தில் நீ மேடைப் பேச்சில் அண்ணாவைப் போல் திகழ்வாய் என நம்பினேன். என் நம்பிக்கை வீண் போகாது எனக் கருதுகிறேன். என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பிற உன் மடல் கண்டு எழுதுகிறேன்.

**உனதன்பு நண்பன்,**
தி. திருநாவுக்கரசு.

**உறைமேல் முகவரி :**

**பெறுநர் :**

ஆ. குமரவேல்,
தந்தை : திரு. கு. ஆறுமுகம் அவர்கள்,
69/5 அண்ணாநகர்,
மதுரை.

---

**நான் விரும்பும் கவிஞர் பாரதியார்**

**குறிப்புச் சட்டகம் :**

1. முன்னுரை
2. பிறப்பும் இளமையும்
3. விடுதலை வேட்கை
4. தேசியக் கவிஞர் பாரதியார்
5. முன்னறி புலவர் பாரதி
6. சமுதாயத் தொண்டு
7. முடிவுரை

**முன்னுரை :**

நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காவும் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றனையும் இழந்த செம்மல்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள், கவிஞர்கள் எனப் பலர் இருக்கிறார்கள். அவர்களுள் நான் விரும்பிப் போற்றும் கவிஞர் மகாகவி பாரதியார் ஆவார். அவர் கவிதைகள் மூலம் தேசியத்தை வளர்த்துத் தமிழ் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டினார்.

**பிறப்பும் இளமையும் :**

சின்னசாமி, இலக்குமி அம்மையார் ஆகியோர்க்கு மகனாக 11.12.1882 இல் பாரதியார் பிறந்தார். பிறந்த ஊர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டையாபுரம். அவர் இளமையிலேயே ஆங்கிலக் கல்வியை அறவே வெறுத்தார். பைந்தமிழ்ப் பாவலராய்த் திகழ்ந்து பாரதி என்னும் பட்டம் பெற்றார். அவர், சில காலம் எட்டையபுரம் அரசவைக் கவிஞராக விளங்கினார். பின்னர், மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்; சென்னையில் இதழாசிரியராகவும் பணிபுரிந்தார்.

www.nammakalvi.com



**விடுதலை வேட்கை :**

பாரதியார் வாழ்ந்த காலம், பாரத நாடு ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்த காலம். நாடு விரைவில் விடுதலை அடையவேண்டுமென்ற துடிப்புடன் இருந்தார். தம் பாட்டுத்திறத்தால், தூங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி விடுதலைக் கனலை மூட்டினார். சாதிசமயப் பாகுபாடின்றி அனைவரையும் விடுதலை வேள்வியில் ஈடுபடச் செய்தார்.

**"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில்**
**அன்னியர் வந்து புகலென்ன நீதி"** என வீர முழக்கமிட்டார்.
**"பாருக்குள்ளே நல்ல நாடு"**
**"நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்"** - என்றெல்லாம் பாடி, மக்களுக்கு நாட்டுப்பற்றையும் விடுதலை உணர்வையும் ஊட்டினார்.

**தேசியக் கவிஞர் பாரதியார் :**

இந்தியத் திருநாட்டின் இணையற்ற கவிஞராகப் பாரதியார் விளங்கினார். இதனால் அவர், அனைவராலும் 'தேசியக் கவிஞர்' எனப் பாராட்டப் பெற்றார். 'எல்லாரும் ஓர் குலம். எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் இந்நாட்டு மன்னர்' எனத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டினார்.

**"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்**
**மெய்ப்புற ஒன்றுடையாள் இவள்**
**செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்**
**சிந்தனை ஒன்றுடையாள்".**

என்னும் பாடலின் மூலமாக "முப்பதுகோடி மக்களும் இந்தியரே, அவர்கள் பேசும் மொழி பலவாய் இருப்பினும் சிந்தனை ஒன்றே!" என்ற உயரிய தேசிய உணர்வை ஊட்டியவர் பாரதி.

**முன்னறி புலவர் பாரதி :**

விடுதலை அடைவதற்கு முன்பாகவே, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளைத் தாம் வாழும் காலத்திலேயே பாடி மகிழ்ந்த முன்னறி புலவர் பாரதியாவார்.

**"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே,**
**ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட் டோமென்று"** எனவும்,
**"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்**
**மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"** எனவும்,
**"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்"** எனவும், பாடினார் பாரதியார்.

**சமுதாயத் தொண்டு :**

சாதிவேரை முளையிலேயே கிள்ளி எறிய விரும்பியவர் பாரதி. அதனால்தான்,'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' எனக் குழந்தை மனத்தில் ஆழப்பதித்தார் பாரதி.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்பதன் மூலம் பெண்கள் நலன் பேண விரும்பியவர் பாரதி.

**"தனியொருவனுக் குணவிலை யெனில்**
**சகத்தினை அழித்திடுவோம்"**
**"வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்"**
**"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்**

www.nammakalvi.com



**தேன்வந்து பாயுது காதினிலே"** - என்று பாடிய பாடல்களே, பாரதியாரின் சமுதாயத் தொண்டுள்ளத்திற்கும் மொழிப்பற்றுக்கும் தக்க சான்றுகளாம்.

**முடிவுரை :**

'பாரநாடு பார்க்கெலாம் திலகம்' எனப் பாடிய பைந்தமிழ்ப் பாவலன் 11.09.1921 அன்று மண்ணுலகைவிட்டு விண்ணுலகை அடைந்தார். அவர் வழி நாமும் நடந்து, நாடும் வீடும் போற்ற வாழ முயல்வோமாக!

---

## அன்றாட வாழ்வில் அறிவியல்

**முன்னுரை**

நாளுக்கு நாள் வளர்ந்து வரும் அறிவியலின் பங்கு நம் அன்றாட வாழ்வில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. நாம் அறிவியலின் துணையின்றி வளமாகவும் நலமாகவும் வாழ்தல் இயலாது என்பது உறுதியாகிவிட்டது. அளவற்ற அறிவியலின் விந்தைகளில் சிலவற்றை இங்குக் காண்போம்.

**உணவு**

கற்களை உரசி நெருப்புண்டாக்கி இறைச்சியைச் சுட்டுத் தின்ற மனிதன், இன்று சில மணித்துளிகளிலேயே உணவைச் சமைத்து முடிக்கும் மின்னடுப்புகள், காற்றழுத்த அடுப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறான். நீராவி அழுத்தத்தில் சமைக்கும் பாத்திரங்களும் உள்ளன.

**உடை**

இலைதழைகளை உடுத்தி வந்த மனிதன் இன்று வகைவகையான நூல்களாலான வண்ண வண்ண ஆடைகளை அணிகிறான். உடைகளைத் தைக்கவும், உடைகளில் அழகிய வேலைப்பாடுகள் செய்யவும் பொறிகள் உள்ளன. சலவை செய்யச் சவர்க்காரக் கட்டிகளும் தூள்களும் கலவைப் பொறிகளும் உள்ளன. சுருக்கம் போக்க மின் தேய்ப்புப் பெட்டிகளும் உள்ளன.

**உறையுள்**

மலைக்குகைகளில் வாழ்ந்த மனிதன் இன்று மாடமாளிகைகளில் வாழ்கிறான். பளபளப்பும் வழுவழுப்பும் மிக்க தரை, தீப்பற்றாத கூரை, மின்விளக்கு, மின்விசிறி, செந்தணப்பு (Air-Condition) முதலிய பல வசதிகள் கொண்ட வளமனைகளைக் காண்கிறோம்.

**போக்குவரவு**

கட்டைவண்டிப் பயணம் செய்த மனிதன் இன்று மிதிவண்டி, மிதியுந்து, மகிழுந்து, வானூர்தி, கப்பல் முதலியவற்றைப் பயன்படுத்துகிறான்.

**உழவு**

எந்திரக் கலப்பைகள், நீர் இறைக்கும் பொறிகள், நிலத்தைச் செம்மைப்படுத்தும் உழுபொறிகள், உரங்கள் பூச்சிகொல்லி மருந்துகள் முதலியவற்றை அறிவியல் வழங்கியுள்ளதால் உழவு சிறக்கிறது.

**வாணிகமும் தொழிலும்**

தொலைபேசி, தொலைவரி, கணிப்பொறி முதலியன வாணிகத் தொடர்புக்கும் தொழில் வளர்ச்சிக்கும் பேருதவியாக உள்ளன. தொழிற்சாலைகளை இயக்க மின்சாரத்தை வழங்குவதும் அறிவியலே.

**மருத்துவம்**

பழுதுற்ற மனித உடலுறுப்புகளை மாற்றியமைக்க வழி கண்டுள்ளது அறிவியல். குருதி குறைந்தோர்க்கு அதே வகைக் குருதி செலுத்தப்படுகிறது.

**"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்**
**கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?"**

என்றார் பாரதிதாசன். கருத்தடைச் சாதனங்கள் கண்டறிந்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துகிறது அறிவியல். பல கொடிய நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளன.

www.nammakalvi.com



**முடிவுரை**

நன்மைகள் பல விளைத்துள்ள அறிவியல், உலகையே சில நொடிகளில் அழிக்கவல்ல அணுக்குண்டையும் வழங்கியுள்ளது. கத்தி கொண்டு கனியையும் நறுக்கலாம்; பிறர் உயிரையும் பறிக்கலாம். அறிவியலும் அது போன்றதே. ஆதலால், ஆக்கப்பணிக்கே அறிவியலைப் பயன்படுத்தி அமைதியாய் வாழ்வோமாக!

---

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

**முன்னுரை**

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது திருமூலரின் திருவாக்கு. இறைவன் ஒருவனே. எல்லாரும் ஓர்குலம். இவ்வுண்மையை உணராத மக்கள் சாதிமத வேற்றுமைகளை வளர்த்து, மனித குல ஒற்றுமையைக் குலைத்து வருகின்றனர்.

**சாதிப் பாகுபாடு**

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்றார் வள்ளுவர். செய்யும் தொழிலே தெய்வமெனப் போற்றிய மக்கள் காலப்போக்கில் தொழிலடிப்படையில் சாதிகளைப் பகுத்து வைத்தனர்; குலமும் கோத்திரமும் வகுத்து வைத்தனர். தீண்டத் தகாதோர் எனச் சிலரை ஒதுக்கி, வேண்டத்தகாத கொடுமைகளை இழைக்கலாயினர். இதனால் சாதி வெறி தலைவிரித்தாடத் தொடங்கியது.

**சமய வேறுபாடு**

சமயம் என்னும் சொல் 'சமை' என்னும் சொல்லினின்று பிறந்து,'பக்குவப்படுத்தல்' என்னும் பொருளைத் தருகிறது. எல்லாச் சமயங்களும் இறைவனடி சேர்தலையே குறிக்கோளாய்க் கொண்டவை. இதனை உணர்த்தவே,

**"பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்**
**புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி எங்கும்**
**கங்குகரை காணாத கடலே".**

என இறைவனை விளிக்கிறார் வள்ளலார். இதனை உணராத திறனில்லாதவர் தத்தம் சமயமே மேலானது என்றும், உண்மையானது என்றும் போற்றுகின்றனர். பிற சமயங்கள் கீழானவை என்றும், போலியானவை என்றும் தூற்றுகின்றனர். இதனால் சமய வெறி மேலோங்கி மோதல்கள் எழுகின்றன.

**ஒரே சாதி ஒரே சாமி**

சாதிப் பாகுபாடும் தீண்டாமைக் கொடுமையும் ஒழிந்து, சமூக ஒற்றுமை மலர்ந்து, மனித குலம் இனிது வாழ அரும்பாடு பட்ட ஆன்றோர் பலர்.

**"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்!**
**கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்?"**

என்று கேட்டார் நாவுக்கரசர்.

**"சாதிகள் இலலையடி பாப்பா - குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்".**

என்றார் பாரதியார்.

**"வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்க்கின்**
**விளங்குபரம் பொருளே! நின் விளையாட் டல்லால்**
**மாறுபடும் கருத்தில்லை"**

என எடுத்துரைத்தார் தாயுமானவர்.

**"பாருக்குள் ளேதெய்வம் ஒன்று - இதில்**
**பற்பல சண்டைகள் வேண்டா"**

www.nammakalvi.com



என்று நம்மைக் கேட்டுக்கொண்டார் பாரதியார். "மனிதகுலம் ஒன்றே; எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே" என்னும் சிந்தனை எல்லார்க்கும் வரவேண்டும்.

**முடிவுரை**

சாதி மோதல்களும் சமயப் பூசல்களும் இன்னும் ஓயவில்லை.

**"ஊருக்கெல்லாம் ஒரே சாமி**
**ஒரே சாமி ஒரே நீதி**
**ஒரே நீதி ஒரே சாதி"**

என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் கனவை நனவாக்க எண்ணி உழைப்போமாக!

---

**1. முன்னுரை - சிக்கனமும் சிறுசேமிப்பும் - சேமிப்பு பற்றிய பழமொழிகள் - சேமிக்க வழிகள் - சேமிப்பின் பயன்கள் - முடிவுரை.**

**சிக்கனமும் சிறுசேமிப்பும்**

**குறிப்புச் சட்டகம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | 4. | சேமிக்கும் வழிகள் |
| 2. | சிக்கனமும் சிறுசேமிப்பும் | 5. | சேமிப்பின் பயன்கள் |
| 3. | சேமிப்பு பற்றிய பழமொழிகள் | 6. | முடிவுரை |

**முன்னுரை :**

**"அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை**
**பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை"** என்றனர் முதியோர்.

தானும் இன்புற்றுப் பிறரையும் இன்புறச் செய்து இனிது இல்லறம் நடத்தப் பொருள் மிகமிகத் தேவை. கசடற கற்கவும், கற்றபடி நிற்கவும் பொருள் வேண்டும். அப்பொருளினை எல்லோரும் பெற்றிருக்க இயலாது. ஆனால் எல்லாரும் அதனைச் சேமிக்க இயலும், பெருகிவரும் வெள்ளத்தை அணைகட்டி பாதுகாப்பது போல் நம்மை நாடி வரும் செல்வத்தில் ஒரு பகுதியேனும் சேர்த்து வைக்க வேண்டும். அப்படிச் சேமிப்பதன் அவசியத்தையும் பயனையும் குறிப்பதே '**சிறு துளி பெருவெள்ளம்**' என்ற சொற்றொடர்.

**சிக்கனமும் சிறுசேமிப்பும் :**

நாம் ஒவ்வொருவரும் பணத்தைச் சிக்கனமாகச் செலவிட வேண்டும். ஏனெனில் வரும் காலங்களில் அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கக் கூடும். நமது குடும்பச் செலவினங்களைத் திட்டமிட்டு செய்தால், ஒரு சிறிய அளவிலான பணத்தைச் சேமிக்க இயலும். நமது பிள்ளைகளுக்கும் சிறுவயதிலிருந்தே சிக்கனமாக இருந்து பணத்தைச் சேமிப்பது எப்படி என்று சொல்லி வளர்த்தால் அவர்களின் எதிர்காலமும் நன்றாக இருக்கும்.

**சேமிப்பு பற்றி பழமொழிகள் :**

**"சிக்கனம் நாட்டை காக்கும், சேமிப்பு வீட்டைக் காக்கும்"**
**"சிறுதுளி பெருவெள்ளம்"**
**"ஈட்டி எட்டிய மட்டும் பாயும்**
**பணம் - பாதாள மட்டும் பாயும்"** - என்பன ஆன்றோர் மொழிகள்.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற வள்ளுவன் கருத்தை மெய்ப்பிக்கும் சொற்றொடர்கள். இத்தகைய சிறப்புமிகு செல்வத்தைச் சேமித்து வைத்தல் வேண்டும். செல்வத்தின் சிறப்பினை உணராதவர் பணத்தை உல்லாசமாகவும், ஊதாரித்தனமாகவும் செலவிட்டு வானம் பார்த்த பூமிபோல் வாய் பார்த்து நிற்பர்.

www.nammakalvi.com



**சேமிக்கும் வழிகள் :**

கூலித் தொழிலாளி முதல் ஆலைத் தொழிலாளி வரை அனைவரும் சேமிக்கலாம். சேமிப்பைப் பண்டைய தமிழ் இலக்கியங்கள் 'எய்ப்பின் வைப்பு' என உரைக்கின்றன. சேமிக்க விரும்புவோர் அவரவர் தகுதிக்கேற்ப அரசு வகுத்துள்ள கூட்டுகாலச் சேமிப்பு திட்டம், தவணைப் பரிசுப் பாத்திரம், அஞ்சல் அலுவலகத்தில் சேமிப்பு வங்கி போன்ற பல திட்டங்களில் ஏதாவது ஒன்றில் தன்னை இணைத்துக் கொள்ளலாம். இவ்வகையில் ஆயுள் காப்பீட்டுக் கழகங்களும் உதவுகின்றன. மாணவர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த 'சஞ்சாயிகா' என்ற திட்டம் பள்ளிகளில் செயல்படுகிறது.

**சேமிப்பின் பயன்கள் :**

கட்டுப்பாடற்ற மனிதனுக்குக் கட்டுப்பாட்டுணர்வு உண்டாகித் தன்னை அறியாமல் பொருள் சேர்க்கிறான். உழைக்கும் காலத்தில் சேர்க்கும் பணம் ஓய்வுக் காலத்திலும், உடல் நலங் குன்றும்போதும் குன்றென உதவுகிறது. பிள்ளைகள் படிப்புக்கும், பெண்கள் திருமணத்திற்கும் பயன்படும். அதோடு அரசின் ஆக்கப் பணிகளுக்கும் உதவுகிறது.

**முடிவுரை :**

'சிறு துளி பெருவெள்ளம்' ஆவதுபோல், சிறுக சிறுகச் சேமிப்பது பெருகி, சேமிப்போன் வருங்காலம் செம்மையுறுவதோடு மனக்கட்டுப்பாடும் உண்டாகும். இத்திட்டத்தில் நாம் நலம் பெறுதல் போல் நாடும் நலம் பெறும். எனவே, இன்பமும் துன்பமும் நிறைந்த இம்மனித வாழ்வு நிறைவான வாழ்வில் நிலைபெற நற்பணியை மேற்கொள்வோம்.

---

**நூலகம் - நூலகத்தின் தோற்றம் - நூலகத்தில் பல்வேறு பெயர்கள் - நூலகத்தின் பயன்கள் - பள்ளி நூலகம் - தமிழக நூலகங்கள்.**

**நூலகம்**

1. முன்னுரை
2. நூலகத்தின் தோற்றம்
3. நூலகத்தின் பல்வேறு பெயர்கள்
4. நூலகத்தின் பயன்கள்
5. பள்ளி நூலகம்
6. பொது நூலகம்
7. முடிவுரை

**முன்னுரை :**

"நூலகம் இல்லா ஊருக்கு அறிவு பாழ்" என்பது பழமொழி. நூலகம் பற்றிய செய்திகளைக் இக்கட்டுரையின் வழி காண்போம்.

**நூலகத்தின் தோற்றம் :**

பலவித நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ள இடமே நூலகம். நூலகம் பல்லோர் மனதைக் கவரும் வகையிலும் மனிதனுக்கு அறிவினை ஊட்டும் வகையிலும் அமைந்த ஓர் இடமாகும்.

**நூலகத்தின் பல்வேறு பெயர்கள் :**

புத்தகச்சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசகசாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம் என நூலகம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நூலகம் என்னும் தமிழச்சொல்லுக்கு இணையாக ஆங்கிலத்தில் 'லைப்ரரி' என்னும் சொல் வழங்கப்படுகிறது.

**நூலகத்தின் பயன்கள் :**

மனிதனுக்குக் கல்வியறிவு மிகவும் இன்றியமையாதது. கல்லூரிகளில் நாம் படிக்கும் நூலகப் புத்தங்களால் நமக்குத் தேவையான செய்திகள் கிடைக்கின்றன. பள்ளிகளில் உள்ள நூலகம் மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக உள்ளது. அதுபோல் தன்னறிவுடன் செயல்படவும் நூல்கள் பயன்படுகிறது.

www.nammakalvi.com



**பள்ளி நூலகம் :**

பள்ளி என்பது பாடநூல்களைக் கொண்டு அறிவை விதைக்கும் களம். பள்ளியும் நூலகமும் இணைபிரியாதவை. இதனால்தான், அனைத்துப் பள்ளிகளிலும் நூலகம் இடம்பெற்றுள்ளது. பள்ளியில் மாணவர்கள் ஓரிடம், நூலகம் வேறிடம் என்ற நிலையை மாற்ற, நம் பள்ளிக்கல்வித்துறை **"புத்தகப்பூங்கொத்து"** என்னும் வகுப்பறை நூலகத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. வகுப்பறை நூலகத்தில் மாணவர்கள் வயதிற்கும் மனநிலைக்கும் ஏற்ப அறிவுசார் நூலகள் இடம் பெற்றுள்ளன.

**பொது நூலகம் :**

தமிழ்நாடு அரசு மாநிலம் முழுவதும் பல பொது நூலகங்களை ஏற்படுத்திக் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருகிறது. தமிழக நூலகங்கள் மாணவர்களுக்கேற்ற வகையிலும், ஆராய்ச்சிப் படிப்பிற்குத் தேவையான நூல்களையும் தன்னகத்தே வைத்துள்ளது பெருமைக்குரியதாகும்.

**முடிவுரை :**

நூல்களைப் படித்து அனைவரும் முன்னேற வேண்டும் என்பது நமது நோக்கம். நாம் நூலகங்களைப் பெரிதும் மதித்து நடந்தால் நூலகம் நம்மை உயர்த்தி விடும்.

**"நூல்களைப் படிப்போம், வாழ்வில் முன்னேறுவோம்"**

---

**கணினி (கணிப்பொறி)**

**குறிப்புச் சட்டகம்**

1. முன்னுரை
2. கணினியின் தோற்றம்
3. கணினியின் வகைகள்
4. பயன்பாடு
5. உள்ளங்கையில் உலகம்
6. கணினி வழிக் கல்வி
7. முடிவுரை

**முன்னுரை :**

கணினி ஒரு மின்னணு இயந்திரம். அது கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற கணிதச் செயல்பாடுகளைச் செய்யப் பயன்படுகிறது. கணிப்பொறி மனிதனின் அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத ஒரு சிறந்த அறிவியல் கண்டுபிடிப்பு ஆகும். அக்கணிப்பொறியினைப் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**கணிணியின் தோற்றம் :**

எண் கணிதத்திற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட முதல் கருவி **அபாகஸ்.** பெருக்கலை விரைவாக செய்ய **நேப்பியர் குச்சிகள்** கண்டுபிடிக்கப்பட்டது. இன்றைய கணிப்பொறிக்கு முன்னோடியான சுழல் சக்கரக் கணிப்பானை **பாஸ்கல்** என்னும் பிரெஞ்சு அறிஞர் கி.பி. 1642-ல் வடிவமைத்தார். **கி.பி. 1822** ஆம் ஆண்டு **சார்லஸ் பாபேஜ்** என்பவர் கணிப்பொறியின் அடிப்படைத் தத்துவங்களை உருவாக்கினார். எனவே இவர் **கணிப்பொறியின் தந்தை** எனப் போற்றப்படுகிறார்.

**கணினியின் வகைகள் :**

செயல்பாட்டின் அடிப்படையில் கணினி ஒப்புமை வகை, இலக்க வகை, கலப்பின வகை என மூன்று விதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அமைப்பு வழியில் கணிப்பொறியை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. மீக் கணிப்பொறி
2. முதல் நிலைக்கணிப்பொறி
3. சிறு கணிப்பொறி
4. நுண் கணிப்பொறி

நுண் கணிப்பொறி நான்கு வகைப்படும். அவையாவன.

1. பணி நிலையம்
2. தன்னுடைமைக் கணிப்பொறி
3. மடிக் கணிப்பொறி
4. கையடக்கக் கணிப்பொறி

www.nammakalvi.com



**பயன்பாடு :**

கணிப்பொறி இன்று மனித வாழ்க்கையில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. தொழில்துறை, அரசாட்சி, கல்வி, மருத்துவம், வங்கி பணி, ஆராய்ச்சி, சட்டம், சமூக சேவை, இசை, ஓவியம், திரைப்படம் போன்ற பல துறைகளிலும் கணிப்பொறியின் பயன்பாடு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

**உள்ளங்கையில் உலகம் :**

கைக்கு அடக்கமாகவும், ஆற்றல் மிக்கதாகவும் கணிப்பொறியின் வடிவம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. கணினிகள் மூலம் **இணையதளத்திற்கு**(Internet) வேண்டிய பெரும் வசதிகள் எளிதாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகத்தில் பல செய்திகள் மற்றும் சேவைகளை நாம் எளிதாக பெறலாம். மின்னஞ்சல் (Email),**சமூகவலைத்தளங்கள்** மூலம் செய்திகளை உடனுக்குடன் அனுப்பவும், பெறவும் முடியும்.

**கணினி வழிக் கல்வி :**

கற்றல், கற்பித்தலின் வளர்ச்சிக்கு கணினியின் பயன்பாடு பெரும்பங்கு வகிக்கின்றது. காட்சி கேள்வி மூலம் அனைத்து பாடங்களையும் மாணவர்கள் எளிதாக புரிந்துக் கொள்ள கணினி வழிக்கல்வி பயன்படுகிறது.

**முடிவுரை :**

சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் பயன்படும் அறிவியல் கண்டுபிடிப்புதான் கணினி. இத்தகு சிறப்புடைய கணினியைச் செயல்படுத்த அதன் மொழியினைக் கற்போம். இயக்குவோம், மிகுந்த ஆற்றலையும் அறிவையும் பெறுவோம். வெற்றி காண்போம்.

---

## பெண்கல்வி

### குறிப்புச் சட்டகம்

1. பெண் உரிமை
2. சமுதாயத்தில் பெண்கள் நிலை
3. பெண்களுக்குச் சொத்துரிமை
4. மணக்கொடை
5. பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள்

**பெண் உரிமை :**

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்றும் 'ஆணுக்கு பெண் இளைப்பில்லை' என்றும் சிந்தித்தவர் பெரியார். பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனிதசமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்க வேண்டும்.

**சமுதாயத்தில் பெண்கள் நிலை :**

பெண்கள் மனிதப்பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு அவர்களை வெளியேற்ற வேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததும் ஆகும். பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படா.

**பெண்களுக்குச் சொத்துரிமை :**

பெண்களுக்கு வழிவழிவரும் சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு அடிகோலியது. அதற்காக, அவர்கள் போராடவும் கிளர்ச்சி செய்யவும் வேண்டும்.

பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவகையான அடிமைத் தனங்களும் ஒழிந்துபோகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். ஆதலால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாத உடனடிச் செயலாகும்.

**மணக்கொடை :**

தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே **மணக்கொடை** பெற்றோர் பலர், தம் மகனின் கல்விக்காகப் பணம் செலவழிப்பதனைத் தங்கள் கடமையெனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில்

www.nammakalvi.com



போட்ட முதலீடாகவே கருதுகின்றனர். அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கின்றனர். "சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான், இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும்.

**பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள் :**

அனைத்து துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசாங்கப் பணியில் மட்டுமல்லாது அனைத்துத் துறைகளிலும் பணியாற்றுகின்றனர். இதுவே பெண் கல்வியால் ஏற்பட்ட மிகப்பெரும் சமுதாய மாற்றமாகும்.

---

**நீரின்றி இயங்காது உலகம் - நீர் நிலைகள் அடிப்படை - நீர்ப்பற்றாக்குறை ஏற்படக் காரணம். நீரைச் சேமிக்கும் வழிகள் - மழைநீரைச் சேமித்தல் - நிலத்தடி நீரைச் சேமிக்கும் வழிமுறைகள் - மரம் வளர்ப்போம் - மழைபெறுவோம்.**

**மழைநீர் சேகரிப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | 4. | நீரைச் சேமிக்கும் வழிகள் |
| 2. | நீர் நிலைகள் அடிப்படை | 5. | மரம் வளர்ப்போம் |
| 3. | நீர் பற்றாக்குறை ஏற்படக் காரணம் | 6. | முடிவுரை |

**முன்னுரை :**

தெய்வப்புலவர் "நீரின்றி அமையாது உலகு" என்றார். சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்றார். இவ்வாறு நீரின் இன்றியமையாமையும், நீரைத் தருகின்ற மழையின் சிறப்பினையும் தமிழ்ப்புலவர்கள் காலந்தோறும் போற்றி வந்துள்ளனர்.

**நீர் நிலைகள் அடிப்படை :**

ஆறு, ஏரி, குளம், குட்டை, கிணறு, ஊற்று போன்றவை நீர் நிலைகளின் அடிப்படைகளாகும். எனவே அவற்றைப் பாதுகாத்துத் தூய்மையாக வைத்துக்கொள்வது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**நீர் பற்றாக்குறை ஏற்படக் காரணம் :**

இந்தியா, வெப்பமண்டலப் பருவக் காற்று காலநிலையைப் பெற்றுள்ளது. இக்காலநிலை பருவ காலங்களில் மழையைத் தருகிறது. இம்மழை சீரற்ற, நிலையற்ற முறையில் பொழிகிறது. இதனால் பெரும்பாலான நேரங்களில் மழைநீர் குறைவாகவே கிடைக்கிறது. எனவே கிடைக்கும் மழைநீரைச் சேமிப்பது மிகவும் அவசியமாகிறது.

**நீரைச் சேமிக்கும் வழிகள் :**

1. மொட்டை மாடிகளில் விழும் மழைநீரைக் குழாய்கள் மூலம் நிலத்திற்கடியில் சேமித்தல்.
2. மழைநீர்த் தொட்டிகளை அமைத்து மழைநீரைப் பூமிக்கடியில் செலுத்தி நீரைத் சேமித்தல்.
3. மழைநீரை ஆழ்குழாய்க் கிணற்றுக்குள் அனுப்பி நிலத்தடியில் நீரினைச் சேமித்தல்.
4. மரங்களை வளர்த்து மழைநீரைச் சேமித்தல்.
5. ஏரி, குளம், குட்டை, கிணறு போன்ற நீர் நிலைகளைத் தூர் வாரி மழை நீரைச் சேமித்தல்.
6. 'மழைநீர் சேகரிப்பு' மூலம் நிலத்தடி நீரைச் சேமித்தல்.

**மரம் வளர்ப்போம் :**

காடுகள் அழிக்கப்படுவதன் மூலம் மழைவளம் வெகுவாகக் குறைகிறது. எனவே காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்த்து வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம்.

**முடிவுரை :**

மழைநீர் சேகரிப்பு மூலம் நீர் வளம் பாதுகாக்கப்படுகிறது. நாம் அனைவரும் நீரின் மதிப்பையும், பயனையும் உணர்ந்து அதனை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும்.

**"மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்"**

---

www.nammakalvi.com



## Our Retailers (Book Shops)

| | |
|---|---|
| • **Attur** | :Saraswathi Book Centre - 9443340904. |
| • **Bhavani** | :Dhana Book Company - 04256-230921, |
| | :Lakshmi Stores - 04256-230709. |
| • **Chennai** | : M.K.Stores - 25386955, |
| • **Chidambaram** | : Jeyam Book Centre - 9786915969, |
| | : Sriram Book Centre - 9486383334. |
| • **Coimbatore** | :Cheran Book House - 0422-2396623, Kannan Puthaga nilayam - 0422-2398890, |
| | :Majestic Book House - 0422-2383055, |
| | : Sri Rajaganapathy Puthaga Nilayam - 94438-92421, |
| | : Radhamani Books - 0422-2392122, Murugan Book Dept - 0422-2396531, |
| | : Vasantham Stores - 0422-2234243, 9843082762 |
| • **Cuddalore** | :Cuddalore Emporium - 944388202028, Bell Book House - 08428745342. |
| | : IndianBook House - 9443079942. |
| • **Dharmapuri** | :Sathees Book Shop - 486015051, Siva Stores - 04342-264068, |
| | : Sri Krishna School Needs - 04342-263347, |
| | : Sri Sathiya Sayi Book House - 9443267210. |
| • **Dindigul** | : Ayyanar book centre - 04512426561, |
| | : KV Narayanalyyar - 04512433753. |
| • **Erode** | : Dhana Book Company - 0424-2221230, Motherland Book House - 0424-2226161, |
| | : Senthil Book Palace - 0424-2214311, Selvam Books - 4243367027, |
| | : Palaniyappa - 0424-2256261. |
| • **Harur** | :Srikalyani Store - 9789966464. |
| • **Hosur** | :Gowri Book Centre - 9443541320. |
| • **Kallakurichi** | :Sri Kiruba Stationery Shop - 8122457114. |
| • **Karur** | :Book Park - 9944531896, |
| | : Vani Book Shop - 9443941210, |
| | : SPN Note books - 04342-262795. |
| •**Krishnagiri** | :Vijaya book centre - 04343-231210. |
| | : Sri Ramana Book House - 9445060536 / 9025313661 |
| • **Kumbakkonam** | :Jaisri Books - 9952882002, Sri Books - 944374884, |
| | : Sri Markandeya Book Depot - 9488337750, Sri Balaji Books - 9688356093. |
| • **Kanchipuram** | :VBC Books - 044-27228343. |
| • **Madurai** | :Arasu Book Stall - 9865706255, Jayam Book Centre - 9894658036, |
| | : Mano Book Centre - 0452-2621577, Meenakshi Book Shop - 0452-2627010, |
| | : Sunmathi Traders - 0452-2338966, Vetri Book Centre - 9843461624, 0452-2627839 |
| • **Mayiladuthurai** | :Balaji - 09865768502. |
| • **Nagapattinam** | : Sri Kalaimagal Book Emporium - 9894669926. |
| • **Nagerkovil** | :M.Arumugampillai Book Shop - 04652-230728, M.S Books - 9443744493, |
| | : Golda Stores - 9791402491. |
| • **Paramakudi** | :Lakshmi Book Center Mdp - 9488022699. |
| • **Namakkal** | :Saravana Books - 097880 14000. |
| • **Nannilam** | : Mullai Book Shop - 072002 42836. |
| • **Pattukottai** | :Arasu Paper Store - 9791950463, |
| | : Arasi - 043732 57507. |

www.nammakalvi.com



- **Pollachi** :Vasavi Stationaries - 94437-38383.
- **Pondicherry** :Saraswathi Book Stall - 9894440532 / 9500703094, Balaji Book Stall - 9894043457,
  : Saraswathi Book Centre - 9361057339, Selvi Stores - 9488121105,
  : Sri Lakshmi Book Stall - 94430 85499, Sri Saraswathi Book Stall - 9443790398.
- **Perambalur** : Chandra Stores - 9842360332.
- **Rajapalayam** :Sri Durga Stores - 9842168949.
- **Ramanathapuram** :Aruna Stores - 9443491772,
  : Aruna Note Book Stores - 9842537005.
- **Rasipuram** :Sakthi Books - 9443752673,
  : Babu Books - 04287-223159.
- **Salem** :A.K.Chandraiah Chettair & Sons - 9787552233,
- **Srivilliputhur** :Aandavar Stores - 9486462102, New Raja Stores - 04563260892.
- **Seerkazhi** :Semmalar - 9626506207.
- **Sivagangai** :New Ayyanar Books - 999 4079 013
- **Thanjavur** :L.K.R.Puthaga Nilayam - 04362-2333109,
  : Sri Murugan Publications - 9944144446.
- **Theni** :Maya Super Bazaar - 9500621295,
  : Raja Kai Stores - 253323.
- **Thenkasi** :Maheswari Book Centre - 04633-224406.
- **Thiruvanamalai** :Pichandimudaliar.A - 9443214725,
  : Sri Vasavi Stationery & General Store - 94438-85507
- **Thiruvarur** :Arasu Book Centre - 9443742424, Manonmoney Vilas - 9443491894,
  : Anand Papers - 04366-222306, Enbajothy Vilas - 04366-220584
- **Tiruchengode** :Sri Chola Book House - 9842853949.
- **Tirunelveli** :Padma Book Stall - 0462-2337650, Eagle Books - 0462-2578899,
  : Sri Shyamala Puthaga Angadi - 0462-232 2277.
- **Tirupattur** :Sri Sundar Stores - 9486242313.
- **Tirupur** : Chola Book House - 0421-3263608, Maheswari Puthaga Nilayam - 9442004254,
  : S.P.S. Agencies - 0421-4334702, Sampath Stores - 0421-2201397,
  : Senthil Stores - 2247274, Surya Papers - 94431-35864.
- **Trichy** :Raghavendra Stores - 9788757427, Murugan Book Centre - 0431-4011516,
  : P.R.&Sons - 9443370597, Rasi Publications - 0431-2703692,
  : Sumathy Pblications - 0431-2703230, Viswas Book Centre - 0431-2701965,
  : Mani Puthaga Nilyam - 0431-270 8966
- **Thoothukudi** : Eagle Books - 0461-2392333,
  : Sri Durga Stores - 09600333452.
- **Udumalpet** : Vela Book Centre - 04252-221847.
- **Vellore** : Bharath Book House - 9597449340, Radhakrishna Book Depot - 9442147266,
  : Radhakrishna Stores - 9443489890, Vellore Book Centre - 0416-2225034,
  : Swami Vivekananda Book House - 0416-2224406.
- **Vilupuram** : Sabarinathan Brothers - 04146-222581,
  : Book Park - 04146-220266, Ganesh Book Agency - 8248849077.
- **Virudhunagar** : Sethu's Book Centre - 04562-248400.

www.nammakalvi.com


எங்கள் வெளியீடுகள்

| | |
|---|---|
| English Guide & Work Book | Std : VI to XII |
| English Practice Book & Question Bank | Std : X, XI, XII |
| பெங்குயின் தமிழ் அமுது | Std : VI to X |
| பெங்குயின் வினா-வங்கி | Std : X |
| பெங்குயின் அறிவியல் | Std : X |

ஆர்டர்கள் தொடர்புக்கு

8925612359 - 8643007972

பெங்குயின் பப்ளிகேஷன்

62 - C ஆண்டாள்புரம், மாயாண்டிப்பட்டி தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் 626 125, விருதுநகர் மாவட்டம்

89256 12359
86430 07972
penguinpub.2014@gmail.com
www.penguinbooks.in

ஆன்லைனில் ஆர்டர் செய்ய
www.penguinbooks.in

ரூ- 299